www.tamilarangam.net

484

Code No. B 211

# அரசியல் சொற் களஞ்சியம்

தொகுப்பு:
போரிஸ் புத்ரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் சொற் களஞ்சியம்

தொகுப்பு:

**போரிஸ் புத்ரின்**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-600 098.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு: அக்டோபர், 1986
உரிமைப் பதிவு

Code No. B 211

விலை : ரூ. 12-00

அச்சிட்டோர்:
பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை-600 014.

சுமார் 300 அரசியல் பதங்களுக்கும் கருத்துக்களுக்கும் இந்த அகராதி மார்க்சிய-லெனினிய நிலையிலிருந்து விளக்கம் தருகிறது. இந்தப் பதங்களும் கருத்துக்களும் தற்போது பத்திரிகைகளிலும் வானொலியிலும் தொலைக் காட்சியிலும், மற்றும் அரசியல், சமூக, பொருளாதார நூல்களிலும் அதிகமாய் எடுத் தாளப்படுகிறவை.

ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்கள் கொண்ட சொற்களாய் இருப்பினும், பொது வாக அவற்றின் அரசியல் அர்த்தம் மட்டும் தான் இங்கு தரப்படுகிறது.

இந்த அகராதியில் உரிய இடங்களில் விளக்கப்படும் பதங்களும் கருத்துக்களும் பிற இடங்களில் கையாளப்படுகையில், தடித்த எழுத்தில் அவை அச்சிட்டுக் காட்டப்படு கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அ

**அகிலம்:** (International)—அகில உலக அல்லது சர்வதேச சங்கம். உதாரணங்கள்: முதலாவது அகிலம் (அகிலத் தொழிலாளர் சங்கம் 1864-76); இரண்டாவது அகிலம் (1889—1914)—இது சோஷலிஸ்டுக் கட்சிகளை ஒருசேர இணைத்தது; மூன்றாவது (கம்யூனிஸ்டு) அகிலம் (1919-43)- இது கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஒரு சேர இணைத்தது.

**அடிமையுடைமை:** (Slavery)—வரலாற்று வழியிலமைந்த **சுரண்டல்** வடிவங்களில் ஆதி வடிவமும் ஈவிரக்கமற்ற அப்பட்ட வடிவமும் ஆகும். இந்த வடிவத்தில் **உற்பத்திச் சாதனங்களோடு** கூட அடிமையும் உடைமையாளருக்குச் சொந்தமான சொத்தாய் இருந்தான். அடிமையால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டம் முற்றிலும் அடிமையுடைமையாளருக்கே உரியதாய் இருந்தது. அடிமையுடைமையாளர் அடிமையின் உழைப்பை மட்டுமின்றி, அடிமையின் உயிரையுங்கூட தம் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் செய்ய அதிகாரம் பெற்றிருந்தார். அடிமையுடைமையானது **அடிமையுடைமை** அமைப்புக்கு அடிப்படை ஆகியது. பிந்திய சகாப்தங்களிலும் அடிமையுடைமை அழிந்து விடாமல் நடப்பில் இருந்தது. 17ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் அமெரிக்கா கண்டத்தில் காலனிகளில் அடிமையுடைமை தழைத்தோங்கி மிகுந்த பொருளாதார முக்கியத்துவம் பெற்று விளங்கிற்று சில நாடுகளில் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதாம் ஆண்டுகள் வரை நீடித்திருந்தது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் 1948–ல் ஏற்கப்பட்ட அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம் எல்லா வடிவங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிலுமான அடிமையுடைமைக்கும் அடிமை வாணிபத்துக்கும் (Slave Trade) தடை விதித்தது.

**அடிமையுடைமை அமைப்பு:** (Slave Owning System)—வரலாற்று வழியில் உருவான வர்க்கச் சமுதாயத்தின் முதலாவது வடிவம். அடிமையுடைமையாளர்கள் உற்பத்திச் சாதனங்களுக்கு மட்டுமின்றி அடிமைகளுக்கும் சொந்தக்காரர்களாய் இருப்பதன் அடிப்படையில் அமைந்த அமைப்பு இது. **புராதனக் கம்யூனிச அமைப்பு,** வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து எழுந்த இவ்வமைப்பு **நிலப்பிரபுத்துவம்,** உதித்தெழும் வரை நீடித்திருந்தது.

**அணு ஆயுத விலக்கு மண்டலம்:** (Nuclear-Free Zone)—அணு ஆயுதங்களும் நீர்வாயு ஆயுதங்களும் உற்பத்தி செய்யப்படாமலும், அணிவகுத்து நிறுத்தப் படாமலும் இருக்கும் பிரதேசம். உலகின் பல பகுதிகளில் அணு ஆயுத விலக்கு மண்டலங்கள் நிறுவப்பட வேண்டும் என்று சோஷலிச நாடுகளும் ஏனைய முற்போக்கு சக்திகளும் திரும்பத் திரும்ப வற்புறுத்தி வருகின்றன.

**அயல்துறைக் கொள்கை:** (Foreign Policy)—ஒரு நாடு சர்வதேச அரங்கில் பிற அரசுகளோடும் மக்களோடும் கொண்டுள்ள உறவுகளை நிர்ணயித்து ஆட்சி புரியும் கொள்கை. எந்த ஒரு நாட்டின் அயல்துறைக் கொள்கையும் அந்நாட்டில் ஆதிக்க நிலையில் உள்ள வர்க்க உறவுகளைப் பிரதிபலிக்கின்றது. உதாரணமாய், ஏகாதிபத்திய அரசுகளுடைய அயல்துறைக் கொள்கை சோஷலிச நாடுகளையும் தேச விடுதலை இயக்கத்தையும் எதிர்க்கும் நோக்கமுடையதாகும். சோஷலிச நாடுகளுடைய அயல்துறைக் கொள்கை **பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம்,** மாறுபடும் சமூக அமைப்புக்களைக் கொண்ட அரசுகளது **சமாதான சகவாழ்வு** ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தது. தேசங்களது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு அளித்தல், வளரும் நாடுகளுடன் ஒத்துழைப்பை ஓங்கச் செய்தல், அணு, நீர்வாயுக் குண்டு யுத்தம் எழும் அபாயத்திலிருந்து மனிதகுலத்தை விடுவித்தல் ஆகியவையே சோஷலிச நாடுகள் கடைப்பிடிக்கும் அயல்துறைக் கொள்கையின் நோக்கங்கள். 1970ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் ஆரம்பமான பதற்றத் தணிவு நிலைமைகளில், சோஷலிச நாடுகளல்லாத பிற நாடுகளிலும் மேலும் மேலும் விரிவான மக்கட் பகுதியோர், சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை நிலை நாட்டும் போராட்டத்தில் ஈடுபட முற்படுகிறார்கள், உலகில் சக்திகளின் பரஸ்பர நிலை சோஷலிசத்துக்கு சாதகமாய் மாறுவதைத் தொடர்ந்து, முதலாளித்துவ அரசியல்வாதிகளில் எதார்த்த நிலைவரங்களைக் கணக்கில் கொள்ளும் மனப்பாங்குடையோர் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை அங்கீகரித்து நடப்பதன் அவசியத்தை உணரத்தலைப்படுகிறார்கள்.



**அரசியல் அமைப்புச் சட்டம்:** (Constitution)—அரசின் அடிப்படைச் சட்டம். அந்தந்த அரசின் சமூக ஒழுங்கமைப்பு, தேர்தல் முறையின் கோட்பாடுகள், அரசாங்க உறுப்புக்களின் அமைப்பு, குடிமக்களது அடிப்படை உரிமைகள், கடமைகள் ஆகியவற்றை வரையறுத்துக் கூறுகிறது அரசியல் அமைப்புச் சட்டம். அது ஏற்கப்பட்ட காலத்தில் அந்த அரசில் நிலவிய வர்க்க சக்திகளது பரஸ்பர நிலையைப் பிரதிபலிக்கிறது. சோவியத் நாட்டிலும் ஏனைய சோஷலிச நாடுகளிலும் அரசியல் அமைப்புச்சட்டம் நாடு தழுவிய அளவில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பிற்பாடே ஏற்பட்டது. எடுத்துக் காட்டாய், புதிய சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தின் நகல் பற்றிய விவாதம் நான்கு மாதங்களுக்கு நீடித்து நடைபெற்றது. சோவியத் மக்களில் வயது வந்தோரில் ஐந்தில் நான்கு பகுதிக்கும் அதிகமானோர் இதில் பங்கெடுத்துக் கொண்டார்கள். **வளர்ச்சியடைந்த சோஷலிசத்து**க்கு உரிய சோவியத் நாட்டின் புதிய அடிப்படைச் சட்டம் 1977 அக்டோபரில் **சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தால்** ஏற்கப்பட்டது. இதன் முன் அறுபது ஆண்டுகளில் சோவியத் நாடு கண்ட வளர்ச்சியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைவுகளை இந்தப் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் பிரதிபலிக்கிறது.

முதலாளித்துவ நாடுகளில் செய்யப்படுவதற்கு மாறாய், சோஷலிச நாடுகளில் குடிமக்களது உரிமைகளும் சுதந்திரங்களும் இந்நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களில் பிரகடனம் செய்யப்படுவதோடு அன்னியில், அவற்றை அனுபவிப்பதற்கு வேண்டிய மெய்யான உத்தரவாதங்களும் சட்ட வழியில் தரப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

**அரசியல் நாட்டமின்மை:** (Apolitical)—அரசியல் விவகாரங்களில் நாட்டம் இல்லாமை. அரசியல் உணர்வு நிலையில் மிகவும் பிற்பட்டவர்களாய் இருக்கும் மக்கள் பகுதியோருக்கு உரித்தான இந்த அரசியல் நாட்டமின்மையை முதலாளித்துவ சித்தாந்திகள் மெச்சிப் புகழ்ந்து உபதேசிக்கிறார்கள்; உழைப்பாளி மக்களை அவர்களது உரிமைகளுக்கான **வர்க்கப் போராட்டத்திலிருந்து** திருப்பி வேறு திசையில் செல்ல வைப்பதற்காக இவ்வாறு செய்கிறார்கள்.

**அறிவு ஜீவிகள்:** (Intelligentsia) — அறிவுத்துறையினர் அல்லது படிப்பாளிகள் என்றும் இவர்கள் குறிக்கப்படுவது உண்டு. பல வகைப்பட்ட மூளை உழைப்பை இவர்கள் தமது வாழ்க்கைப் பணித் துறையாகக் கொண்டுள்ளவர்கள், இதற்குத் தேவையான தனி அறிவைப் பெற்றுள்ளவர்கள்.

இவர்கள் ஒரு சமூகப் பிரிவினர் ஆவரே அன்றி, சமூக வர்க்கமாய் அமைந்திருக்கவில்லை. ஆயினும் சமுதாயத்தின் வர்க்கங்களோடு நெருங்கிய பிணைப்பு கொண்டு இவ்வங்கங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். ஆகவே சமுதாயத்துக்கு இவர்கள் ஆற்றும் பணி முக்கியமானதாகும்.

முதலாளித்துவத்தில், பிரதானமாய் சொத்துடைத்த வர்க்கங்களின் உறுப்பினர்கள்தான் அறிவு ஜீவிகளாய் இருக்கக் காண்கிறோம். அரசுக்குச் சொந்தமான தொழில் நிலையங்களையும் தனியார் தொழில் நிலையங்களையும்



சேர்ந்த நிர்வாக ஊழியர்களின் மேல் அடுக்கினரும், அதிக சம்பளம் பெறுகிற விஞ்ஞானிகளில் ஒரு பகுதியோரும், முதலாளித்துவப் பிரசார இயந்திரத்தைச் சார்ந்தோரில் ஒரு பகுதியோரும், கணிச அளவில் மூலதனப் பங்குகளின் உடைமையாளர்களாய் இருந்து, உழைப்பாளி மக்கள் சுரண்டப்படுவதில் பங்கெடுத்துக் கொள்வதை அடிக்கடி காணலாம். ஆனால் பெருவாரியான அறிவு ஜீவிகள் முதலாளிகளால் கூலிக்கு அமர்த்தப்பட்டுச் சுரண்டப்படுகிற உழைப்பு சக்தியாகவே இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் **தொழிலாளி வர்க்கத்துக்கு** உரிய போராட்ட முறைகளைக் கையாண்டு, மேலும் மேலும் முனைப்புடன் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முற்படுகிறார்கள்.

**வளரும் நாடுகளில்** அறிவு ஜீவிகள் மிகப் பெருமளவுக்குப் புரட்சிகர-ஜனநாயக நிலைகளையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைகளையும் ஏற்கின்றனர். **பாட்டாளி வர்க்கம்** இன்னும் சமுதாயத்தில் தலைமைப் பங்கு ஆற்ற முற்படாத நிலைமைகளில், அறிவு ஜீவிகள் அடிக்கடி முற்போக்கான சமூக வளர்ச்சிக்குரிய தலைமையான சக்தியாக அமைந்து, விவசாயிகள், கைத்தொழில் வினைஞர்கள், மற்றும் ஏனைய உழைப்பாளி மக்களது நலன்களுக்காகப் பாடுபடுகிறார்கள்.

**முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கால கட்டத்தில்** புதிய சோஷலிச அறிவு ஜீவிகள் உருவாகி எழுகிறார்கள். இவர்கள் உழைப்பாளி மக்களது நலன்களுக்காகச் சேவை புரிகிறார்கள். சோஷலிசம் வெற்றியடைந்து, சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டதும், அறிவு ஜீவிகள் உழைப்பாளி மக்கள் அனைவரின் தேவைகளுக்காகப் பாடுபடுகிறார்கள். இவர்களது நலன்கள் தொழிலாளர்கள், விவசாயிகளது நலன்களிலிருந்து பிரிக்க முடியாதனவாகி விடுகின்றன.

**அரசியல் பொருளாதாரம்:** (Political Economy)- பொருட் செல்வத்தின் உற்பத்தி, வினியோகம், பரிமாற்றம், நுகர்வு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவற்றின் போது எதார்த்தப் பொருளியல் விதிகளின் விளைவாய் உருவாகும் சமூக உறவுகள் பற்றிய விஞ்ஞானம்.

அரசியல் பொருளாதாரம் வெவ்வேறு சமூக **வர்க்கங்களது** நலன்களை பாதிக்கிற பிரச்சினைகளை ஆராய்வதால், அது முதலாளித்துவ தன்மையதாகவும், பாட்டாளி வர்க்கத் தன்மையதாகவும், குட்டி முதலாளித்துவ தன்மையதாகவும் இருக்கக் கூடும்.

பாட்டாளி வர்க்க அரசியல் பொருளாதாரம்தான் மெய்யான விஞ்ஞான வழியில் அமைந்தது. கார்ல் மார்க்ஸ் தான் (1818-83) அதன் தந்தை. முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் பற்றிய விதிகளை மார்க்ஸ் கண்டுபிடித்துக் கூறினர். முதலாளித்துவ **சுரண்டலின்** இரகசியத்தையும், உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள இணக்கம் காண முடியாத முரண்பாடுகளையும், இவை முதலாளித்துவத்தை அதன் அழிவுக்கு இட்டுச் செல்வதையும் மார்க்ஸ் தெளிவுபடுத்திக் காட்டினர். வரலாற்றின் போக்கு அனைத்துமே எப்படிக் கம்யூனிசப் பொருள் உற்பத்தி முறையின் உதயத்துக்கும் வெற்றிக்கும் தேவையான நிலைமைகளைத் தயார் செய்து வருகிறது என்பதை அவர் நிரூபித்துக் காட்டினர். விளதீமிர் லெனின் (1870-1924) **ஏகாதிபத்தியத்துக்கும்** பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குமான நிலைமைகளில் மார்க்சியத் தத்துவத்தை ஆக்க வழியில் வளர்த்து, **முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கால கட்டத்தின்** பிரச்சினைகளை விளக்கிக் கூறி தெளிவுபடுத்தினர். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஏனைய கம்யூனிஸ்டுக் கட்சிகளும், மற்றும் சோவியத் நாட்டையும் ஏனைய நாடுகளையும் சேர்ந்த மார்க்சிய அறிஞர்களும் தத்துவத் துறையில் செய்துள்ள பணிகளின் விளைவாய் மார்க்சிய-லெனினிய, பாட்டாளி வர்க்க அரசியல் பொருளாதாரம் மேலும் வளர்க்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, சோஷலிசத்தின் அரசியல் பொருளாதாரம் குறித்த பிரச்சினைகள் ,வரையறுத்து விளக்கப்பட்டுள்ளன.



மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் மார்க்சியம்-லெனினியத்தின் ஜீவாதார உள்ளடக்கக் கூறு ஆகும்.

**அரசு:** (State)—சமுதாயத்தின் அரசியல் ஒழுங்கமைப்புக்காக வரலாற்று வடிவில் உருவான ஒரு வடிவம். **உற்பத்திச் சாதனங்களில், தனியார் உடைமை** தலைதூக்கி, சமுதாயம் சுரண்டுவோராகவும் சுரண்டப்படுவோராகவும் பிளவுண்டதும் அரசு உதயமாயிற்று.

ஆதிக்கத்தில் உள்ள வர்க்கத்தின் **சர்வாதிகாரமாய்** அமைந்த அரசு, ஆயுதப் படைகளின் உதவியையும், நீதி மன்றங்கள், போலீஸ், சிறைக் கூடங்கள் போன்ற பலவந்த அமைப்புக்களின் உதவியையும் கொண்டு ஆட்சியதிகாரம் செலுத்துகிறது.

ருஷ்யாவில் 1917 அக்டோபரில் (புதிய முறைப்படி நவம்பரில்) சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்ததைத் தொடர்ந்து உலகின் முதலாவது சோஷலிச அரசு உதித்தெழுந்தது. உழைப்பாளி மக்களாகிய தொழிலாளர்கள் விவசாயிகளது தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகளைக் கொண்ட சோவியத்துகளின் (பஞ்சாயத்துகள்) அரசாங்கமாய் அமைந்த அரசு இது. இவ்வாறு **பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்** நிறுவப்படலாயிற்று. சோவியத் நாட்டில் சோஷலிசம் முழு அளவுக்கு வெற்றியடைந்ததும் சோவியத் அரசு அனைத்து மக்களது அரசாய் மாறியது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் அதற்குரிய வரலாற்றுப் பணியைச் செய்து முடித்ததும் அதன் இடத்தில் மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் அரசாங்கமாய் அமைந்த அனைத்து மக்களது அரசு மலர்ந்தது.

**அரசுத் துறை:** (State Sector)—உற்பத்திச் சாதனங்களது அரசு (பொது) உடைமையின் அடிப்படையிலான தொழில் நிலையங்களையும் நிறுவனங்களையும் கொண்ட தேசப் பொருளாதாரப் பகுதி. அரசே உடைமையாளராய் இருப்பதால் இந்தத் தொழில் நிலையங்கள், நிறுவனங்களின் வருவாயில் ஒரு பகுதியை அது சுவீகரித்துக் கொண்டு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதை அரசியல் அதிகாரம் வகிக்கும் வர்க்கங்களது நலன்களுக்காக உபயோகிக்கிறது. சோஷலிச அரசுகளிலும் வளரும் நாடுகளிலும் அரசுத் துறையானது தேசப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முக்கிய சாதனமாகத் திகழ்கிறது.

**அரசு முதலாளித்துவம்:** (State Capitalism)—நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த முதலாளித்துவ அரசு எடுக்கும் நடவடிக்கைகளால் ஆனது. சில நாடுகளில் ஏகபோகக் கட்டத்துக்கு முற்பட்ட முதலாளித்துவத்தின் காலத்தில் அரசு முதலாளித்துவம் பரவலாகக் கைக்கொள்ளப்படுகிறது. வளரும் நாடுகளில் அரசுக்குச் சொந்தமான தொழில் நிலையங்களை நிறுவுவதன் மூலம் அரசு முதலாளித்துவம் தேசியத் தொழில் துறையின் ஆக்கத்துக்கும் பொருளாதார சுயேச்சை கைகூடுவதற்கும் துணைபுரிகிறது. **முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கால கட்டத்தில்** பாட்டாளி வர்க்க அரசு **தொழிலாளி வர்க்கத்தின்** நலன்களை முன்னிட்டு சலுகை உரிமைகளின் வடிவிலும், அரசுக்குச் சொந்தமான தொழில் நிலையங்களைக் குத்தகைக்கு விடுவதன் மூலமும், தொழில் நிலையங்களைக் கூட்டு சேர்ந்து நடத்துவதன் மூலமும், பிற வழிகளிலும் அரசு முதலாளித்துவத்தைக் கைக்கொள்வது சாத்தியமே.

**அரசு-ஏகபோக முதலாளித்தும்:** (State-Monopoly Capitalism)—ஏகபோக முதலாளித்துவம் மேலும் வளர்ந்து செல்லுகையில் அது ஏற்கும் ஒரு புதிய வடிவம். முதலாளித்துவ ஏகபோகங்களது அதிகாரம் அரசின் அதிகாரத்துடன் இணைந்து விடுவதுதான் இந்தப் புதிய வடிவத்துக்குரிய குண விசேஷம். ஏகபோகங்களை மேலும் கொழுக்க வைப்பதும், தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் தேச விடுதலை இயக்கத்தையும் நசுக்குவதும்தான் இந்த இணைப்பின் நோக்கம்.

**முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிக்கு** உரிய காலத்தில் ஏகாதிபத்தியம் பிரவேசிக்கும் வளர்ச்சிக்



கட்டமே அரசு—ஏகபோக முதலாளித்துவம் எனப்படுவது. வெகுவாய் ஒன்றுகுவிந்துவிட்ட தொழில் துறையும் வெகுவாய் ஒன்று குவிந்து விட்ட மூலதனமும் (தனியார் ஏகபோக மூலதனமும் அரசு மூலதனமும்) அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் பொருளாதார அடித்தளமாய் அமைகின்றன.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வடிவங்களாவன: **உற்பத்திச் சாதனங்கள்,** சிலவற்றின் அரசு **உடைமை;** அரசானது வாங்குவோராகவும் விற்போராகவும் பண்டப் புழக்கத்தின் செயற்பாடுகளில் பங்கெடுத்துக் கொள்ளுதல்; நேரடியாக ஆதார முதலீடுகள் செய்தல், செயல் திட்டமிட்டுப் பொருளாதாரத்தை அரசு ஒழுங்கியக்குதல், ஏகபோகங்களது வெளிநாட்டு விஸ்தரிப்பிலும் ஏகாதிபத்திய ஒன்றிணைப்பிலும் (பார்க்கவும்: **ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு**) அரசு பங்கெடுத்துக் கொள்ளுதல், முதலாளித்துவ அரசுப் பொறியமைவின் மேலடுக்கைச் சேர்ந்த உறுப்பினர்கள் முதலாளித்துவ ஏகபோகங்களது அதிபர்களோடு ஒன்று கலக்கும் போக்கு அரசு-ஏகபோக முதலாளித்துவத்தில் மேலும் வலிமையுறுகிறது. இதனுல் ஒரு புறத்தில் **சோஷலிசத்துக்கு** அவசியமான பொருளாயத முன் நிபந்தனைகள் உருவாக்கப் படுகின்றன, மறுபுறத்தில் ஏகாதிபத்திய முரண்பாடுகள் அதீத அளவுக்குத் தீவிரமாக்கப் படுகின்றன. இவ்விதம் முதலாளித்துவ அமைப்பின் வீழ்ச்சியை அரசு-ஏகபோக முதலாளித்துவம் துரிதப்படுத்துகிறது.

**அராஜகவாதம்:** (Anarchism)—ஒரு சமுதாய, அரசியல் போக்கு. இது உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரமும் உட்பட எல்லா வகையான அதிகாரத்திடமும் பகைமை பாராட்டுகிறது. உழைப்பாளி மக்கள் நிறுவன வழியில் ஒழுங்கமைந்து நடத்துகிற அரசியல் போராட்டத்தை எதிர்த்து நிற்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அராஜக சிண்டிகலிசம்:** (Anarcho-Syndicalism)—தொழிலாளி வர்க்க இயக்கத்தில், மார்க்சியம்-லெனினியத்துக்குப் புறம்பான ஒரு போக்கு, சித்தாந்த வழியில் **அராஜகவாதத்தின்** தாக்கத்துக்கு இரையானது. இப்போக்கின் ஆதரவாளர்கள் அரசியல் போராட்டத்தின் அவசியத்தையும், சுயேச்சையான தொழிலாளர் கட்சி ஒன்று இருப்பதன் அவசியத்தையும், உழைப்பாளி மக்கள் ஆட்சியதிகாரம் கைப்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் மறுக்கிறார்கள். நேரடிச் செயல்கள் (பகிஷ்காரம்) சீர் குலைவு, பொருளாதார வேலை நிறுத்தங்கள், மூலமாகவே முதலாளித்துவத்தை ஒழித்து, ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியமைத்துவிட முடியுமென அராஜக–சிண்டிகலிஸ்டுகள் தவறாக நினைக்கிறார்கள். இந்தப் புதிய சமுதாயத்தில் தொழிற் சங்கங்கள் (தொழிலாளர்கள் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றாமலே) முதலாளிகளுக்குச் சொந்தமான **உற்பத்திச் சாதனங்களைப்** பறிமுதல் செய்துவிடும் என்று இவர்கள் கருதுகிறார்கள்.

## ஆ

**ஆக்கிரமிப்பு:** (Aggression)—ஆத்திரமடைய நியாயம் ஏதும் இல்லாமலே, ஓர் **அரசின்** பிரதேசத்தைப் பிடிப்பதற்காகவும், அரசியல் வழியிலும் பொருளாதார வழியிலும் அதை அடிபணிய வைப்பதற்காகவும் அதன் மீது ஆயுதமேந்திய தாக்குதல் தொடுத்தல். வியத்நாம் மக்களுக்கு எதிராய் அமெரிக்க ஐக்கிய நாடு நடத்திய யுத்தமும், வியத்நாம் மீது நடத்தப்பட்ட சீனப் படையெடுப்பும், அரபு அரசுகளுக்கு எதிரான இஸ்ரேலியத் தாக்குதல்களும் ஆக்கிரமிப்புக்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.



**ஆதிக்கக் கும்பல்:** (Oligarchy)— மிகுதியான பொருளாதார அதிகாரத்தைத் தம் கைக்குள் குவித்து வைத்திருக்கும் ஒரு சிறிய கோஷ்டி. உதாரணமாய், **பன்னாட்டு இணையங்களுடன்** (Multinational Corporations) பிணைப்பு கொண்ட பெரிய நிலப் பிரபுக்கள், வணிகர்களால் ஆளப்படுகிற லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றில் ஆதிக்கக் கும்பல்கள் தான் கோலோச்சுகின்றன. நிக்கராகுவா இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டாய் விளங்கிற்று. குடும்ப பந்தங்களால் இணைக்கப்பட்ட ஏழு கோஷ்டிகளைக் கொண்ட சமோசா கும்பல் அங்கே அண்மைக் காலம் வரை தேசப் பொருளாதாரத்தில் 90 சதவீதத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் தனது பிடியில் வைத்திருந்தது. சாகுபடிக்கு ஏற்ற நிலங்களில் சரிபாதியைத் தனக்குச் சொந்தமான நிலங்களாக்கிக் கொண்டு ஆதிக்கம் புரிந்தது.

ஏகாதிபத்தியத்தில், தொழில் துறை மூலதனம், நிதி மூலதனம் இவை இரண்டும் ஒன்று கலந்து விடுவதன் விளைவாய், ஒரு தனி வகை ஆதிக்கக் கும்பலாகிய நிதியாதிக்கக் கும்பல் உருப்பெற்று எழுகிறது.

**ஆயுத உற்பத்திப் போட்டி:** (Arms Race)—ஏகாதிபத்திய அரசுகளின் ஆக்கிரமிப்பு வட்டாரங்கள் மேலும் மேலும் கூடுதலான அளவில் நடத்திச் செல்லும் ஆயுத உற்பத்தி. ஆயுத உற்பத்திப் போட்டியால் உழைப்பாளி மக்களைத் திணறடிக்கும்படியான வரிச்சுமை அவர்கள் மீது இருத்தப்படுகிறது, ஆனால் இராணுவ-தொழில்துறைத் தொகுதியின் அதிபதிகளுக்குக் கொள்ளை கொள்ளையாய் இலாபங்கள் கிடைக்கின்றன.

சோஷலிச அரசுகள் உதித்தெழுந்த தருணம் முதலாய் அவை முதலாளித்துவ அரசுகளின் இராணுவ ஆதிக்க வட்டாரங்களது யுத்தத் தயாரிப்புகளால் எழுகிற அபாயத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் பொருட்டு எதிர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பந்தத்துக்கு உள்ளாகின்றன. ஆயுத உற்பத்திப் போட்டியில் ஒவ்வொரு புதிய சுற்றின் கூடவே, ''சோவியத் அபாயம்'' என்று கூச்சலிட்டுப் பீதியை உண்டாக்கும் முதலாளித்துவப் பிரசாரமும் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

**ஆயுதமேந்திய எழுச்சி:** (Armed Uprising)—ஆட்சியதிகாரத்துக்காக உழைப்பாளி மக்கள் நடத்துகிற **வர்க்கப் போராட்டத்தின்** மிகவும் கூர்மையான வடிவம். சுரண்டும் வர்க்கத்தின் மூர்க்கமான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருப்பதால்தான் உழைப்பாளி மக்கள் ஆயுதமேந்தி எழுச்சி நடத்தும்படி நேர்கிறது. இவ்வாறுதான் ருஷ்யாவில் 1917 ஆம் ஆண்டு அக்டோபர் 24-25 (புதிய முறைப்படி நவம்பர் 6-7) இரவில் தொழிலாளர்களும் படையாட்களும் பால்டிக் கடற்படையின் மாலுமிகளும் சேர்ந்து நடத்திய ஆயுதமேந்திய எழுச்சியின் விளைவாய், முதலாளித்துவ இடைக்கால அரசாங்கம் வீழ்த்தப்பட்டு, ஆட்சியதிகாரம் உழைப்பாளி மக்களது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட உறுப்பாகிய தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்தின் கைக்கு மாறியது.

## இ

**இடதுசாரி:** (Left)—ஏனைய முற்போக்குவாதிகளையும் புரட்சி மனப்பாங்கினரையும் காட்டிலும் அதிக வைராக்கியம் கொண்ட அரசியல் குழுவோர் அல்லது தலைவர்களைக் குறிக்க உபயோகிக்கப்படும் சொல். தீவிரவாத, புரட்சிகரக் கட்சிகளைச் சார்ந்தோர் நாடாளுமன்றத்தில் அவைத் தலைவருக்கு இடது பகுதியில் அமர்வது வழக்கமாய் இருந்ததால் இக்கட்சியினர் அப்படி அழைக்கப்படலாயினர்.

2) பார்க்கவும்: ''புதிய இடதுசாரி.''



3) ''இடதுசாரியினர்''—தமது கருத்துக்கள் எதார்த்தத்தில் எதிர்ப் புரட்சித்தன்மை வாய்ந்திருப்பதை வெளியே தெரியாதபடி மறைப்பதற்காக புரட்சிகர வாய் வீச்சை அதிகம் பயன்படுத்துவோர்.

**''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'':** (''Left Communists'')—ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியில் (போல்ஷிவிக்குகள்) 1918-ல் நிறுவப்பட்ட சந்தர்ப்பவாதக் கோஷ்டி. லெனினுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் எதிராய் எழுந்த ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை (பிரேஸ்த் சமாதான உடன்பாடு, 1918) முடிவாவதை எதிர்த்தார்கள். ஜெர்மனி அளித்த உடன்பாட்டு வரையறைகள் ருஷ்யாவுக்கு மிகவும் பாதகமாய் இருந்தன. ஆயினும் இளம் சோவியத் அரசுக்கு சமாதானம் இன்றியமையாததாய் இருந்தது. ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' நிலைமையைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல், உடனடியாகவே பிற நாடுகளில் புரட்சியைக் ''கிளப்பிவிட'' வேண்டுமெனக் கோரினர். அங்கங்கே நிலவிய பிரத்தியேக நிலைமைகளையும், வர்க்க சக்திகளது பரஸ்பர நிலையையும், உழைப்பாளி மக்கள் எந்த அளவுக்குப் பக்குவ நிலையில் இருக்கிருர்கள் என்பதையும், அவர்களது வர்க்க உணர்வு எந்நிலையில் உள்ளது என்பதையும் கவனியாது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இப்படிக் கோரினர். **அரசு முதலாளித்துவத்தைப்** பயன்படுத்திக் கொள்வதையும், சோஷலிசப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்கும் பணியில் முதலாளித்துவ நிபுணர்களை உபயோகித்துக் கொள்வதையும் அவர்கள் எதிர்த்தார்கள். இதன் மூலம் சோஷலிச இலட்சியத்துக்கே தீங்கிழைத்தார்கள்.

**இணங்காதவர்,** அல்லது மாற்றுக் கருத்தாளர்: (Dissident)—அதிகார பூர்வமான கருத்துக்கு இணங்காமல் மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர். சோஷலிச நாடுகளில் பொதுவாக ஒத்துக்கொள்ளப்படும் **சித்தாந்தம்** எல்லோரும் இப்படி இப்படித் தான் சிந்திக்க வேண்டுமென நிர்ணயித்து விடுவதாகவும், இப்படிச் சிந்திக்க இணங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதோர் தண்டிக்கப்படுவதாகவும் கதை கட்ட முயற்சி செய்யும் முதலாளித்துவப் பிரசாரம் இந்தப் பதத்தை வெகுவாக உபயோகித்து வருகிறது.

உண்மை என்னவென்ருல் இந்நாடுகளில் தண்டனைக்கு உரிய குற்றங்களாகக் கருதப்படுபவை சமூக-விரோத செயல்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகளும், சமுதாயத்துக்குத் தீங்கு இழைக்கும் அவதூருன புரட்டுகளையும் பொய் வதந்திகளையும் பரப்பும் செயல்களுமே அன்றி, "கருத்து வேறுபாடுகள்" எவ்விதத்திலும் தண்டிக்கப்படவில்லை. திருட்டு, லஞ்சம், கொள்ளை இலாபம் போன்ற சமூக-விரோத காரியங்கள் எப்படி தண்டிக்கப்படுகின்றனவோ, அதுபோல சமுதாயத்துக்குத் தீங்கிழைப்பவை என்பதால் சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ள செயல்கள் மட்டும் தான் ("கருத்துக்கள்" அல்ல) குற்றங்களாகக் கருதப்பட்டுச் சட்டப்படி தண்டிக்கப்படுகின்றன.

**இயக்கவியல்**: (Dialectics)— 1) வளர்ச்சியை அதன் முழு அளவு சிக்கலோடும், வேறுபாட்டுத் தன்மையோடும், முரண்பாட்டு இயல்போடும் குறிக்கும் பதம்.

2) இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகிய இவற்றின் வளர்ச்சியை ஆளுகிற மிகவும் பொதுவான விதிகளை ஆராயும் விஞ்ஞானம். பொருள்களையும் புலப்பாடுகளையும் எல்லாக் கோணங்களிலிருந்தும் அவற்றின் முரண்பாடுகளிலும், பரஸ்பரத் தொடர்புகளிலும், பிரத்தியேக வரலாற்று நிலைமைகளிலும், சமூக நடைமுறையுடனன உறவு நிலையிலும் இந்த விஞ்ஞானம் ஆராய்கிறது.

**இயக்கவியல் பொருள் முதல் வாதம்**: (Dialectical Materialism) —விஞ்ஞான வழிப்பட்ட தத்துவவியல் உலகக் கண்ணேட்டம். மார்க்சியம் - லெனினியத்தின் ஓர் உள்ளடக்கக் கூறு, அதன் தத்துவவியல் அடித்தளம். இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியை ஆளுகிற விதிகளை ஆராய்ந்தறிவதற்குரிய பொதுவான முறை.



இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை கார்ல் மார்க்சும் பிரெடரிக் எங்கெல்சும் வளர்த்து உருவாக்கினர், விளதீமிர் லெனின் அதை மேலும் வளர்த்திட்டார்.

மார்க்சியத்தின் தத்துவவியல், பொருள் முதல் வாதத் தத்துவ வியலாகும்; ஏனெனில் உலகம் பொளாயதத் தன்மையது, விசும்பிலும் காலத்திலும் வரம்பற்றதாகிய பொருளால் ஆனது என்ற போதனையே மார்க்சியத் தத்துவவியலின் அடிப்படை. இந்தத் தத்துவவியல் இயக்கவியல் தன்மையது; ஏனெனில் உலகில் பொருள்கள், புலப்பாடுகளிடையிலான சர்வவியாபகத் தொடர்புகளையும், உள் முரண்பாடுகளின் விளைவாய் உலகம் இயங்கியும் வளர்ந்தும் வருகிறது என்பதையும் இந்தத் தத்துவவியல் அங்கீகரிக்கிறது.

**இயற்கைப் பொருளாதாரம்**: (Natural Economy)— பொருள் உற்பத்தியானது விற்பனைக்காக அல்லாமல், அவரவரும் உயிர் வாழ்வதற்கு அவசியமான தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதற்காக நடைபெறுகிற பொருளாதாரம். பிழைப்பதற்கு வேண்டிய நிலைக்கு மேல் செல்லாத பொருளாதாரமாகும்.

**இராணுவ ஆட்சிக் குழு**: (Junta) — பார்க்கவும்: ஜுன்தா.

**இராணுவ ஆதிக்கம்**: (Militarism)—சுரண்டலின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தில் கொள்ளைக்கார யுத்தங்கள் தொடுக்கும் நோக்கத்தோடும், நாட்டினுள் உழைப்பாளி வெகு ஜனங்களது எதிர்ப்பை நசுக்கும் நோக்கத்தோடும் அரசின் இராணுவ வலிமையைப் பெருக்கிச் செல்லுதல். இராணுவ ஆதிக்கப் போக்கு பகை வர்க்கங்களாகப் பிளவுண்ட சமுதாயத்துக்குரிய நிரந்தர இயல்பாயினும், முதலாளித்துவத்தில் தான் அது ஒரு பொருளாதார, அரசியல், சித்தாந்த அமைப்பாய் உருப்பெற்று எழுந்தது. **பதற்றத் தணிவு** ஏற்பட்டிருக்கிற நிலைமைகளில் முதலாளித்துவ நாடுகளில் **இராணுவ-தொழில்துறைக்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கூட்டைச்** சேர்ந்த சக்திகள் சர்வதேச வளர்ச்சியின் போக்கை எதிர்த் திசையில் திருப்பி விட்டு **கெடுபிடி யுத்தத்தைத்** திரும்பவும் கிளப்பி விட முயலுகின்றன.

**இராணுவ-தொழில் துறை இணைவு:** (Military Industrial Complex)—அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் ஒரு தனி வடிவமாகிய இது ஏகபோக முதலாளிகளாலும் இராணுவத்தின் தலைமை அதிகாரிகளாலும் ஆன இணைவு ஆகும். இராணுவத் தளவாடங்களுக்காக அரசாங்கம் ஒதுக்கும் பெருந்தொகைகளைத் தீனியாகக் கொண்டு இந்த இணைவு கொழுத்துப் பெருக்கிறது. இந்த இணைவு அரசாங்கத்திலுள்ள தனது கையாட்களைக்கொண்டு அரசாங்கத்தைத் தனக்குப் பணிய வைத்து, ஏகபோக முதலாளிகளுக்கு மிகை லாபங்களும் உழைப்பாளி மக்களுக்குக் கொடுந் துன்பங்களும் விளைவிக்கும் இராணுவ சூதாட்டங்களில் ஈடுபடுகிற ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கு மாறு செய்கிறது.

**இன ஒதுக்கல் கொள்கை:** (Apartheid)—தென் ஆப்பிரிக்கக் குடியரசின் ஆளும் வட்டாரங்கள் ஆப்பிரிக்கர்களுக்கும் இந்தியர்களுக்கும் எதிராக இன ஒதுக்கலைக் கைக்கொள்கின்றன.

## உ

**உடைமை:** (Ownership)—சமுதாயப் பொருள் உற்பத்தி நிகழ்வின் விளைவாகிய பொருட் செல்வம் சுவீகரிக்கப் படுகையில் மக்களது உறவு நிலைகளையும் மக்களிடையிலான உறவு நிலைகளையும் குறிப்பதாகும். உடைமையானது பொருட்களுடன் ஒருவருக்கு உள்ள உறவு நிலையைக் குறிப்பதாகக் கொள்வது சரியல்ல (உண்மையை மிதமிஞ்சி எளிதாக்கி விடும் பாமரத்தனமான கருத்து இது). பொருட்களுடன் மக்களுக்கு உள்ள உறவு நிலை மூலமாய் வெளியிடப் பட்டாலும் உண்மையில் உடைமையானது மக்களிடையிலான உறவு நிலைகளையே குறிப்பதாகும். உடைமை



எத்தன்மையதாய் இருக்கிறது என்பது உற்பத்திக் கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் உடைமையாளராய் இருப்பது யார் என்பதையே பொறுத்ததாகும்.

ஆதிக்கத்திலுள்ள **உற்பத்தி முறைக்கு,** ஏற்ப உடைமையானது வெவ்வேறு வடிவங்களை ஏற்கிறது. உதாரணமாக **புராதன சமுதாய அமைப்பில்** ஒரே பூர்விகக் குடியைச் சேர்ந்தோர் ஒன்று சேர்ந்து கூட்டாக வேலை செய்தார்கள். அப்போது யாவும் எல்லார்க்கும் உரிய பொதுச் சொத்தாய் இருந்தன. அதாவது உடைமையானது சமுதாய உடைமையாய் இருந்தது. எல்லார்க்கும் சொந்தமான இந்தப் பொதுச் சொத்துக்கள் சமுதாயம் உயிர் வாழ்வதற்கு அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மட்டும் தான் போதுமானவையாக இருந்தன. உழைப்புக் கருவிகளும் வேலைப் பழக்க வழக்கங்களும் மேலும் மேலும் மேம்பாடுற்று முன்னேறியதைத் தொடர்ந்து கூட்டு உழைப்புக்குப் பதில் தனியாள் உழைப்பு படிப்படியாய் முன்னுக்கு வந்தது. சமுதாயத்தின் தேவைக்கும் கூடுதலாய் சில பண்டங்கள் உற்பத்தி செய்யப்படலாயின. இதனால் இந்த உபரிப் பண்டங்களைக் கொடுத்து விட்டு அதிகம் தேவைப்பட்ட பிற பண்டங்களைப் பெறுவதற்கு வகை செய்த பண்டப் பரிமாற்றம் தலைதூக்கியது. பரிமாற்றம் வளர்ந்து விரிவடைந்தபோது **தனியார் உடைமை** எழுந்தது. தனியார் உடைமையாய் இருந்த சொத்துக்கள் பூர்வீகக் குடிகளது தலைவர்கள், பூசாரிகள், போர் வீரர்களின் கைகளில் குவிந்தன. இந்தத் தனியார் சொத்துடைமை புனிதமானதாகவும் மீறப்படாதவாறு பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் பிரகடனம் செய்யப்பட்டது. சமுதாயம் இவ்விதம் எதிரும் புதிருமான **வர்க்கங்களாகப்** பிளவுண்டு, வர்க்கப் பிரிவினையும் மனிதனை மனிதன் சுரண்டுவதும் எழுந்தன. அடிமையுடைமை என்னும் உடைமை வடிவம் பரவலாய் வளரலாயிற்று (பார்க்கவும்: **அடிமையுடைமை அமைப்பு**).

பிறகு, பொருள் உற்பத்தி மேலும் வளர்ச்சியுற்றதைத் தொடர்ந்து, தனியார் உடைமையானது பிரபுத்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடைமையின் வடிவத்தையும் (பார்க்கவும்: **நிலப் பிரபுத்துவம்**) அதற்கும் பிறகு முதலாளித்துவ உடைமையின் வடிவத்தையும் ஏற்கலாயிற்று. **முதலாளித்துவத்தில்**, தனியார் உடைமையானது அதன் உச்சவரம்புக்கு வளர்ந்து உயர்ந்துள்ளது. வெவ்வேறு பணித் துறைகளையும் தொழில்களையும் சார்ந்த ஏராளமான மக்கள் சமுதாயப் பொருள் உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இந்தச் சமுதாய உற்பத்தியால் விளையும் பொருள்களை **உற்பத்திச் சாதனங்களின்** முதலாளித்துவ தனி உடைமையார்களான ஒரு சிலர் சுவீகரித்துக் கொண்டு விடுகிறார்கள். இவ்விதம் உற்பத்தியின் சமூகத் தன்மை முதலாளித்துவ சுவீகரிப்பின் தனியார் தன்மையுடன் முரண்பட்டு முட்டி மோதுகிறது. இந்த முரண்பாட்டுக்கு **சோஷலிசப் புரட்சி** தீர்வு காண்கிறது. சோஷலிசப் புரட்சி உற்பத்திச் சாதனங்களின் சோஷலிசப் பொதுவுடைமையை நிறுவி நிலைநாட்டுகிறது. உற்பத்திச் சாதனங்களது பொதுவுடைமை மக்களை ஐக்கியப்படுத்துகிறது; வர்க்கப் பகைமையையும், ஏழைகளென்றும் பணக்காரர்களென்றும் மக்கள் பிளவுண்டிருப்பதையும், மனிதனை மனிதன் சுரண்டுவதையும் இல்லாதொழித்திடுகிறது; மக்களுக்குச் சுதந்திரமும் சமாதானமும் சகோதர பாசமும் கிட்டச் செய்கிறது. (பார்க்கவும்: **பொது உடைமை, தனியார் உடைமை, சொந்த சொத்து**.)

**உலகக் கண்ணோட்டம்:** (World Outlook) — உலகையும் இயற்கையையும் சமுதாயத்தையும் பற்றிய கருத்துக்களின் தொகுதி. கம்யூனிஸ்டு உலகக் கண்ணோட்டம் முதலாளித்துவ உலகக் கண்ணோட்டம் ஆகிய இரு கண்ணோட்டங்களுக்கும் இடையே நமது சகாப்தத்தில் கடுமையான போராட்டம் நடைபெற்று வருகிறது. கம்யூனிஸ்டு உலகக் கண்ணோட்டம் உலகை மாற்றியமைக்க முனைப்புடன் செயல்படுமாறு உழைப்பாளி மக்களைத் தட்டியெழுப்புகிறது. மக்களுக்குத் தமது சக்திகளிலும் சமுதாய முன்னேற்றத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கை ஊட்டி அவர்களை உத்வேகம் பெறச் செய்கிறது.



**உலக சோஷலிச அமைப்பு:** (World Socialist System)— **சோஷலிசமும், கம்யூனிசமும்** கட்டியமைக்கும் நாடுகளது சமூக, பொருளாதார, அரசியல் கூட்டுக் குடும்பம். **முதலாளித்துவத்திலிருந்து** சோஷலிசத்துக்கு மனிதகுலம் மாறிச் செல்வதன் துவக்கத்தை 1917-ல் ருஷ்யாவில் நடைபெற்ற **மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி** குறித்தது. சோவியத் ருஷ்யாவின் சோதர உதவியோடு சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதற்கான பாதை 1921-ல் மங்கோலியாவின் முன்னால் திறக்கப்பட்டது. 1944—49-ல் ஐரோப்பிய, ஆசிய நாடுகள் பலவற்றில் மக்கள் ஜனநாயகப் புரட்சிகளும் சோஷலிசப் புரட்சிகளும் நடைபெற்று, அல்பேனியா, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, சீனா, செக்கோஸ்லோவாக்கியா, பல்கேரியா, போலந்து, யுகோஸ்லாவியா, ருமேனியா, வடக்கு வியத்நாம், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி ஆகிய நாடுகள் சோஷலிசப் பாதையில் முன்னேறத் தொடங்கின. 1950 ஆம் ஆண்டுகளின் இறுதியில் கியூபாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி வாகை சூடியது. 1976 ஆம் ஆண்டின் நடுவில் வியத்நாம் திரும்பவும் ஐக்கியமடைவது நிறைவுற்று அது தன்னை ஒரு சோஷலிசக் குடியரசாகப் பிரகடனம் செய்து கொண்டது. லாவோசில் மக்கள் ஜனநாயகக் குடியரசு நிறுவப் படலாயிற்று. 1917—19-ல் உலகின் நிலப் பரப்பில் 16 சதவீதமும், உலகின் மொத்த மக்கள் தொகையில் 8 சதவீதமும், உலகின் தொழில் துறைப் பொருள் உற்பத்தியில் 3 சதவீதத்துக்குக் குறைவானதும் தான் சோஷலிசத்துக்கு உரித்தானவையாக இருந்தன. ஆனால் 1985-ல் உலக சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் உலகின் நிலப்பரப்பில் சுமார் 26 சதவீதத்தையும், மனித குலத்தோரில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியோரையும் கொண்டதாகி, உலகத் தொழில் துறைப் பொருள் உற்பத்தியில் 40 சதவீதத்துக்கும் அதிகமானதை உற்பத்தி செய்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உலகின் புரட்சிப் போக்கு:** (World Revolutionary Process)—நம் காலத்தின் புரட்சி இயக்கங்களது ஒட்டு மொத்தம், அதாவது **சோஷலிசப் புரட்சிகள்;** தேசவிடுதலை, ஏகாதிபத்திய-எதிர்ப்பு, பிரபுத்துவ-எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சிகள்; பாசிஸ்டு ஆட்சிகளையும் ஏனைய கொடுங்கோல் ஆட்சிகளையும் எதிர்த்து ஜனநாயகத்துக்காக நடைபெறும் போராட்டங்கள்—இவை யாவற்றின் ஒட்டு மொத்தம். வெவ்வேறு வெகுஜன இயக்கங்களும் உலகின் புரட்சிப் போக்காகச் சங்கமித்து விடுகின்றன—இது நமது சகாப் தத்துக்குரிய ஓர் இயல்பாகும். **உலக சோஷலிச அமைப்பு தான்** உலகின் புரட்சிப் போக்கினது தலைமையான சக்தி. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளது தொழிலாளி வர்க்கப் போராட்டமும், மற்றும் தேச விடுதலை இயக்கமும் உலகின் புரட்சிப் போக்கைச் சேர்ந்த அத்தியாவசியக் கூறுகளாகும்.

**உள்கட்சி ஜனநாயகம்:** (Inner-Party Democracy)—கட்சிக் கொள்கையை உருவாக்குவதிலும், செயல்படுத்துவதிலும், கட்சியின் தலைமை உறுப்புக்களை அமைத்திடுவதிலும் கட்சி உறுப்பினர்கள் விரிந்த அளவில் பங்கெடுத்துக் கொள்ளுதல். **உள்கட்சி ஜனநாயகம்** மார்க்சிய-லெனினியக் **கட்சிகளுக்கு** உரிய ஒரு சிறப்பியல்பு; **ஜனநாயக மையத்துவத்தின்** அத்தியாவசியக் கூறு.

**உள் நாட்டுக் கொள்கை:** (Internal or Home Policy)—ஓர் அரசின் வர்க்கங்களுக்கு இடையிலும், சமூகக் கோஷ்டி களுக்கு இடையிலும், தேசிய இனங்களுக்கு இடையிலும் உள்ள உறவு நிலைகளைப் பிரதிபலிக்கும் கொள்கை. ஆதிக்க நிலையிலுள்ள வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாப்பதே உள் நாட்டுக் கொள்கையின் நோக்கம்.

**உற்பத்தி உறவுகள்:** (Production Relations)—சமூகப் பொருள் உற்பத்தி, பொருட் செல்வத்தின் பரிமாற்றம், வினியோகம் ஆகியவை நடைபெறுகையில் மக்களிடையே நிலவுகிற உறவுகள். **உற்பத்திச் சாதனங்களது** உடைமையின் தன்மையைப் பொறுத்தே உற்பத்தி உறவுகள் அமை



கின்றன. **உற்பத்தி சக்திகள்,** உற்பத்தி உறவுகள் இவை இரண்டும் சேர்ந்ததே உற்பத்தி முறை (Mode of Production) எனப்படுவது. உற்பத்தி சக்திகளது வளர்ச்சியைத் தொடர்ந்து, அதாவது உற்பத்திக் கருவிகள் செம்மை யடைவதைத் தொடர்ந்து, காலத்துக்கு ஒவ்வாதனவாகி பழமைப்பட்டுவிடும் உற்பத்தி உறவுகள் நீக்கப்பட்டு, அவற்றின் இடத்தில் உற்பத்தி சக்திகளது வளர்ச்சியின் உயர்நிலைக்கு உகந்த புதிய உற்பத்தி உறவுகள் நிறுவப்படுவது அவசியமாகிறது. சோஷலிசத்துக்கு முற்பட்ட சமுதாயத்தில் நிலவுகிற உற்பத்தி உறவுகள் ஆதிக்கமும்— கீழ்ப்படிதலும், சுரண்டலும்—ஒடுக்குமுறையுமாகிய உறவுகளாகும். தனியார் உடைமை உறவுகள் நாளடைவில் உற்பத்தி சக்தி களது வளர்ச்சிக்குத் தடையாகி விடுகின்றன. அவை அகற்றப்பட்டு சோஷலிச உற்பத்தி உறவுகள் நிறுவப் படுகின்றன. சோஷலிச உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சாதனங்களது **பொதுவுடைமையின்** அடிப்படையில் அமைந் தவை. உற்பத்திச் சாதனங்களது பொதுவுடைமையானது சுரண்டலிலிருந்து விடுபட்டவர்களது தோழமை உணர் வுள்ள ஒத்துழைப்பையும், சகோதரத்துவத்துக்கும் பரஸ்பர உதவிக்குமான உறவுகளையும் தோற்றுவிக்கிறது. சோஷலிசத்தில் உற்பத்தி உறவுகள் சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளது வளர்ச்சிக்கு ஏற்ப, உணர்வு பூர்வமாகவும், திட்டமிட்ட முறையிலும் மேம்படுத்தப் படுகின்றன (பார்க்கவும்: **உற்பத்தி சக்திகள்**).

**உற்பத்தி சக்திகள்:** (Productive Forces)—பொருள் உற்பத்திக்கு வேண்டிய **உற்பத்திச் சாதனங்களும்,** அச் சாதனங்களைப் பயன்படுத்தும் மக்களும். உற்பத்தி சக்திகளும் உற்பத்தி உறவுகளும் சேர்ந்து அமைவதே **உற்பத்தி முறை.**

உற்பத்தி முறையில் உற்பத்தி சக்திகள்தான் மிகுந்த இயக்க ஆற்றல் படைத்த புரட்சிகரக் கூறு. பொருள் உற்பத் தியின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இந்த உற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்தி சக்திகள் நடப்பிலுள்ள உற்பத்தி உறவுகளுடன் முரண்பட்டு மோத முற்படுகின்றன. இதுகாறும் உற்பத்தி சக்திகளது வளர்ச்சியை ஊக்குவித்து வந்த உற்பத்தி உறவுகள் இப்போது இவ்வளர்ச்சிக்குத் தடை போட ஆரம்பிக்கின்றன. நடப்பிலுள்ள உற்பத்தி உறவுகளுக்கும் வளர்ந்து விட்ட உற்பத்தி சக்திகளது புதிய இயல்புக்கும் இடையிலான ஒவ்வாமை முன்னிலும் முற்போக்கான புதிய உற்பத்தி உறவுகளை அமைத்திடும் சமுதாயப் **புரட்சியின்** மூலம் தீர்த்து வைக்கப்படுகிறது.

பொருளாதார, **நெருக்கடிகளுக்கும், யுத்தங்களுக்கும்,** மக்களை வருத்தும் ஏனைய பல கேடுகளுக்கும் உரித்தான **முதலாளித்துவம்,** இவ்வாறு மறைந்து, அதனிடத்தில் சோஷலிசம் எழுந்து உற்பத்தி சக்திகளது வளர்ச்சியின் புதிய உயர் நிலைக்கு உகந்த உற்பத்தி உறவுகளை மக்களிடையே நிலை நாட்டுகிறது. சோஷலிசத்தில் உற்பத்தி சக்திகளுக்கு ஏற்றவாறு உற்பத்தி உறவுகள் சோஷலிச **அரசினால்,** அவ்வப்போது முறையாக ஒழுங்குபடுத்தப் பட்டு செம்மை செய்யப்படுகின்றன.

(பார்க்கவும்: **உற்பத்தி உறவுகள்**)

**உற்பத்திச் சாதனங்கள்:** (Means of Production)—பொருள் உற்பத்திக்காக மக்கள் உபயோகிக்கும் உழைப்பு இலக்குப் பொருள்களும் உழைப்புக் கருவிகளும். இவை சமுதாயத்தின் **உற்பத்தி சக்திகளைச்** சேர்ந்த ஒரு பகுதி ஆகும்.

பொருள் உற்பத்தியின் போது மனிதனுடைய உழைப்பு எவற்றின் மீது செயல்படுகிறதோ அவையே உழைப்பின் இலக்குப் பொருள்கள். இவை இயற்கையில் கிடைக்கும் நிலக்கரி, உலோகக் கனிகள் போன்றவையும், மூலப் பொருள்களான உலோகங்கள், நூல் போன்றவையும் ஆகும். மனிதன் பொருட் செல்வத்தை உற்பத்தி செய்ய பயன்படுத்தும் கருவிகள், இயந்திரங்கள், குழாய் வழிகள், கட்டிடங்கள், சாலைகள், கால்வாய்கள் முதலானவை உழைப்புக் கருவிகள் ஆகும்.



சோஷலிச சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் அரசுக்கு, அதாவது மக்கள் அனைவருக்கும் சொந்தமாய் இருப்பதால், மனிதனை மனிதன் சுரண்ட இடமில்லாமற் போகிறது. உற்பத்திச் சாதனங்களை மக்களது நலன்களுக்காகத் திட்டமிட்ட முறையில் உபயோகித்துக் கொள்ள முடிகிறது.

**உற்பத்திச் சாதனங்களைச் சமூகமயமாக்குதல்:** (Socialisation of the Means of Production):—**முதலாளித்துவ தனியார் உடைமையில்** இருக்கும் **உற்பத்திச் சாதனங்களை** சோஷலிசப் **பொதுவுடைமை** ஆக்குகிற புரட்சிகர மாற்றம். (பார்க்கவும்: **பறிமுதல், நாட்டுடைமை யாக்குதல்**) **முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கால கட்டத்தில்** இந்த மாற்றம் நிகழ்த்தப்படுகிறது. தொழில் துறையிலும் விவசாயத்திலும் புது வகையிலான சமூகப் பொருள் உற்பத்தி நிறுவப்படுவதற்கு இந்தப் புரட்சிகர மாற்றம்தான் அடிப்படை ஆகிறது. திட்டமிட்ட முறையில் சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களது நல்வாழ்வும் சர்வாம்ச வளர்ச்சியும் ஓங்கும்படி இந்தப் புது வகை சமூகப் பொருள் உற்பத்தி உறுதி செய்கிறது.

**உற்பத்தி அராஜகம்:** (Anarchy of Production) —சந்தையில் வழங்கலுக்கும் (supply) தேவைக்கும் (demand) ஏற்ப தொழில் நிலையங்களும் விவசாயப் பண்ணைகளும் தன்னியல்பான முறையில் வளருதல், முனைப்பாளர்கள் (entrepreneurs) அதிகபட்ச இலாபமடிக்கத் துடிப்பதுதான், **உற்பத்திச் சாதனங்களது, தனியார் உடைமையின்** அடிப்படையில் அமைந்த முதலாளித்துவ பொருள் உற்பத்திக்குரிய தனி இயல்பு. உற்பத்தி அராஜகம் தவிர்க்க வொண்ணாத முறையில் அமித உற்பத்திச் சுழல் நெருக்கடிகளையும், பண, நிதி நெருக்கடிகளையும், வேலையின்மையையும், உழைப்பாளி மக்களது **வாழ்க்கைத் தர** வீழ்ச்சியையும் உண்டாக்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உற்பத்தி முறை:** (Mode of Production)—உற்பத்திக்கும் தனிப்பட்டோரது சொந்த நுகர்வுக்கும் தேவையான பண்டங்களைத் தயாரிப்பதற்காக வரலாற்று வழியில் உருவான அமைப்பு முறை. **உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள்** இவை இரண்டும் சேர்ந்ததே உற்பத்தி முறை. உற்பத்தி சக்திகளும் உற்பத்தி உறவுகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு ஒன்றையொன்று சார்ந்திருப்பவை.

வரலாறு கண்டிருக்கும் வரிசையான ஐந்து உற்பத்தி முறைகள் வருமாறு: **புராதன சமுதாய அமைப்பு, அடிமையுடைமை அமைப்பு, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், கம்யூனிசம்.**

பெருகிவிட்ட உற்பத்தி சக்திகளுக்கும் காலத்துக்கு ஒவ்வாததாய் பழமைப்பட்டு விட்ட உற்பத்தி உறவு களுக்கும் இடையிலான முரண்பாடு முற்றுவதன் தவிர்க்கவொண்ணாத விளைவாய் பழைய உற்பத்தி முறை மறைந்து புதியது எழுகிறது.

## எ

**எப்.பி.ஐ.:** (F.B.I.) பார்க்கவும்: **கூட்டரசுப் புலனாய்வு நிறுவனம்** (Federal Bureau of Investigation).

**எதிர்ப் புரட்சி:** (Counter Revolution) —பிற்போக்கு வர்க்கம் முனைப்புடன் நடத்தும் போராட்டம். சமூகப் **புரட்சியின்** மூலம் ஆதிக்க நிலையிலிருந்து அகற்றப்பட்ட அல்லது அகற்றப்பட்டுவரும் பிற்போக்கு வர்க்கம் காலங் கடந்ததாகிவிட்ட பழைய சமூக அமைப்பைப் பாதுகாப் பதற்காகவோ, மீட்டமைப்பதற்காகவோ, புதிய சமூக அமைப்பை எதிர்த்து இப்போராட்டத்தை நடத்துகிறது.

## ஏ

**ஏகபோகம்:** (Monopoly)—1. ஏதோ ஒன்றில் தனி உரிமை (உதாரணமாய், குறிப்பிட்ட ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதிலோ, அல்லது அதை விற்பதிலோ, வாங்குவதிலோ தனி உரிமை.)



2. முதலாளித்துவ ஏகபோகம். இது முதலாளிகளால் ஆன பெரிய கூட்டு நிறுவனம். முழு அளவிலோ, பெரிய அளவிலோ ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தியையோ, உள் நாட்டு அல்லது உலக முதலாளித்துவ சந்தைகளில் அப்பண்டத்தின் விற்பனையையோ இது தனது கைகளில் குவித்து வைத்திருக்கிறது. அதிகபட்ச இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்ட முதலாளித்துவ ஏகபோகம் உழைப்பாளி மக்கள் மீதான **சுரண்டலைக்** கடுமையாக்கு கிறது. **புதிய காலனியாதிக்கத்துக்கான** ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றுகிறது. நாடு பிடிக்கும் யுத்தங் களுக்குத் திட்டமிட்டு அவற்றைக் கட்டவிழ்த்து விடுகிறது. ஆயுத உற்பத்திப் போட்டியில் ஈடுபடுகிறது.

**ஏகாதிபத்தியம்:** (Imperialism)—முதலாளித்துவத்தின் உச்சக் கட்டமும் இறுதிக் கட்டமுமான ஏகபோக **முதலாளித்துவம்,** முதலாளித்துவ ஏகபோகங்கள், நிதி மூலதனம் இவற்றின் ஆதிக்கம் இந் நூற்றுண்டின் தொடக் கத்தில் நிலை நாட்டப் பெற்றது. பிரதான முதலாளித்துவ அரசுகளிடையே உலகின் பிரதேசங்கள் பங்கிடப் படுவது நிறைவு பெற்றதும் முதலாளித்துவத்தின் இந்தக் கட்டம் ஆரம்பமாகியது. முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியைத் தொடர்ந்து ஏகாதிபத்திய அரசுகளிடையி லான முரண்பாடுகள் கூர்மையடைகின்றன; ஏற்றுமதிச் சந்தைகளுக்காகவும் மூலப்பொருள்களின் ஆதாரங்களுக் காகவும் அவற்றினிடையே நடைபெறும் போராட்டம் கடுமையாகிறது; பிற நாடுகளின் பிரதேசங்களைக் கைப்பற்றி அவற்றின் மக்களை அடிமைப்படுத்துவதற்கும் உலக அளவில் தலைமை நிலை பெறுவதற்குமான அவற்றின் போட்டா போட்டி மும்முரமடைகிறது. இந்த நிலைமை படுநாச யுத்தங்களை எழச் செய்துள்ளது. ஏகாதிபத்தியம் ஒழிவதும் மனிதனை மனிதன் சுரண்டுவதிலிருந்து விடுபட்ட சோஷலிச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூதாயம், கம்யூனிசத்தின் முதற் கட்டமாய் அதனிடத்தில் எழுவதும் தவிர்க்கவொண்ணுத நிகழ்வுகளாகும்.

## ஐ

**ஐக்கிய நாடுகள் நிறுவனம்:** *(United Nations Organisation)*—*1945-ல்* நிறுவப்பட்ட சர்வதேச நிறுவனம். சமாதானத்தையும் பாதுகாப்பையும் பராமரிப்பதும், அரசுகளிடையே சமாதான ஒத்துழைப்பை வளர்ப்பதும் தான் இதன் நோக்கம். உறுப்பினர்களான எல்லா அரசுகளின் பிரதிநிதிகளையும் கொண்ட பொதுச் சபையும் *(General Assembly)*, நிரந்தர உறுப்பினர்களான ஐந்து அரசுகளின் பிரதிநிதிகளையும் நிரந்தரமல்லாத உறுப்பினர்களான பத்து அரசுகளின் பிரதிநிதிகளையும் கொண்ட பாதுகாப்புச் சபையும் *(Security council)* இந்த நிறுவனத்தின் பிரதான உறுப்புக்களாகும். நிரந்தரமில்லாத உறுப்பினர்களாகிய பத்து அரசுகளும் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுக் காலத்துக்குப் பதவி வகிக்கின்றன. பொருளாதார, சமூகச் சபையும், தர்மகர்த்தா சபையும், பொதுச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட செயற் குழுவும் ஐ. நா. நிறுவனத்தின் ஏனைய உறுப்புக்களாகும். இவையன்றி ஐ. நா. அமைப்பு, ஐக்கிய நாடுகள், கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனத்தையும் (யூனெஸ்கோ), சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி போன்ற பல தனிவகை நிறுவனங்களையும் தன்னுள் கொண்டதாகும்.

**ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு:** *(European Economic Community)* – இ. இ. சி. *((E.E.C.)* பொதுச் சந்தை என்றும் இது அழைக்கப்படுகிறது. அரசு ஏகபோகக் கூட்டாகிய இதில் அங்கம் வகிக்கும் நாடுகள் வருமாறு: ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம், ஹாலண்டு, லக்சம்பர்க், பிரிட்டன், டென்மார்க், *1973* முதலாய் அயர்லாந்து. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பை நிறுவுவதற்கான ஒப்பந்தம் *1958* ஜனவரி 1-ல் நடைமுறைக்கு வந்தது. பங்குகொள்ளும் நாடுகளிடையிலான சுங்கவரித் தடைகளை அகற்றுவதும், ''பொதுச் சந்தை'' ஒன்றை அமைத்திடுவதும், பெரு முதலாளிகளது நலன்களுக்கு ஏற்ப பொருளாதாரக் கொள்கைகளை ஒருமுகப்படுத்துவதும் தான் இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்கள்.



## ஒ

**ஒருங்கிணைவு:** *(Convergence)*—எதிரும் புதிருமான இரு சமூக, பொருளாதார அமைப்புக்களாகிய **சோஷலிசமும், முதலாளித்துவமும்** வரலாற்றின் விளைவாய் ஒன்றையொன்று நெருங்கி வருவதாகக் கூறும் தற்கால முதலாளித்துவத் தத்துவம். இரண்டும் இப்படி நெருங்கி வருவதன் விளைவாய் ''தொழில்துறைச் சமுதாயம்'' என்பதான ஒன்று உருவாகும் என்றும், இந்தச் சமுதாயம் சோஷலிசத்தின் கூறுகள் சிலவற்றை **(பொருளாதாரத்துக்கு** அரசாங்கத் திட்டமிடுதல் போன்றவை) அழியாதிருக்கும் படியான முதலாளித்துவக் கூருகிய **தனியார் உடைமையுடன்,** ஒரு சேர இணைத்திடும். தனியார் உடைமை தொடர்ந்து நீடிக்குமாதலால், **சுரண்டலும்,** அதனுடன் கூடவே இருக்கவே செய்யும். ஆனுல் இந்தத் தத்துவத்தின் மூலவர்களும் ஆதரவாளர்களும் இது குறித்து மௌனம் சாதிப்பதே உசிதமென நினைக்கிருர்கள். ஒருங்கிணைவுத் தத்துவத்தின் நோக்கமெல்லாம் உழைப்பாளி மக்களது கவனத்தைத் தீவிர சமூக பொருளாதார மாற்றங்களுக்கான போராட்டத்திலிருந்து திருப்பி விடுவதுதான்

**ஒழுக்க நெறி:** *(Morality)*—சமூக உணர்வின் ஒரு வடிவம். சமூக வாழ்விலும் இல்லறத்திலும் ஒவ்வொருவரது நடத்தைக்குமான தரங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒட்டுமொத்தமே ஒழுக்கநெறி எனப்படுவது. பொது மக்கள் அபிப்பிராயம், நம்பிக்கைகள், மரபுகள், பழக்கங் கள் முதலானவற்றின் அடிப்படையில் அமைந்த ஒழுக்க நெறியானது ஒருவரது செயல்களிலும் மற்றும் வேலை, குடும்பம், கூட்டு வாழ்க்கை, சமுதாயம் ஆகியவற்றின்பால் அவர் கொண்டுள்ள போக்கிலும் வெளியாகிறது. ஒழுக்க நெறி வர்க்கத் தன்மை வாய்ந்தது நல்லொழுக்கம், தீயொழுக்கம் குறித்தும், நல்லது, கெட்டது குறித்தும் வெவ்வேறு வர்க்கங்கள் வெவ்வேறு கருத்துக்கள் கொண்டிருக்கின்றன.

## ஓ

**ஓய்வு உரிமை:** (Right to Rest and Leisure)—சோஷலிச அரசால் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. வேலை நேரத்துக்கு வரம்பிடுவதன் மூலமும் (சோவியத் நாட்டில் வேலை வாரம் 41 மணி நேரத்துக்கு மேல் நீடிப்பதில்லை), சம்பளத்துடன் கூடிய வருடாந்தர விடுமுறைகள் அளிப்பதன் மூலமும், உழைப்பாளி மக்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை அறிவுக்கு உகந்த முறையில் பயன்படுத்த வகை செய்யும் ஆரோக்கிய இடங்களையும் உல்லாசப் பயண மையங்களையும் பொழுதுபோக்கு மையங்களையும் பிற வசதிகளையும் விரிவாய் நாடெங்கிலும் அமைப்பதன் மூலம் இவ்வுரிமை எல்லார்க்கும் கிடைக்கும்படி உறுதி செய்யப்படுகிறது.

**ஓய்வு ஊதியம்:** (Pension)—வயது முதிர்ந்த அல்லது ஏலாத நிலையிலுள்ளவர்களுக்குத் தரப்படும் ரொக்க ஊதியம். சோஷலிச நாடுகளில் முதிய வயதினருக்கும், தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ ஏலாத நிலை எய்தியோருக்கும், குடும்ப வருவாய்க்கு ஆதாரமானவரை இழந்தோருக்கும், மற்றும் நீண்டகாலம் சேவை செய்தோருக்கும் (சில வகைப் பணித்துறைகளைச் சேர்ந்தோராய் இருக்கையில்) **சமூக நுகர்வு நிதிகளிலிருந்து** ஓய்வு ஊதியம்



தரப்படுகிறது. மிகப் பெரும்பாலான சோஷலிச நாடுகளில் ஆடவர்களுக்கு 60 வயதிலிருந்தும், பெண்டிருக்கு 55 வயதிலிருந்தும் ஓய்வு ஊதியங்கள் கொடுக்கப்படுகின்றன. **தேசப் பொருளாதாரத்தின்** சில பிரிவுகளில் ஓய்வு ஊதிய வயதை அடைந்தோர் தொடர்ந்து வேலை செய்யத் தீர்மானித்தார்களாயின் சம்பளத்துடன் கூட ஓய்வு ஊதியமும் பெறுகிறார்கள்.

முதலாளித்துவ நாடுகள் பலவற்றில் கடுமையான **வர்க்கப் போராட்டத்தின்** மூலம் தான் உழைப்பாளி மக்கள் ஓய்வு ஊதிய உரிமை பெற முடிந்திருக்கிறது. ஆனால் உண்மையில் இந்த ஓய்வு ஊதியம், அவர்களது சம்பளத்திலிருந்து பிடித்து வைக்கப்பட்ட பகுதிகள் திருப்பித் தரப்படுவதையே குறிப்பதாய் உள்ளது.

## க

**கட்சி:** (Party)—ஒரு சமூக வர்க்கத்தின் நலன்களது பிரதிபலிப்பாய் அமையும் அரசியல் நிறுவனம். தொழிலாளி கட்சி, முதலாளி கட்சி, விவசாயிக் கட்சி, புரட்சிகர ஜனநாயகக் கட்சி—இப்படி மிகப் பல வகையான கட்சிகள் உள்ளன.

கட்சிகள் இருத்தல், வர்க்க நலன்கள் பூர்த்தியாவதற்காக நடைபெறுகிற அரசியல் ஆட்சியதிகாரப் போராட்டத்துடன், வர்க்கத்தின் இறுதிக் குறிக்கோளது ஈடேற்றத்துக்கான போராட்டத்துடன் இணைந்ததாகும்.

**கட்சி வாழ்க்கையின் லெனினிய நியதிகள்:** (Leninist Norms of Party Life)—**சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி** தனது செயற்பாடுகளில் தனக்கு வழிகாட்டியாகக் கொண்டிருக்கும் அடிப்படை விதிகள். பிரதான விதிகள் வருமாறு: கட்சியின் தலைமை உறுப்புக்கள் தேர்ந்தெடுக்கப்படுவனவாயும், தனது செயல்கள் குறித்துப் பதில் கூற வேண்டிய பொறுப்புடையனவாயும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருத்தல்; விவாத சுதந்திரம்; விமர்சனமும் சுய விமர்சனமும்; கட்சி வாழ்க்கையின் பொதுத்தன்மை; கூட்டுத் தலைமை; கட்சி அணிகளின் சித்தாந்த நிறுவன ஒற்றுமை; கட்சிப் பிரச்சினைகள் குறித்துத் தீர்மானிப்பதில் கம்யூனிஸ்டுகளது சமத்தும்; கம்யூனிஸ்டு இலட்சியங்களில் பற்றுறுதியும் கம்யூனிஸ்டுக் கருத்துக்கள் வெற்றி பெறும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையும்.

**கம்யூன்**: (Commune)— 1. கட்டிடங்கள், உழுபடைக் கருவிகள், மாடுகள், குதிரைகள், நுகர்வுப் பண்டங்கள், வீட்டுபயோகத்துக்கான பண்டங்கள் முதலியவையும் உட்பட எல்லா **உற்பத்திச் சாதனங்களையும்** பகிர்ந்து கொள்ளுதல், கூட்டு உழைப்பு, பொதுவிலான நில உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்று சேர்ந்துள்ள கோஷ்டி. சோவியத் ஆட்சியின் ஆரம்ப மாதங்களில் (1917-18) ருஷ்யாவின் சில பிராந்தியங்களில் கம்யூன்கள் நிறுவப் பட்டன. ஆனால் சமூகப் பொருள் உற்பத்தியின் வளர்ச்சி கீழ் நிலையில் இருந்த காரணத்தாலும், உழைப்பின் பலன்கள் செய்யப்படும் வேலைக்கு ஏற்ப பிரித்தளிக்கப் படாமல் குடும்ப உறுப்பினர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப பிரித்தளிக்கப்படும் சமன வினியோகத்தின் திருப்தியற்ற தன்மையின் காரணத்தாலும் 1919-லேயே இந்தக் கம்யூன்கள் கலைக்கப்பட்டன. கம்யூன் உறுப்பினர்கள் தமக்கென தனியே கொல்லை நிலங்கள் பெற்றிருக்கவில்லை. ஆகவே வேலை செய்வதற்குப் பொருளாயத தூண்டுதல் இல்லாமற் போயிற்று. சொந்த நலன்களையும் சமூக நலன் களையும் அவர்களால் இசைவுடன் ஒருங்கிணைக்க முடிய வில்லை. கம்யூன்கள் சிதைந்து போகவே, அவற்றினிடத்தில் நிலத்தைக் கூட்டாகச் சாகுபடி செய்வதற்கான சங்கங்களும் பலவகையான கூட்டுறவுக் கழகங்களும் கூட்டுப் பண்ணை களும் நிறுவப்பட்டன. இவற்றின் உறுப்பினர்கள் சாசுவத மாகத் தமது இலவச உபயோகத்துக்காக அரசால் தரப் பட்ட நிலங்களையும், மற்றும் தமது உழுபடைக் கருவி களையும் பிற சாதனங்களையும் ஒன்று சேர்த்துக் கொண் டார்கள். ஆனால் அவர்களது வீடுகளும், வீடுகளைச் சேர்ந்த கொல்லை நிலங்களும், அவசியமான கால்நடையும், கோழி களும், குதிரைகளும், போக்குவரத்துச் சாதனங்களும் தொடர்ந்து அவர்களது சொந்த உடைமைகளாகவே இருந்தன. உற்பத்திச் சாதனங்களிலும் ஒரு பகுதி அவர் களது தனி உடைமையாய் இருந்தது. ஆனால் இப்பகுதி அதன் உடைமையாளரின் ஜீவனத்துக்குரிய பிரதான ஆதாரமாய் அமையவில்லை. (பார்க்கவும்: **கூட்டுத்துவமாக்கு தல், லெனினது கூட்டுறவுத் திட்டம்.**)



2) சில நாடுகளில் ஊராட்சி நிர்வாகத்துக்குரிய சிறிய பிரதேச அலகு.

3) பார்க்கவும்: **பாரிஸ் கம்யூன்**

**கம்யூனிசம்**: (Communism)—**முதலாளித்துவத்துக்குப்** பிற்பாடு வருகிற **சமூக, பொருளாதார அமைப்பு.** இது **உற்பத்திச் சாதனங்களது பொது உடைமையின்** அடிப்படை யில் அமைந்தது. கம்யூனிசமானது இரு கட்டங்களைக் கொண்டது: ஒன்று கீழ்க் கட்டமான **சோஷலிசம்**, மற் றொன்று உயர் கட்டமான முழு நிறைக் **கம்யூனிசம்.** இந்த முழுமையான கம்யூனிசம் ''வர்க்கங்கள் இல்லாத சமூக அமைப்பு, உற்பத்திச் சாதனங்கள் யாவும் ஒரே வடிவில் பொதுவுடைமை வடிவில்—அமைந்து சமுதாய உறுப்பி னர்கள் எல்லோரும் முழு அளவில் சமுதாய சமத்துவம் வாய்ந்தோராய் இருக்கும் அமைப்பு. கம்யூனிசத்தின் இந்த உயர் கட்டத்தில் மக்கள் சர்வாம்ச வளர்ச்சி காண்பார்கள். விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் இடையறாது முன்னேறு வதன் மூலம் உற்பத்தி சக்திகள் வளர்ந்து பெருகும், கூட்டுச் செல்வத்தின் அருவிகள் யாவும் பெருக்கெடுத்து ஓடும்; 'ஒவ்வொருவரிடம் இருந்தும் அவரவரது ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவரது தேவைகளுக்கு ஏற்ப' என்கிற மகத்தான கோட்பாடு செயல்படுத்தப்படும். கம்யூனிசமானது சுதந்திரமான, சமூக உணர்வுள்ள உழைப் பாளி மக்களது உயர்நிலை ஒழுங்கமைப்பைப் பெற்ற சமுதாய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகும். சமுதாய நலனுக்காக உழைப்பது ஒவ்வோர் உறுப்பினருக்குமான ஜீவாதாரத் தேவையாகிவிடும். எல்லோராலும் ஏற்கப்படும் அவசிய நியதியாகி, மக்களுக்கு பெரிய அளவில் நலன் பயக்கும் விதத்தில் ஒவ்வொருவரது ஆற்றலும் பயன்படுத்தப்படும்'' (**சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின்** வேலைத் திட்டம், மாஸ்கோ, 1969, பக்கம் 69.)

முதலாளித்துவம் ஒழிந்து கம்யூனிசம் மலர்வது திண்ணம் என்பதை மார்க்சிய-லெனினிய விஞ்ஞானம் ஐயமற நிரூபித்திருக்கிறது. **சோஷலிசப் புரட்சி** வெற்றியடைந்து ஏதேனும் ஒரு வடிவில் **பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்** நிறுவப்படுவதன் விளைவாய் கம்யூனிச சமுதாயம் கட்டியமைக்கப்படும். உற்பத்திச் சாதனங்களது பொதுவுடைமையின் அடிப்படையில் கம்யூனிசக் கட்டுமானம் நடைபெறுகிறது. அப்போது நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான வேறுபாடுகளும், மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளும் நீக்கப்படும்; வர்க்க வேற்றுமைகள் படிப்படியாக மறைந்து போகும்; அதோடு உழைப்பானது மனிதனது தலையாய தேவையாகி, உழைப்பின் தன்மையே மாற்றமடைகிறது.

கம்யூனிசத்தில் **உற்பத்தி சக்திகள்** நுகர்வுப் பண்டங்களை அபரிமிதமாகப் பெருகச் செய்கின்றன. இதனால் முதலாவது கட்டமான சோஷலிசக் கட்டத்தில் செய்தது போல் இப்பண்டங்களை அவரவரும் செய்யும் வேலைக்கு ஏற்ப வினியோகிக்காமல், அவரவரது தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப வினியோகிப்பது சாத்தியமாகிறது. ஆனால் மக்கள் உணவையும் ஆடைகளையும் பிறவற்றையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ள முயலும் நுகர்வாளர்களாய் இருக்க மாட்டார்கள்; மாறாக உயர்ந்த அறநெறி உணர்வும் தரமும் உடையோராகவும், தமது பல்வேறு வகையான திறன்களையும் சமுதாயத்துக்கு அதிகபட்ச நலம் பயக்கும் விதத்தில் பயன்படுத்தும் ஆக்கப் பண்புமிக்கோராகவும் செயல்படுவார்கள். அரசு அதனுடைய தற்போதைய நிர்வாகப் பொறியமைவுடன்



மறைந்து போகும். அதனிடத்தில் பொதுச் சுய-நிர்வாகம் மலர்ந்திடும். வளர்ச்சி பெற்ற சோஷலிச சமுதாயம் (பார்க்கவும்: **வளர்ச்சி பெற்ற சோஷலிசம்**) சோவியத் நாட்டில் கட்டியமைக்கப் பட்டிருக்கிறது. தற்போது அங்கே முழுநிறைக் கம்யூனிசம் கட்டப் பெற்று வருகிறது.

கம்யூனிசத்தைக் கட்டியமைப்பதே கம்யூனிஸ்டுக் கட்சிகளது இறுதிக் குறிக்கோள்.

''**கம்யூனிஸ்டு அறிக்கை**'': (''Communist Manifesto'') —விஞ்ஞான சோஷலிசத்தின் முதலாவது வேலைத் திட்ட ஆவணம்; **கம்யூனிஸ்டுக் கழகத்தின்** செயல் திட்டமாய் 1847 டிசம்பர், 1848 ஜனவரியில் கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் இதை எழுதினார்கள். மூலதனத்தின் ஆட்சி கவிழ்க்கப்படுவதும், அரசியல் ஆட்சியதிகாரத்தைத் **தொழிலாளி வர்க்கம்** கைப்பற்றிக் கொள்வதும் **கம்யூனிசம்** கட்டியமைக்கப்படுவதும் தவிர்க்கவொண்ணுதவை என்பதை ''கம்யூனிஸ்டு அறிக்கை'' விஞ்ஞான வழியில் நிரூபித்தது. கம்யூனிஸ்டுகளுடைய மனித நேயக் குறிக்கோள்களை அது எடுத்துரைத்தது. திருமணம், ஒழுக்க நெறி, சொத்துடைமை, தேசபக்தி முதலான பலவுங் குறித்து நிலவுகிற முதலாளித்துவ எண்ணங்கள், கருத்துக்கள் எல்லாம் எப்படி வர்க்கத் தன்மை வாய்ந்தனவாக இருக்கின்றன என்பதை அது வெளிப்படுத்திக் காட்டிற்று. ''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்!'' என்னும் முழக்கத்துடன் கம்யூனிஸ்டு அறிக்கை முடிவுறுகிறது.

**கம்யூனிஸ்டுக் கழகம்**: (Communist League)-முதலாவது **அகிலத்தின்** முன்னோடி. கம்யூனிஸ்டுக் கழகம் தான் (1847-52) பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது சர்வதேசக் கம்யூனிஸ்டு நிறுவனம். கார்ல் மார்க்சும் (1818-83) பிரெடெரிக் எங்கெல்சும் (1820-95) இதை நிறுவி இதற்குத் தலைமை தாங்கினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கம்யூனிசத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளம்:** (Material and Technical Basis of Communism)—வருங்காலக் கம்யூனிச சமுதாயத்துக்கு அவசியமான பொருளுற்பத்தி, தொழில் நுட்பவியல் அடித்தளம். சமுதாயத்தை சோஷலிச முறையில் ஒழுங்கமைப்பதன் மூலம் வரப் பெறும் அனுகூலங்களுடன் விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியை இணைப்பதன் அடிப்படையில் தானியங்கி ஏற்பாடுகளும் அணு மின்விசை உற்பத்தியும் மின்னணுப் பொறியியலும் கணிப்பியந்திரத் தொழில் நுட்பமும் அரைமின் கடத்தி உற்பத்தியும் வெகுவாய் வளர்க்கப்படுவதன் மூலமும் ஏனைய தொழில் நுட்ப சாதனைகள் பலவும் காணப்படுவதன் மூலமும் இந்த அடித்தளம் அமைக்கப்படும். சமூகப் பொருள் உற்பத்தி உயர் நிலைக்கு வளர்ச்சியடைவதன் விளைவாய், ''ஒவ்வொருவரிடம் இருந்தும் அவரது ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவரது தேவைகளுக்கு ஏற்ப'' என்கிற கம்யூனிச அடிப்படைக் கோட்பாடு செயலுக்கு வருவது சாத்தியமாகி விடும்.

**கம்யூனிச நிர்மாண கர்த்தாவின் ஒழுக்கநெறி:** (Moral code of the Builder of Communism)—சோஷலிச சமுதாயத்தில் வேரூன்றியிருக்கும் கம்யூனிச ஒழுக்க நெறிக் கோட்பாடுகள். இவை விஞ்ஞான வழியில் வரையறுத்து நிலை நாட்டப் பெற்றுள்ளவை. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டத்தில் இவை தொகுத்துக் கூறப்படுகின்றன. இந்தக் கோட்பாடுகளில் பிரதானமானவை வருமாறு: கம்யூனிச இலட்சியத்தின் பால் பற்றுறுதி; சோஷலிச தாயகத்திடமும் ஏனைய சோஷலிச நாடுகளிடமும் பக்தி கொண்டிருத்தல்; சமுதாயம் நன்மையடைய வேண்டும் என்ற உணர்வுடன் உழைத்தல்; பொதுச் செல்வங்கள் பாதுகாக்கப்படுவதிலும் வளர்க்கப்படுவதிலும் அக்கறை கொண்டிருத்தல்; பொது நலனுக்குத் தீங்கிழைக்கும் செயல்களுக்கு இடமளியாதல்; கூட்டுத்துவமும் தோழமை உணர்வுடனும் கூடிய பரஸ்பர உதவி; மக்களிடையே மனித நேய உறவுகளும்



பரஸ்பரம் மதித்து நடத்தலும்; பொது வாழ்விலும் சொந்த வாழ்விலும் நேர்மையும் சத்திய சீலமும், ஒழுக்கத் தூய்மையும், அடக்கமும்; குடும்பத்துள் ஒருவரையொருவர் மதித்து நடத்தலும் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதில் சிரத்தையும்; அநீதி, புல்லுருவித்தனம், பதவி வேட்டை, பேராசை, ஆகியவற்றிடம் சமரசத்துக்கு இடமில்லாத எதிர்ப்புப் போக்கு; சோவியத் நாட்டின் எல்லா இனத்தோரிடமும் நட்பும் சோதர வாஞ்சையும்; தேசிய அல்லது வர்ண இன வெறுப்பைச் சகியாமை; கம்யூனிசம், சமாதானம், நாடுகளது சுதந்திரம் இவற்றின் பகைவர்களுக்கு விட்டுக் கொடுக்காத மனப்பாங்கு; எல்லா நாடுகளின் உழைப்பாளி மக்களோடும், எல்லா நாட்டவர்களோடும் சகோதர ஒருமைப்பாடு.

**கருங்காலி:** (S!rike breaker)—வேலை`நிறுத்தத்தில் சேர மறுக்கிற, அல்லது வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்குப் பதில் வேலை செய்வதற்காகக் கைக்கூலி தந்து முதலாளியால் அமர்த்தப்பட்டிருக்கிற தொழிலாளி; சுரண்டுவோரை எதிர்த்துத் தொழிலாளர்கள் நடத்துகிற போராட்டத்தில் தொழிலாளர்களது வர்க்க நலன்களுக்குத் துரோகம் புரிகிறவர்.

**கருத்து முதல் வாதம்:** (Idealism) —தத்துவயியலில் இரு பிரதான போக்குகளில் ஒன்று. **பொருள் முதல் வாதத்துக்கு** எதிரானது. கருத்து, ஆன்மா, அல்லது உணர்வே முதன்மையானது; இயற்கை, இருப்பு, அல்லது சடப் பொருள் இரண்டாம் தன்மையதே என்று கூறுகிறது கருத்து முதல் வாதம். உலகைப் பற்றிய சமயப் பார்வையின் தத்துவயியல் வெளிப்பாடே கருத்து முதல் வாதம். அகவயக் கருத்து முதல் வாதம், புறவயக் கருத்து முதல் வாதம் என்று இரு வகைகள் உண்டு. முதலாவது வகை தனி மனிதனது உணர்வு மட்டும் தான், அதாவது அவனது புலனுணர்ச்சி மட்டும்தான் எதார்த்தமாய் இருக்கிறதென்றும், புற உலகு மனிதனது உணர்வைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்ந்ததே அல்லாமல், சுயேச்சையாய் இருப்பதல்லவென்றும் கருதுகிறது. இரண்டாவது வகை எல்லாப் பொருள்களும் புலப்பாடுகளும் எதார்த்தமாய் இருப்பவையே என்றாலும், இவற்றுக்கு எல்லாம் அடிப்படையாய் ''முழுமுதல் கருத்து'' அல்லது ''சர்வப் பொதுவான அறிவு'' அல்லது இறுதியாகக் கூறுமிடத்து கடவுள் இருப்பதாகக் கூறுகிறது.

**கல்வி உரிமை:** (Right to Education)—கல்வி பெறுவதற்குக் குடிமக்களுக்கு உள்ள உரிமை. சோஷலிச நாடுகளின் **அரசியல் அமைப்புச் சட்டத்தில்** பொறிக்கப்பட்டு இவ்வுரிமை சட்ட வலிமை வாய்ந்ததாக்கப் பட்டிருக்கிறது. சோஷலிச ஜனநாயகத்துக்குரிய இலட்சணங்களில் இவ்வுரிமையும் ஒன்றாகும். பொதுக் கல்விக்கான உயர்நிலைப் பள்ளிக்கூடங்களும் பிற கல்விக் கூடங்களும் தனிப்பயிற்சி உயர்நிலைப் பள்ளிக்கூடங்களும் உயர் கல்வி நிலையங்களும் நாடெங்கிலும் பரவலாக அமைக்கப்பட்டு இவை யாவற்றிலும் அரசாங்கச் செலவில் இலவசக் கல்வி அளிக்கப்படுவதன் மூலம் சோஷலிச நாடுகளில் கல்வி உரிமை உத்தரவாதம் செய்யப்படுகிறது. இந்நிலையங்கள் யாவும் வாழ்க்கையோடும் பொருள் உற்பத்தியோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன.

**கலப்புப் பொருளாதாரம்:** (Multimodal or Mixed Economy)— பலவகையான உற்பத்தி முறைகளையும்உற்பத்தி உறவுகளையும் ஒருங்கே பெற்றுள்ள பொருளாதாரம். இந்த வெவ்வேறு உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளும் சொத்துடைமையின் பல்வேறு வடிவங்களாலும் உற்பத்தி சக்திகளது பல்வேறு வளர்ச்சி நிலைகளாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு **சமூக-பொருளாதாரக் கட்டமைப்பில்** இருந்து வேறொன்றுக்கு மாறிச் செல்லுகிற இடைக்கால கட்டத்திற்குரிய அரசியல் பொருளாதார அமைப்பைக் கொண்ட நாடுகளில் பல்வேறு வகை உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளும் ஒருங்கே இருக்கக் காணலாம்.



**கலாசாரப் புரட்சி:** (Cultural Revolution)—முன்னேறிய, முற்போக்கான **சித்தாந்தத்தையும்** கலாசாரத்தையும் மக்கள் பெருந்திரளினர் கற்றுத் தேர்தல்; கடந்த காலத்திலிருந்து மரபுரிமையாக வரப்பெறும் கலாசாரச் செல்வங்களையும் உலகக் கலாசாரத்தின் செல்வங்களையும் விமர்சனக் கண் கொண்டு ஆய்ந்து கிரகித்துக் கொள்வதன் அடிப்படையில் புதிய கலாசாரத்தைப் படைப்பித்தல்.

கலாசாரப் புரட்சியானது சோஷலிசக் கட்டுமானப் பணியைச் சேர்ந்த ஒரு பகுதியாகும்.

கலாசாரப் புரட்சியின் கடமைகளும் வடிவங்களும் அந்தந்த நாடும் கண்டிருக்கும் கலாசார வளர்ச்சி நிலையைப் பொறுத்திருக்கின்றன. கலாசாரத் துறையில் பிற்பட்ட நிலையில் உள்ள ஒரு நாடு சோஷலிச மாற்றங்களுக்கான பாதையை மேற்கொள்ளுகையில் சகலருக்கும் எழுத்தறிவு கிட்டி, விஞ்ஞான, கலாசார முன்னேற்றமும் ஏற்பட்டு, **சோஷலிச** மனப்பாங்குடையோராய் மக்கள் போதம் பெறும் பொருட்டு நாடு தழுவிய அளவில் மிகவும் பரவலான பொதுக் கல்வி அமைப்பினை நிறுவுகிறது. பழைய **அறிவுத்துறையினரில்** ஒரு பகுதி சோஷலிசக் கட்டுமானத்துக்காகப் பணியாற்ற முன்வருகிறது. தொழிலாளர் விவசாயிகளிடமிருந்து புதிய **அறிவுத்துறையினர்** உருப்பெற்று எழுகிறார்கள்.

தேசிய வெறி உணர்ச்சியைத் தூண்டிவிடுதல், உலகக் கலாசாரச் செல்வங்களை நிராகரித்தல், கலாசார நினைவுச் சின்னங்களை அழித்தல், அறிவுத்துறையினர் பால் பகைமை பாராட்டுதல், கலாசாரப் புரட்சியை நடத்தும்போது வன்முறையைப் பிரயோகித்தல் ஆகிய யாவும் மெய்யான கலாசாரப் புரட்சிக்குச் சிறிதும் ஒவ்வாதவை.
(பார்க்கவும்: **மாவோயிசம்**)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கா

**காலனியாதிக்கம்:** Colonialism)—முதலாளித்துவ அரசுகள் தாம் கைப்பற்றும் தேசங்களின் அரசியல், பொருளாதார சுயேச்சையைப் பறித்து அவற்றைக் காலனிகளாக மாற்றிவிடும் கொள்ளைக்காரக் கொள்கை. இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திற்குள் அனைத்து உலகும் பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடு, இத்தாலி, ஜப்பான், ஹாலந்து, ஸ்பெயின், போர்த்துகல் போன்ற பிரதான காலனியாதிக்க அரசுகளிடையே பங்கிடப்பட்டு விட்டது. இந்த அரசுகள் தமது காலனிகளை மலிவான மூலப் பொருள்களுக்கும் ஆள் பலத்துக்குமான ஆதாரங்களாகவும், ஏற்றுமதிச் சந்தைகளாகவும், **மூலதனத்தை** முதலீடு செய்வதற்கான இடங்களாகவும் உபயோகித்துக் கொண்டன. காலனிகளைச் **சுரண்டி**, ஏகாதிபத்திய வாதிகள் கொழுத்த இலாபங்களை மூட்டை கட்டிக் கொண்டார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்துக்கு *(1939–45)* பிறகு காலனி நாடுகளது மக்களின் தேச விடுதலை இயக்கம் சோஷலிச உலகின்— யாவற்றுக்கும் முதலாய் சோவியத் நாட்டின்— உதவியோடும் ஆதரவோடும் வீறு கொண்டு எழுந்தது. ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பு தகர்ந்து விழுந்தது. இன்று இவ்வமைப்பு அனேகமாய் ஒழிந்து விட்டது என்றே கூற வேண்டும். ஏறத்தாழ 100 இளம் நாடுகள்- **வளரும் நாடுகள்**-உதித்தெழுந்துள்ளன. இந்நாடுகளின் மக்கள் காலனியாதிக்கத்தின் மீதமிச்சங்களை அகற்றிடவும், மெய்யான அரசியல், பொருளாதார சுயேச்சை அடையவும் போராடி வருகிறுர்கள். பழைய காலனியாதிக்கம் தற்போது தகர்ந்து விட்டதால், ஏகாதிபத்தியவாதிகள் **புதிய காலனியாதிக்க** முறைகளைக் கையாண்டு இந்த வளரும் நாடுகளில் தமது ஆதிக்கத்தை அழியாது நீடிக்க வைப்பதற்காக முயலுகிறுர்கள்.



## கி

**கிளர்ச்சி:** *(Agitation)*—உரையாடல்கள், கூட்டங்கள், பத்திரிகைகள் மூலம் கருத்துக்களையும் கோஷங்களையும் அறை கூவல்களையும் தகவல்களையும் பரப்பி, பொது மக்களது அபிப்பிராயத்தின் மீது தாக்கம் செலுத்தும் நோக்கமுடைய அரசியல் செயற்பாடு. சமூக வர்க்கங்களிடையிலும், அரசியல் கட்சிகளிடையிலும் நடைபெறும் அரசியல், **சித்தாந்தப் போராட்டத்தின்** வடிவங்களில் கிளர்ச்சியும் ஒன்றுகும்.

## கு

**குட்டி முதலாளித்துவப் பகுதியோர்:** *(Petty-Bourgeoisie)*—**பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும்** இடைநிலையில் அமைந்த சமூக வர்க்கத்தினர் உழைக்கும் விவசாயிகளும் கைவினைஞர்களும் இன்ன பிறரும் ஆவர். குட்டி முதலாளித்துவப் பகுதியைச் சேர்ந்தவர், தொழிலாளியைப் போலன்றி **உற்பத்திச் சாதனங்களில்** உடைமை பெற்றிருப்பவர்; அதே போது முதலாளியைப் போலன்றி சாதாரணமாகத் தானே உழைக்கிறவர், அல்லது சிறு எண்ணிக்கையில் கூலி உழைப்பாளர்களை அமர்த்திக் கொண்டு வேலை செய்கிறவர். இந்த இரட்டை நிலையானது **வர்க்கப் போராட்டத்தின்** போது குட்டி முதலாளித்துவப் பகுதியோரை ஊசலாட வைக்கிறது, கூட்டாளிகளைத் தேர்வு செய்து கொள்வதில் இப்பகுதியோரிடம் அரசியல் தடுமாற்றத்தை உண்டாக்குகிறது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து பெருவாரியான குட்டி முதலாளித்துவப் பகுதியோர் நாசமடைந்து கூலி உழைப்பாளர்களாகி விடுகிறுர்கள், விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிறிய பகுதியோர் மட்டும் தான் முதலாளித்துவ தொழில் முனைப்பாளர்களாய் உயருகிறுர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**குடியரசு:** *(Republic)—1)* அரசு அதிகாரத்தின் உயர்நிலை உறுப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்துக்குப் பதவி வகிக்கும்படியான அரசாங்க வடிவம்.

2) இம்மாதிரியான அரசாங்க வடிவத்தைக் கொண்ட நாடு.

**குண்டர்களது வன்முறை:** *(Gangsterism)*—கொள்ளையடித்தல், மிரட்டிப் பறித்தல், கொலை புரிதல் போன்ற கொடுங் குற்றங்களைத் திட்டமிட்டு ஒழுங்கமைந்த முறையில் செய்து வருதல். ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்களும், பிற்போக்குவாத முதலாளித்துவ நிறுவனங்களும், வேலை நிறுத்தம் செய்வோருக்கும் முற்போக்கு இயக்கங்களுக்கும் எதிரான போராட்டத்தில் அரசியல் எதிராளிகளைக் கொலை புரிவதற்காகவும், வாக்காளர்களை அச்சுறுத்துவதற்காகவும், இன்ன பிற காரியங்களுக்காகவும் அடிக்கடி குண்டர்களை உபயோகிக்கின்றன.

## கூ

**கூட்டரசு:** *(சமஷ்டி அல்லது கூட்டாட்சி அரசு) (Federation)*—தனித் தனி தன்னாட்சிக் கூறுகளின் இணைப்பாய் அமைந்த அரசு. வரலாற்றிலே முதன் முதலாய் சோவியத் நாட்டிலும் ஏனைய சோஷலிச நாடுகளிலும் கூட்டரசானது தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய அரசு வடிவம் ஆகியது.

**கூட்டரசுப் புலனாய்வு நிறுவனம்:** *(Federal Bureau of Investigation, FBI)*—அமெரிக்க ஐக்கிய நாட்டில் அரசியல் துறையிலும் குற்றவியல் துறையிலும் புலன் விசாரணை நடத்தும் நிறுவனம். சுருக்கமாய் எப்.பி.ஐ. என்று அழைக்கப்படும் இந்நிறுவனம், குடிமை உரிமைகளுக்காகப் போராடுவோரையும் இதர முற்போக்கு வாதிகளையும் ஒடுக்குவதற்காகக் கடும் பிரயத்தனம் செய்து வருகிறது.



**கூட்டுச் சேராக் கொள்கை:** *(Policy of Non-alignment)*—ஐரோப்பாவையும் ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் லத்தீன் அமெரிக்காவையும் சேர்ந்த மாறுபட்ட அரசியல் அமைப்புக்களைக் கொண்ட ஒரு பெருந் தொகுதியான நாடுகளின் அயல்துறைக் கொள்கை. இராணுவக் கூட்டுகளில் பங்கு கொள்ளாமை, **ஏகாதிபத்தியத்தையும் யுத்தத்தையும் காலனியாதிக்கத்தையும் நிறவெறியையும்** எதிர்த்து நிற்றல் ஆகியவை இந்த அயல்துறைக் கொள்கையின் சிறப்பு இயல்புகளாகும். கூட்டுச் சேரா நாடுகள் **சமாதான சக வாழ்வுக் கோட்பாடுகளைக்** கடைப்பிடிக்கின்றன, **நெருக்கடி தணிவு** நிகழ்ச்சிப் போக்குக்கு ஆக்கம் தேடுகின்றன, யுத்தத்துக்கும் **ஆக்கிரமிப்புக்கும்** எதிராக சக்திகள் அணி திரளுவதை ஆதரிக்கின்றன.

**கூட்டுச் சேரா நாடுகள்:** *(Non-aligned Countries)*—எந்த இராணுவ, அரசியல் கூட்டிலும் சேராத நாடுகள். ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் லத்தீன் அமெரிக்காவையும் சேர்ந்த இந்தக் கூட்டுச் சேரா நாடுகள் அவற்றின் அயல்துறைக் கொள்கையில் ஏகாதிபத்திய-எதிர்ப்பு, யுத்த-எதிர்ப்பு, காலனியாதிக்க-எதிர்ப்பு நிலைகளை ஏற்கின்றன. உலகில் வர்க்க சக்திகளது தற்போதைய பரஸ்பர நிலையில் கூட்டுச் சேரா நாடுகள் ஏகாதிபத்திய வாதிகளது நாட்டாண்மைக்குப் பணிய மறுக்கவும், சமத்துவத்தின் அடிப்படையிலான சர்வதேசப் பொருளாதார உறவுகளை நிலைநாட்டவும் சக்தி வாய்ந்தனவாய் இருக்கின்றன. *(பார்க்கவும்:* **கூட்டுச் சேராக் கொள்கை***)*.

**கூட்டுத்துவமாக்குதல் (விவசாயத்தை):** *(Collectivisation of Agriculture)*—தனிப்பட்ட விவசாயிகளது சிறு குடும்பப் பண்ணைகளைப் பெரிய கூட்டுறவு அமைப்பாகிய கூட்டுப் பண்ணைகளாக ஐக்கியப்படுத்துவதன் மூலம் விவசாயத்தை சோஷலிச வழியில் திருத்தியமைத்தல். சோவியத் நாட்டில் **தொழில் வளர்ச்சியோடும் கலாசாரப் புரட்சியோடும்** கூட கூட்டுப் பண்ணைகள் நிறுவப்பட்டதைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்து, நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையே பொருளாதாரப் பிணைப்புகள் வளர்ந்தோங்கி, தொழிலாளி-விவசாயிக் கூட்டணி மேலும் வலுவடைந்தது; சாகுபடியிலும் கால்நடை வளர்ப்பிலும் நவீன முறைகள் கையாளப்படுவதற்கு விரிவான வாய்ப்புக்களைக் கிடைக்கச் செய்து விவசாயிகளும் மற்றும் நாட்டு மக்களின் ஏனைய எல்லாப் பகுதியோரும் பெரிய அளவில் நலம் பெற முடிந்தது.

**கூட்டுறவுத் திட்டம் (லெனினது)**: (Lenin's Co-operative Plan)—மாபெரும் புரட்சிகர மார்க்சிய தத்துவ ஆசானும் உலகின் முதலாவது சோஷலிச அரசின் தந்தையுமான விளதீமிர் லெனின் (1870-1924) விவசாயத்தின் சோஷலிசப் புனரமைப்புக்காக வகுத்தளித்த திட்டம் **சோஷலிசத்தைக்** கட்டியமைப்பதற்கான லெனின் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்த இது, தனிப்பட்ட விவசாயிகளது சிறு நில உடைமைகளை விவசாயிகளின் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் முதற்கண் வினியோகத் துறையிலும் (சந்தை விற்பனை, வழங்கீடு, கடன் வசதி, நுகர்வோர் கூட்டுறவுகள்), பிறகு உற்பத்தித் துறையிலும் கூட்டுறவுகளாகப் படிப்படியாக ஒரு சேர இணைய வேண்டும் என்கிறது. தொழிலாளர்கள், விவசாயிகளது கூட்டணியைக் குறிக்கும் **பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில்** இம் மாதிரியான கூட்டுறவுகளை பெருவாரி அளவில் அமைத்திடுவதுதான் விவசாயிகள் எல்லாரும் அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய முறையிலும் இலாபகரமான வழியிலும் பெரிய இயந்திர சாதன சோஷலிச விவசாயத்துக்கு மாறிச் செல்வதற்குரிய சிறந்த ஏற்பாடாகும். **விவசாயத்தைக் கூட்டுத்துவமாக்குவதற்கு** அவசியமான நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டுமானால் நாட்டை சோஷலிச வழியில் **தொழில் மயமாக்க** வேண்டுமென லெனின் கருதினார். ஏனெனில் கிராமப் புறங்களை சோஷலிச வழியில் புனரமைப்பதற்கும், விவசாயிகளுக்குக் சடன்களின் வடிவிலும் பிற வடிவங்களிலும் அரசு



உதவுவதற்கும் தேவையான பொருளாயத, தொழில் நுட்ப அடித்தளமானது, நாட்டை சோஷலிச வழியில் தொழில் மயமாக்குவதன் மூலம்தான் நிறுவப்பட முடியும். கூட்டுத்துவமாக்குவதில் சோவியத் நாட்டுக்கு உள்ள அனுபவத்தைப் பல சோஷலிச நாடுகளும் வளரும் நாடுகளும் தத்தமது தனி இயல்புகளையும் வரலாற்றுச் சூழ்நிலைமைகளையும் தக்கவாறு கணக்கில் எடுத்துக் கொண்டு பயன் படுத்திக் கொள்கின்றன.

**கூட்டுப் பங்குக் கம்பெனி** அல்லது **நிறுமம்**: (Joint-stock Company)—மூலதனப் **பங்குகளை** விற்பதன் மூலம் மூலதனம் திரட்டப் பெற்று நிறுவப்படும் தொழில் நிறுவனம். மூலதனப் பங்குகளை வாங்கி வைத்துக் கொள்வோர் இலாப ஈவு (dividend) எனப்படும் வருடாந்தர வருமானம் பெறும் உரிமையுடையோர் ஆகின்றனர். கூட்டுப் பங்குக் கம்பெனிகளுக்கு ஏகபோக மூலதனத்தின் பிரதிநிதிகளே தலைமை தாங்குகிறார்கள். பெருநிதி அதிபர்கள் கூட்டுப் பங்குக் கம்பெனிகளைப் பயன்படுத்தி, தொழில் முனைப்பாளர்களுக்கு (entrepreneur) உரிய வருமானத்தைக் கைப்பற்றிக் கொண்டு விடுகிறார்கள். மூலதனப் பங்குகளில் மிகச் சொற்பமான ஒரு பகுதியைத் தொழிலாளர்களுக்கு விற்பதன் மூலம் கூட்டுப் பங்குக் கம்பெனியின் செயல் அரங்கு விரிவாக்கப்படுகிறது. மிகப் பெரிய பங்குதாரர்கள் தமது செல்வத்தை மேலும் பெரிய அளவில் பெருகச் செய்ய முடிகிறது. அதேபோது இலாபங்களை வினியோகிக்கும் பணியில் தொழிலாளர்களும் பங்கு பெறுவதாக ஒரு பிரமையை உண்டாக்கி, பாட்டாளி வர்க்கத்தவரின் ஒருமைப்பாட்டைக் குலைப்பதற்கும், உழைப்பாளி மக்களது கவனத்தை **வர்க்கப் போராட்டத்திலிருந்து** திருப்பி விடுவதற்கும் முயற்சி செய்ய முடிகிறது.

**கூ கிளெக்ஸ் கிளான்**: (Ku klux Klan)—அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள பயங்கரவாத நிறவெறி நிறுவனம். 1865-ல் நிறுவப்பட்ட இதற்கு 1870 ஆம் ஆண்டுகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பத்தில் தடை விதிக்கப்பட்டது என்றாலும், இது தொடர்ந்து செயல்பட்டே வருகிறது. கறுப்பு நிற மக்களை யும் முற்போக்காளர்களையும் முற்போக்கு நிறுவனங்களையும் இது தொடர்ந்து பயங்கர முறையில் தாக்கி வருகிறது.

**கூலி விகிதம்:** (Wages)—ஒருவர் செய்யும் வேலைக் காக ரொக்கத்தில் அவருக்குக் கிடைக்கும் ஊதியம். கூலி விகிதத்தின் பரிமாணம், செய்யப்படும் வேலை எந்த அளவுக்குச் சிக்கலானது, தொழிலாளியின் தகுதித் திறன் என்ன, அவர் செய்யும் வேலையின் தரம், அதைச் செய்ய அவர் செலவிடும் நேரம் ஆகியவற்றை மட்டும் பொறுத்த தல்ல; **உற்பத்திச் சாதனங்களது உடைமையின்** வடிவங் களில் எது நடப்பில் உள்ளது என்பதையும் பெருமள வுக்குப் பொறுத்ததாகும்.

உதாரணமாய், தனி முதலாளியின் ஆலையில் குறிப் பிட்ட நேரம் வேலை செய்ததற்காகத் தொழிலாளி குறிப் பிட்ட பணத் தொகையைப் பெறுகிறார். இதனால் அவர் செய்யும் வேலைக்கு முழு அளவில் அவருக்குப் பணம் தரப்படுவதாக அவர் மனத்துள் போலியான ஓர் எண்ணம் உண்டாக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் அவரது வேலை நேரத்தில் ஒரு பகுதிக்கு மட்டுமே அவருக்கு ஊதியம் தரப்படுகிறது. அந்தச் சமுதாயத்தில் தன்னியல்பான முறையில் உழைப்பு சக்திக்கு நிர்ணயிக்கப்படுகிற மதிப்பு அல்லது விலையை உருவாக்க அவர் தமது வேலை நேரத்தில் எவ்வளவு செலவிடுகிறாரோ, அந்தப் பகுதிக்கு மட்டுமே அவர் ஊதியம் பெறுகிறார். அவரது வேலை நேரத்தில் ஊதியம் அளிக்கப்படாத பகுதியிலும் அவர் தமது உழைப்பின் மூலம் பண்டங்களை உற்பத்தி செய்கிறார். இவற்றின் மதிப்பு தான் உபரி மதிப்பு எனப்படுவது. இந்த உபரி மதிப்பை முதலாளி ''உடைமையாளர் என்ற முறையில் தமக்குள்ள உரிமையினால்'' தொழில் துறை இலாபத்தின் வடிவத்தில் கைப்பற்றிக் கொண்டு விடுகிறார்.





**கெடுபிடிப் போர்:** (Cold war)—இரண்டாம் உலக யுத்தத்துக்கு (1939-45) பிற்பாடு ஏகாதிபத்திய நாடுகளின் பிற்போக்கு வட்டாரங்கள் சோவியத் யூனியனுக்கு எதிராகவும் ஏனைய சோஷலிச நாடுகளுக்கு எதிராகவும் கடைப்பிடித்த கொள்கை. ''கெடுபிடிப் போர்க்'' கொள்கையின் பிரதான கூறுகள் வருமாறு: மாறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை நிராகரித்தல்; சர்வதேச நிலைமையை மிதமிஞ்சிக் கடுமையாக்கி, ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட சோவியத்-எதிர்ப்பு இராணுவக் கூட்டுகளை அமைத்துக் கொள்ளுதல்; **ஆயுத உற்பத்திப் போட்டி;** பிற அரசுகளுடைய பிரதேசங்களில் இராணுவத் தளங்களை நிறுவிக் கொள்ளுதல்; வெகுஜன நாசம் விளைவிக்கும் ஆயுதங்களை உபயோகிக்கும் **யுத்தத்தைக்** கட்ட விழ்த்துவிடப் போவதாக அச்சுறுத்தல்; உலகப் பொருளா தாரப் பிணைப்புக்களைச் சீரழியச் செய்தல். உலகில் சக்திகளது பரஸ்பர நிலை சோஷலிச அமைப்புக்குச் சாதகமாய் மாறியிருப்பதால், ஏகாதிபத்திய அரசுகளின் ஆளும் வட்டாரங்கள் வேறு வழியின்றி ''கெடுபிடிப் போர்'' உகந்ததல்ல என்று ஒத்துக் கொள்ள வேண்டியதா யிற்று. 1970 ஆம் ஆண்டுகளில் அவை பல ஒப்பந்தங் களுக்கு உடன் பட்டன. சோவியத் யூனியனும் சோஷலிசக் கூட்டுக் குடும்பத்தின் ஏனைய நாடுகளும் மேற்கொண்ட முன்முயற்சிகளின் விளைவாய் வரையப்பட்ட இந்த ஒப்பந்தங்கள் ''கெடுபிடிப் போரிலிருந்து'' **பதற்றத் தளர்வு** நிலைக்கு ஏற்பட்ட திருப்பத்தைக் குறித்தன. சோவியத் யூனியனும் சோஷலிசக் கூட்டுக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களும் பிற நாடுகளில் வளர்ந்து வரும் சமாதான விருப்ப சக்திகளும் ''கெடுபிடிப் போரைப்'' புத்துயிர் பெற்றெழச் செய்வதற்காக பிற்போக்கு வாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகளை எதிர்த்து நின்று, பதற்றத் தளர்வை ஆழமாக்கப் போராடுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கொயல்ரோ:** *(Goelro)* —ருஷ்யாவை மின்மயமாக்குவதற்கான அரசுக் கமிஷனின் ருஷ்யப் பெயர்ச் சுருக்கம். 1920-ல் இந்தக் கமிஷன் ருஷ்யாவை மின்மயமாக்குவதற்கான நீண்டகாலத் திட்டத்தையும், **தேசப்பொருளாதார** வளர்ச்சிக்கான முதலாவது திட்டத்தையும் வகுத்திட்டது. மின்மயமாக்குவதன்அடிப்படையில் தேசப் பொருளாதாரத்தை சோஷலிச வழியில் அடியோடு மாற்றியமைக்க வல்ல பெருவீத பொறியியல் தொழில் நிறுவப்படுவதற்கு கொயல்ரோ திட்டம் வகை செய்தது.

**கொரில்லா இயக்கம்:** *(விடுதலை வீரர்களது இயக்கம்)* —*(Guerilla—Partisan Movement)*—அன்னிய ஆட்சியாளர்கள், அன்னிய ஆதிக்கப் படையினர், அதிகாரிகள், அல்லது உள்நாட்டு ஒடுக்கு முறையாளர்களை எதிர்த்து வெகுஜன அளவில் நடைபெறும் மக்கள் போராட்டத்துக்குரிய ஒரு வடிவம். ஆயுதமேந்திப் போராடுதல், சீர்குலைவு வேலைகள், மக்களை அவர்களது சமூகக் கோரிக்கைகளின் நிறைவேற்றத்துக்காகப் போராடுமாறு உசுப்பி விடுவதற்கான கிளர்ச்சி ஆகியவையே கொரில்லா இயக்கத்துக்குரிய பிரதான வடிவங்கள். ஆளும் வர்க்கங்களை எதிர்த்து ஒடுக்கப்பட்ட வெகுஜனங்கள் நடத்துகிற **உள்நாட்டுப் போர்கள்** அடிக்கடி கொரில்லா இயக்கத்தின் வடிவத்தை ஏற்பதுண்டு. அரசியல் முதிர்ச்சி இல்லாத பகுதியோரைத் தம் பக்கத்துக்கு வருமாறு தற்காலிகமாய் இழுத்துக் கொள்வதில் வெற்றி பெற்றுவிட்ட பிற்போக்கு சக்திகளுங்கூட, சில சமயம் கொரில்லா இயக்கத்துக்குரிய முறைகளைக் கைக் கொள்வது உண்டு.

## ச

**சடப் பொருள்:** *(Matter)*— மனித உணர்வைச் சாராது சுயேச்சையாய் நிலவுகிற புறநிலை எதார்த்தத்தைக் குறிக்கும் தத்துவவியல் கருத்தமைப்பு *(category)*. உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் புலப்பாடுகளும் இயல்புகளும் பரஸ்பரத் தொடர்புகளும் உறவு நிலைகளும் இயக்க வடிவங்களும் தான் சடப்பொருள் எனப்படுவது. நம்மைச் சுற்றிலும் உள்ள உலகு அனைத்துமே இயங்கிக் கொண்டிருக்கும் சடப்பொருள்தான்—பல்வேறுபட்ட எண்ணிறந்த வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் அமைந்து, நமக்குத் தெரிய வந்திருக்கும் அல்லது இன்னமும் தெரிய வராமலிருக்கும் அதன் எல்லாப் பரஸ்பரத் தொடர்புகளையும் உறவுகளையும் கொண்டு ஓயாது இயங்கும் சடப் பொருள்தான் புறநிலைப் பொருள் ஒவ்வொன்றும் முடிவின்றி பல்வேறுபட்ட பரஸ்பரத் தொடர்புகளைக் கொண்டதாகும், உள்ளுறை மாற்றம் காணவும் பண்பில் மாறுபடுகிற வெவ்வேறு சடப்பொருள் வடிவங்களாய் உருமாற்றம் பெறவும் வல்லதாகும்.

காலத்திலும் விசும்பிலும் சடப்பொருள் வரம்பில்லாதது. அதன் கட்டமைப்பு வடிவங்களும் எண்ணிறந்தவை. ஆதியும் அந்தமும் இல்லாது நிரந்தரமாய் இயங்குவதும், இயற்கை விதிகளின்படி தானே மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் இருப்பதும் சடப் பொருளுக்கு உரிய உள்ளார்ந்த இயல்புகளாகும். சடப் பொருளைத் தோற்றுவிக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது.

**சந்தர்ப்பவாதம்:** *(Opportunism)*– மார்க்சியம்—லெனினியத்துக்குப் பகைமையான வர்க்க இணக்கத்துக்கும் விட்டுக் கொடுத்துச் செல்வதற்குமான கொள்கை. தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் புரட்சிகரப் போராட்ட முறைகளையும், சோஷலிசப் புரட்சியையும் நிராகரிப்பதன் மூலமும், முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசாங்கங்களுக்கு உடந்தையாக இருந்து ஒத்துழைப்பதன் மூலமும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

**சமாதான சகவாழ்வு:** *(Peaceful co-existence)*—மாறுபட்ட சமூக அமைப்புக்களைக் கொண்ட அரசுகள் சமாதானமாய் சகவாழ்வு நடத்துதல். சமாதான வாழ்வை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**முதலாளித்துவத்திலிருந்து, சோஷலிசத்துக்கான** மாற்றம் உலக அளவில் நடந்தேறும் கால கட்டத்தில் சோஷலிச நாடுகளது அயல் துறைக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடாய் விளதீமிர் லெனின் வகுத்தளித்தார். எதிரும் புதிருமான சமூக அமைப்புக்களிடையே சமாதான வடிவில் போராட்டம் நடைபெறுவதை சமாதான சகவாழ்வு குறிப்பதாகும். பிரதானமான எல்லா நாடுகளிலும், அல்லது பல நாடுகளிலும் ஒரே நேரத்தில் சோஷலிசம் வெற்றி பெறுவதில்லை என்பதால் இம்மாதிரியான சகவாழ்வு அவசிய மானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் ஆகிவிடுகிறது.

அரசுகளிடையே சச்சரவை உண்டாக்கும் பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதில் ஆயுதமேந்திய மோதலைத் தவிர்த்துக் கொள்வது தான் சமாதான சகவாழ்வின் பிரதான குறிக்கோள். பிற நாடுகளின் அரசு உரிமையையும் சமத்துவத்தையும் பிரதேச உரிமையையும் மதித்து நடத்தல்; அவற்றின் உள் விவகாரங்களில் தலையிடா திருத்தல்; மாறுபடும் சமூக அமைப்புக்களையுடைய அரசு களிடையே பொருளாதார, விஞ்ஞான, கலாசாரப் பிணைப்புக் களை வளர்த்துச் செல்லுதல் ஆகியவை சமாதான சகவாழ்வின் அடிப்படைக் கோட்பாடுகளாகும். வரலாற்றி லேயே முதன் முதலில் இந்தக் கோட்பாடுகள் சோவியத் யூனியன் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டு சட்ட அங்கீகாரம் தரப்பட்டுள்ளன. உலக அரங்கில் சோஷலிசத்தின் நிலைகள் வலிமை பெறுவதால் சர்வதேச உறவுகளில் வன்முறையின் பிரயோகத்தை அகற்று வதற்கும், நாடுகளிடையே எல்லா வகையான ஆயுத மேந்திய மோதல்களுக்கும் முற்றுப் புள்ளி வைப்பதற்கும் சாதகமான நிலைமைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

**''சமாதானப் படை'':** (''Peace Corps'')—ஆசிய, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க வளரும் நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சித்தாந்த, அரசியல், பொருளாதார ஊடுருவலுக்கு வகை செய்யும் பொருட்டு



1961—ல் ஜனாதிபதி கென்னடியின் முன்முயற்சியால் அமைக்கப்பட்ட நிறுவனம். சி.ஐ.ஏ., எப்.பி.ஐ. முதலான வற்றின் உதவியுடன் இந்நிறுவனம் முக்கியமாய் மேற் கல்வியும் அன்னிய மொழிகளில் பயிற்சியும் பெற்ற ''நம்பகமான'' இளந் தலைமுறையினரிடம் இருந்து தனக்கு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்கிறது. ''சமாதானப் படை'' உறுப்பினர்கள் பெரும்பாலும் இரண்டு ஆண்டு களுக்கு வளரும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அந் நாடுகளின் மக்களுக்கு உதவுவதே தமது ஒரே குறிக் கோள் என்பதாகச் சொல்லி இவர்கள் ஆசிரியர்களாகவும் டாக்டர்களாகவும் விவசாய விஞ்ஞானிகளாகவும் வேலை ஏற்கிறார்கள். ஆனால் இந்நாடுகளின் அரசியல் நிறுவனங் களையும் இவற்றின் இயற்கை செல்வங்களையும் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதும், கம்யூனிஸ்டு-எதிர்ப்புப் பிரசாரம் நடத்துவதும், ''அமெரிக்க வாழ்க்கை முறையை'' விளம்பரம் செய்து முதலாளித்துவ சித்தாந்தத்தைப் புகட்டுவதும் தான் இவர்கள் உண்மையில் செய்கிற வேலைகளாகும்.

பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜெர்மனி, ஜப்பான், கானடா, ஸ்வீடன், ஆஸ்திரேலியா போன்ற பெரும் பாலான முதலாளித்துவ நாடுகளில் இம்மாதிரியான நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**சமாதான வேலைத்திட்டம்:** (Peace Programme)— சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரஸ் சமாதானத்துக்காகவும் சர்வதேச ஒத்துழைப்புக்காகவும் நாடுகளது சுதந்திரத்துக்காகவும் சுயேச்சைக்காகவும் போராடுவதற்காக முன்வைத்த வேலைத் திட்டம்.

சமாதான வேலைத்திட்டத்தின் பிரதான பணிகள் வருமாறு:

1) தென் கிழக்கு ஆசியாவிலும் மத்தியக் கிழக்கிலும் யுத்தத் தீயை மூட்டுகிற பீடங்களை அகற்றுதல்; எந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதமான ஆக்கிரமிப்புச் செயலுக்கும் உடனே எதிரடி கொடுத்து அதை நிறுத்துதல்; இந்நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கு உள்ள சாத்தியக் கூறுகளை முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல்; தகராறு உண்டாக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக வன்முறைப் பிரயோகத்தையும் அச்சுறுத்தலையும் நிராகரித்தலை சர்வதேச வாழ்வின் சட்டமாக்குதல்;

2) இரண்டாம் உலகப் போரின் (1939 - 45) விளைவாய் ஐரோப்பாவில் ஏற்பட்ட பிரதேச மாற்றங்களுக்கு இறுதி அங்கீகாரம் அளித்து ஐரோப்பாவில் கூட்டுப் பாதுகாப்பை உறுதி செய்தல்;

3) அணு ஆயுதங்களுக்கும் இரசாயன ஆயுதங்களுக்கும் உயிரியல் ஆயுதங்களுக்கும் தடைவிதிக்கப்படும்படி செய்தல்; அணு ஆயுதச் சோதனைகள் நிறுத்தப்படுவதற்காகவும் அணு ஆயுத விலக்கு மண்டலங்கள் நிறுவப்படுவதற்காகவும் பாடுபடுதல்; அணு ஆயுதங்களையுடைய அரசுகளது அணுப் படைக்கலக் குறைப்புக்காகப் போராடுதல்;

4) ஆயுத உற்பத்திப் போட்டியை நிறுத்துவதற்கும், அன்னிய இராணுவத் தளங்களைக் கலைப்பதற்கும், இராணுவ மோதல் பேரபாயம் விளைவிக்கக் கூடியதாய் இருக்கிற பிரதேசங்களில், யாவற்றுக்கும் முதலாய் மத்திய ஐரோப்பாவில், ஆயுதப் படைகளையும் படைக் கலன்களையும் குறைப்பதற்குமான போராட்டத்தை மும்முரமாக்குதல்; ஆயுதமேந்திய மோதல்கள் அசம்பாவிதமாகவோ, வேண்டுமென்றே திட்டமிட்டோ, நடைபெறுகிற நிகழ்வினைக் குறைப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை வகுத்திடல்;

5) எஞ்சியிருக்கும் காலனி ஆட்சிகளும் ஒழிக்கப்பட வேண்டுமெனக் கோரும் ஐ. நா. தீர்மானங்கள் முழு அளவுக்குச் செயற்படுத்தப்படுமாறு உறுதி செய்தல்; நிறவெறி, நிற ஒதுக்கல் ஆகியவற்றின் வெளிப்பாடுகளை வைராக்கியமான முறையில் கண்டனம் செய்தல்;



6) சுற்றுச் சார்பினை அழியாது பாதுகாத்தல்; இயற்கைச் செல்வாதாரங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல்; போக்குவரத்தையும் செய்தித் தொடர்பையும் வளர்த்தல்; மிகவும் அபாயகரமான நோய்களைத் தடுத்தலும் ஒழித்தலும்; புற வெளியையும் கடல் உலகையும் ஆராய்ந்து அறிதலும் பயன்படுத்திக் கொள்ளுதலும் ஆகியவை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நாட்டமுள்ள பிற அரசுகளோடு பரஸ்பரம் அனுகூலமான ஒத்துழைப்பை வளரச் செய்தல்.

சமாதான வேலைத் திட்டம் வெற்றிகரமாகச் செயல் படுத்தப் பெற்று வருகிறது. 1976-ல் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 25 ஆவது காங்கிரஸ் இந்தத் திட்டத்தை மேலும் வளர்த்து விரிவுபடுத்திற்று. சமாதானத்துக்காகவும் சர்வ தேச ஒத்துழைப்புக்காகவும் நாடுகளது சுதந்திரத்துக்காகவும் சுயேச்சை வாழ்வுக்காகவும் தொடர்ந்து போராடுவதற்காக இக்காங்கிரஸ் ஏற்ற வேலைத் திட்டம் கூறும் பிரதான பணிகள் வருமாறு:

1) சோதர சோஷலிச அரசுகளின் ஒற்றுமையை இடையறாது பலப்படுத்துவதுடன் கூடவே சமாதானத்தை உறுதி செய்வதற்காக இவ்வரசுகளது முனைப்பான கூட்டுப் பணியையும் பங்கையும் மேலும் அதிகமாக்கிச் செல்லுதல்;

2) ஆயுத உற்பத்திப் போட்டிக்கு முடிவு கட்டுவதற்கும் படைக்கலக் குறைப்பை நோக்கி முன் செல்வதற்கும் பாடுபடுதல்;

3) யுத்தத்துக்குத் தூபமிடும் பீடங்களை அகற்றுவதற்கும், யாவற்றுக்கும் முதலாய் மத்தியக் கிழக்கில் நேர்மையான சமாதானத் தீர்வு காண்பதற்கும் பாடுபடுதல்;

4) **பதற்றத் தணிவை** ஆழமாக்குதலும், ஐரோப்பிய மாநாட்டின் முடிவு ஆவணத்தைப் பூரணமாகச் செயல் படுத்தப் பாடுபடுதலும்;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5) ஆசியா கண்டத்தின் அரசுகளது கூட்டு முயற்சிகளின் அடிப்படையில் ஆசியப் பாதுகாப்பை உறுதி செய்யப் பாடுபடுதல்;

6) சர்வதேச உறவுகளில் வன்முறைப் பிரயோகத்தைக் கைவிடுவது குறித்து ஒப்பந்தம் முடிவாவதற்காக வேலை செய்தல்;

7) காலனி ஒடுக்குமுறையின் மீத மிச்சங்களையும் தேசங்களது சமத்துவமின்மையையும் சார்பு நிலையையும் அகற்றுவதற்காகவும், காலனியாதிக்கம், நிறவெறி இவற்றுக்கான எல்லா பீடங்களையும் இல்லாதொழிப்பதற்காகவும் பாடுபடுதல்;

8) சர்வதேச வாணிபத்தில் பாரபட்ச முறைகளை நீக்குவதற்காகவும், சர்வதேசப் பொருளாதார உறவுகளில் சமத்துவமின்மையையும் நாட்டாண்மை புரிதலையும் சுரண்டுதலையும் ஒழித்திடுவதற்காகவும் பாடுபடுதல்.

**சமுதாய வாழ்நிலையும் சமுதாய உணர்வும்:** (Social Being and Social Conciousness)—சமுதாய வாழ்வின் பொருளாயத அம்சத்தையும் ஆன்மிக அம்சத்தையும் வரையறை செய்து குறிப்பிடும் தத்துவவியல் கருத்தினங்கள். சமுதாய வாழ்நிலை என்பது பொருட் செல்வத்தின் உற்பத்தியையும், இந்த உற்பத்தியின் போது மக்கள் கொண்டுள்ள உறவுகளையும் குறிப்பதாகும். சமூக உணர்வு என்பது அரசியல், சட்டவியல், அழகியல் கருத்தோட்டங்களையும், மற்றும் நீதி நெறி, சமயம் முதலானவற்றையும் குறிக்கின்றது. சமுதாய வாழ்நிலைதான் சமுதாய உணர்வினை நிர்ணயிக்கிறது. அதேபோது சமுதாய உணர்வும் சமுதாய வரலாற்று வளர்ச்சிக்கு முக்கிய பங்கு ஆற்றும் அம்சமே ஆகும்.

**''சமூக ஏகாதிபத்தியம்'':** (''Social Imperialism'')—**சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தையும்** ஏனைய சோஷலிச நாடுகளையும் தாக்கும் பொருட்டு



மாவோயிசப் பிரசாரம் (பார்க்கவும்: **மாவோயிசம்**) கையாளுகிற ஒரு பதம். இந்நாடுகளின் பால் மாவோயிஸ்டுகள் கொண்டுள்ள பகைமைக்கு நியாய விளக்கம் கூறுவதற்கான ஒரு முயற்சியே ஆகும் இது. உண்மைகளைச் சிறிதும் மதியாது மாவோயிஸ்டுகள் சோவியத் அரசுப் பொறியமைவு ''ஏகபோக மூலதனத்தின் பிடிக்குள் இருக்கிறது'' என்றும், சோவியத் **பொருளாதாரம்** ''அரசு ஏகபோக முதலாளித்துவப் பொருளாதாரமாக'' மாறி விட்டது என்றும் கூறுகிறார்கள். சோவியத் யூனியனில் ''முதலாளித்துவம் மீட்சி பெற்று விட்டதாகவும்,'' சோஷலிச நாடுகள் ''சீரழிந்து விட்டதாகவும்'' சொல்லி அவர்கள், **உலக சோஷலிச அமைப்பு** என்பதாய் உண்மையில் ஏதும் இல்லை என்று சாதிக்கிறார்கள். உலக மேலாண்மைக்கான தமது மேலாதிக்க உரிமைத் தகுதிகளை வலியுறுத்த வேண்டும் என்பதே அவர்களது நோக்கம்.

**சமூக-தேசிய வெறிப் போக்கு:** (Social chauvinism)—சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் செயல்படுகிற ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு. முதலாளித்துவ வர்க்கத்தாரின் தேசிய வெறிக் கொள்கைகளை இப்போக்கினர் ஆதரிக்கின்றனர்.

சமூக-தேசிய வெறிப் போக்கு முதலாவது உலக யுத்தத்தின் போது (1914-18) மிகவும் பட்டவர்த்தனமாக வெளிப்படலாயிற்று. அப்போது இரண்டாவது **அகிலத்தின்** தலைவர்களில் பெரும்பாலோனோர் **பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின்** கோட்பாடுகளுக்குத் துரோகமிழைத்து விட்டுத் ''தமது தாயகத்தைப் பாதுகாப்பதாகப்'' பொய்க் காரணம் சொல்லி, தமது நாடுகளின் அரசாங்கங்களது ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்து நின்றார்கள்.

**சமூக நுகர்வு நிதிகள்:** (Social Consumption Funds)—சம்பளம் அல்லது கூலியை அன்னியில் வினியோகிக்கப்படும் கூடுதல் ஊதியங்களுக்கான நிதிகள். சோஷலிச சமுதாயத்தின் உறுப்பினர்களது பொருளாயத, கலாசாரத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்நிதிகளும் ஓர் ஆதாரமாகும்.

குடி மக்கள் செய்கிற வேலையின் அளவையும் தரத்தையும் கருதாமல், சமூக நுகர்வு நிதிகள் அவர்களிடையே இலவசமாகவோ, குறைந்த விகிதங்களுக்கோ, வினியோகிக்கப்படுகின்றன.

சமூக நுகர்வு நிதிகளில் மிகப் பெரும்பகுதி அரசாங்க பட்ஜெட்டு ஒதுக்கீடுகளால் ஆனது. இதன்றி அரசுத் தொழில் நிலையங்களும் நிறுவனங்களும் அவற்றின் இலாபங்களில் ஒரு பகுதியை உபயோகித்து சமூக, கலாசார, குடியிருப்புக் கட்டுமான நிதிகளை நிறுவுகின்றன. கூட்டுப் பண்ணைகள் கலாசார, சமூக வசதிகளுக்கும் சமூகக் காப்புறுதி ஏற்பாடுகளுக்கும் கூட்டுப்பண்ணை உறுப்பினர்களுக்குப் பொருளாயத உதவி அளிப்பதற்குமான நிதிகளை நிறுவுகின்றன.

ஓய்வு ஊதியங்கள் (பென்ஷன்கள்), தற்காலிக ஏலாமைக்கான ஈட்டுத் தொகைகள் (முன்பு கிடைத்த சம்பளத்தில் 100 சதவீதம் வரையிலானவை), பேறுகால மானியங்கள், மணமாகாத தாய்மார்களுக்கும் பெருங் குடும்பங்களுடைய தாய்மார்களுக்குமான உதவித் தொகைகள், தனிப்பயிற்சி உயர்நிலைப்பள்ளிகளிலும் மேற் கல்வி நிலையங்களிலும் படிப்போருக்கான உதவிச் சம்பளங்கள், ஆண்டு விடுமுறைக் காலங்களில் (சம்பளத்துக்குச் சமமாய்) தரப்படும் தொகைகள் முதலானவற்றின் வடிவில் சமூக நுகர்வு நிதிகளில் பெரும்பகுதி குடிமக்களுக்கு வழங்கப் படுகிறது. எஞ்சிய பகுதி எல்லா மட்டங்களிலும் எல்லார்க்கும் இலவசக் கல்வி அளிப்பதற்காகவும், எல்லா விதமான இலவச மருத்துவ உதவிக்காகவும், பள்ளிக்கு முற்பட்ட கல்விக் கூடங்களில் குழந்தைகள் கல்வி கற்பதற்காகவும் (உண்மையில் இங்கு செலவாகும் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவானதையே பெற்றோர்கள் செலுத்துகிறார்கள்), நூலகங்களுக்காகவும்,



பொழுது போக்கு போட்டி விளையாட்டு வசதிகளுக்காகவும், குடியிருப்பு வசதிகளுக்காகவும் (சோவியத் குடிமக்கள் செலுத்தும் வீட்டு வாடகைகள் உலகிலேயே மிகக் குறைவானவை, குடும்ப பட்ஜெட்டில் ஒரு போதும் 4—6 சதவீதத்துக்கு மேற்படாதவை), ஆரோக்கிய இடங்களிலும் விடுமுறை விடுதிகளிலும் இலவசமாகவோ, குறைந்த கட்டணத்துக்கோ இடம் அளிப்பதற்காகவும் செலவிடப்படுகிறது.

ஏலாத நிலையை அடைந்தவர்கள் சமூக நுகர்வு நிதிகளின் செலவில் பராமரிக்கப்படுவதால், இவர்களது குடும்பத்தாரின் வருவாய் ஏனையோரது வருவாய்க்கு ஓரளவு சமமாக முடிகிறது. சமூக நுகர்வு நிதிகள் இடையறாது வளர்ந்து செல்கின்றன. சோஷலிச சமுதாயம் **கம்யூனிசத்தை** நோக்கி மேலும் மேலும் முன்னேறுகையில், குடிமக்களது தேவைகள் மேலும் மேலும் அதிக அளவுக்கு இந்நிதிகள் மூலம் பூர்த்தி செய்யப்படும்.

**சமூகப் பொருளாதார அமைப்பு:** (Social and Economic Formation)—சமுதாயத்தின் முன்னேற்றகரமான வளர்ச்சியில் ஒரு கட்டம். குறிப்பிட்ட ஓர் உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டதான இந்தக் கட்டம் **உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள்** ஆகிய இரண்டும் இசைந்து பொருந்துவதைக் குறிப்பதாகும். வரலாற்றில் ஒன்றன் பின் ஒன்ராய் உதித்தெழுந்த சமூக, பொருளாதார அமைப்புக்கள் வருமாறு: புராதன சமுதாய அமைப்பு, அடிமையுடைமை அமைப்பு, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், கம்யூனிசம். ஒவ்வொரு சமூக, பொருளாதார அமைப்பும் அதற்குரிய அரசியல், சித்தாந்த மேற்கட்டுமானத்தை (அதாவது கருத்துக்கள், நிறுவன அமைப்புக்கள், ஏற்பாடுகளை) பெற்றிருக்கிறது. மார்க்சியம்தான் சமூக பொருளாதார அமைப்பு எனும் கருத்துருவை (Concept) எடுத்துரைத்து விளக்கிற்று. இந்தக் கருத்துரு மனித சமுதாயத்தை அதன் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தனியொரு சமூக ஒருமையாக ஆராய முடியும்படிச் செய்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சமூக வர்க்கங்கள்:** (Social Classes)—"வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும் உற்பத்திச் சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும் (மிகப் பெரும்பாலும் இவ்வுறவு சட்டத்தால் வரையறுத்து நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது), உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களாலும், இந்தப் பங்கை அவை பெற்றுக் கொள்ளும் முறையினாலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகிற மக்கள் பெரும், தொகுதிகளாகும். வர்க்கங்களானவை சமூகப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட ஓர் அமைப்பில் தாம் வகிக்கும் வெவ்வேறு இடங்களின் காரணமாய் ஒன்று மற்றொன்றின் உழைப்பைக் கைப் பற்றிக் கொள்ள முடியும்படியான மக்கள் தொகுதிகளாகும்"(வி. இ. லெனின், **நூல்திரட்டு**. தொகுதி 29, பக் 421). பகைமை நிலவும் சமுதாயத்தில் இருக்கும் வர்க்கங்கள் குறித்து லெனின் இவ்வாறு விளக்கம் கூறினார். இப்படிப்பட்ட வர்க்கங்கள் இடையிலான உறவுகள் தவிர்க்க வொண்ணாதவாறு **வர்க்கப் போராட்டத்துக்கு** இட்டுச் செல்கின்றன. முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதான வர்க்கங்கள் முதலாளிகளது (**உற்பத்திச் சாதனங்களின்** உடைமையாளர்கள்) வர்க்கமும், பாட்டாளிகளது (**உற்பத்திச் சாதனங்கள்** பறிக்கப்பட்டு, முதலாளிகளால் சுரண்டப்படுகிற தொழிலாளி வர்க்கத்தினர்) வர்க்கமும் ஆகும். மிகப் பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் குட்டி முதலாளித்துவப் பகுதியோரான (விவசாயிகள், கைவினைஞர்கள் முதலானோர்) எண்ணற்ற அடுக்குகளும் இருக்கக் காண்கிறோம். சில முதலாளித்துவ நாடுகளில் இவற்றுடன்கூட மேன்மேலும் அதிகமாய் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் ஒன்று கலந்து வருகிற நிலப்பிரபுக்களும் இருக்கிறார்கள். உற்பத்திச் சாதனங்களின் சமூக (பொது) உடைமையின் அடிப்படையில் அமைந்த சோஷலிச



சமுதாயத்தில் இரண்டு நேச வர்க்கங்களான தொழிலாளி வர்க்கத்தினரும் விவசாயிகளும், மற்றும் ஒரு சமூக அடுக்காய் அமைந்த அறிவுத் துறையினரும் இருக்கக் காண்கிறோம்.

**சமூக-ஜனநாயகம்:** (Social Democracy)—சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் 19 ஆம் நூற்றுண்டின் கடைசி 30 ஆண்டுகளின் வாக்கில் தோன்றிய ஓர் அரசியல் போக்கு. ஆரம்பத்தில் சமூக-ஜனநாயகம் புரட்சிகர நிலையை ஏற்றுச் செயல்பட்டது, **சோஷலிசத்தின்** கருத்துக்களைப் பரவச் செய்தது, **தொழிலாளி வர்க்கத்தின்** வெகுஜன நிறுவனங்கள் அமைக்கப்படுவதற்கு ஆக்கம் அளித்துப் பாடுபட்டது. ஆனால் அந்நூற்றுண்டின் இறுதியில் சமூக ஜனநாயகத்தில் திருத்தல்வாத, சந்தர்ப்பவாதப் போக்குகள் தலைதூக்கின. இதன் விளைவாய் சமூக-ஜனநாயகம் சமாதான வழிப்பட்ட செயல்களை மட்டும் ஆதரித்துப் படிப்படியான சமூக சீர்திருத்தங்களுக்காகவும் ஏகாதிபத்திய **முதலாளித்துவ வர்க்கத்தாருடன்** வர்க்க ஒத்துழைப்புக்காகவும் வேலை செய்வதென்ற வரம்புகளுக்குள் **தன்னைக்** கட்டுப் படுத்திக் கொண்டது. சமூக-ஜனநாயகம் இப்போது **அரசு** குறித்தும், **ஜனநாயகம்** குறித்தும் "வர்க்க நோக்குக்கு அப்பாற்பட்டதான" ஒரு கருத்தோட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டது. லெனினது கட்சியான போல்ஷிவிக்குக் கட்சி (பார்க்கவும்: **போல்ஷிவிசம்**) பெரும்பாலான சோஷலிஸ்டுக் கட்சிகள், சமூக-ஜனநாயகக் கட்சிகளின் சந்தர்ப்பவாதத் தலைமையை வைராக்கியமாய் எதிர்த்துப் போராடின. 1917-ல் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்ததும் சமூக-ஜனநாயகக் கட்சிகளில் இருந்த புரட்சிகர இடதுசாரிக் கூறுகள் இக்கட்சிகளிலிருந்து முறித்துக் கொண்டு, கம்யூனிஸ்டுக் கட்சிகளை நிறுவிக் கொண்டன. கம்யூனிஸ்டுக் கட்சிகள் கம்யூனிஸ்டு அகிலமாய் (1919-43) ஐக்கியமடைந்தன. தொழிலாளி வர்க்க இயக்கத்தில் **சந்தர்ப்பவாதத்தின்** எல்லா வெளிப்பாடுகளையும் எதிர்த்துப் போராடிய கம்யூனிஸ்டுக் கட்சிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பாசிசத்துக்கும்** பிற்போக்கிற்கும் எதிரான போராட்டத்தில் இயன்ற இடங்களில் எல்லாம் சமூக-ஜனநாயகத்துடன் செயல் ஒற்றுமை நிறுவிக் கொண்டன. **முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி** ஆழமடைந்து வருவதைத் தொடர்ந்து, சமூக-ஜனநாயகத்தின் அணிகளில் வேறுபாட்டுக் கூறுகள் வளர்ந்து செல்லுகின்றன. அண்மை ஆண்டுகளில் இடது சாரி சக்திகளின் செயற்பாடு அதிகரித்து, சமூக-ஜனநாயகக் கட்சிகளின் கொள்கையில் வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பல முதலாளித்துவ நாடுகளில் இக் கட்சிகள் செல்வாக்கு வாய்ந்த சக்திகளாகியுள்ளன. சமூக ஜனநாயகத்தின் தலைவர்கள் பத்தொன்பது அரசாங்கங்களில் உறுப்பினர்களாய் இருக்கிறார்கள், பலவற்றுக்குத் தலைமையும் தாங்குகிறார்கள். இதனால் தொழிலாளி மக்களுக்கு நலம் பயக்கும் சில சீர்திருத்தங்களை வெற்றிகரமாய் நிறைவேற்றுவது சாத்தியமாகியுள்ளது. இந்நிலைமைகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சீர்திருத்தவாத **சித்தாந்தத்தை** எதிர்த்துப் போராடுவதோடு கூட, தொழிலாளர்களுக்கும் எல்லா உழைப்பாளி மக்களுக்கும் நலம் பயக்கும் விதத்தில் சமூக-ஜனநாயகத்துடன் ஒத்துழைப்பு நிறுவிக் கொள்ளவும் ஒத்துழைப்பை விரிவுபடுத்திக் கொள்ளவும் பாடுபடுகின்றன.

**சர்வதேச நெருக்கடித் தணிவு**: (Relaxation of International Tension)—பார்க்கவும்: **பதற்றத் தணிவு**.

**சர்வாதிகாரம்**: (Dictatorship)— 1) ஆதிக்கத்திலுள்ள வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்து அவ்வர்க்கத்தின் அரசியல் மேலாண்மையை உறுதி செய்யும் அரசு அதிகாரம்;

2) எதேச்சாதிகார ஆட்சி **பாசிசத்தில்** காணக் கூடியது போல் ஒருவரிடமோ ஒருசிலரிடமோ அதிகாரம் குவிந்திருத்தல்.

## சி

**சி.ஐ.ஏ.**: (CIA) — பார்க்கவும்: **மத்தியப் புலனாய்வு நிறுவனம்.**



**சித்தாந்தம்**: (Ideology)— அரசியல், சட்டவியல், விஞ்ஞானம், தத்துவவியல், சமய ஒழுக்க நெறி, அழகியல் ஆகிய துறைகளிலான கருத்துக்களது அமைப்பு. சித்தாந்தம் வர்க்கத் தன்மை வாய்ந்ததாகும். ஒரு சமுதாயத்தில் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் ஆதிக்கம் செலுத்துகிற வர்க்கத்தின் சித்தாந்தம்தான் அந்தச் சமுதாயத்தில் ஆதிக்க நிலையிலுள்ள சித்தாந்தமாய் இருக்க முடியும். சோவியத் யூனியனிலும் ஏனைய சோஷலிச நாடுகளிலும் ஆதிக்க நிலையிலுள்ள சித்தாந்தம் மார்க்சியம்-லெனினியம் ஆகும். இந்த சித்தாந்தம் தொழிலாளி வர்க்கத்தின், மற்றும் மனிதகுலத்தில் மிகப் பெரும்பான்மையோரது ஜீவாதார நலன்களைப் பிரதிபலிக்கிறது, கம்யூனிச வழியில் சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் பணிக்குத் துணை புரிகிறது. முதலாளித்துவ நாடுகளில் ஆதிக்க நிலையிலுள்ள சித்தாந்தம் முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கும் ஏகாதிபத்திய **முதலாளித்துவ** வர்க்கத்தின் சித்தாந்தமே ஆகும்.

**சித்தாந்த நீக்கம்**: (De-Ideologisation)—எந்த சித்தாந்தமும் விஞ்ஞானத் தன்மையதாகவோ, அறிவு வழியில் மதிப்புடையதாகவோ இருக்க முடியாதெனக் கூறும் முதலாளித்துவக் கருத்தோட்டம். முற்போக்குக் கருத்துக்களை எதிர்த்துப் போராடுவதற்காகவும், முக்கியமாய் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தை எதிர்த்துப் போராடுவதற்காகவும் இந்தக் கருத்தோட்டம் முனைப்புடன் உபயோகிக்கப்படுகிறது. சித்தாந்த நீக்கத்தின் காவலர்கள் நடைமுறையில் முதலாளித்துவ சித்தாந்தத்தை ஆதரிப்பவர்கள் ஆவர்.

**சித்தாந்தப் போராட்டம்**: (Ideological Struggle)—**சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும்** நடைபெறுகிற **வர்க்கப் போராட்டத்தின்** வடிவங்களில் ஒன்று. சோஷலிச சக்திகள் உலக அளவில் சித்தாந்தப் போட்டம் நடத்துகின்றன. இந்தப் போராட்டத்தின் மூலம் அவை சமூக வளர்ச்சி பற்றிய அறிவைப் பரப்புகின்றன; முதலாளித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துவத்தின் சுரண்டல் இயல்பினை அம்பலம் செய்து காட்டு
கின்றன; முதலாளித்துவம் ஒழிந்தே ஆகவேண்டும், வர
லாற்றில் இனி அதற்கு வேறு கதி ஏதும் இல்லை என்று தெளிவு
படுத்துகின்றன; கம்யூனிச சமுதாயத்தின் கட்டுமானியாகத்
தொழிலாளி வர்க்கத்துக்கு உள்ள வரலாற்றுப் பணியை
விளக்கிக் கூறுகின்றன. முதலாளித்துவ வர்க்கம் நடத்துகிற
சித்தாந்தப் போராட்டத்தின் நோக்கம் என்ன? முதலா
ளித்துவம் அழியாது நிரந்தரமாய் இருக்கக் கூடியது என்று
நிரூபிப்பதும், சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்
கான போராட்டத்திலிருந்து மக்கள் பெரும் திரளினரைத்
திசை திருப்பி விடுவதும், நம்பிக்கை வறட்சியையும்
ஐயுறவையும் பணம் பண்ணும் மனோபாவத்தையும் தனி
நபர் வாதத்தையும் வளர்த்திடுவதும், சோஷலிச நாடு
களது சாதனைகளை இழித்தும் பழித்தும் பிரசாரம் செய்
தலும், தொழிலாளி வர்க்க சித்தாந்தமாகிய மார்க்சிய-
லெனினியத்தை மதிப்பிழக்க வைப்பதும், சோஷலிச
நாடுகளது அரசாங்கங்கள் கடைப் பிடிக்கும் கொள்கை
குறித்து அதிருப்தி ஏற்படச் செய்தலும்தான் நோக்கம்.
சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் முதலாளித்துவ பிர
சாரம் சோஷலிச நாடுகளது மக்களிடம் குற்றங்காணும்
மனப்பான்மையையும் சோஷலிசச் சொத்துக்கள் குறித்துக்
கவலையற்ற போக்கையும் வளர்த்திடவும், சோஷலிசப்
பொருளாதார அரசியல் அமைப்புக்களது சாதனைகளையும்
அனுகூலங்களையும் தூற்றவும், பல்வேறு நாடுகளது மக்களை
ஒருவருக்கு எதிராய் ஒருவரைக் கிளப்பி விடவும்
முதலாளித்துவப் பிரசாரம் பிரயத்தனம் செய்கிறது.

## சீ

**சீர்திருத்தவாதம்:** (Reformism) —தொழிலாளி வர்க்க
இயக்கத்துள் செயல்படும் ஓர் அரசியல் போக்கு. இதன்
ஆதரவாளர்கள் முதலாளித்துவத்தின் சமூக, பொருளா
தார அடித்தளங்களைப் பாதிக்காத சின்னஞ்சிறு சீர்திருத்தங்



களை முதலாளித்துவ **ஜனநாயகத்தின்** கட்டுக்கோப்பை விட்டு
அகலாமல் அதனுள்ளிருந்தபடியே செய்வதன் மூலம்
முதலாளித்துவ அரசை "மக்கள் நல அரசாகவும்",
**முதலாளித்துவத்தை** "அனைவரும் சுபிட்சம் பெறத்தக்க"
சமுதாயமாகவும் மாற்றி விடலாமென முயலுகிறார்கள்.

**விஞ்ஞானக் கம்யூனிசத்துக்கு** எதிராய் முன்வைக்கப்படு
கிற தத்துவமாகிய "**ஜனநாயக சோஷலிசம்**" என்பதுதான்
தற்கால சீர்திருத்தவாதத்தின் அதிகார பூர்வமான
தத்துவமாகும். **வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சி,**
அரசியல் ஆட்சியதிகாரத்தை உழைப்பாளி மக்கள் கைப்
பற்றுவது ஆகியவற்றுக்கு எல்லாம் எந்த அவசியமும்
இல்லை என்று "ஜனநாயக சோஷலிசத்" தத்துவம் மறுக்
கிறது. சுரண்டுகிற வர்க்கமும் சுரண்டப்படுகின்ற வர்க்க
மும் ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்லி அது
வேண்டுகோள் விடுகிறது.

வாழ்க்கை நிலைமைகளை மேம்படச் செய்வதற்காக
உழைப்பாளி மக்கள் நடத்துகிற போராட்டத்தில் சீர்
திருத்தவாத அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட ஒரு பாத்திரம்
வகிக்கவே செய்கின்றன. சீர்திருத்தவாத சித்தாந்தத்தைக்
கம்யூனிஸ்டுகள் கண்டன விமர்சனம் செய்கிற அதே
நேரத்தில், சமாதானத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கு
மான போராட்டத்தில் ஒற்றுமையை வலியுறுத்தி அதற்காக
அவர்கள் பாடுபடுகிறார்கள்.

## சு

**சுரண்டல்:** (Exploitation)—தமது செல்வச் செழிப்புக்காக
ஏனையோரது உழைப்பை உபயோகித்துக் கொள்ளுதல்.
கூலி உழைப்பாளர்களது உழைப்பின் பலன்களை **உற்பத்திச்
சாதன** உடைமையாளர்கள் சுவீகரித்துக் கொள்வதுதான்
முதலாளித்துவச் சுரண்டல். உற்பத்திக் கருவிகள், சாதனங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களின் **தனியார் உடைமைதான்**, சுரண்டலுக்கு அடிப்படையாய் அமைகிறது.

**சுரண்டும் வர்க்கங்களை ஒழித்தல்** (Abolition of the Exploiting Classes) **சோஷலிசத்தைக்** கட்டியமைக்க இது ஓர் இன்றியமையாத நிபந்தனையாகும். முதலாளித்துவ சொத்துக்களாகிய நிலம், உற்பத்தி வசதிகள், கிடங்கு வசதிகள், போக்கு வரத்துக்கும் செய்தித் தொடர்புக்குமான சாதனங்கள் முதலானவற்றை—அதாவது, ஏனையோரது உழைப்பைச் சுரண்டுவதற்கு முதலாளிகளுக்குச் சாதனமாகப் பயன்படுகிறவை யாவற்றையும்—சில சமயம் நஷ்ட ஈடு தந்துங்கூட பறிமுதல் செய்வதன் மூலம் இந்த ஒழிப்பு நடத்தப்படுகிறது.

சோவியத் ருஷ்யாவில் சுரண்டும் வர்க்கங்களது ஒழிப்பு, அவ்வர்க்கங்களின் உறுப்பினர்கள் இந்தச் சம்பவம் குறித்து ஏற்ற போக்கினைக் கணக்கில் எடுத்து, அதற்குத் தக்கவாறே நடத்தப் பட்டது. தீ வைத்தல், சீர்குலைவு செய்தல், கொலைபுரிதல் போன்ற பெருங் கேடு விளைவிக்கும் குற்றங்களுக்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தவர்கள், அவற்றை நிறைவேற்றியவர்கள் முதலானோருக்குக் கண்டிப்பான முறையில் தண்டனை விதிக்கப் பட்டது. கிராமப் புறங்களில் இத்தகையோரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, இவர்களது குடும்பங்கள் தொலை தூரப் பிரதேசங்களுக்குக் கடத்தப் பட்டன. இவ்வாறன்றிக் குறைவான அளவுக்கே எதிர்ப்புக் காட்டியோர் அவர்களது குடும்பங்களுடன் தொலைப் பிரதேசங்களில் குடியேறித் தமது வாழ்வைப் புனரமைத்துக் கொள்ள உதவி அளிக்கப் பட்டது. கிராமாந்தர முதலாளித்துவ வர்க்கத்தாரில் மிகப் பெரும்பாலோர் அதே பிராந்தியத்தின் எல்லைக்குள் பிற பகுதிகளில் குடியேற்றப்பட்டு, அங்கே புது வாழ்வு அமைத்துக் கொள்ளத் தேவையான குறைந்த பட்சப் பிழைப்புச் சாதனங்கள் அவர்களுக்குத் தரப்பட்டன. இவ்வாறு முன்னாள் சுரண்டலாளர்கள் அரசுக்குச் சொந்தமான நிலையங்களிலும் இரும்பல்லாத உலோகத் தொழிலிலும்



தங்க வயல்களிலும் நிலக்கரிச் சுரங்கங்களிலும் மரத் தொழில்களிலும் மீனவர், கைவினைஞர் சங்கங்களிலும் சமூகத்துக்குப் பயன் தரும் வேலைகளில் ஈடுபடுமாறு கட்டாயப் படுத்தப் பட்டனர். முன்னாள் சுரண்டலாளர்கள் உழைப்பின் மூலம் மறு கல்வி பெற்று சோவியத் நாட்டின் முழுநிறைக் குடிமக்களாய் மாறினர்.

ஏனைய சோஷலிச நாடுகளில் சுரண்டும் வர்க்கங்களது ஒழிப்பு இதனினும் பன்மடங்கு கடுமை குறைவான வடிவங்களை ஏற்று நடந்தேறியது.

## செ

**செலாவணி நெருக்கடி:** (Currency Crisis)—முதலாளித்துவத்தின் செலாவணி, கடன் வசதி அமைப்பில் ஏற்படுகிற நெருக்கடி. **முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியில்** செலாவணி நெருக்கடியும் ஓர் அங்கமாகும். செலாவணி நெருக்கடி பிரதானமாகப் பின்வரும் விதத்தில் வெளிப்படுகிறது: தங்க நாணயத் திட்டம் (Gold standard)—அதாவது செலாவணி நோட்டுகளாகிய காகிதப் பணம் தடையின்றித் தங்கமாக மாற்றப்படலாம் என்கிற ஏற்பாடு—கைவிடப்பட்டுப் பணவீக்கம் (Inflation) கடுமையாகும் வண்ணம் காகிதப் பணப் புழக்கம் வெகுவாய் அதிகரித்தல். உள்நாட்டுச் செலாவணி நெருக்கடி என்பது முதலாளித்துவ உலக அளவில் அல்லாமல் குறிப்பிட்ட ஒரு முதலாளித்துவ நாட்டின் செலாவணி மட்டுக்குமான நெருக்கடி. இந்நெருக்கடியும் நீண்ட காலத்துக்கு நீடிக்கக் கூடும் என்றாலும், இது தற்காலிகத் தன்மை வாய்ந்ததே ஆகும்.

## சொ

**சொந்த சொத்து, சோஷலிச சமுதாயத்தில்:** (Personal Property under Socialism)—உழைத்துப் பெறுகின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருமானங்களின் வடிவிலும், சேமிப்புக்களின் வடிவிலும், சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற நுகர்வுப் பண்டங்களின் வடிவிலும், வீட்டிலும் சொந்த உபயோகத்துக்கான சொந்தக் கொல்லை நிலங்களிலும் பயன்படுத்துவதற்குரிய குறிப்பிட்ட சில உற்பத்திச் சாதனங்களின் வடிவிலும் சோஷலிச சமுதாய உறுப்பினர்கள் வசமுள்ள தனிப்பட்ட சொந்த உடைமைகள்.

சோஷலிச சமுதாயத்தில், சமூகத்துக்குப் பயன் தரும் உழைப்பில் நேரடியாக அவரவரும் பங்கெடுத்துக் கொள்வது தான் சொந்த சொத்துக்கான ஆதாரமாகும். இச் சமுதாயத்தில் ஆலைகளும் நிலமும் மிகப் பெருவாரியான வீடுகளும் இன்ன பிறவுமாகிய உற்பத்திச் சாதனங்கள் பொதுச் சொத்துக்களாய் இருப்பதால், சொந்த சொத்து மனிதனை மனிதன் சுரண்டுவதற்கான சாதனம் ஆக முடிவதில்லை. சொந்த சொத்து உடையவராய் இருப்பதற்கான உரிமையும் இச்சொத்தை வாரிசு வழியில் பெறுவதற்கான உரிமையும் சோஷலிச அரசின் சட்டங்கள் மூலம் பாதுகாக்கப் படுகின்றன.

## சோ

**"சோவியத் அபாயம்"**: ("Soviet Threat")—முதலாளித்துவ நாடுகளுக்கு சோவியத் யூனியனிடமிருந்து ஏதோ பெரிய அபாயம் ஏற்படுவதாய் மக்களை நம்பவைக்க வேண்டுமென்று சோவியத்-எதிர்ப்புப் பிரசாரத்தால் பரப்பப்பட்டு வருகிற ஒரு கட்டுக்கதை. **இராணுவ-தொழில் துறை இணைவின்** அதிபர்களுக்குக் கொள்ளை கொள்ளையாய் இலாபம் கிடைக்கச் செய்யும் **ஆயுத உற்பத்திப் போட்டி** நியாயமானதே என்று பலரையும் நம்பவைப்பதற்காக **ஏகாதிபத்தியத்தின்** ஆக்கிரமிப்பு சக்திகள் இந்த அபத்தமான பொய்க் கூற்றைப் பரப்பி வருகின்றன. உண்மையில் சோவியத் யூனியன் பிற நாடுகளது பிரதேசம் எதற்கும் உரிமை கொண்டாடுவதில்லை, அது யாரையும் அச்சுறுத்துவ



தில்லை, எந்நாட்டின் மீதும் அதற்குத் தாக்குதல் தொடுக்கும் உத்தேசம் இல்லை. **வார்சா ஒப்பந்த** நாடுகள். **நேட்டோ** நாடுகள் ஆகிய இவை இரண்டின் ஆயுத தளவாடங்களும் ஆயுதப் படைகளும் ஏறத்தாழ ஒன்றுக்கு ஒன்று சமமாகவே உள்ளன. எதிர்த்தரப்பின் மீது முதலில் அணு ஆயுதங்களைப் பிரயோகிப்பதில்லை என்று கூட்டாக வாக்குறுதி அளிப்போமென சோவியத் யூனியன் முன் வைக்கும் பிரேரணைகளை ஏற்க **நேட்டோ** நாடுகள் பிடிவாதமாய் மறுத்து வருகின்றன. சோவியத் யூனியன் தனது இராணுவச் செலவுகளை அதிகரிக்காதது மட்டுமின்றி, குறைத்துங்கூட வருகிறது. ஆனல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ பட்ஜெட் இடையறாது அதிகரித்துச் செல்கிறது. 1971-75 ஆம் ஆண்டுகளில் **நேட்டோ** நாடுகளது இராணுவச் செலவுகள் இருமடங்குக்கும் மேல் அதிகரித்துள்ளன. சோவியத் யூனியனது எல்லைகளிலும் ஏனைய சோஷலிச நாடுகளது எல்லைகளிலும் அமெரிக்க ஐக்கிய நாடு டஜன் கணக்கில் இராணுவத் தளங்களை அமைத்திருக்கிறது. அணு ஆயுதங்களையும் நெடுந் தொலைவு சென்று தாக்கும் ஆயுதங்களையும் தாங்கிய விமானங்களையும் நீர் மூழ்கிக் கப்பல்களையும் இத்தளங்களில் கொண்டு வந்து வைத்திருக்கிறது.

சோவியத் கூட்டரசு இதற்கு மாறாக, சர்வதேச உறவுகளில் வன்முறையைப் பிரயோகிக்கலாகாது என்று விதி செய்தும், வெகுஜன நாசம் விளைவிக்கும் புதுரக ஆயுதங்களையும் புதுரக ஆயுத ஏற்பாடுகளையும் வளர்த்திடுவதற்குத் தடை விதித்தும் உலக உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்றும், மத்தியதரைக் கடலில் இருந்து சோவியத், அமெரிக்க அணு ஆயுதக் கப்பல்களையும் நீர் மூழ்கிக் கப்பல்களையும் திருப்பியழைத்துக் கொள்வது குறித்தும், அணு ஆயுத சோதனைகளுக்கு முழுமையாகவும் உலக அளவிலும் தடை விதிப்பது குறித்தும் ஒப்பந்தங்கள் முடித்துக் கொள்ளலாம் என்றும் முன்மொழிந்து வந்திருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றும் பல சமாதான முன்முயற்சிகளையும் அது எடுத்துள்ளது. **படைக்கலக் குறைப்புக்காகவும்**, தேசங்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது முதலாய் சோவியத் கூட்டரசு நூற்றுக்கும் அதிகமான பிரேரணைகளை முன்மொழிந்திருக்கிறது. ஆனால் படைக்கலக் குறைப்பின் பகைவர்கள் பல்வேறு போலிக் காரணங்களின் பேரில் இவற்றை நிராகரித்தே வந்திருக்கிறார்கள்.

**சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் (சோவியத் ஒன்றியம்):** (Union of Soviet Socialist Republics-USSR)—மனிதகுல வரலாற்றிலே முதலாவதான அனைத்து மக்களது சோஷலிச **அரசு**. தொழிலாளர்கள், விவசாயிகள், **அறிவுத்துறையினர்** (intelligentsia), மற்றும் சோவியத் நாட்டின் எல்லாத் தேசங்கள், தேசிய இனங்களது உழைப்பாளி மக்கள் ஆகிய அனைவரது சித்தத்தையும் நலன்களையும் இவ்வரசு பிரதிபலிக்கிறது. ஐரோப்பா, ஆசியா ஆகிய இரு கண்டங்களிலும் விரிந்துள்ள 2,24,00,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள பிரதேசத்தில் சோவியத் ஒன்றியம் அமைந்திருக்கிறது. சர்வசுதந்திரக் குடியரசுகளாகிய ருஷ்ய, உக்ரேனிய, பைலோருஷ்ய, டிரான்ஸ்காக்கேசிய சோவியத் குடியரசுகள் தாமே விரும்பி ஒரே சோஷலிச அரசாக இணைந்ததன் மூலம் 1922 டிசம்பர் 30-ல் சோவியத் ஒன்றியம் அமைக்கப்பட்டது. இன்று, சோவியத் ஒன்றியத்தில் மொத்தம் 26,24,00,000 மக்களைக் கொண்ட 15 தேசிய ஒன்றியக் குடியரசுகள் உள்ளன. மாஸ்கோ தான் தலைநகர். சோவியத் ஒன்றியத்தில் அனைத்து அதிகாரமும் மக்களுக்கே உரியது. சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அடிப்படை, மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள் (பஞ்சாயத்துகள்) ஆகும். இந்த சோவியத்துகள் மூலம் சோவியத் மக்கள் ஆட்சியதிகாரம் செலுத்துகிறார்கள். சோவியத் சமுதாயத்தின் தலைமை சக்தியாகவும், வழிகாட்டும் சக்தியாகவும், அதன்



அரசியல் அமைப்பின், எல்லா அரசு மற்றும் பொது நிறுவனங்களின் மையக் கூறாகவும் இருப்பது **சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி** ஆகும்.

சோவியத் ஒன்றியத்தின் பொருளாதார அமைப்புக்கு அடிப்படையாய் இருப்பது **உற்பத்தி சக்திகளது பொது உடைமை** ஆகும். இந்தப் பொது உடைமை, அரசாங்கச் சொத்து (அனைத்து மக்களுக்கும் சொந்தமான சொத்து) கூட்டுறவுச் சொத்து (கூட்டுப் பண்ணைகளுக்குச் சொந்தமான சொத்து) ஆகிய இவற்றின் வடிவில் அமைந்தது. உற்பத்திச் சக்திகளது இந்தப் பொது உடைமை மனிதனை மனிதன் **சுரண்டுவதற்கு** இடமில்லாதபடிச் செய்கிறது.

பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான அரசுத் திட்டங்களின் அடிப்படையில் **தேசப் பொருளாதாரம்** நிர்வகிக்கப்படுகிறது. சமூகப் பொருளுற்பத்தியின் தலையாய நோக்கம் மக்களது வளர்ந்து பெருகும் பொருளாயத, கலாசார, அறிவுத்துறைத் தேவைகளை எவ்வளவு முடியுமோ அந்த முழு அளவுக்குப் பூர்த்தி செய்வது தான். அவரவரும் சொந்த சொத்துக்கு உடைமையாளராய் இருப்பதற்கும் வாரிசு வழியில் பெறுவதற்குமான உரிமை (அவரவரது சொந்த உழைப்பு தான் சொந்த சொத்துக்கான ஒரே ஆதாரம்) சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியால் வகுக்கப்பட்டு அனைத்து மக்களது சித்தத்தையும் பிரதிபலிக்கிற கொள்கையாகிய, சமாதானத்துக்கும் மாறுபட்ட சமூக அமைப்புக்களையுடைய அரசுகளது சமாதான சகவாழ்வுக்குமான கொள்கையை சோவியத் அரசு கடைப்பிடிக்கிறது. சோவியத் ஒன்றியத்தில் **யுத்தப்** பிரசாரத்துக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

**சோவியத் மக்களது சித்தாந்த, அரசியல் ஒற்றுமை:** (Ideological and Political Unity of the Soviet People)—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோவியத் நாட்டின் **தொழிலாளி வர்க்கத்தினர்**, விவசாயிகள், **அறிவுத்துறையோர்** ஆகியோர் பொருளாதார, சமூக, அரசியல், சித்தாந்த, ஒழுக்கநெறித் துறைகளில் ஒத்த கருத்தோட்டங்களும் ஒத்த நலன்களும் கொண்டோராய் இருத்தல், **உற்பத்திச் சாதனங்கள்**, கருவிகளின் **பொது உடைமையின்** அடிப்படையிலும், சோவியத் அரசின் லெனினிய தேசிய இனக் கொள்கையின் அடிப்படையிலும் அமைந்தவையே சோவியத் மக்களது இந்த ஒத்த கருத்தோட்டங்களும் ஒத்த நலன்களும்.

சோவியத் அரசு கடைப்பிடிக்கும் லெனினிய தேசிய இனக் கொள்கை எல்லா தேசங்கள், தேசிய இனங்களது, மெய்யான ஒற்றுமையையும் அவற்றின் சுயநிர்ணய உரிமையையும் உறுதி செய்கிறது; எல்லாத் தேசிய தனியுரிமைகளும் ஒழிக்கப்படுவதற்கும் தேசியச் சிறுபான்மையினரும் இனக்குழுவினரும் தங்கு தடையின்றி வளர்ச்சி காண்பதற்கும் வகை செய்கிறது.

**சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி**: (Communist Party of the Soviet Union—CPSU)—**தொழிலாளி வர்க்கத்தின்** அனைத்து சோவியத் மக்களது சமூக, அரசியல் நிறுவனத்தின் மிக உயர்ந்த வடிவம்; அவர்களது சித்தாந்த அரசியல் முன்னணிப் படை, சோவியத் சமுதாயத்தின் தலைமையானதும் வழிகாட்டுவதுமாகிய சக்தி, சோவியத் அரசியல் அமைப்புக்கும் எல்லா அரசாங்க, பொது நிறுவனங்களுக்கு மையக்கூறாக அமைந்தது. தொழிலாளி வர்க்கத்தினர், கூட்டுப் பண்ணை விவசாயிகள், **அறிவுத்துறையோர்** ஆகியோரைச் சேர்ந்த மிகுந்த அரசியல் உணர்வு வாய்ந்த முன்னணிப் பகுதிகளை அவர்களது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் இக்கட்சி ஒன்றுபடச் செய்கிறது. விளதீமிர் லெனின் தான் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மூலகர்த்தரும் ஒழுங்கமைப்பாளரும் ஆவார்.

ஆரம்பத்தில், 1898-ல் நடைபெற்ற அதன் முதலாவது காங்கிரசுக்குப் பிறகு இக்கட்சி ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி என்றழைக்கப்பட்டது. அதன் இரண்



டாவது காங்கிரசில் (1903) அதனுள் இரு போக்குகள் எழுந்தன: **போல்ஷிவிக்குகள்** (புரட்சிகர மார்க்சியவாதிகள்) **மென்ஷிவிக்குகள்** (சந்தர்ப்பவாதிகள்). "அரசியல் சிந்தனைப் போக்காகவும் அரசியல் கட்சியாகவும் போல்ஷிவிசமானது 1903 முதலாய் இருந்து வந்திருக்கிறது" (வி.இ. லெனின், **நூல் திரட்டு**, தொகுதி 31, பக்கம் 24). 1917-18-ல் அது ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி (போல்ஷிவிக்குகள்) என்று அழைக்கப்பட்டது. 1917-ல் நடைபெற்ற அதன் 7-வது காங்கிரசில் அதற்கு ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்குகள்) —ரு.க.க. (போ) என்று பெயர் சூட்டப்பட்டது. 1925-ல் கூடிய 14ஆவது காங்கிரஸ் அனைத்து யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்குகள்) — அ.யூ.க.க. (போ) — என்றும் 1952-ல் கூடிய 19 ஆவது காங்கிரஸ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி என்றும்—சி.பி.எஸ். யூ.—பெயரிட்டன.

கட்சியின் முதலாவது வேலைத் திட்டம் இரண்டாவது காங்கிரசில் ஏற்கப்பட்டது. ருஷ்யாவில் **சோஷலிசப் புரட்சியை** நடைபெறச் செய்வதும், **பாட்டாளி வர்க்கத்தின்** சர்வாதிகாரத்தை நிறுவுவதுமே நோக்கம் என்று அந்த வேலைத் திட்டம் கூறியது. 1917-ல் **மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி** நடைபெற்ற பிறகு, கட்சியின் எட்டாவது காங்கிரஸ் (1919) ஒரு புதிய வேலைத் திட்டத்தை, சோஷலிசத்தைக் கட்டியமைக்கும் வேலைத் திட்டத்தை ஏற்றது. இந்த வேலைத் திட்டம் நிறைவேற்றப்பட்டதும் 1961-ல் கூடிய 22 ஆவது காங்கிரஸ் மூன்றாவது வேலைத் திட்டம் ஒன்றை, சோவியத் யூனியனில் கம்யூனிசத்தைக் கட்டியமைக்கும் வேலைத் திட்டத்தை ஏற்றது.

எதேச்சாதிகாரத்தையும் முதலாளித்துவ அமைப்பையும் எதிர்த்துப் போராடுமாறு ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தையும் உழைக்கும் விவசாயிகளையும் கட்சி தட்டியெழுப்பிற்று. இந்தப் போராட்டம் 1917-ல் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியிலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் அமைக்கப்படுவதிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவடைந்தது. உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட **உள்நாட்டுப் போரிலிருந்தும்,** அன்னிய அரசுகளது இராணுவத் தலையீட்டிலிருந்தும் கட்சியின் தலைமையில் சோவியத் தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுடன் கூட்டணி நிறுவிக் கொண்டு வெற்றி வாகையுடன் வெளிப்பட்டது. சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்காக உழைப்பாளி மக்களைக் கட்சி ஒழுங்கமைப்பு பெறச் செய்தது. கட்சியின் தலைமையில், சுரண்டும் வர்க்கங்களை ஒழிக்கும் பணி நிறைவேற்றப்பட்டது, நாட்டைத் **தொழில் மயமாக்குதலும், விவசாயத்தைக் கூட்டுத்துவமாக்குதலும், கலாசாரப் புரட்சியும்,** வெற்றிகரமாய் நடந்தேறின. சோவியத் மக்களது சமூக, அரசியல், சித்தாந்த ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது. 1941-45-ல் மாபெரும் தேசபக்தப் போரில் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்து சோவியத் மக்கள் வெற்றிவாகை சூடினர். வளர்ச்சி பெற்ற சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைத்த பின் சோவியத் மக்கள் இப்பொழுது கம்யூனிசத்தைக் கட்டியமைக்கும் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி அதன் செயற்பாடுகளில் மார்க்சியம்-லெனினியத்தால் வழிகாட்டப்படுகிறது. கூட்டுத் தலைமை, **ஜனநாயக மையத்துவம்,** கம்யூனிஸ்டுகளது செயல் திறனும் முன் முயற்சியும், விமர்சனமும் சுய விமர்சனமும் ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அது செயல்படுகிறது. சோவியத் மக்களது சர்வாம்ச வளர்ச்சியையும், அவர்களது வளர்ந்து பெருகும் பொருளாயத, கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் தனக்குரிய முதற்பெரும் பணியாகக் கொண்டு அது பாடுபடுகிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை வளர்த்துச் செல்வதன் மூலமும், பரப்புவதன் மூலமும், சமுதாய வளர்ச்சிக்கான வாய்ப்புகளை விஞ்ஞான பூர்வமாக



ஆராய்ந்து அறிவதன் மூலமும், கட்சி தீர்மானிக்கும் முடிவுகள் எல்லா அரசாங்க நிறுவனங்களிலும் பொது நிறுவனங்களிலும் செயல்படுத்தப்படுமாறு உறுதி செய்ய வல்ல ஊழியர்களைத் தேர்வு செய்து நியமிப்பதன் மூலம் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி அதன் வழிகாட்டும் பணியையும், தலைமை தாங்கும் பணியையும் நிறைவேற்றுகிறது. சோவியத் யூனியனது தேசப் பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கை நெறிகள் கட்சியின் வழி காட்டுதலுடன் தான் வகுத்தளிக்கப்படுகின்றன. அரசாங்க நிறுவனங்களுக்கும் பொது நிறுவனங்களுக்குமுரிய இடத்தில் கட்சி தன்னை அமர்த்திக் கொண்டு விடவில்லை. அவற்றிலுள்ள கட்சிக் குழுக்களின் மூலம் அது தனது கொள்கைகள் செயல்படுத்தப்படுமாறு உறுதி செய்து கொள்கிறது.

கட்சி அதன் செயற்பாடுகளில் அதன் வேலைத்திட்டத்தாலும் விதிகளாலும் வழிகாட்டப் படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தரம் கூட்டப்படும் கட்சிக் காங்கிரசும், மற்றும் கட்சியின் மத்தியக் கமிட்டியும்தான் கட்சியினது தலைமையான உறுப்புகள்.

1977 ஜூலை 1-ல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியில் 1,62,03,446 உறுப்பினர்களும் கூட்டு உறுப்பினர்களும் இருந்தனர். உறுப்பினர்களில் பாதிக்கு மேற்பட்டோர் (55. 6 சதவீதம்) தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆவர்.

சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்திலிருந்து பிரிக்க முடியாதபடி அதில் ஓர் அங்கமாய் இருக்கும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி இவ்வியக்கத்தை வலுவாக்குவதற்காக அயராது பாடுபடுகிறது. சர்வதேச அரங்கில் அது ஏனைய சோஷலிச நாடுகளுடன் நட்புறவும் ஒத்துழைப்பும் மேலும் உறுதி பெறுவதையும் வளரும் நாடுகளுடன் ஒத்துழைப்பு வலுவடைவதையும், பரஸ்பரம் அனுகூலமான அடிப்படையில் முதலாளித்துவ அரசுகளுடன் உறவுகள் வளர்க்கப்படுதலையும் ஆதரிக்கிறது. சமாதானத்துக்காகவும் தேசங்களது சுதந்திரத்துக்காககவும் சுயேச்சைக்காகவும் பாடுபடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறது. 1971-ல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரஸ் சமாதான வேலைத்திட்டத்தை வகுத்து அளித்தது. இந்த வேலைத்திட்டத்தின் தொடர்ச்சிதான் ''சமாதானத்துக்காகவும் சர்வதேச ஒத்துழைப்புக்காகவும் மற்றும் தேசங்களது சுதந்திரத்துக்காகவும் சுயேச்சைக் காகவும் மேலும் தொடர்ந்து போராடுவதற்காக'' 1976-ல் 25 ஆவது காங்கிரஸ் ஏற்ற வேலைத் திட்டம். இவ்வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டதன் விளைவாய், **பதற்றத் தளர்வு** சர்வதேச உறவுகளில் மிகவும் முனைப்பான போக்கு ஆகியுள்ளது.

**சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்:** (Supreme Soviet of the USSR)—சோவியத் கூட்டரசில் அரசு அதிகாரத்துக்கு உரிய உச்ச உறுப்பு. சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிக்கப் பட்டுள்ளபடி சோவியத் கூட்டரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட எல்லா விவகாரங்கள் குறித்தும் தீர்மானித்துச் செயல்பட உரிமை படைத்தது. இது ஒன்றிய (அல்லது யூனியன்) சோவியத், தேசிய இனங்களது சோவியத் ஆகிய இரு அவைகளைக் கொண்டது. இரு அவைகளும் சம உரிமைகள் படைத்தவை, சம எண்ணிக்கையிலான பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டவை.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் 18 வயதான சோவியத் குடிமக்கள் எல்லோராலும் (சட்டப்படி புத்தி சுவாதீனம் இல்லாதவராகக் குறிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து ஏனைய எல்லோராலும்) சகலருக்குமான சமத்துவ, நேரடி வாக்குரிமையின் அடிப்படையில் இரகசிய வாக்களிப்பின் மூலம் ஐந்தாண்டுக் காலப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் படுகிறது. எந்தப் பிரஜையும் பிரதிநிதியாகத் தேர்ந் தெடுக்கப்பட தகுதியுடையவராக வேண்டுமாயின் அவர் 21 வயதானவராய் இருக்க வேண்டும்.

1979 மார்ச்சில் தேர்ந்தெடுக்கப்பட்ட சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகளில் 522 பேர் தொழிலாளர்கள், 244 பேர் விவசாயிகள். அதாவது



மொத்தம் 1,500 பிரதிநிதிகளில் 51.1 சதவீதத்தினர் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆவர். ஏனையோர் அலுவலக ஊழியர்களும், கட்சி நிர்வாக ஊழியர்களும், குடிமுறை ஊழியர்களும், மற்றும் விஞ்ஞானம், கலாசாரம் பொது சுகாதாரம் போன்ற பற்பல துறைகளையும் சேர்ந்த பணியாளர்களும் ஆவர். கம்யூனிஸ்டுகளையும் கட்சி சார் பில்லாதோரையும் கொண்டு நாடு தழுவிய அளவில் அமைந்த கூட்டின் பிரதிநிதிகளாகிய இவர்கள் எல்லோருமே தொழிலாளி அல்லது விவசாயியின் பின்னணி கொண்டவர்களாவர்.

**சோஷலிசம்:** (Socialism)— முதலாளித்துவத்துக்குப் பதிலாய் வந்தமையும் சமூக அமைப்பு, கம்யூனிசத்தின் முதற் கட்டம். சோஷலிசத்தில் சுரண்டும் **வர்க்கங்களும்** மனிதனை மனிதன் **சுரண்டுவதும்** இல்லாதொழிகின்றன; **உற்பத்தி சாதனங்களில் தனியார் உடைமை** மறைந்து **பொது உடைமை** உண்டாகிறது. அனைத்து மக்களின் நலன் களுக்கு உகந்த முறையில் **தேசப் பொருளாதாரம்** திட்ட மிடப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது; ஆட்சியதிகாரம் உழைப் பாளி மக்களுக்கு உரியதாகி விடுகிறது; தேசத்தினுள் பகைமையும் பூசலும் இல்லாது மறைந்து போய், தேசிய இனங்களிடையே சோதர நட்புக்கும் ஒத்துழைப்புக்குமான உறவுகள் மலருகின்றன. பொருளாதார **நெருக்கடிகளுக்கும் வேலையின்மைக்கும்** வறுமைப் பிணிக்கும் சோஷலிசம் என்றென்றுக்குமாய் முடிவுகட்டி, ''ஒவ்வொருவரிடமிருந் தும் அவரது ஆற்றலுக்கு ஏற்ப ஒவ்வொருவருக்கும் அவரது வேலைக்கு ஏற்ப'' என்கிற கோட்பாட்டைச் செயல்படுத்துகிறது. பொது உடைமையானது இலவச மருத்துவ உதவியையும், எல்லா மட்டங்களிலும் இலவசக் கல்வியையும் முதிய வயது காலத்திலும் ஏலாத காலத்திலும் சமுதாயத்தின் செலவிலான பராமரிப்பையும், குறைந்த வீட்டு வாடகைகளையும் (1928 முதலாய் சோவியத் நாட்டில் மாற்றமின்றி இருந்து வருகின்றன), நிலையான விலைகளையும், இடையறுது அதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கரித்துச் செல்லும் கூலி விகிதங்களையும் சம்பளங்களையும் சாத்தியமாக்கியுள்ளது. சோஷலிசம் இன்று உலக அமைப்பாய் வளர்ந்து வரலாற்றுப் போக்கின்மீது தீர்மானகரமான தாக்கம் உண்டாக்கி, உலகெங்கும் சோஷலிசமும் கம்யூனிசமும் வெற்றி பெறுவதற்கான பாதையில் மனித குலத்தை இட்டுச் செல்கிறது.

**சோஷலிசத்தின் அனுகூலங்கள்:** (Advantages of Socialism)—முதலாளித்துவத்துக்கு இல்லாத பல அனுகூலங்களை **சோஷலிசம்** பெற்றிருக்கிறது. முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் சோஷலிசம் மேன்மை வாய்ந்த சமூக ஒழுங்கமைப்பு வடிவமாய் இருப்பதுதான் சோஷலிசத்தின் அனுகூலங்களுக்கான காரணம்.

சோஷலிசத்தின் பிரதான அனுகூலங்கள் வருமாறு:

சமூக, பொருளாதாரத் துறைகளில்: மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு இடம் இல்லாமை (**உற்பத்திச் சாதனங்களில்** நிலவும் பொது உடைமை இதை உறுதி செய்கிறது); சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களது பொருளாயத, ஆன்மிகத் தேவைகளைக் கூடுமான முழு அளவுக்கு பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் நாடு தழுவிய அளவில் அரசாங்கத் திட்டமிட்டு வளர்க்கப்படும் தேசப் பொருளாதாரம்; பொருளாதார **நெருக்கடிகளும், பண வீக்கமும் வேலையின்மையும்** இல்லாதொழிவதோடு, **கூலி விகிதங்களும், ஓய்வூதியங்களும்,** உதவித் தொகைகளும் மான்யங்களும் இதர உபகாரங்களும் தொடர்ந்து மேலும் மேலும் அதிகரித்துச் செல்லுதல்.

சமூக, அரசியல் துறைகளில்: தொழிலாளர்கள், விவசாயிகள், மக்களது **அறிவுத் துறையினர்** ஆகியோரது ஒத்த நலன்களையும் ஒருமித்த **உலகக் கண்ணோட்டத்தையும்** அடிப்படையாகக் கொண்டு சோஷலிச சமுதாய உறுப்பினர்களிடையே உருவாகும் ஒழுக்கநெறி, அரசியல், சித்தாந்த ஒற்றுமை; சோஷலிச **ஜனநாயகம்** ஆழமாகவும் விரிவாகவும் வளர்ந்து தனிநபரது வளர்ச்சிக்கான மெய்யான சுதந்திரமும், மற்றும் மனித உரிமைகளும், மெய்யான மக்கள் அரசாட்சியும் உழைப்பாளி மக்கள் அவர்களது அரசின் நிர்வாகத்தில் முனைப்புடன் பங்கு கொள்வதற்கான வாய்ப்புகளும் உறுதி செய்யப்படுதல்; **யுத்தத்தில்** நாட்டங்கொண்ட ஆட்களோ, கோஷ்டிகளோ இல்லாதிருத்தல்.



**சோஷலிச இணைப்பு:** (Socialist Integration)—**பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலில்** (சி.எம்.இ.ஏ.) ஒன்றுபட்டிருக்கும் சோஷலிசநாடுகளது பொருளாதார வாழ்வு சர்வதேசியமாகி வருகிற நிகழ்ச்சிப் போக்கு. திட்டமிட்ட முறையில் இந் நாடுகள் இந்த நிகழ்ச்சிப் போக்கை வழி நடத்துகின்றன. இந்நாடுகளது பொருளாதாரங்கள் ஒன்றையொன்று நெருங்கி வந்து மிகவும் பயன்திறன் வாய்ந்த கட்டமைப்பாய் இணைவதிலும், இவற்றின் பொருளாதார வளர்ச்சி நிலைகள் ஏற்றத்தாழ்வின்றி சீராவதிலும், நிலையான பொருளாதார பிணைப்புக்களும் விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளுற்பத்தி ஒத்துழைப்பும் நிறுவப்படுவதிலும், சி.எம்.இ.ஏ. நாடுகளது சர்வதேசச் சந்தை உறுதி பெறுவதிலும், பண்ட-பண உறவுகளாலாகிய அமைப்பு வளர்ச்சியடைவதிலும் மேம்படுவதிலும் இந் நிகழ்ச்சிப் போக்கைக் காணலாம். அரசுகளின் சர்வ சுதந்திரத்தை மதித்து நடத்தல், உள் விவகாரங்களில் தலையிடாமை, முழு நிறை சமத்துவம், பரஸ்பர ஆதாயம், தோழமை உணர்வு கொண்ட பரஸ்பர உதவி ஆகிய கோட்பாடுகளை அனுசரித்து சோஷலிச இணைப்பு வளர்ந்து வருகிறது. இந் நாடுகளது மக்களின் பொருளாயத, கலாசாரத் தரங்களை உயர்த்துவதே இந்த இணைப்பின் பிரதான குறிக்கோள். அந்தந்த நாட்டின் தேசிய நலன்களை சோஷலிசக் கூட்டுக் குடும்பம் அனைத்தின் பொது நலன்களுடன் இசைவுடன் இணையச் செய்வது இந்த சோஷலிச இணைப்பின் முக்கியமான இயல்பாகும்.

**சோஷலிசத் திசையமைவு** (Socialist Orientation)—**சோஷலிசத்தின்** அடித்தளங்களைக் கட்டியமைப்பதற்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவையான நிலைமைகளைத் தோற்றுவிக்கும் நோக்கத்துடன் சில **வளரும் நாடுகள்** கடைப்பிடிக்கும் கொள்கை. இந்தக் கொள்கை விரைவான பொருளாதார, கலாசார முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது; சமூக ஏற்றத்தாழ்வையும் வறுமைப் பிணியையும் **வேலையின்மையையும்** அகற்றுவதற்கும், எல்லா விவசாயிகளுக்கும் நிலம் கிடைப்பதற்கும், சொந்த விருப்பத்தின் பேரில் விவசாயிகளது கூட்டுறவுகள் நிறுவப்படுவதற்கும், கலாசாரத்தின் நன்மைகள் உழைப்பாளி மக்கள் யாவருக்கும் கிட்டும்படிச் செய்வதற்கும் வேண்டிய அடிப்படையை அமைத்திருக்கிறது.

**சோஷலிச நேசப் போட்டி:** (Socialist Emulation)—சோஷலிச சமுதாயத்தில் உழைப்பாளி மக்களது ஆக்க முன்முயற்சி வெளிப்படுத்தப்படும் பிரதான வடிவங்களில் ஒன்று. உற்பத்தியைப் பெருகச் செய்வதும், அதன் தரத்தை மேம்படுத்துவதும், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதும், தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதும் சோஷலிச நேசப் போட்டியின் நோக்கங்கள் ஆகும். சோஷலிச நேசப் போட்டி இயக்கத்தில் பங்கு கொள்வோர் தமது வேலைகள் மிகச் சிறந்த பலன்களை அளிக்கும்படி உறுதி செய்வோமென தாமே மனமுவந்து சபதமேற்கிறார்கள். இந்த நேசப் போட்டி இயக்கம் **சுரண்டலிலிருந்து** விடுபட்ட உழைப்பாளி மக்கள் கம்யூனிசக் கல்வி பயலுவதற்கும், உற்பத்தியின் நிர்வாகத்தில் அவர்கள் பங்கு பெறுவதற்கும் ஒரு வழியாகும். சோஷலிச நேசப் போட்டிக்கு லெனின் வகுத்தளித்த கோட்பாடுகளாவன: பகிரங்கத் தன்மை வாய்ந்ததாய் இருத்தல், பலா பலன்கள் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியனவாய் இருத்தல், முன்னேற்றகரமான அனுபவத்தை நடைமுறையில் பயன்படுத்துவதற்குத் தேவையான நிலைமைகளை உண்டாக்குதல், தோழமை உணர்வுடன் பரஸ்பரம் உதவிக் கொள்ளுதல்.

1950 ஆம் ஆண்டுகளின் கடைப் பகுதியில் சோவியத் நாட்டில் ஒரு புதுவகை நேசப் போட்டி இயக்கம்—



உழைப்பின் பால் கம்யூனிச மனப்பான்மை வளர்வதற்கான இயக்கம்—எழுந்தது. இந்த இயக்கத்தில் பங்கு கொள்வோர் ''கம்யூனிச வேலைக் குழு'', ''முன்னோடித் தொழிலாளர்கள்'' என்னும் பட்டங்கள் பெறுவதற்காகப் போட்டியிடுகிறார்கள். ஏனைய சோஷலிச நாடுகளிலும் பல்வேறு வடிவங்களில் சோஷலிச நேசப் போட்டி நடைபெறுகிறது.

**சோஷலிசப் புரட்சி:** (Socialist Revolution)—சமுதாயப் புரட்சிகளில் மிகவும் உயர்தரமானது. முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து சோஷலிச சமுதாயத்துக்கான மாற்றத்தைச் சித்திபெறச் செய்யும் புரட்சி. தொழிலாளி வர்க்கம் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சியைத் தலைமையாகக் கொண்டு சோஷலிசப் புரட்சியின் பிரதான உந்து விசையாகவும் தலைமை சக்தியாகவும் செயல்படுகிறது.

எந்த நாட்டிலும் சோஷலிசப் புரட்சிக்கும் சோஷலிசக் கட்டுமானத்துக்கும் உரிய பிரதான கூறுகள் வருமாறு: **விவசாயிகளுடன்** கூட்டணி கொண்ட தொழிலாளி வர்க்கமும், **அறிவுத் துறையினரில்** முற்போக்கான பகுதியோரும், சமுதாயத்தின் முன்னேற்றகரமான எல்லாப் பிரிவோரும் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல்; முதலாளித்துவ வர்க்கமும் ஏனைய சுரண்டும் **வர்க்கங்களும்** வகிக்கும் சமூக, பொருளாதார ஆதிக்கத்தை அகற்றும் பொருட்டு இந்த ஆட்சியதிகாரம் பிரயோகிக்கப்படுதல்; தொழிலாளி வர்க்கமும் அதன் கம்யூனிஸ்டு முன்னணிப் படையும் சோஷலிசத்தைக் கட்டியமைக்கும் பணியில் உழைப்பாளி மக்களை ஒன்று திரளச் செய்வதற்காக நிறுவன ஒழுங்கமைப்புப் பணி ஆற்றுதல்; வர்க்கப் பகைவனது தவிர்க்கவொண்ணாத தாக்குதல்களிலிருந்து புரட்சியைப் பாதுகாப்பதற்கு உழைப்பாளி மக்களது அரசாங்கம் வல்லமை வாய்ந்ததாய் இருத்தல்.

**சோஷலிச மாற்றத்துக்கான அமைதி வழியும் அமைதியல்லாத பிற வழிகளும்:** Peaceful and Non-Peaceful Forms



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

of Transition to Socialism)—**சோஷலிசத்துக்கான** புரட்சிகர மாற்றம் எவ்வழியில் நடந்தேறும் என்பது ஆங்காங்கே உள்ள வரலாற்றுச் சூழ்நிலைகளையும், அந்தந்த நாட்டின் வர்க்கச் சக்திகளது பரஸ்பர நிலையையும் பொறுத்த தாகும். எங்கெங்கே சாத்தியமோ அங்கெல்லாம் அமைதி வழியைக் கடைப்பிடிப்பதே விரும்பத்தக்கது என்பதே மார்க்சியவாதிகளது கருத்து. அமைதியல்லாத வழிகளைக் கடைப்பிடிப்பது தவிர்க்க முடியாமற் போகும் போது மட்டுமே மார்க்சியவாதிகள் அவ்வழிகளைக் கடைப் பிடிக்கிறார்கள். எவ்வழியைப் பின்பற்றுவது என்பது ஆளும் வர்க்கங்கள் காட்டும் எதிர்ப்பின் கடுமையையும் மற்றும் மரபுகளையும், அந்தந்த நாட்டின் சமூக வாழ்வில் நாடாளு மன்றத்துக்குள்ள பாத்திரத்தையும் அந்தஸ்தையும் ஏனைய பல காரணிகளையும் பொறுத்திருக்கிறது. ருஷ்யாவில் முதலாளித்துவ வர்க்கம் **அன்னிய** ஏகாதிபத்திய வாதி களுடன் கூட்டு சேர்ந்து **உள்நாட்டுப் போரைக்** கட்டவிழ்த்து விட்டு, **தொழிலாளி வர்க்கம்** அந்த நிலைமைக்குத் தக்கவாறு செயல்பட வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கிற்று. இவ்வாறு எழுந்த உள்நாட்டுப் போரின் போது அன்னியத் தலையீட்டாளர்களும் உள்நாட்டு எதிர்ப்புரட்சிக்காரர்களும் முறியடிக்கப் பெற்று நாட்டிலிருந்து விரட்டியடிக்கப் பட்டனர்.

உலக **சோஷலிச அமைப்பு** உருவாகியிருப்பதாலும் காலனியாதிக்க அமைப்பு தகர்ந்து விட்டதாலும், முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் முற்போக்கு சக்திகளது பலம் ஓங்கி வளர்ந்திருப்பதாலும், புரட்சி இயக்கத்தின் சமூக அடிப்படை விரிவடைந்திருப்பதாலும் இன்று சில நாடுகளில் **ஆயுதமேந்திய எழுச்சியும் உள் நாட்டுப் போரும்** இல்லாமலே சோஷலிசத்துக்கான மாற்றத்தைச் சித்திபெறச் செய்வது சாத்தியமாகியுள்ளது—கம்யூனிஸ்டுகளது நாடாளுமன்றச் செயற்பாடு அதிகரித்திருப் பதும், ஜனநாயக அமைப்புகள் பயன்படுத்தப்பட்டு



வருதலும் இந்தச் சாத்தியப்பாட்டுக்கு அனுகூலமாய் உள்ளன. ஆயினும் **புரட்சியின்** வளர்ச்சியின்போது குறிப் பிட்ட ஒரு கட்டத்தில் ஆளும் வர்க்கங்கள் ஆயுத பலத்தை உபயோகித்துப் புரட்சி இயக்கத்தை நசுக்க முயலுமாயின் மக் கள் பெருந்திரளினர் ஆயுதங்களைப் பயன்படுத்த நேரலாம்—இம்மாதிரியான சாத்தியப்பாடு எழாதெனக் கூறுவதற் கில்லை.

**சோஷலிச வாழ்க்கை முறை**: (Socialist Way of life)—சோஷலிச நாடுகளில் உழைப்பாளி மக்களது வாழ்க்கையின் பிரதான இயல்புகளின் ஒட்டு மொத்தம்.

சோஷலிச வாழ்க்கை முறையின் பிரதான இயல் புகளாவன: மனிதனை மனிதன் சுரண்டுவது இல்லா தொழிந்த நிலைமை; செய்த வேலையின் அளவுக்கும் தரத்துக்கும் ஏற்ப பொருட் செல்வம் வினியோகிக்கப் படுதல்; உழைப்பாளி மக்களுக்கு மெய்யான அரசியல் சுதந்திரம்; அவர்களது உரிமைகளுக்கும் தனிமனித மாண்புக்கும் உத்தவாதம் அளிக்கப்பட்டிருத்தல்; பற்பல இன மக்களிடையிலுமான நட்பும் ஒத்துழைப்பும்; எந்த விதமான இன, நிறப் பாகுபாடும் இல்லாமை; அனைத்து மக்களது நலன்களுக்கும் ஏற்ப சமூகப் பொருளுற்பத்தி வளர்ந்தோங்குதல்; சோஷலிச ஒழுக்க நெறி வேரூன்றுதல்; எல்லா நாடுகளின் உழைப்பாளி மக்களுக்கும் சர்வதேச ஒருமைப்பாடு தெரிவித்தல்; உலக சமாதானத்துக்காக முனைந்து போராடுதல்.

மார்க்சிய-லெனினியக் கட்சிகளது தலைமையில் எல்லா உழைப்பாளி மக்களோடும் கூட்டணி கொண்டுள்ள தொழி லாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சியதிகாரம் சோஷலிச வாழ்க்கை முறை கிட்டுப்படி உறுதி செய்கிறது. **உற்பத்திச் சாதனங்களில்** நிலவுகிற பொது உடைமைதான் சோஷலிச வாழ்க்கை முறைக்கான பொருளாதார அடித்தளமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## டி

**டிராட்ஸ்கியம்** (Trotskyism)—மார்க்சியம்-லெனியத்துக்குப் பகையான குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாத இயக்கம். புரட்சிகர வாய்வீச்சில் ஈடுபட்டு, அதே போது புரட்சிப் போராட்டத்தின் அடிப்படையான எல்லாப் பிரச்சினைகளிலும், எதிரிக்கு உண்மையில் சரணடையும் கருத்தோட்டங்களை உபதேசித்துப் பிரசாரம் செய்து வந்த டிராட்ஸ்கியின் பெயரைத் தாங்கிய இந்த இயக்கம் 20 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் எழுந்தது. டிராட்ஸ்கியர்கள் **தொழிலாளி வர்க்கத்தின்** மார்க்சியக் கட்சி அமைக்கப்படுதலையும் **புரட்சியில் பாட்டாளி வர்க்கம்** தலைமைப் பங்காற்ற வேண்டும் என்பதையும் எதிர்த்தார்கள். பாட்டாளி வர்க்கம் சித்தாந்த வழியில் முதிர்ச்சியற்றதாய் இருப்பதாகக் கருதிய அவர்கள், அதற்குப் புரட்சி ஆற்றல் உண்டென்பதையே மறுத்தார்கள். விவசாயிகளைப் பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்கக் கூடிய பகைவர்களாகவே அவர்கள் கருதினுர்கள். ஆகவே தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் கூட்டணி நிறுவிக் கொள்வதன் அவசியத்தையே மறுத்தனர். பிற நாடுகளில் புரட்சிப் போர்களைத் தூண்டி விடுவதன் மூலம் புரட்சியை ''உசுப்பி விட'' முயலுவதும், மாறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வை நிராகரிப்பதும், பொதுவான ஜனநாயக இயக்கங்கள்பால் அவர்கள் கொண்டிருக்கும் எதிர் மறைப்போக்கும் டிராட்ஸ்கியர்களுக்குரிய தனி இயல்புகளாகும். ''ஜனநாயகத்துக்கான'' போராட்டம் ஏற்கனவே முடிவுற்றுவிட்ட ஒரு கட்டமாகும் என அவர்கள் பறைசாற்றினர். இக்காலத்தில் டிராட்ஸ்கிய கருத்துக்கள் சில நாடுகளில் அதீத-இடதுசாரி சாகசவாத கோஷ்டிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த அதீத-இடதுசாரி கோஷ்டிகளது செயற்பாடுகள் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குத் தீங்கிழைக்கக் கூடியவை என்பது மட்டுமல்ல, உண்மையில் அடிக்கடி தீங்கு இழைக்கவும் செய்கின்றன.



## த

**தகவல் புரட்டு**: (Misinformation)—பொது மக்கள் அபிப்பிராயத்தைத் தவருன பாதையில் திருப்பி விடுவதற்காக முதலாளித்துவ செய்திச் சாதனங்கள் வேண்டுமென்றே பொய்யான தகவல்களைப் பரப்புதல். கம்யூனிஸ்டு-எதிர்ப்புக் காரியங்களுக்காக, சோஷலிச நாடுகளையும் **வளரும் நாடுகளின்** முற்போக்கான ஆட்சிகளையும் அவதூறு செய்வதற்காக, தகவல் புரட்டு தக்க உபாயமாகப் பயன்படுத்தப் படுகிறது.

**தடுப்பு நடவடிக்கை**: (Preventive)—அபாயகரமான செயல்களையும் நிகழ்வுகளையும் தடுக்கக் கூடியது. எடுத்துக்காட்டாய் தடுப்புத்துறை மருத்துவத்தில் நோய்த்தடுப்பு ஊசிகள் போடப்படுதலைக் குறிப்பிடலாம்.

**''தடுப்பு யுத்தம்''**: (''Preventive War'')—**ஆக்கிரமிப்பைத்** தடுப்பதே நோக்கம் எனக் கூறிக்கொண்டு கட்டவிழ்த்து விடப்படும் யுத்தம். உண்மையில் இதுவும் ஒரு வகை ஆக்கிரமிப்பே ஆகும். மிகவும் பிற்போக்கான ஏகாதிபத்திய வட்டாரங்கள் சோஷலிச நாடுகளுக்கு எதிரான ''தடுப்பு யுத்தம்'' அவசியம் என்கிற தத்துவத்தை முன் வைத்துப் பிரசாரம் செய்கின்றன.

**தந்தைவழிச் சமுதாயம்**: (Patriarchy)—**புராதனச் சமூக அமைப்பின்** வளர்ச்சியில் இறுதிக் கட்டம். கால்நடை வளர்ப்பு, உலோக வேலை, விவசாயம் ஆகியவை வளர்ந்ததைத் தொடர்ந்து, இந்தக் கட்டத்தில் பொருளாதார, சமுதாய வாழ்வில் ஆண்கள் தலைமைப் பங்காற்ற முற்பட்டனர்.

தந்தைவழிச் சமுதாய கட்டத்தில் **தனியார் சொத்துரிமையும்**, அதனுடன் சேர்ந்து சமத்துவமின்மையும் மனிதன் தன் சக மனிதனைச் **சுரண்டுதலும்** தலை தூக்கி, புராதனச் சமுதாய அமைப்பு சிதையத் தொடங்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தலையீடு**: (Intervention)—ஓர் அரசோ, ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளோ, பிறிதொரு அரசின் உள் விவகாரங்களில் பலவந்தமாகத் தலையிடுதல். பொருளாதார, அரசியல், இராணுவ வழிகளில், இந்தத் தலையீடு நடந்தேறுகிறது.

அண்மைக் காலத்தில் எடுத்துக் காட்டாய் 1960-ஆம் ஆண்டுகளில் வியத்நாம் மக்களுக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு தொடுத்த இராணுவத் தலையீட்டைக் குறிப்பிடலாம். இந்தத் தலையீடு ஆக்கிரமிப்பாளனின் தோல்வியில் முடிவுற்றது.

**தன்னிச்சை வாதம்**: (Voluntarism)—தத்துவயியலில் கருத்து முதல்வாதப் போக்கு. தனிநபர்களது சித்தமே சமூக வளர்ச்சியின் பிரதான இயக்கு சக்தியாகும் என இது கருதுகிறது. சமூக, அரசியல் வாழ்வில் தன்னிச்சை வாதமானது வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் எதார்த்தப் புறநிலை விதிகளைப் புறக்கணித்து, நடப்பிலுள்ள நிலைமைக்கும் சமுதாயத்தின் மெய்யான தேவைகளுக்கும் ஒவ்வாத தன்வயப்பட்ட விருப்பங்களையும் முடிவுகளையும் பலவந்தமாகத் திணிப்பதன் வாயிலாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

**தனி உடைமை**: (Private Ownership) – **உற்பத்திச் சாதனங்களும்** சமூக உழைப்பின் பலன்களும் தனி ஆட்களுக்குச் சொந்தமாகி விடுகிற உடைமை வடிவம். **புராதன சமூக அமைப்பு** அழிந்து **அடிமை உடைமை அமைப்பு** எழுந்த போது உருவாகியது.

உழைப்புக் கருவிகளும் உற்பத்தி முறைகளும் வளர்ச்சி பெற்றதைத் தொடர்ந்து மக்கள் தமது சொந்த உபயோகத்துக்காக வேண்டியதற்கும் கூடுதலான பண்டங்களை உற்பத்தி செய்து, உபரியான பண்டங்களை ஏனையோரிடம் தந்து, பதிலுக்கு அவர்களிடமிருந்து அவர்கள் உற்பத்தி செய்த பண்டங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இவ்வாறு தான் குலங்களுக்கு இடையிலும் பூர்வீகக் குடிகளுக்கு இடையிலும் பண்ட மாற்று வழக்குக்கு



வரலாயிற்று. இந்தப் பண்டமாற்றில் இடைத் தரகர்களாக செயல்பட்ட குல மூதாளர்களும் பூர்விகக் குடி அதிபர்களும் முடிவில் பொதுச் சொத்தில் ஒரு பகுதியைத் தமதாக்கிக் கொண்டனர். அதே போது குலங்களின் உறுப்பினர்களில் சிலர் தனிப்பட்ட முறையில் தமது வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பண்டங்களையும் தவிர உபரியாகச் சில பண்டங்களையும் உற்பத்தி செய்து கொள்ள முடிந்தது. இவ்விதம் கூட்டு உழைப்புச் சிறிது சிறிதாகக் குறைந்து தனியார் உழைப்பு பெருவழக்காகியது. இந்த நிலைமை உற்பத்திக் கருவிகளிலும் ஏனைய உற்பத்திச் சாதனங்களிலும் தனி உடைமை தலை தூக்குவதற்கு வழி கோலிற்று. தனி உடைமையை நிலை நாட்டுவதில் கருத்துடையவர்கள் (குறிப்பாக மூதாளர்களும் அதிபர்களும் வீர மறவர்களும்) தனி உடைமையானது புனிதம் வாய்ந்ததென்றும் மீறவொண்ணாததென்றும் கூற முற்பட்டனர்.

தனி உடைமையின் உதயம் சமுதாயத்தைச் செல்வர்களாகவும் ஏழைகளாகவும், சுரண்டலாளர்களாகவும் (தனிச் சொத்தின் உடைமையாளர்கள்) சுரண்டப் படுவோராகவும் (தனிச் சொத்து இல்லாதவர்கள்) பிளவுபடச் செய்தது. பொருள் உற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து தனி உடைமையானது அடிமை உடைமை, பிறகு பிரபுத்துவ உடைமை, அதற்கும் பிறகு முதலாளித்துவ உடைமை ஆகிய உற்பத்திச் சாதனத் தனி உடைமை வடிவங்களை ஏற்றது. முதலாளித்துவ தனி உடைமை மூர்க்கமான போட்டியையும், உற்பத்தி அராஜகத்தையும், பொருளாதார நெருக்கடிகளையும், பணவீக்கத்தையும், வேலையின்மையையும், மிதமிஞ்சிய கடுமையான சமூக மோதல்களையும் எழச் செய்தது. முதலாளித்துவ பொருள்உற்பத்தியின் சமூகத் தன்மை, சுவீகரிப்பின் முதலாளித்துவ தன்மையுடன் இணக்கம் காண முடியாதவாறு முரண்பட வேண்டியதாகிறது. இந்த முரண்பாட்டுக்கு **சோஷலிசப் புரட்சி** முடிவு கட்டுகிறது. சோஷலிசப் புரட்சியானது தனி உடைமையை அகற்றி, உற்பத்திச் சாதனங்களில் மக்களது சோஷலிசப் பொது உடைமையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைநாட்டி, உழைப்பின் உற்பத்திப் பண்டங்களை உழைப்பாளி மக்களுக்குக் கிடைக்கச் செய்கிறது.

**தனிநபர் வாதம்:** (Individualism) - ஒரு வகை **உலகக் கண்ணோட்டம்.** தனிநபரின் உரிமைகள் தனி முதலானவை என்று சொல்லி தனிநபரைச் சமுதாயத்துக்கு எதிராய் வைப்பதே இதன் சாரம்.

உண்மையில் தனிநபரின் முழு நிறை வளர்ச்சி கூட்டு வாழ்க்கையில்தான், சமூக வாழ்வு குறித்து செயல் முனைப்புள்ள போக்கைக் கொண்டிருக்கையில்தான் சாத்திய மாகிறது.

பண ஆசை, தன்னலப் போக்கு, மமதை, கூட்டு முயற்சிகளை எதிர்த்து நிற்றல் போன்ற தனிநபர் வாதப் போக்குகள், சமுதாயத்தைத் திருத்தியமைப்பதற்காக முற்போக்கு சக்திகள் நடத்துகிற போராட்டத்துக்கு முட்டுக் கட்டையாய் செயல்படுகிறவை. **வர்க்கப் போராட்டத்தில்** இருந்து வெகுஜனங்களைத் திசை திருப்பிவிட முயலும் பிற்போக்கு சக்திகள் இப்போக்குகளை பயன் படுத்திக் கொள்கின்றன.

## தி

**திருத்தல் வாதம்:** (Revisionism)—தொழிலாளர் இயக்கத்தில் செயல்படும் **சந்தர்ப்பவாதப்** போக்கு. **மார்க்சிய–லெனினியத்தின்** அரசியல், தத்துவவியல், பொருளாதார அடிப்படைகளை இப்போக்கு மறுபரிசீலனை செய்து மாற்ற அல்லது 'திருத்த' முனைவதால் இது இப்பெயரைப் பெறலாயிற்று.

## தே

**தேசங்களது சுய-நிர்ணய உரிமை:** (Right of Nations to Self-Determination)—லெனினிய தேசியக் கொள்கையின்



கோட்பாடுகளில் ஒன்று. எல்லா **தேசங்களும்** சர்வ சுதந்திரம் படைத்தவை, முழு சமத்துவம் வாய்ந்தவை என்பதையும், அவை தமது அரசு அமைப்பு குறித்து சுயேச்சையாகத் தாமே தீர்மானிக்க வேண்டும் என்பதையும் அங்கீகரித்துச் செயல்பட வேண்டும் என்பது லெனினிய தேசியக் கொள்கையின் அடிப்படை ஆகும். தேசங்கள் தன்னாட்சி உரிமை படைத்தவை, அவை ஏனைய தேசங்களது கூட்டாட்சி அரசில் தாமும் சேர்ந்து கொள்ளவோ, அல்லது இந்தக் கூட்டாட்சி அரசிலிருந்து பிரிந்து சொந்த தேசிய அரசை அமைத்துக் கொள்ளவோ முழு உரிமை படைத்தவை.

சோவியத் யூனியனது உள் துறை அரசு உறவுகளுக் கான அரசியலமைப்புச் சட்டக் கோட்பாடுகளிலும், சோவியத் யூனியன் கடைப்பிடிக்கும் அயல் துறைக் கொள்கையின் கோட்பாடுகளிலும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும் ஒன்றாகும்.

**தேசப் பொருளாதாரம்:** (National Economy)—ஒரு நாட்டின் பொருள் உற்பத்திக் கிளைகளாகிய தொழில் துறை, கட்டுமானம், விவசாயம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, வாணிபம், வினியோகம், கடன் செலவாணி அமைப்பு போன்றவை யாவற்றின் ஒட்டு மொத்தத்தைக் குறிக்கிறது. முதலாளித்துவத்தில் தேசப் பொருளாதார மானது, உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமையை அடிப்படையாகக் கொண்டதாகும்; தன்னியல்பான முறையில் வளர்ந்து, முதலாளி இலாபமடிப்பதற்காகப் பயன்படுவதாகும்.

உற்பத்திச் சாதனங்களின் **பொது உடைமையே** சோஷலிசப் பொருளாதாரத்தின் அடிப்படை. சோஷலிசத் தில் தேசப் பொருளாதாரமானது **நெருக்கடிகளோ, பணவீக்கமோ** இல்லாமல் திட்டத்தின் பிரகாரம் வளர்வ தாகும். சோஷலிச சமுதாயத்தின், அதன் ஒவ்வோர் உறுப்பினரின் இடையறாது வளரும் பொருளாயத,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாசாரத் தேவைகளைக் கூடுமான முழு அளவுக்குப் பூர்த்தி செய்வதுதான் சோஷலிசத்தில் சமூகப் பொருள் உற்பத்தியின் தலையாய குறிக்கோள்.

**தேசபக்த இயக்கம்:** (Resistance Movement)—இரண்டாவது உலக யுத்தத்தின் போது(1939-45) ஜெர்மானிய, இத்தாலிய, ஜப்பானிய படையெடுப்பாளர்களையும் அவர்களுடைய கூட்டாளிகளையும் எதிர்த்து மக்கள் பெருந்திரளினர் நடத்திய பாசிஸ்டு-எதிர்ப்பு தேச விடுதலை இயக்கம். பாசிஸ்டு-எதிர்ப்புப் பிரசாரம், வேலை நிறுத்தங்கள், சீர்குலைவு, கொரில்லாப் போர், எழுச்சிகள் முதலான வடிவங்களில் இந்த இயக்கம் நடந்தேறியது. பாசிசத்துக்கு எதிரான தேசபக்த இயக்கம் ஜனநாயக மாறுதல்களுக்கான போராட்டத்துடன் பின்னிப் பிணைந்திருந்தது. காலனி, சார்பு நாடுகளில் இந்த இயக்கம் ஏகாதிபத்திய காலனி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தோடு ஒன்று கலந்தது. தேச பக்த இயக்கத்தின் புகழ் வாய்ந்த மரபுகளை இன்று ஏகாதிபத்திய **ஆக்கிரமிப்பையும்** உள்நாட்டுப் பிற்போக்கையும் எதிர்த்துப் போராடும் மக்கள் பின்பற்றி அவற்றைச் செழுமை செய்கிறுர்கள்.

**தேசம்:** (Nation)—பி ர பு த் து வ ஒற்றுமையின்மை சமாளிக்கப்பட்டும், முதலாளித்துவ உறவுகள் வளர்ந்தும் வந்த காலத்தில் வரலாற்று வழியில் உருவான மக்கட் சமுதாயம். பிரதேசத்தாலும் பொருளாதார வாழ்விலும் மொழியாலும் தேசிய இயல்பின், கலாசாரத்தின் சிற்சில தனிச் சிறப்புகளாலும் ஒன்றுபட்டிருத்தல் ஒரு தேசத்துக்கு உரிய குணதிசயமாகும். ஆனல் இம்மாதிரியான ஒற்றுமை வர்க்க முரண்பாடுகளையும் தேசத்துள் நடைபெறுகிற போராட்டத்தையும் முடிவடையச் செய்வதில்லை. சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்த பிறகுதான் தேசத்துள் பகைமைகள் மறைய முற்பட்டு, பல்வேறு தேசிய இனங்களிடையே நட்புறவு வளர்கிறது, சோஷலிச தேசங்கள் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் ஒன்றையொன்று நெருங்கிச்சென்று ஒன்றையொன்று செழுமைப்



படுத்துகின்றன, கம்யூனிசத்தைக் கட்டியமைக்கும் எல்லா மக்களுக்கும் பொதுவான மரபுகள் உருவாக்கப்படுகின்றன.

**தேச விடுதலைப் புரட்சி:** (National Liberation Revolution)—தேச விடுதலை இயக்கத்திலிருந்து வளருகிற புரட்சி. அந்நிய ஆதிக்கத்தை ஒழித்து தேசத்துக்கு சுயேச்சை வாழ்வு கிடைக்கச் செய்தல்; தேசிய, இன, காலனி ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் அகற்றுதல்; தேசங்களது சுய-நிர்ணய உரிமையைச் செயல்பட வைத்தல்; தேசிய அரசை நிறுவுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நடைபெறும் புரட்சி இது.

சோஷலிசம், முதலாளித்துவம் ஆகிய இரு வேறு உலக அமைப்புகள் இருந்து வரும் இன்றைய நிலைமைகளில், சக்திகளது பரஸ்பர நிலை சோஷலிசத்துக்குச் சாதகமாய் மாறி வருகிற இக்காலத்தில், அடிமைப்பட்ட மக்கள் இந்தோனேஷியா அல்லது அல்ஜீரியாவில் நடைபெற்றது போல் ஆயுதமேந்திய போராட்டத்தின் மூலமாகவோ, இந்தியாவிலும் ஸ்ரீலங்காவிலும் பெரும்பாலான ஆப்பிரிக்க அரசுகளிலும் நடைபெற்றதுபோல் அமைதி வழியிலோ, விடுதலையடைந்து சுயேச்சை பெற முடிகிறது. **தொழிலாளி வர்த்தகத்தாரும் விவசாயிகளும்தான்** தேச விடுதலைப் புரட்சியின் பிரதான உந்து விசையாகச் செயல்படுகிறுர்கள். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேச விடுதலைப் போராட்டத்தில் நகர குட்டி முதலாளித்துவப் பகுதியோரும்,அறிவுத் துறையினர், இராணுவத் துறையினர் ஆகியோரிடையிலான தேசபக்தப் பகுதியோரும் முனைப்புடன் முக்கிய பங்கெடுத்துக் கொள்கிறுர்கள். தேசிய முதலாளித்துவ வர்க்கமும் தேச விடுதலைப் புரட்சியில் பங்கெடுத்துக் கொள்கிறது. ஆனல் அதன் குறுகலான வர்க்க நலன்கள் அடிக்கடி அதை ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொள்ளுமாறு செய்கின்றன.

தேசிய அரசுகள் நிறுவப் பட்டதைத் தொடர்ந்து தேச விடுதலைப் புரட்சி ஒரு புதிய க ட் ட த் து ள்—பொருளா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தார சுயேச்சைக்காகப் போராடும் கட்டத்துள்—பிரவேசிக்கிறது.

**தேசிய சோஷலிசம்**: (National Socialism)—சோஷலிச இலட்சியங்களை தேசியவாத குட்டி முதலாளித்துவ, சீர்திருத்தவாத, சமயக் கருத்துக்களோடும் பிற கருத்துக்களோடும் சேர்த்து இணைத்துக் கொள்ளும் சமூக, அரசியல் தத்துவங்களின் ஒட்டு மொத்தம். **வளரும் நாடுகளில் புரட்சிகர ஜனநாயகத்தின்** அணிகளில் இந்தத் தத்துவங்களை ஆதரிப்போர் அடிக்கடி தீவிர சமூக, பொருளாதார மாறுதல்களை ஆதரிக்கிறார்கள்; சில சமயம் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகள் **முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப்** பாதையில் முன்னேறவும் இந்நாடுகள் பொருளாதார சுயேச்சை பெறவும் தமது அரசியல் சுயேச்சையை வலுவாக்கிக் கொள்ளவும் உதவுகிறார்கள்.

ஆனால் சில நேரம் இவர்கள் அரசாட்சியில் அரசியல்-இராணுவ முறைகளுக்குள்ள பங்கினை மிகைப்படுத்தவும், வெகுஜனங்களிடையிலான சித்தாந்த பணியின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடவும் முற்படுகிறார்கள். ''தனிவகைப் பாதையில்'' வளர்ச்சி பெறுவது என்னும் கருத்தால், மிதமிஞ்சி கவரப்படுவதாலும், மார்க்சிய-லெனினியத் தத்துவம் குறித்து போதிய பரிச்சயம் இல்லாததாலும் இவர்கள் உலகப் புரட்சி இயக்கத்தின், தேச விடுதலை இயக்கத்தின் அனுபவத்தைத் தக்கபடி புரிந்து கொள்ளத் தவறி விடுகிறார்கள். தேசிய சோஷலிசத்தின் பற்பல வகைகளையும் ஆதரிப்பவர்கள் பலரும் **மார்க்சியம் லெனினியத்தின்** தாக்கத்துக்கு உள்ளாகித் தேசியக் குறுகிய மனப்பாங்கின் இயல்புகளிலிருந்து விடுபட்டுள்ளனர்.

## தே

**தேசியப் பணியாளர்கள்**: (National Cadres)—சுதேசி மக்கள் மத்தியிலிருந்து எழுந்து தனிப் பயிற்சி பெற்று, பொருளாதார, அரசாங்க, பொது நிறுவனங்களிலும் நிலையங்களிலும் மிக முக்கிய வேலைத்துறைகளில் ஈடுபடுமாறு உயர்த்தப் பட்டுள்ள பணியாளர்கள். தேசியப் பணியாளர்களைப் பயிற்றுவித்து வளரச் செய்தல் **வளரும் நாடுகளது** தனிக் கவனத்துக்குரிய ஒரு கடமையாகும். வளரும் நாடுகள் மெய்யான பொருளாதார சுயேச்சை நிலைமை வந்தடைவதற்கான போராட்டத்தில் முன்னணிப் பங்காற்றுவது தேசியப் பணியாளர்கள் முன்னுள்ள முக்கிய கடமையாகும்.



**தேசிய வாதம்**: (Nationalism)—தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமான முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ சித்தாந்தமும் கொள்கையும். சமூகமாகச் சேர்ந்து வாழ்வோரது மகோன்னத வடிவமே தேசம் என்றும், தேசமானது வரலாற்றுக்கு அப்பாற்பட்டதாகும், வர்க்கத்தைக் கடந்ததாகும் என்றும், தேசத்துள் அடங்கும் சமூக அடுக்குகள் யாவும் ஒத்த அடிப்படை நலன்களால் ஒன்றுபட்டு, முரண்பாடற்ற இசைவுடன் தேசமாய் இணைந்து நிலவுகின்றன என்றும் தேசியவாதம் நம்புகிறது.

தமது இனமே மேலானது என்கிற உயர்வு மனப்பான்மையையும் சுற்றிலும் வேலி எழுப்பி அடைத்துக் கொள்ளும் ஒதுக்க நிலையையும் குறிக்கும் கருத்துக்கள் சாதாரணமாய் தேசிய வாதத்தை அடையாளம் காட்டும் கருத்துக்களாய் அமைகின்றன. வரலாற்றுச் சூழ்நிலைமைகளுக்கு ஏற்பவும், குறிப்பிட்ட தேசிய இனம் ஏனையவற்றுடன் கொண்டுள்ள உறவு நிலைக்கு ஏற்பவும் இந்த உயர்வு மனப்பான்மையும் ஒதுக்க நிலையும் அதிகமாகவோ, குறைவாகவோ வளர்ச்சியடைகின்றன.

உழைப்பாளி மக்களது வர்க்க உணர்வை மழுங்கச் செய்வதற்காக பிற்போக்குவாத வட்டாரங்கள் அடிக்கடி தேசியவாதத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. தேசிய இனக் குரோதமும் பூசலும் உழைப்பாளி மக்கள் அவர்களது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்க நலன்களுக்காக நடத்துகிற **போராட்டத்துக்குத்** தடைகளாகி விடுகின்றன.

ஆனல் தேச விடுதலை இயக்கத்தின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தேசியவாதம் தேசிய மறு மலர்ச்சிக்கான வேலைத்திட்டமாக, அரசியல், பொருளாதார சுயேச்சை வாழ்வுக்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறுகிற போராட்டத்துக்கான போர்க் கொடியாகச் செயல்பட முடியும்.

**தேசிய வருமானம்:** *(National Income)*—பொருள் உற்பத்தியின் எல்லாக் கிளைகளுமாகச் சேர்ந்து ஒரு நாட்டுக்கு ஓராண்டுக் காலத்தில் கிடைக்கச் செய்கிற கூடுதல் செல்வ மதிப்பு; அல்லது செலவான உற்பத்திச் சாதனங்களை மீட்டமைத்த பிறகு வருடாந்தர மொத்த **சமூக உற்பத்திப் பொருளில்** எஞ்சுகிற பகுதி. முதலாளித்துவ அரசுகளில் தேசிய வருமானத்தில் சரிபாதிக்கும் அதிகமானதைச் சுரண்டும் **வர்க்கங்கள்** சுவீகரித்துக் கொண்டு விடுகின்றன. சோஷலிச சமுதாயத்தில் பெறப்படுகிற தேசிய வருமானம் அனைத்து மக்களுக்கும் உரியதாகி விடுகிறது. அதில் ஏறத்தாழ முக்கால் பங்கு மக்களது அன்ருட கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், மற்றும் பொருள் உற்பத்தியை மேலும் விரிவாக்குவதற்காகவும், உற்பத்தித் திறனில்லாத சொத்துகளை (Assets) நிறுவுவதற்காகவும், இறுதியில் மக்களது வாழ்க்கை வளத்தை உயர்த்தப் பயன்படுகிற காப்பு நிதிகளை அமைப்பதற்காகவும் செலவிடப்படுகிறது.

**தேசிய வெறிப் போக்கு:** *(Chauvinism)*—(ஷோவினிசம் எனப்படும் இது பிற நாடுகளை வென்று பிடித்துக் கொள்ளும் நெப்போலியன் கொள்கையைப் பரவசத்துடன் போற்றிய பிரெஞ்சுப் படையாள் ஷோவின் என்பவரது பெயரில் இவ்வாறு அழைக்கப்படலாயிற்று.) தேசிய ஒதுக்க நிலையை உபதேசித்துப் பிரசாரம் செய்தலும், ஒரு தேசிய இனத்தின் நலன்களை ஏனைய இனங்களது நலன்களுக்கு விரோதமாய் முன்வைத்துச் செயல்படுதலும், தேசிய பகைமையைத் தூண்டி விடுதலும், பிற தேசங்களையும் இனங்களையும் மதியாது அவற்றின் பால் வெறுப்பை உண்டாக்குதலும்.



## தொ

**தொலைநோக்குத் திட்டம்:** *(Perspective Planning)*—நீண்டதொரு வருங்காலத்துக்குத் **தேசப் பொருளாதாரத்தின்** வளர்ச்சிக்கு திட்டமிடுதல். சோஷலிச நாடுகளில் சமூக வளர்ச்சியின் எதார்த்த புறநிலை விதிகளைக் கணக்கில் எடுத்து விஞ்ஞானஅடிப்படையில் தொலைநோக்குத் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல் படுத்தப்படுகிறது. **பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலின்** கட்டுக் கோப்புக்குள் உறுப்பு நாடுகளின் தேசப் பொருளாதாரத் திட்டங்களை ஒருமுகப் படுத்துவதன் மூலம் தொலை நோக்குத் திட்டம் நடந்தேறுகிறது.

**தொழில் நுட்ப நிர்ணயவாதம்:** *(Technological Determinism)*—சமூக முன்னேற்றமானது **உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள்** இவற்றின் வளர்ச்சியினது தர்க்கவியலால் நிர்ணயிக்கப்படுவதல்ல, தொழில் நுட்ப முன்னேற்றத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறும் தத்துவம். இதன் ஆதரவாளர்கள், பகை வர்க்கங்களாகப் பிளவுண்ட சமுதாயத்தில் சமூக வளர்ச்சியின் பிரதான உந்து விசையாகச் செயல்படுகிற **வர்க்கப் போராட்டத்தின்** பாத்திரத்தை மறுக்கிருர்கள்.

**தொழில் மயமாக்கம்:** *(Industrialisation)*—பெருவீதத் தொழிலை, முக்கியமாய் **உற்பத்தி சாதனங்களை** உற்பத்தி செய்கிற பெருவீதத் தொழிற் கிளைகளை வளர்த்திடல். சோஷலிச வழியிலான தொழில் மயமாக்கத்தின் நோக்கம், நாட்டின் பொருளாதார சுயேச்சை வாழ்வைக் கட்டியமைத்தலும், **தேசப் பொருளாதாரத்தின்** பிற கிளைகளது இயந்திர சாதனப் புனரமைப்புக்கு **அடிப்படை** நிறுவுதலும் மக்களது வாழ்க்கை வளத்தை ஓங்கச் செய்தலும், நாட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்காப்பு ஆற்றலை உறுதி பெறச் செய்தலும் ஆகும். 1950-ஆம் ஆண்டுகளில் ஆரம்பமாகிய **விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியாலும்**, அதன் சாதனைகள் சோஷலிசத்துக்குரிய அனுகூலங்களுடன் ஒரு சேர இணைக்கப் பட்டதாலும், சோஷலிச நாடுகளில் தொழில் மயமாக்கம் ஊக்குவிக்கப் படுகிறது. ஆனல் **முதலாளித்துவத்தில்** தொழில் மயமாக்க மானது முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை உறுதிபெறச் செய்கிறது; முதலாளித்துவ சமுதாயத்தின் எல்லா முரண்பாடுகளையும் கடுமையாக்குகிறது; தொழில் நுட்ப, பொருளாதார முன்னேற்றம் பெற்றுள்ள நாடுகளுக்கும், பிரதான ஏகாதிபத்திய அரசுகளை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையில் அவற்றின் மூலப்பொருள் தளங்களாய் இருத்தப் பட்டிருக்கும் பிற்பட்ட நாடுகளுக்கும் இடையிலான முரண் பாடுகளும் முற்றிச் செல்லுகின்றன.

வளரும் நாடுகள் மெய்யான அரசியல், பொருளாதார சுயேச்சை வாழ்வு பெற வேண்டுமாயின் இந்நாடுகளின் தொழில் மயமாக்கம் அவசியமாகும். வளரும் நாடுகள் தொழில் மயமாக்கப் படுவதற்கு சோஷலிச நாடுகள் தன்னலமற்ற உதவி அளிக்கின்றன.

வளரும் நாடுகளுக்கும் **உலக சோஷலிச அமைப்புக்கும்** இடையே பொருளாதாரப் பிணைப்புகள் விரிவடைவதானது, வளரும் நாடுகள் அந்நிய மூலதனத்தைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்கு முடிவுகட்டிக் கொள்ளவும், தமது உள்நாட்டுச் சந்தையை விரிவடையச் செய்து கொள்ளவும், அரசு சேமிப்புகளை அதிகமாக்கிக் கொள்ளவும், தம் மக்களிடமிருந்தே தேர்ச்சிமிக்க ஊழியர்களைப் பயிற்று வித்துக் கொள்ளவும், பலவிதமான பொருளாதார அமைப்புகளும் ஒருங்கே தொடர்ந்து நீடிக்கும் நிலைமையைப் படிப்படியாக அகற்றிடவும் (பார்க்கவும்: **கலப்புப் பொருளாதாரம்**), தேசப் பொருளாதாரத்தை வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ அரசுகளுக்கு மூலப்பொருள்கள் வழங்கும் தளமாக மாற்றிய சுரங்கத் தொழிலை மட்டுமின்றி



பிற தொழிற் கிளைகளையும் அமைத்துக் கொள்ளவும் துணை புரிகின்றன.

**தொழிலாளர் கண்காணிப்பு**: (Workers' Control)—பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் **தொழிலாளிவர்க்கம்** பங்கு கொள்வதற்கான ஒரு வழி. இப்படிப் பங்கு கொள்வதன் மூலம் தொழிலாளர்கள் நிர்வாக அனுபவம் பெறவும் உற்பத்தியைத் தமது நலன்களுக்கு ஏற்ப நடத்திச் செல்வதில் பங்கெடுத்துக் கொள்ளவும் முடிகிறது. தொழி லாளர்கள் தமது வேலை நிலைமைகள் மீதும், சம்பளத்தின் மீதும், உற்பத்திப் பொருள்களின் வழங்கீடு, உற்பத்தி வினியோகம் ஆகியவற்றின் மீதும் தமது கண்காணிப்பை நிறுவிக் கொள்வதில்தான் தொழிலாளர் கண்காணிப்பு அடங்கியிருக்கிறது. **முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் துக்கு மாறிச் சென்ற கால கட்டத்தில்** தொழிலாளர் கண் காணிப்பை ஒழுங்கமைப்பதிலான சோவியத் அனுபவத்தை ஏனைய சோஷலிச நாடுகள் அதிகமாகவோ ஓரளவுக்கோ உபயோகித்துக் கொண்டுள்ளன. **வளரும் நாடுகளின்** உழைப்பாளி மக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மாறுதல்களைச் செய்கையில் இந்த அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

**தொழிலாளர் பிரபுக் குலத்தினர்**: (Labour aristocracy)—**தொழிலாளி வர்க்கத்தின்** மேல் அடுக்கு; முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தி அவர்களை முதலாளித்துவச் செல்வாக்குக்கு உட்படச் செய்யும் பொருட்டு, தனது ஏகபோக மிகை லாபங்களில் ஒரு பகுதியை இந்த மேல் அடுக்குக்கு இலஞ்சமாக அளிக்கிறது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தேர்ச்சிமிக்க தொழி லாளர்களில் கணிசமான பகுதியினர் இன்று ஏகபோகங் களுக்கு எதிரான போராட்டத்தில் முனைப்புடன் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

**தொழிலாளி வர்க்கம்**: (Working Class)—தற்கால சமுதாயத்தில் பிரதான பொருள் உற்பத்தி சக்தியாகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**முதலாளித்துவத்தில்,** இருந்து **சோஷலிசத்தையும், கம்யூனிசத்தையும்** சென்றடைவதற்கான மாற்றத்துக்கு பிரதான உந்து விசையாகவும் இருக்கும் வர்க்கம். சோஷலிசத்தில் தொழிலாளி வர்க்கத்தின் சமூக நிலை முதலாளித்துவத்தில் அதற்கு உள்ளதிலிருந்து அடிப் படையிலேயே மாருனதாகும். முதலாளித்துவத்தில் தொழிலாளி வர்க்கம் கூலி உழைப்பாளர்களது வர்க்கமாய் இருக்கிறது. பொருட் செல்வங்களைப் படைப்பிக்கும் வர்க்கமாய் இருப்பினும் **உற்பத்திச் சாதனங்கள்** இல்லாததாக ஆக்கப்பட்டு முதலாளித்துவ **சுரண்டலுக்கு** உள்ளாகிறது. ஆனல் சோஷலிசத்தில் அது அனைத்து மக்களுக்கும் சொந்தமான சோஷலிசத் தொழில் நிலையங்களில் பொருட் செல்வங்களைப் படைப்பிக்கும் தொழிலாளர்களது வர்க்கமாய் இருக்கிறது. வரலாற்று வளர்ச்சியின் விளைவாய், தொழிலாளி வர்க்கம் சமூக முன்னேற்றத்துக்கான சோஷலிசத்துக்கான போராட்டத்தில் தலைமைப் பங்காற்றும் வர்க்கமாய் இருக்கிறது (பார்க்கவும்: **சமூக வர்க்கங்கள், உற்பத்தி சக்திகள்**).

**தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணி:** (Alliance of the Working class and the Pesantry)—**முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியிலும், சோஷலிசப் புரட்சியிலும்** ஏகாதிபத்திய எதிர்ப்பு தேச விடுதலை இயக்கங்களிலும், சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டியமைப்பதிலும் நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் உள்ள பிரதான உழைப்பாளர் வர்க்கங்கள் இடையிலான ஒத்துழைப்பு. தொழிலாளி வர்க்கத்தின் ஜீவாதார நலன்களுக்கும் விவசாயிகளது ஜீவாதார நலன்களுக்கும் உள்ள ஒற்றுமையே இந்தக் கூட்டணிக்கான அடிப்படையாகும். தொழிலாளி வர்க்கம் இன்னும் உருவாகாத, அல்லது சமூக, அரசியல் வாழ்வில் இன்னமும் தலைமைப் பங்காற்ருத நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளில் தொழிலாளி வர்க்கம்தான் இந்தக் கூட்டணியின் தலைமை சக்தியாகச் செயல்படுகிறது.



**தொழிற் சங்கங்கள்:** (Trade Unions)—செய்பொருள், பணித்துறைத் தொழில்களிலும் பிற துறைகளிலும் உழைக்கையில் பொது நலன்களால் இணைக்கப்பட்டிருக்கும் தொழிலாளி மக்களது வெகுஜன நிறுவனங்கள். முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்துப் **பாட்டாளி வர்க்கம்** தனது வாழ்க்கை நிலைமைகளையும் வேலை நிலைமைகளையும் மேம்படுத்திக் கொள்வதற்காக நடத்தும் போராட்டத்தின் போது தொழிற் சங்கங்கள் உதித் தெழுகின்றன. இன்றைய உலகத் தொழிற் சங்க இயக்கம் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பகுதியாகும். பிரதான சர்வதேசத் தொழிற் சங்க நிறுவனங்கள் வருமாறு: தொழிற் சங்கங்களது சர்வதேச ஜனநாயக நிறுவனமாய் 1945-ல் நிறுவப்பட்ட உலகத் தொழிற் சங்க சம்மேளனம்; சீர்திருத்தவாத தொழிற்சங்க மையங்களை ஐக்கியப் படுத்தும் நிறுவனமாய் 1949-ல் அமைக்கப்பட்ட சர்வதேச சுதந்திரத் தொழிற் சங்க கூட்டுச் சம்மேளனம்; கிறிஸ்தவ தொழிற் சங்கங்களது சர்வதேச சம்மேளனமாய் 1920-ல் அமைக்கப்பட்டு 1968-ல் புதுப் பெயரிடப்பட்ட உலகத் தொழிலாளர் கூட்டுச் சம்மேளனம். இவை தவிர சர்வதேசத் தொழில் துறை பிராந்தியத் தொழிற் சங்கக் கூட்டுகளும் உள்ளன.

## ந

**நகரமயமாதல்:** (Urbanisation)— 1) சமுதாய வளர்ச்சியில் நகரங்களுக்கு உள்ள பங்கு அதிகமாகிச் செல்லும் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கு. இது இசைவுடன் நடந்தேறுவதற்கு ஏற்ற நிலைமைகளை சோஷலிசம் தோற்றுவிக்கிறது. இந்நிகழ்ச்சிப் போக்கின் பாதகமான கூறுகளை (தொழில் துறையால் எழும் சப்தம், வளிமண்டலம் நச்சுப்படுத்தப் படுதல் முதலானவை) சோஷலிசம் மட்டுப் படுத்துகிறது, நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலுள்ள அடிப்படை வேறு பாடுகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகற்றுவதற்கான சாதனமாய் நகரக் கலாசாரத்தை சோஷலிசம் பயன்படுத்திக் கொள்கிறது.

2) நகருக்குரிய இயல்புகள் கிராமங்களில் தோன்றுதல் (அதாவது கிராம வாழ்க்கை நகரமயமாதல்).

**நடுத்தரப் பகுதிகள்:** (Middle Strata)—முதலாளித்துவ **வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும்** இடைப்பட்ட வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளுமான தனியார் சொத்துடைய **குட்டி முதலாளித்துவப் பகுதிகள்** (கைவினை ஞர்கள், சிறு கடைக்காரர்கள், சிறு தொழில் நிலையங்களது உடைமையாளர்கள், நடுத்தர நிலவுடைமைகள் பெற்றுள்ள விவசாயிகள்) தனியார் சொத்து ஏதும் இல்லாமல் முதலாளிக்காக வேலை செய்கிற **அறிவுத் துறையினர்** அலுவலக ஊழியர்கள், தனிப் பணித் துறையினர்; வீட்டு வேலைக்காரர்கள்; வர்க்கம் கெட்டவர்கள்.

சமூக பொருளாதார நிலையில் இடைத் தட்டினராய் இருத்தலால், நடுத்தரப் பகுதியோர் அரசியல் வழியில் நிலையற்றவர்களாய், ஒரு சமயம் **தொழிலாளி வர்க்கத் தோடும்** இன்னொரு சமயம் **முதலாளித்துவ வர்க்கத்தோடும்** சேர்ந்து கொள்கிறார்கள். சோஷலிசத்துக்காகத் தான் நடத்தும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் இந்த நடுத்தரப் பகுதியோரைத் தனது கூட்டாளிகளாகக் கருது கிறது. ஏனெனில் இப் பகுதியோரில் கணிசமானோர் வறுமையுற்று தொழிலாளி வர்க்கத்தின் பக்கம் செல்கிறார் கள், முடிவில் இவர்கள் அதனுடன் ஒன்று கலந்து விடுகிறார்கள். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் நடுத் தரப் பகுதியோர் (அறிவுத் துறையினர் முதலானோர்) தொழிலாளி வர்க்கத்தை நெருங்கி வருமாறு ஈர்க்கப்படும் நிகழ்வு மேலும் மேலும் துரிதமடைந்தும் வளர்ந்தும் செல்கிறது. வளரும் நாடுகளில் தேசிய அறிவுத்துறையின ரும் நடுத்தரப் பகுதிகளைச் சேர்ந்த ஏனையோரும் தேச விடுதலைப் போராட்டத்தில் அடிக்கடி முக்கிய பங்கு ஆற்று கிறார்கள்.





**நாட்டுடைமையாக்கம்:** (Nationalisation)—நிலங்களை யும் **தொழிலையும்** போக்குவரத்தையும் வங்கிகளையும் இன்னபிறவற்றையும் தனியார் உடைமையிலிருந்து மாற்றி பொது (அரசு) உடைமை ஆக்குதல்.

நாட்டுடைமையாக்கம் எந்த வர்க்கத்தின் நலன் களுக்குச் சேவை புரிகிறது என்பதற்கும், எந்த வரலாற்றுச் சகாப்தத்தில் அது நடந்தேறுகிறது என்ப தற்கும் ஏற்ப, அது வெவ்வேறு விதமான சமூக, பொருளாதார, அரசியல் உள்ளடக்கம் பெறுகிறது.

சோஷலிச நாட்டுடைமையாக்கமானது, தனியார் உடைமையில் உள்ள நிலங்களையும் ஆலைகளையும் சுரங்கங் களையும் வங்கிகளையும் போக்குவரத்து செய்தித் தொடர்பு சாதனங்களையும் ஏனைய **உற்பத்திச் சாதனங்களையும்** சோஷலிச **அரசு** எடுத்து, அவற்றை அரசின் உடைமை யிலுள்ள பொதுச் சொத்தாக, அதாவது உழைப்பாளி மக்கள் **சுரண்டப் படுவதற்கு** இடமளிக்காதபடி அனைத்து மக்களுக்கும் சொந்தமான சொத்தாக மாற்றுவதைக் குறிக்கிறது.

முதலாளித்துவ நாட்டுடைமையாக்கம் தனியார் உடைமையில் உள்ள தொழில் நிலையங்களிலும் பிறவற்றிலும் ஒரு பகுதியை, இழப்பீடு தந்து, அரசுக்கு உரிய உடைமை ஆக்குவதாகும். இங்கு தொழிலாளர்கள் நேரடியாக முதலாளிகளால் சுரண்டப்படுவதற்குப் பதில் முதலாளித்துவ அரசால் சுரண்டப்படுகிறார்கள்.

காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெறும் நாடுகளில் நாட்டுடைமையாக்கம் முதற்கண் அந்நியக் கம்பெனிகளது சொத்துக்கள் அரசால் எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்கிறது. முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையை மேற்கொள்ளுகிற **வளரும் நாடுகளில்** நாட்டுடைமையாக்க மானது பல்வகை பொருளாதாரத்தின் (பார்க்கவும்: **கலப்பு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பொருளாதாரம்)** சோஷலிசக் கூறுகளைத் தோற்றுவிப்பதற்கு முக்கியமான ஒரு காரணியாகச் செயல்பட முடியும்.

**நாடு பிடித்தல்:** (Annexation)—பிறிதொரு நாடு அல்லது மக்களது பிரதேசத்தைப் பலவந்தமாகப் பிடித்து முழுமையாகவோ, பகுதியளவிலோ தனதாக்கிக் கொள்ளுதல். அப்பட்டமான நாடு பிடித்தலுக்கு உதாரணங்களாவன: இட்லர் ஜெர்மனி 1938-ல் ஆஸ்திரியாவைப் பிடித்துப் பலவந்தமாய் அதை ஜெர்மனியுடன் சேர்த்துக்கொண்டதும், செக்கோஸ்லோவாக்கியாவில் பல பிராந்தியங்களை 1939-ல் கைப்பற்றிச் சேர்த்துக் கொண்டதும்; தென்னாப்பிரிக்க குடியரசு தென்மேற்கு ஆப்பிரிக்காவை (1968 முதல் இது நமீபியா என்றழைக்கப்படுகிறது) கைப்பற்றிச் சேர்த்துக் கொண்டதும். நாடு பிடித்தல் சர்வதேச சட்ட நியதிகளை அநியாயமாய் மீறுவதாகும்.

**நாத்திகம்:** (Atheism)—மதநம்பிக்கைகளை நிராகரிப்பவையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளும் மரணத்துக்குப் பிற்பாடான வாழ்க்கையும் உண்டெனக் கொள்ளும் கருத்துக்களை மறுப்பவையும். மனிதனும் மனிதனது நலன்களும்தான் வரலாற்றின் பிரதான இயக்கு சக்தி என்பதை அங்கீகரிப்பவையுமான கருத்தோட்டங்களது கோவை.

**நாஜிசம்:** (Nazism)—பாசிஸ்டுக் கட்சியான தேசிய சோஷலிஸ்டு ஜெர்மன் தொழிலாளர் கட்சியின் கொள்கையும் சிந்தாந்தமும். நாஜி நிறுவனங்கள் முதன் முதல் 1919-ல் அமைக்கப்பட்டன. ஜனநாயகத்தை நிராகரித்தல், மிதமிஞ்சிய கம்யூனிஸ்டு-எதிர்ப்புப் போக்கு, தேசிய வெறி, நிற வெறி, கட்டுக்கடங்காத வாய்ச்சவாடல்(கட்சியின் பெயரே இதற்கு மிகத் தெளிவான எடுத்துக்காட்டு) ஆகியவை இக் கட்சியின் விசேஷ இயல்புகள்.

இட்லரைத் தலைவராகக் கொண்டிருந்த நாஜிக் கட்சி 1933-ல் ஜெர்மனியில் பாசிஸ்டு சர்வாதிகாரத்தை அமைத்துக்கொண்டு, பிறகு இரண்டாவது உலக யுத்தத்தை



(1939-45) கட்டவிழ்த்து விட்டது. பாசிஸ்டு ஜெர்மனியின் படுதோல்வியில் இந்த யுத்தம் முடிவடைந்தது. நாஜிக் கட்சி கலைக்கப்பட்டது. இதுகாறும் நாஜிகளாய் இருந்தவர்கள் பலரும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் துவக்கப்பட்ட பாசிஸ்டுப் பாணியிலான அதீத-வல்துசாரி நிறுவனங்களில் சேர்ந்து கொண்டார்கள்.

## நி

**நிலப்பிரபுத்துவம்:**(Feudalism)—**அடிமையுடைமைஅமைப்புக்குப்** பிற்பாடும் **முதலாளித்துவத்துக்கு** முன்னதாகவும் நிலவிய சமூக அமைப்பு. பிரபுத்துவ கோமான் நிலத்தின் உடைமையாளராகவும், அந்நிலத்தில் வாழ்ந்த மக்களுக்கும் பகுதியளவுக்கு உடைமையாளராகவும் இருந்தது தான் நிலப்பிரபுத்துவத்துக்கான அடிப்படையாய் அமைந்தது. நிலப்பிரபுத்துவத்தில் குடியானவர்களும் நகரத்துக் கைவினைஞர்களும் தமது சொந்த **உற்பத்திச் சாதனங்களை**—விவசாய அல்லது கைத்தொழில் கருவிகளையும், ஆடுமாடுகள், குதிரைகளையும், வீடுகளையும் பிற விவசாயக் கட்டிடங்களையும்—வைத்திருந்தனர்.

கோர்வே முறை, வார முறை என்கிற இரு வகைகளில் பிரபுத்துவப் பொருள் உற்பத்தி நடந்தேறியது. கோர்வே முறையில் பிரபுவும் குடியானவர்களும் நிலத்தின் உடைமையாளர்களாய் இருந்தார்கள். குடியானவர்கள் தமது சொந்த உழுபடைக் கருவிகளைக் கொண்டு வாரத்தில் 3-லிருந்து 6 நாட்கள்வரை நிலப்பிரபுவின் நிலங்களில் வேலை செய்தனர். விளை பொருள்கள் யாவற்றையும் நிலப்பிரபு சுவீகரித்துக் கொண்டு விடுவார். எஞ்சிய பகல்களிலும் இரவுகளிலும் குடியானவர்கள் தமக்குச் சொந்தமான வயல்களில் வேலை செய்தனர். வார முறையில் நிலப்பிரபு எல்லா நிலங்களையும் குடியானவர்களிடமும் நகரங்களில் கைவினைஞர்களிடமும் ஒப்படைத்திருந்தார். குடியானவர்களும் கைவினைஞர்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளையும் பொருள்களில் பெரும் பகுதியை பொருள் வடிவிலோ, பண வடிவிலோ நிலப்பிரபுவுக்குக் கொடுத்து விட வேண்டும்.

**உற்பத்தி சக்திகள்** மேலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்ததை அடுத்து பிரபுத்துவ **உற்பத்தி உறவுகள்** அழிந்து அவற்றின் இடத்தில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் நிலை பெறலாயின.

**நிறப் பாகுபாடு:** (Segregation)—தேச மக்களை வர்ண இன அடிப்படையில் பலவந்தமாகப் பிரித்துப் பாகுபாடு செய்தல். நிறப்பாகுபாட்டுடன் கூடவே, குறிப்பிட்ட சில வர்ண இனத்தார் அல்லது தேசிய இனத்தாரை வேறு படுத்தி ஒடுக்குவதும் நடந்தேறுகிறது (உதாரணமாய், தென் ஆப்பிரிக்கக் குடியரசில் சுதேசி ஆப்பிரிக்க மக்களுக்கு எதிராய் நடத்தப்படும் ஒடுக்குமுறை). அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிறப்பாகுபாட்டை எதிர்த்து சட்டங்கள் இயற்றப் பட்டுங்கூட, உண்மை நடைமுறையில் அங்கு நிறப் பாகுபாடு தொடர்ந்து நீடித்து வருகிறது.

**நிறவெறித் தத்துவம்:** (Racism) வர்ண இனங்களிடையே உயிரியல், அறிவாற்றல் வேறுபாடுகள் உள்ளன என்கிற விஞ்ஞான விரோதக்கூற்றின் அடிப்படையில் அமைந்து மனிதனை வெறுக்கின்ற தத்துவம். நிறவெறியர்கள் தமது நாடுகளில் நிலவுகிற வர்ண இன, தேசிய இனப் பாகுபாட்டுக்கும் மற்றும் பிற நாடுகளைத் தாக்கிப் பிடித்துக் கொள்ளையிடும் கொள்கைக்கும் நியாயம் கற்பிப்பதற்காக இந்தத் தத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடு, தென் ஆப்பிரிக்கக் குடியரசு போன்ற நாடுகளின் பிற்போக்குவாதிகள் இந்தத் தத்துவத்தை விரிவாக உபயோகித்துக் கொள்கிறார்கள்.



## நெ

**நெருக்கடி:** (Crisis)—திரும்பு முனை, மாறுதலுக்கான முருக்கேறிய இடை நிலை.

பொருளாதார நெருக்கடி என்பது பண்டங்களின் அமித உற்பத்தியாலும் அவற்றுக்கான திறனுள்ள தேவையின் சரிவாலும் பொருள் உற்பத்தியில் ஏற்படுகிற பெரிய வீழ்ச்சியாகும். இதனால் வெகுஜன அளவில் வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளி மக்களது **வாழ்க்கைத் தரம்** வேகமாய் சரிந்து செல்கிறது.

முதலாளித்துவத்தில் காலச்சுழல் நிகழ்வு முறையில் நெருக்கடி ஏற்படுகிறது. பொருள் உற்பத்தி சமூகத் தன்மையதாய் இருக்க, உற்பத்திப் பொருள்களின் சுவீகரிப்பு தனியார் முதலாளித்துவ வடிவில் நடைபெறும். இந்த முரண்பாடுதான் முதலாளித்துவத்தில் காலம் தவறாமல் ஏற்படுகிற பொருளாதார நெருக்கடிக்கான காரணமாகும்.

**முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி** உலக முதலாளித்துவ அமைப்பில் பொருளாதாரம், அரசியல் வாழ்க்கை சித்தாந்தம் ஆகிய யாவும் தழுவிய அளவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியாகும். இந்த நெருக்கடி முதலாம் உலக யுத்தத்தின் போது (1914–18), முக்கியமாய் முதலாளித்துவ அமைப்பிலிருந்து ருஷ்யா முறித்துச் சென்ற பின் ஆரம்பமாகியது. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு பல ஐரோப்பிய, ஆசிய நாடுகள் முதலாளித்துவத்தின் பிடியை விட்டகன்று **உலக சோஷலிச அமைப்பு** உருவாகியதும் இந் நெருக்கடி மேலும் தீவிரமடைந்தது. காலனியாதிக்க அமைப்பின் சிதைவு முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியை மிகக் கடுமையாக்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நே

**நேட்டோ:** (NATO)—பார்க்கவும்: **வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம்.**

ப

**பகைமை நிலை:** (Antagonism)—இணக்கம் காண முடியாத முரண்பாடு. சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில் பகைமை நிலையானது சுரண்டுவோருக்கும் சுரண்டப் படுவோருக்கும் இடையிலும், ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப் பட்டோருக்கும் இடையிலும் நடைபெறுகிற போராட்டத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. புரட்சிகர வழியில்தான், சமுதாயப் புரட்சியின் மூலம்தான் இந்த முரண்பாட்டுக்குத் தீர்வு காணமுடியும்.

**பங்கு விற்பனைக் களம்:** (Stock-Exchange) - பார்க்கவும்: விற்பனைக் களம்.

**படைக்கலக் குறைப்பு** (Disarmament)—போர் புரிவதற்கான சாதனங்களை அறவே ஒழித்தோ, கணிச அளவில் குறைத்தோ, யுத்த அபாயம் அகற்றப்படுவதற்கு வழிகோலுவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள். பிரம்மாண்ட சக்தி வாய்ந்த அணு ஆயுதங்களும் வெகுஜன நாசம் விளைவிக்கும் பிற ஆயுதங்களும் இருந்து வருகிற தற்கால நிலைமைகளில், படைக்கலக் குறைப்புப் பிரச்சினை அவசரத் தீர்வு காண வேண்டிய மிக முக்கிய சர்வதேசப் பிரச்சினையாகி விடுகிறது. சோஷலிச நாடுகளின் அரசாங்கங்களும் உலகெங்கும் உள்ள முற்போக்கு சக்திகளும் படைக்கலக் குறைப்பை ஆதரித்து முரணின்றி செயல்பட்டு வருகின்றன.

ஆயுத உற்பத்திப் போட்டியை ஓரளவு மட்டுப்படுத்துகிற பல சர்வதேச ஒப்பந்தங்கள் சோவியத் யூனியனது முன்



முயற்சியின் விளைவாக முடிவாகியுள்ளன. வெளி மண்டலத்திலும் புறவெளியிலும் நீருக்கு அடியிலும் அணு ஆயுதச் சோதனைகளுக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தம் (1963), சந்திரனும் ஏனைய விண்கோள்களும் அடங்கலான புறவெளியில் ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் அரசுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆளும் கோட்பாடுகள் குறித்த உடன்படிக்கை (1967), அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் உடன்படிக்கை (1968), அணு ஆயுதங்களையும் வெகுஜன நாசம் விளைவிக்கும் ஏனைய ஆயுதங்களையும் கடலினுள்ளோ, கடலுக்கு அடியில் தரையிலோ, கடலின் தரைக்கடியிலோ பொருத்தி வைப்பதற்குத் தடைவிதிக்கும் உடன்படிக்கை(1971), நுண்கிருமி (உயிரியல்) ஆயுதங்கள், நச்சு ஆயுதங்களின் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் சேமிப்புக்கும் தடை விதிப்பதும், அவற்றை அழிப்பதும் பற்றிய ஒப்பந்தச் சட்டம் (1972), சுற்றுச் சார்பை மாற்றியமைக்கும் வினை நுட்பங்கள் இராணுவ காரியங்களுக்காகவோ பிற பகைக் காரியங்களுக்காகவோ உபயோகிக்கப்படுவதற்குத் தடை விதிக்கும் ஒப்பந்தச் சட்டம் (1978) போன்ற பலவற்றையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். போர்க் கேந்திரப் படைக்கலன்களுக்கும் அணு ஆயுதச் சோதனைகளுக்கும் வரம்பிடுவதற்கான சோவியத்-அமெரிக்கப் பேச்சுகள் படைக்கலக் குறைப்புக்கான போராட்டத்தில் முக்கிய இடம் வகிப்பவை. படைக்கலக் குறைப்புக்காகப் போராடுவது சோவியத் அயல்துறைக் கொள்கையின் பிரதான கோட்பாடுகளில் ஒன்றாகும். (பார்க்கவும்: **பதற்றத் தணிவு.**)

**பண்ட ஏற்றுமதி:** (Export of Commodities)—மிக அதிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களில் ஒரு பகுதியை இந்நாடுகளது தேசிய எல்லைகளுக்கு வெளியே விற்பனை செய்தல். இந்த நாடுகளுக்குள் அதிக இலாபம் தரும் விற்பனைச் சந்தைகள் கிடைக்கப் பெறாத பண்டங்களை மிக அதிக இலாபம் கிடைக்கும்படி விற்க வேண்டுமென்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்ட ஏற்றுமதி நடைபெறுகிறது. (பார்க்கவும்: **முதலாளித்துவ இணைப்பு**).

**பண்டக் குவிப்பு:** (Dumping)—உள் நாட்டுச் சந்தையில் உள்ள விலைகளுக்கும், அடிக்கடி அடக்கச் செலவுக்கும் குறைவான விலைகளில் அந்நியச் சந்தைகளில் பண்டங்களை விற்றல். முதலாளித்துவ **ஏகபோகங்கள்** ஏற்றுமதிகளை விரிவாக்கவும், போட்டியாளர்களைக் கவிழ்க்கவும், அந்நியச் சந்தைகளைத் தம் பிடிக்குள் கொண்டு வரவும், மற்றும் உள்நாட்டில் பண்ட வழங்கலைக் குறைத்து உயர்ந்த ஏகபோக விலைகளை நிலைநாட்டவும் இந்த உத்தியைக் கையாளுகின்றன.

பண்டக் குவிப்பால் ஏகபோகங்களுக்கு இலாபங்கள் உயருகின்றன, உழைப்பாளி மக்கள் அதிக விலைகளும் வரிகளும் தரவேண்டியிருப்பதால் அவர்களது **வாழ்க்கைத் தரம்** குறைகின்றது. பண்டக் குவிப்பால் போட்டியாளர் நாடுகளில் வேலையின்மை அதிகமாகி விடுகிறது.

**பண்டச் சந்தை:** (Commodity Exchange)—பார்க்கவும்: **விற்பனைக் களம்.**

**பண மதிப்புக் குறைப்பு:** (Devaluation)—**தேசியச் செலாவணியின்** தங்க உள்ளடக்கம் அதிகார பூர்வமாகக் குறைக்கப்படுதலும், இதனால் வாங்கு சக்தி வீழ்ச்சியுற்று வெளிநாட்டுச்செலாவணிகளுடனுன அதன் பரிமாற்ற விகிதம் (Exchange rate) ஒத்த அளவுக்குக் குறைந்து போதலும். **பண வீக்கமும் செலாவணி நெருக்கடியும்** ஏற்படுகிற ஒரு காலத்தில் பணப் புரள்வை நிலைபெறச் செய்யும் பொருட்டு பண மதிப்புக் குறைக்கப்படுமாயின், நுகர்வுப் பண்டங்களின் சில்லறை விலைகள் உயர்ந்து, உழைப்பாளி மக்களது உண்மைச் சம்பளம் குறைந்து போகிறது.

**பண வீக்கம்:** (Inflation)—பண ஆக்க அமைப்பினுள் உபரிக் காகிதப் பணத்தைப் பெருக்கெடுக்கச் செய்தல். இதன் விளைவாய் சில்லறை விற்பனை விலைகள் உயருகின்றன,



உண்மைச் சம்பளங்கள் குறைகின்றன. ஊக வாணிபம் வளருகிறது. சிறு உற்பத்தியாளர்கள் நசித்துப் போகிறார்கள்.

**பதற்றத் தணிவு:** (Detente)—'தெத்தாந்த்' என்பது 'தளர்வு' அல்லது 'தணிவு' என்று பொருள் படும் பிரெஞ்சுச் சொல். பதற்றத் தளர்வு என்றால் சர்வதேச நெருக்கடி தணிவு என்று அர்த்தம் ''வலு அரசியலுக்கும்'' ''கெடுபிடி யுத்தக்'' கொள்கைகளுக்குமான சர்வதேச உறவுகளை விட்டகன்று, மாறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளிடையிலான **சமாதான சகவாழ்வுக்கும்** சமத்துவத்தின் அடிப்படையிலான ஒத்துழைப்புக்கும் மாறி வருதலை இது குறிக்கிறது. சர்வதேசத் தகராறுகளுக்கு வன்முறையின் பிரயோகத்தையோ, அச்சுறுத்தலையோ கைக்கொள்ளாமல் சமாதான வழியிலான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகாணத் தயாராய் இருத்தலைப் பதற்றத் தளர்வு குறிக்கிறது. ஓரளவு பரஸ்பர நம்பிக்கையையும் ஒருவர் மற்றவரது நியாயமான நலன்களை மதித்து நடக்கக் கூடியவராய் இருத்தலையும் அது குறிக்கிறது. பதற்றத் தணிவைத் தொடர்ந்து முதலாளித்துவ நாடுகளுக்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையில் பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், சுற்றுச் சார்பின் பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு வளரத் தொடங்குகிறது; கலாசாரம், தகவல், கல்வித் துறைகளில் பரிமாற்றங்களும் தனியாட்களிடையிலும் நிறுவனங்களுக்கிடையிலும் தொடர்புகளும் ஓங்குகின்றன.

அரசியல் பதற்றத் தளர்வோடு கூட இராணுவப் பதற்றத் தளர்வும் ஏற்பட்டு, **ஆயுத உற்பத்திப் போட்டி** நிறுத்தப் படாவிட்டாலும் குறைக்கப்படவேனும் வேண்டுமென்றும், பொதுவான பூரண **படைக்கலக் குறைப்பை** நோக்கி முன்னேற்றம் கைகூட வேண்டுமென்றும், இராணுவ மோதல் உண்டாகும் அபாயம் குறைக்கப்பட வேண்டுமென்றும் சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் வற்புறுத்துகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1975 ஆகஸ்டில் ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஐரோப்பிய பாதுகாப்புக்கும் ஒத்துழைப்புக்குமான மாநாடு பதற்றத் தணிவை மேலோங்கச் செய்வதில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். இந்த மாநாட்டில் 35 நாடுகளின் அரசு அல்லது அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் கையொப்பமிட்ட முடிவு ஆவணம் ஐரோப்பாவில் நிறுவப்பட்ட அரசு எல்லைகள் மீற முடியாதவை என்பதை வலியுறுத்தியது; சமாதான சகவாழ்வில் அரசுகளுக்கு இடையிலான உறவுகளுக்குரிய கோட்பாடுகளை எடுத்துரைத்தது; பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், தகவல்துறை, நேரடித்தொடர்புகள் முதலானவற்றில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளைக் குறிப்பிட்டது; பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் இராணுவத் துறையிலான நடவடிக்கைகளையும் அது வரையறுத்தது

(பார்க்கவும்: **படைக்கலக் குறைப்பு**)

**பயங்கரவாதம்:** Terrorism—அச்சுறுத்தலும், ஆளைக் கொல்லும் அளவுக்குச் செல்லும்படியான வன்முறையைப் பிரயோகித்தலுமாகிய கொள்கையை அரசியல் எதிராளிகளின் மீது ஏவி விடுதல். பயங்கரவாதத்தால் எந்த சமூகப் பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படுவதில்லை. மார்க்சிய-லெனினியக் கட்சிகள் பயங்கரவாதத்தை எதிர்க்கின்றன.

**பரஸ்பரப் பொருளாதார உதவிக் கவுன்சில்:** (Council for Mutual Economic Assistance (CMEA)—சோஷலிச நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சியையும் சோஷலிசப் பொருளாதார இணைப்பையும் வளர்த்து பொருளாதார வளர்ச்சியில் அந்நாடுகளின் நிலைகளைப் படிப்படியாகச் சீராக்குவதற்காகவும், அந்நாடுகளது மக்களின் நல்வாழ்வை மேலோங்கச் செய்வதற்காகவும் 1949-ல் நிறுவப்பட்ட சோஷலிச சர்வதேச நிறுவனம்.

இச் சபையின் உறுப்பினர் நாடுகளாவன: பல்கேரியா, கியூபா, செக்கோஸ்லோவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, மங்கோலியா, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன், வியத்நாம். சோஷலிச சர்வதேச உழைப்புப் பிரிவினை மூலமும், தேசப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை ஒருமுகப்படுத்திக் கொள்வதன் மூலமும், பொருள் உற்பத்தியில் தனித் தேர்ச்சி மூலமும் ஒத்துழைப்பு மூலமும் இச் சபையின் நோக்கங்கள் நிறைவேற்றப் படுகின்றன. வளரும் நாடுகள் ஏகாதிபத்திய அரசுகளிடமிருந்து பொருளாதார சுயேச்சை பெற்று சமூக முன்னேற்றம் அடைவதற்கு இச்சபையைச் சேர்ந்த நாடுகள் பல வழிகளிலும் உதவுகின்றன.



**பரிணாமம்:** (Evolution)—இயற்கையிலும் சமுதாயத்திலும் இயக்கத்துக்கும் வளர்ச்சிக்குமான வடிவங்களில் ஒன்று. படிப்படியான அளவு மாற்றங்கள் முடிவில் ஒரு புதிய பண்பு உதிப்பதற்கு வழிகோலும் வளர்ச்சி இது. புரட்சியானது அளவு மாற்றங்களிலிருந்து பண்பு மாற்றத்துக்கு ஏற்படும் பாய்ச்சலைக் குறிப்பதாகும். பரிணாமமும் புரட்சியும் இயற்கையிலும் சமுதாயத்திலும் ஏற்படுகிற இயக்கத்துக்கும் வளர்ச்சிக்குமான ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வடிவங்களாகும்.

**பறிமுதல்:** (Expropriation)— கட்டாய முறையில் சொத்தைப் பராதீனமாக்குதல். உதாரணம்: **சோஷலிசப் புரட்சியின்** போது **உற்பத்திச் சாதனங்களிலான உடைமையை** முதலாளிகளிடமிருந்தும் பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்தும் கட்டாய முறையில் பறித்திடுவது.

**பன்னாட்டு இணையங்கள்:** (Multinational Corporations)—பல முதலாளித்துவ வளரும் நாடுகளிலும் கிளைகளையுடைய பன்னாட்டு ஏகபோகங்கள் எனப்படுகிற சர்வதேச முதலாளித்துவக் கம்பெனிகள்.

பன்னாட்டு இணையங்கள் தாம் ஏற்றுமதி செய்யும் மூலப் பொருள்கள், இயந்திர சாதனங்களது விலைகளை உயர்த்தியும், தமது பண்டங்களை ஏற்றுமதிச் சந்தைகளில் குவித்தும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவை செயல்படுகிற நாடுகளது தேசப் பொருளாதாரங் களுக்குத் தீங்கிழைக்கின்றன. உலக சந்தைகளில் அந்நாடு களின் நிலைகளைப் பலவீனப்படுத்துகின்றன.

### பா

**பாசிசம்:** (Fascism)—முதலாளித்துவத்தின் பொது நெருக் கடி ஏற்பட்ட காலத்தில் முதலாளித்துவ நாடுகளில் தலைதூக்கிய அரசியல் போக்கு. ஏகாதிபத்திய முதலாளித் துவ வர்க்கத்தின் மிகவும் பிற்போக்கான, மிகுந்த ஆக்கிர மிப்புத் தன்மை வாய்ந்த சக்திகளின் நலன்களை இப் போக்கு பிரதிபலிக்கிறது. ஆட்சியதிகாரம் பெறும் பாசிசம் இச்சக்திகளது அப்பட்டமான பயங்கரவாத சர்வாதிகார மாகும். மித மிஞ்சிய தேசிய வெறியும், நிறவெறியும், கம்யூனிஸ்டு-எதிர்ப்பும், ஜனநாயக சுதந்திரங்களது ஒழிப் பும், சமூக வாய்வீச்சும், குடிமக்களது பொது வாழ்வின் மீதும் தனிப்பட்ட சொந்த வாழ்வின் மீது கண்டிப்பு வாய்ந்த கட்டுப்பாடும் பாசிசத்துக்குரிய குணாதிசயங்கள் ஆகும். ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கும் ஏகாதிபத்திய வழியிலான நாடு பிடித்தலுக்குமான கொள்கைதான் பாசிசம் பின்பற்றும் அயல்துறைக் கொள்கை.

முதலாவது பாசிஸ்டு ஆட்சி 1922-ல் இத்தாலியில் நிறுவப்பட்டது. 1933-ல் ஜெர்மனியிலும் 1939-ல் ஸ்பெ யினிலும் பாசிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்தனர். இரண் டாம் உலக யுத்தத்தில் (1939-45) பாசிஸ்டு அரசுகளின் கூட்டுக்கு ஏற்பட்ட இராணுவத் தோல்வியைத் தொடர்ந்து இத்தாலியிலும் நாஜி ஜெர்மனியிலும் பாசிஸ்டு ஆட்சிகளும் பாசிஸ்டு பாணியில் மற்றும் பல நாடுகளில் இருந்த ஆட்சி களும் தகர்ந்து போயின. 1974 ஏப்ரலில் போர்த்துகலில் பாசிஸ்டு ஆட்சி கவிழ்க்கப் பட்டது; 1967 ஏப்ரல் முதல் கிரீஸில் இருந்த பாசிஸ்டு ஆட்சி 1974 ஜூனில் தகர்ந்து போயிற்று; பிரான்கோ இறந்தபின் (1975 நவம்பர்)



ஸ்பெயினில் பாசிஸ்டுஆட்சி வீழ்ச்சியுற்றது—இந்நிகழ்ச்சிகள் யாவும் இன்றைய சூழ்நிலைமையில் பாசிஸ்டு ஆட்சிகள் எவ்வளவு பலவீனமானவை என்பதற்குச் சான்றுகளாகும். ஆயினும் சிலியில் 1975 செப்டம்பரில் இராணுவ பாசிஸ் டுகள் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பும், பல நாடுகளில் பிற் போக்குவாத ராணுவ வட்டாரங்களுக்கு உள்ள செல் வாக்கும், தென் ஆப்பிரிக்கக் குடியரசிலும் நமீபியாவிலும் நடைபெறும் நிற வெறி ஆட்சியும் இன்னோரன்ன பிறவும் உலகின் பல பிராந்தியங்களில் இருந்து வருகிற கடுமையான பாசிஸ்டு அபாயத்தைத் தெளிவு படுத்துகின்றன. பாசிஸ்டு-எதிர்ப்பு சக்திகளது ஐக்கிய அணி நிறுவப்படுவது அவசியமாகும். பாசிசத்துக்கு இந்த ஐக்கிய அணி மிகப் பெரிய தடை மதிலாகும்.

**பாட்டாளி வர்க்கம்:** (Proletariat)—உற்பத்திச் சாதனங்களில் உடைமை இல்லாதோர் ஆக்கப்பட்டு, முதலாளித்துவ உலகில் சுரண்டப்படுகிற கூலி உழைப் பாளர்களது வர்க்கம். முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகிற வர்க்கப் போராட்டம் **சோஷலிசப் புரட்சிக்கு** வழி வகுக்கிறது. சோஷலிசப் புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம்தான் பிரதான இயக்கு விசையாய் அமைந்து உழைக்கும் விவசாயிகளுக்கும் உழைப்பாளி மக்களைச் சேர்ந்த ஏனைய பகுதியோருக்கும் தலைமை தாங்குகிறது.

**பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம்:** (Proletarian Internationalism)—மார்க்சியம்-லெனினியத்தின் அடிப் படைக் கோட்பாடுகளில் ஒன்று. **முதலாளித்துவ வர்க்கத்தின்** ஆட்சியை வீழ்த்துவதற்காகவும், தேச விடுதலைக்காகவும், சமுதாய முன்னேற்றத்துக்காகவும், **சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும்** கட்டியமைப்பதற் காகவும் நடைபெறும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் இடையே நிலவுகிற நலன்களது ஒற்றுமையையும், இவர்களிடையே சக்தி வாய்ந்த சர்வதேச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருமைப்பாடு இருப்பதன் அவசியத்தையும் இந்தக் கோட்பாடு உணர்த்துகிறது. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தேசியப் படைப் பிரிவுகளுக்கான உறவுகளும், கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையிலான உறவுகளும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தால் தான் ஆளப்படுகின்றன. எல்லா நாடுகளின் மக்களது சுதந்திரத்துக்காகவும் சமத்துவத்துக்காகவும் அவர்களது நட்புறவுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் நடைபெறும் போராட்டத்திலும், மற்றும் நிறவெறிக்கும் **தேசிய வெறிக்கும்**, முதலாளித்துவ **தேசியவாதத்துக்கும்** எதிரான போராட்டத்திலும் இவற்றின் ஒருமைப்பாட்டையும் ஒன்றுபட்ட செயல்களையும் இக்கோட்பாடு கோருகிறது. ''மெய்யான சர்வதேசியம் ஒரேயொரு வகைப்பட்டதாகவே இருக்கிறது—அதாவது புரட்சி இயக்கம், புரட்சிப் போராட்டம் அவரவரது **சொந்த** நாட்டில் வளர்ச்சியடைதற்காக முழு மனதுடன் பாடுபட்டுக் கொண்டு, அதே போது இந்தப் போராட்டத்தை, பிரசாரத்தின் மூலமும், அனுதாபத்தின் மூலமும், பொருளாயத உதவியின் மூலமும் ஆதரிப்பது தான், இது ஒன்று மட்டும்தான், விதிவிலக்கு இன்றி **ஒவ்வொரு** நாட்டிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறி'' (வி.இ.லெனின் **நூல் திரட்டு**, தொகுதி 24, பக்கம் 75).

**பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்**: Dictatorship of the Proletariat)—**சோஷலிசப் புரட்சியின்** விளைவாய் நிறுவப்படும் **தொழிலாளி வர்க்க ஆட்சி**. முதலாளித்துவத்திலிருந்து சோஷலித்துக்கு மாற்றம் ஏற்படும் இடைக்காலம் முழுதும் இந்த ஆட்சி நீடிக்கிறது. சோஷலிசத்தைக் கட்டியமைக்க இது அவசியமாகும். தொழிலாளி வர்க்கம் அதனுடைய மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலைமையில் அமைந்து, விவசாயிகளோடும் ஏனைய முற்போக்கு சக்திகளோடும் கூட்டணி கொண்டு செயல்படுவதால் இதைப் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரம் என்றும் அழைக்கிறோம். உழைப்பாளி மக்களுக்கு மிக விரிவான ஜனநாயகத்தை



உறுதி செய்யும் இந்த ஆட்சியதிகாரம், சுரண்டும் வர்க்கங்களது எதிர்ப்பையும் சோஷலிசத்தின் பால் பகைமை கொண்ட கூறுகளின் செயல்களையும் நசுக்குவதற்காக வன்முறையைக் கையாளக்கூடும் என்பதால் இந்த ஆட்சியதிகாரத்தைச் சர்வாதிகாரம் என்கிறோம்.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இதற்கு முன்பு இருந்த எல்லா வகை அரசு அதிகாரங்களிலிருந்தும் மாறுபடுவதாகும். ஏனெனில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சாராம்சம் வன்முறையும் அல்ல, அழித்தலும் அல்ல. புதிய சமுதாயத்தைக் கட்டியமைக்கும் பணியில் உழைப்பாளி மக்களுக்குத் தலைமை தாங்கும் ஆக்க வழிப்பட்ட ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளே அதன் சாராம்சமாகும். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கான இந்த இடைக்காலத்தில் பாட்டாளி வர்க்கமானது விவசாயிகளுக்கும் பொதுவாகக் குட்டி முதலாளித்துவப் பகுதிகளுக்கும் தலைமை தாங்கி அழைத்துச் செல்லும் பொருட்டு, அதற்குத் தேவையானது என்னவெனில், லெனின் கூறியதுபோல், ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் தான்; ஒரு வர்க்கத்தின் ஆட்சியும் ஒழுங்கமைப்புக்கும் கட்டுப்பாட்டுக்குமான அதன் ஆற்றலும், முதலாளித்துவத்தின் கலாசாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் எல்லா சாதனைகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்த அதன் மையத்துவ ஆட்சியதிகாரமும், உழைப்பாளி ஒவ்வொருவரின் மனப் பாங்குடன் அதற்குள்ள பாட்டாளி வர்க்க நெருக்கமும் அரசியலில் அதிக உறுதியில்லாதவர்களும் ஐக்கியமடையாத வர்களும் வளர்ச்சி அதிகம் இல்லாதவர்களுமாய் கிராமப் புறத்திலோ, சிறு தொழிலிலோ, உள்ள உழைப்பாளி மக்களிடத்தே அதற்குள்ள செல்வாக்கும் தான்'' (வி.இ.லெனின், நூல் திரட்டு, தொகுதி 29, பக்கம் 389).

அந்தந்த நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்ப அதன் பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்கும், வர்க்க சக்திகளது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பரஸ்பர நிலைக்கும் சோஷலிசப் புரட்சி நடந்தேறியது சமாதான வழியிலா அல்லது சமாதானமல்லாத வழியிலா என்பதற்கும், தேசிய மரபுகளுக்கும் ஏற்ப—பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் வெவ்வேறு வடிவங்களை ஏற்கிறது. சுரண்டும் வர்க்கங்கள் அகற்றப்பட்ட பின் (உழைப்பாளி மக்களாய் அவை மாற்றமடைந்த பின்) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் **அரசு** அனைத்து மக்களின் அரசுக்கான வடிவத்தைப் படிப்படியாக ஏற்கிறது. அனைத்து மக்களின் அரசில் தொழிலாளி வர்க்கம், தொடர்ந்து தலைமைப் பாத்திரம் வகிக்க ஆட்சியதிகாரமானது உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் உரியதாகி விடுகிறது.

**பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணி:** (Historic Mission of the Proletariat)—உலக வரலாற்றில் தொழிலாளி வார்க்கத்துக்கு உள்ள தனிப்பெரும் பணி. முரணின்றி உறுதியுடன் **முதலாளித்துவத்தை** எதிர்த்துப் போராடுகிற சக்தியான தொழிலாளி வர்க்கம் உழைப்பாளி மக்கள் அனைவரின் புரட்சிப் போராட்டத்துக்கு இயல்பாகவே தலைமை தாங்குகிறது. இம்மக்களுடன் கூட்டணி கொண்டு **சோஷலிசப் புரட்சியை** நடத்தி, தனது ஆட்சியதிகாரத்தை நிறுவி, சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டியமைக்கும் காலத்தில் தலைமையான சமூக சக்தியாகச் செயல்படுகிறது.

**பாரிஸ் கம்யூன்:** (Paris Commune)—வரலாறு கண்ட முதலாவது பாட்டாளி வர்க்கப் புரட்சி, முதலாவது தொழிலாளர் அரசாங்கம். பாரிசில் 72 நாட்களுக்கு (1871 மார்ச் 18 முதல் மே 28 வரை) நீடித்தது.

பாரிஸ் கம்யூன் நிறுவப்பட்டதும் அரசின் பழைய பொறியமைவு கலைக்கப்பட்டது; அரசுப் பணியாளர்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டார்கள்; பாரிஸ் கம்யூன் அரசு



ஊழியர்களின் சம்பளங்கள் சராசரித் தொழிலாளரது சம்பளத்துக்கு மேற்படாதவாறு அவற்றுக்கு வரம்பிடப்பட்டது. பழைய அமைச்சரகங்களுக்குப் பதில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணைக் குழுக்களால் அரசாங்க விவகாரங்கள் நிர்வகிக்கப்பட்டன. நெறியாண்மை புரிந்த தலைமை உறுப்பு செயற்குழுவாகும் (மே 1 முதல் தேச விமோசனக் கமிட்டி இதைச் செய்தது). நிரந்தர சேனை, போலீஸ், காவல் படை ஆகியவை கலைக்கப்பட்டன.

பாரிஸ் கம்யூனுக்கு விரோதமான செய்தியேடுகளும் பத்திரிகைகளும் மூடப்பட்டன. ஆலைத் தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களது உழைப்புக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், குறைந்த சம்பளத்துக்குரிய உழைப்பாளர்களின் சம்பளங்களை உயர்த்துவதற்கும், ஆலைகளில் **தொழிலாளர் கண்காணிப்பை** நிறுவுவதற்குமான நடவடிக்கைகளைப் போன்ற முக்கியமான சமூக, அரசியல் நடவடிக்கைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டன. ஆலைகளை மூடிவிட்டுப் பாரிசிலிருந்து ஓடிவிட்ட ஆலையதிபர்களது ஆலைகளைத் தொழிலாளர் வசம் ஒப்படைக்கும் அரசாணை வெளியிடப்பட்டது.

ஆயினும் திட்டவட்டமான வேலைத் திட்டம் இல்லாததாலும், போர்த் தந்திரம் சரிவர அமையாமல் தவறுகள் இழைக்கப்பட்டதாலும், கருத்து வேறுபாடுகள் எழுந்ததாலும், தொழிலாளி வர்க்கத்தின் முதிர்ச்சியின்மையாலும், இன்ன பிற காரணங்களாலும் பாரிஸ் கம்யூன் விரைவில் தோற்கடிக்கப்பட்டது. எனினும் பாரிஸ் கம்யூன் முதலாளித்துவத்துக்குக் கிடைத்த முதலாவது பெரிய அடியைக் குறித்தது. முதலாளித்துவம் ஒழிவது திண்ணம் என்பதற்குக் கட்டியம் கூறியது. பாரிஸ் கம்யூன் அனுபவமானது விஞ்ஞான சோஷலிசத்தின் தத்துவத்தின் வளர்ச்சிக்கும், தொழிலாளி வர்க்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பி

**பிரசாரம்:** (Propaganda)—கருத்துக்கள், தத்துவங்கள், போதனைகள் ஆகியற்றை மக்களது உறுதியான மனத் துணிபுகள் ஆக்கும் வண்ணம் அவற்றை அவர்களிடையே பரவச் செய்தலும் விளக்கிச் சொல்லுதலும். பத்திரிகை களும் ஏனைய பிரசார சாதனங்களும் அவற்றை விரிவான மக்கள் பகுதியோரிடத்தே எடுத்துச் செல்கின்றன. ஆகவே வர்க்கப் போராட்டத்தில் பிரசாரம் சக்தி வாய்ந்த ஓர் ஆயுதமாகும்.

**பிளாங்கீயம்:** (Blanquism)—லுயீ ஒகஸ்த் பிளாங்கீ என்ற பிரெஞ்சு நாட்டுப் புரட்சியாளரின் பெயரைத் தாங்கிய ஓர் அரசியல் போக்கு. பிளாங்கியர்கள் பாட்டாளி வர்க்கத்தினுடைய **வர்க்கப் போட்டம்** தேவையற்றதாகு மென நிராகரித்தார்கள். வெகுஜனத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாட்டாளி வர்க்கக் **கட்சி** புரட்சியின் வெற்றிக்கு அவசியமாகும் என்பதை அவர்கள் மறுத்தார்கள். புரட்சிகர வர்க்கத்துடன் தொடர்பு கொண்டிராத குறுகலான சதிகாரர்களது கோஷ்டியாலேயே, **புரட்சிகரச் சூழ்நிலை**, இல்லாதபோதுங் கூட வெற்றிகரமான எழுச்சியை நடத்தி ஆட்சியதிகாரம் கைப்பற்ற முடியுமென அவர்கள் நம்பினர்கள்.

**பிர்ச்சுக்காரர்கள்:** (Birchites)—நிறவெறி கொண்ட பாசிஸ்டுப் பயங்கரவாதக் கழகமாகிய ஜான் பிர்ச் கழகம் என்பதன் உறுப்பினர்கள். அமெரிக்க சமயச் சபைப் பிர முகரும் உளவு இலாகா அலுவலருமான ஜான் பிர்ச்சின் பெயரைக் கொண்ட இந்தக் கழகம் 1958-ல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிறுவப்பட்டது. கடை கோடியான பிற் போக்குவாத நவீன பாசிஸ்டுகளது நிறுவனமாகச் செயல் படும் இதன் உறுப்பினர்கள் ஜனநாயக நிறுவனங்களை எதிர்த் துப் போராடுகிறார்கள், அமெரிக்க ஐக்கிய நாட்டில் பாசிஸ் டுப் பாணியிலான சர்வாதிகார அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்கிறார்கள். நிற மக்கள் மீதும், பிரஜா உரிமைக்காகப் போராடுவோர் மீதும் முற்போக்கு வாதிகள் மீதும் தாக்குதல் தொடுத்து அவர்களை வேட்டையாடு கின்றனர்.



## பு

**''புதிய இடதுசாரி'':** (''New Left'')—அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த இளம் அறிவுத் துறையோரும் மாணவ மாணவியருமான இவர்கள் தீர்மானகரமான முற்போக்கு மாறுதல்கள் வேண்டுமெனப் பாடுபடு கிறவர்கள். நிறவெறியை ஒழுக்கநெறிக் கண்ணோட்டத் திலிருந்து கண்டிக்கவும், பல்கலைக் கழகங்களில் ஜனநாயகம் இல்லாத நிலையை எதிர்த்துக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தவும் முற்பட்ட இவர்கள், விரைவில் முதலாளித்துவ சமுதாயத்தின் பல கூறுகளையும், இச் சமுதாயத்தின் சித்தாந்தத்தையும் அரசாங்கக் கொள்கையையும் கண்டிக்க ஆரம்பித்தார்கள். ஜனநாயக சமுதாயத்துக்கான மாணவர்கள் என்பதுதான் அமெரிக்கப் ''புதிய இடதுசாரி யினரது'' தலைமையான நிறுவனம். கறுப்பு நிற மக்களது உரிமைகளைப் பாதுகாத்தலும், நிறப் பாகுபாட்டை ஒழித்தலும், ஜனநாயக சுதந்திரங்களைப் பெறுதலும் இந்த நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

**புதிய காலனியாதிக்கம்:** (Neo-colonialism)—ஏகாதி பத்திய நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடை யிலுள்ள உறவுகளாலான அமைப்பு. புதிதாக சுதந்திர மடைந்த நாடுகளைச் சுரண்டுவதும் இந்நாடுகளது சுயேச் சைக்குக் குழிபறித்திடுவதுமாகிய ஏகாதிபத்தியக் கொள்கையே இதன் சாரம். ஏகாதிபத்திய நாடுகள் முன்னாள் காலனிகளை மறைமுகமான வடிவில் தமது பொருளாதார, அரசியல் பிடிக்குள் இருத்தி வைத்துக் கொள்ளும் கொள்கையாகும் இது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாம் உலக யுத்தத்துக்கு (1939-45) பிற்பாடு **ஏகாதிபத்தியத்தின்** காலனி யாதிக்க அமைப்பு சிதைந்த போது இந்தப் புதிய காலனியாதிக்கம் உருப்பெற்று எழுந்தது. அந்நியக் கம்பெனிகளுக்குச் சொந்தமாயிருக்கும் **உற்பத்திச் சாதனங்கள்** இந்தப் புதிய காலனியாதிக்கத் திற்குப் பொருளாயத அடித்தளமாகவும், உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்குவாத மேல் அடுக்கு இதன் சமூக அடித்தளமாகவும் அமைகின்றன. ஏகாதிபத்திய **ஏகபோகங்கள்** பொருளாதார ஆதிக்கம் புரிதலும், ஏகாதிபத்திய வாதிகளுக்கு அரசியல் சலுகைகள் அளிக்க வேண்டும் என்கிற நிபந்தனையின் பேரில் பொருளாதார ''உதவி'' வழங்குதலும், வெகுஜனங் களது கவனத்தை தேச விடுதலைப் போராட்டத்திலிருந்து திருப்பிவிடும் பொருட்டு தேசிய இன, குலக் குடிப் பூசல்களையும் அரசியல் போட்டா போட்டியையும் தூண்டி விடுதலும், ஜனநாயக-விரோத ஆட்சிகளைப் பலவந்தமாய் மக்கள் மீது திணிப்பதும், **தலையிடுதலும்**, உளவு வேலைகளில் ஈடுபட்டுச் சதிகள் புரிதலும் குழிபறித்தலும், முற்போக்கான தலைவர்கள் கொல்லப்படுவதற்கு ஏற்பாடு செய்தலும் இன்ன பிறவுமே புதிய காலனியாதிக்கத்துக் குரிய முறைகள் ஆகும்.

**புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு:** (New International Economic Order)—நியாயமான கோட்பாடு களின் அடிப்படையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளைத் தீவிரமாகத் திருத்தியமைப்பதற்காக **வளரும் நாடுகள்** முன்வைத்திருக்கும் வேலைத் திட்டம். புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு மூலப் பொருள்களின் சந்தைகளை ஒழுங்கு செய்ய விரிவான வேலைத் திட்டத்தை வகுத்தளிக் கிறது. வளரும் நாடுகளில் **பன்னாட்டு இணையங்களும்** அந்நிய மூலதனமும் புரிந்து வருகிற கொள்ளைக்காரச் செயற்பாடுகளுக்குக் கடிவாளமிட்டுக் கட்டுப்படுத்துகிறது.

மூலப் பொருள்களின் விலைகளுக்கும் இயந்திரத் தொழில்களது உற்பத்திப் பண்டங்களின் விலைகளுக்கும் இடையே நியாயமான ஒத்திசைவை உண்டாக்குவதற்கும் வெளிநாடுகளுடனான பொருளாதாரப் பிணைப்புகளை பரஸ்பரம் அனுகூலமான பரிமாற்றத்துக்கு வகை செய்வன வாய் மாற்றியமைப்பதற்கும், மூலப் பொருள்களில் விலைச் சரிவைத் ''தடுத்தாளும்'' கையிருப்புகளை அமைப்பதற்கும், அவற்றுக்கு நிதிவசதி அளிக்கும் தனி நிதியினை நிறுவுவதற்கும் மேற்கூறிய விரிவான வேலைத் திட்டம் வகை செய்கிறது. ஆனால் சர்வதேசப் பொருளாதார உறவுகள் திருத்தியமைக் கப் படுவதுடன் கூடவே, அவசியமாகத் தேவைப்படும் உள் நாட்டுப் பொருளாதார, சமுதாய மாறுதல்களுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்பது கூறாமல் விடப்படுவது இந்த வேலைத்திட்டத்தின் குறைபாடுகளில் ஒன்றாகும். இந்த வேலைத்திட்டம் மூலப்பொருள்களில் வாணிபத்தின் நிலையின்மையால் ஏற்படுகிற விளைவுகளை நீக்க வேண்டும் என்கிறதே ஒழிய, இந்த நிலையின்மைக்கான காரணங்கள் நீக்கப்பட வேண்டும் என்று நினைக்கவில்லை.

புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளின் பொருளாதாரங் கள் கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுவதாலும், **தொழில் மயமாக்கம்** அதிகமாவதாலும், தொழில்துறையில் வளர்ச்சி பெற்ற நாடுகளுடன் அவற்றின் ஒத்துழைப்பும் தொழில்-நுட்பப் பிணைப்புகளும் விரிவடைவதாலும், வளரும் நாடுகளது பொருளாதார அரசியல் நிலையும் மாற்ற மடைந்து வருகின்றன. எனவே இந்நாடுகள் புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்று கோருகின்றன.

வளரும் நாடுகளது நலன்களுக்கு உகந்த முறையில் புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு நிறுவப்படுவது பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில், **உலக சோஷலிச அமைப்பைச்** சேர்ந்த நாடுகள் முனைப்புடன் அவற்றுக்கு உதவி வருகின்றன.

**புதிய பொருளாதாரக் கொள்கை:** (New Economic Policy—NEP)—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறிச் சென்ற இடைக் காலத்தின் போது சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை. உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலத்தில் (1918-20) கடைப்பிடிக்கப் பட்ட கண்டிப்பு வாய்ந்த பொருளாதாரக் கொள்கையிலிருந்து இது வேறு பட்டதால் ''புதிய'' கொள்கை என்று அழைக்கப் பட்டது. 10 ஆவது கட்சிக் காங்கிரசின் முடிவுப்படி 1921-ல் ஆரம்பமான இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்கள் வருமாறு: பொருளாதாரச் சீர்குலைவைச் சரி செய்தல், தொழிலாளி வர்க்கம் உழைக்கும் விவசாயிகளுடன் கொண்டிருந்த கூட்டணியின் பொருளாதார அடிப்படையைப் பலப்படுத்துதல்; சோஷலிசத் தொழில் துறைக்கும் சிறுவீதச் சாகுபடியின் அடிப்படையில் அமைந்த விவசாயத்துக்கும் இடையே பண்ட, பண உறவுகளை விரிவாக உபயோகிப்பதன் மூலம் பிணைப்புகளை நிறுவுதல்; விவசாயிகளை சோஷலிச நிர்மாணத்தில் பங்கு கொள்ளுமாறு ஈர்த்திடல்; ''உற்பத்தி சக்திகளை அதிகபட்ச அளவுக்கு எழுச்சியுறச் செய்து, தொழிலாளர்கள், விவசாயிகளது நிலையை மேம்பட வைத்தல்'' (வி. இ. லெனின், **நூல் திரட்டு**, ருஷ்யப் பதிப்பு, தொகுதி 43, பக்கம் 398).

புதிய பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட காலம் கடுமையான **வர்க்கப் போராட்டத்துக்கான** காலமாகும். அப்போது முதலாளித்துவம் (பிரதானமாய் வாணிபத்திலும் சிறு தொழிலகங்களிலும்) சோஷலிச அரசின் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத் தற்காலிகமாகப் புத்துயிர்பெற அனுமதிக்கப்பட்டது. 1929-ல் சோவியத் யூனியனில் **விவசாயத்தைக் கூட்டுத்துவமாக்கும்** பணி பெருவாரி அளவில் மேற் கொள்ளப்பட்டது. இதனுடன் கூடவே கிராமப்புறங்களில் முதலாளித்துவ கூறுகள் ஒழிக்கப்படும் பணியும் நடந்தேறியது. நகரங்களிலும் சுரண்லாளர்கள் அகற்றப்பட்டனர் (பார்க்கவும்: சுரண்டும் வர்க்கங்களை ஒழித்தல்). 1930ஆம் ஆண்டுகளின் மத்தியில் சோஷலிசம் வெற்றியடைந்ததும் புதிய பொருளாதாரக்



கொள்கை முடிவுக்கு வந்தது. சோவியத் யூனியனில் புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம் கிடைத்த அனுபவத்தை ஏனைய சோஷலிச நாடுகள், தமது பிரத்தியேக வரலாற்று இயல்புகளையும் தனிப்பட்ட நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, தக்கபடி உபயோகித்துக் கொள்கின்றன.

**புரட்சி:** (Revolution)— 1) வளர்ந்து பெருகிவிட்ட **உற்பத்தி சக்திகளுக்கும் காலத்துக்கு ஒவ்வாததாகிவிட்ட உற்பத்தி உறவுகளுக்கும்** இடையிலான முரண்பாட்டுக்குத் தீர்வு கண்டும், சமூக அமைப்பை தீவிரமாய் மாற்றியும், முன்னேறிய ஒரு புதிய சமூக **வர்க்கத்தை** ஆட்சியதிகாரம் பெறச் செய்தும் அடிப்படையான சமூக மாற்றத்தை உண்டாக்குதல்;

2) ஒரு பண்பு நிலையிலிருந்து வேறொன்றுக்கு மாறிச் செல்லுதல், குறிப்பிட்ட அரங்கில் தீவிர மாற்றத்தை உண்டாக்குதல் (உதாரணமாய், **கலாசார புரட்சி, விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி**).

**புரட்சிகர நிலைமை :** (Revolutionary Situation)—காலங்கழிந்தவையாகிவிட்ட **ஆளும் வர்க்கங்கள்** தமது மேலாண்மையை மாற்றமின்றி அதன் பழைய வடிவத்தில் நிலைநாட்டிக் கொள்ள முடியாதவாறு வர்க்க சக்திகளது பரஸ்பர நிலை அமைந்திருக்கும்படியான ஓர் அரசியல் சூழ்நிலை. ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் கடுமையான அளவுக்கு இழப்புக்கு உள்ளாகி வதைபடுதலும், வெகுஜனங்களது புரட்சிகரச் செயல்களுக்குத் தலைமை தாங்கும் வல்லமை படைத்த முற்போக்கு வர்க்கத்தின் அரசியல் செயற்பாடுகள் வெகுவாய் அதிகரித்துவிடுதலும் புரட்சிகர நிலைமைக்குரிய குணாதிசயமாகும்.

**புரட்சிகர விழிப்புணர்ச்சி :** (Revolutionary Vigilance) **முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும்** இடையே கடுமையான வர்க்கப் போராட்டம் நடைபெறுகிற நிலைமைகளில் எங்கிருக்கிறோம் என்று புரிந்து கொள்வதற்கும், புரட்சியின் பகைவர்களை இனங்கண்டு கொண்டு அவர்களை முடக்கி வைப்பதற்குமான ஆற்றல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**புரட்சிகர ஜனநாயகம்** : (Revolutionary Democracy) —பிரபுத்துவ-எதிர்ப்பு, ஏகாதிபத்திய-எதிர்ப்பு, முதலாளித்துவ-எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதர வளிக்கும் நகரக் **குட்டி முதலாளித்துவப் பகுதிகளையும் விவசாயிகளையும்**, முற்போக்கான **அறிவுத் துறையினரையும்** சேர்ந்த செயல் வன்மை வாய்ந்தவர்களால் ஆன அரசியல் சக்தியும், மற்றும் இப்பகுதியோரது நலன்களைப் பிரதி பலிக்கும் கட்சிகளும், நிறுவனங்களும் கோஷ்டிகளும்.

**தொழிலாளி வர்க்கம்** இன்னும் உருவாகிற கட்டத்தில் இருக்கும் நாடுகளில் புரட்சிகர ஜனநாயகம் தொழிலாளர் களையும் தன்னுள் கொண்டுள்ளது.

**புராதன சமுதாய அமைப்பு**: (Primitive Communal System)—மனித வரலாற்றில் முதலாவதான **சமூக பொருளாதார அமைப்பு. உற்பத்திச் சாதனங்களில்** பொது **உடைமையும்**, வர்க்கங்கள் இல்லாமையும் மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாமையும் இந்த அமைப்பின் சிறப்பு இயல்புகள். இந்த அமைப்பில் **உற்பத்திச் சாதனங் கள்** பொது **உடைமையாய்** இருந்தன. வர்க்கங்களும் மனி தனை மனிதன் சுரண்டுவதும் இருக்கவில்லை. **உற்பத்தி சக்திகள்** வளர்ச்சியில் மிகவும் கீழ் நிலையிலும், சமூக உறவுகள் இதற்கு ஏற்பவும் இருந்தன. புராதன சமுதாய அமைப்பு சிதைந்தபின் அதனிடத்தில் **அடிமையுடைமை அமைப்பு** தோன்றியது.

## பெ

**''பெட்ரோ டாலர்கள்''**: (Petro-dollars)— எண்ணெய் ஏற்றுமதி செய்கிற **வளரும் நாடுகள்** எண்ணெயும் எண்ணெய்ப் பொருள்களும் விற்பதன் மூலம் திரட்டி வைத்திருக்கிற டாலர்கள் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளது நிறுவனத்தில் (Organisation of Petroleum Exporting countries)—சுருக்கமாய் (OPEC)— ஒன்றுபட்டுள்ள நாடுகள் தமது இயற்கைச் செல்வா தாரங்கள்மீது தக்கபடி தமது கட்டுப்பாட்டை நிறுவிக்



கொண்டதோடு, வரிசையாகப் பலதரம் எண்ணெய் விலையை உயர்த்திக் கொண்டு விட்டன. கடந்த காலத்தில் மேலைய ஏகபோக எண்ணெய்க் கம்பெனிகளது கொள்ளைக் காரக் கொள்கையின் விளைவாய் ஏற்பட்டு வந்த கணிசமான பொருள் இழப்புகளை இவ்விதம் இந்த நாடுகள் ஓரளவுக்குச் சரிசெய்வது சாத்தியமாகியுள்ளது.

ஓ.பி.இ.சி. நாடுகள் தமது ''பெட்ரோ டாலர்களில்'' ஒரு பகுதியை எண்ணெய் இறக்குமதி செய்யும் வளரும் நாடுகளுடன் பகிர்ந்து கொள்கின்றன. இந் நாடுகளுக்கு மான்யங்கள் அல்லது இலகுவான நிபந்தனைகளில் கடன்கள் வழங்குவதன் மூலம் இதைச் செய்கின்றன. ஆயினும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் அவற்றின் வளர்ந்து வரும் வருமானங்களை பொருள் உற்பத்தித் திறனுள்ள முறை களில் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகம் பெற்றிருக்கவில்லை. ஆகவே அவை தம்மிடம் எஞ்சுகிற ''பெட்ரோ டாலர்களை'' வளர்ச்சி பெற்ற நாடுகளில் அரசுக் கடன் பத்திரங்களிலும், தொழில், வாணிப, வங்கித்துறைக் கார்ப்பரேஷன்களின் பிணையங்களிலும் (Securities) முதலீடு செய்ய முற்படுகின்றன. ஆனால் தொழில் வளர்ச்சிபெற்ற முதலாளித்துவ நாடுகள் ''பெட்ரோ டாலர்களின்'' வினி யோகத்தைத் தம் பிடிக்குள் இருத்திக் கொண்டு, எண்ணெய் ஏற்றுமதி செய்கிற இளம் நாடுகளைத் தமது செல்வாக்குக்கு உட்படாமல் விலகிவிடாதவாறு பார்த்துக்கொள்ள முயலு கின்றன. இந்த நோக்கத்துடன் அவை அதிக வளர்ச்சி வாய்ப்பில்லாத கம்பெனிகளில் மட்டும் ''பெட்ரோ டாலர் கள்'' முதலீடு செய்யப்படும்படி கவனித்துக் கொள்கின்றன.

## பே

**பேரரசுவாத தேசிய வெறி**: (Great Power Chauvinism) —பெரிய **தேசங்கள்** எனப்படுகிறவற்றின் ஆளும் வர்க்கங் களுடைய கொள்கையும் சித்தாந்தமும் ஆகும். பிற தேசங் களையும் தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்குவதிலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவமதிப்பதிலும், அவற்றின் சுயேச்சை வாழ்வுக்கு முடிவு கட்டுவதிலும், ஒடுக்கப்பட்ட மக்கள்மீது பகைமை வளர்ச்சியைத் தூண்டி விடுவதிலும் இந்தக் கொள்கையும் சித்தாந்தமும் வெளிப்படுகின்றன.

## பொ

**பொதுச் சந்தை:** *(Common Market)*—பார்க்கவும்: **ஐரோப்பியப்** பொருளாதாரக் கூட்டமைப்பு.

**பொதுத் துறை:** *(Public Sector)*—பார்க்கவும்: **அரசுத் துறை.**

**பொது வேலை நிறுத்தம்:** *(General Strike)*– நாடு முழுமையிலோ, அல்லது ஒரு பகுதியிலோ தொழில் துறை, போக்குவரத்து, பொது வழங்கீடு, பொதுச் சேவைகள் முதலானவற்றையும், அல்லது பலவற்றையும் சேர்ந்த தொழிலாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தம். பொது வேலை நிறுத்தத்தின் மிக உயர்ந்த வடிவமே பொது அரசியல் வேலை நிறுத்தம்.

**பொதுவுடைமை:** *(Public Ownership)*—உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமையே சோஷலிச சமுதாயத்தின் பொருளாதார அடிப்படை. சோவியத் யூனியனிலும் ஏனைய சோஷலிச நாடுகள் பலவற்றிலும் பொதுவுடைமையானது பொதுச் சொத்தின் இரு பிரதான வடிவங்களில் காணக் கிடக்கிறது: அரசுச் சொத்து, அதாவது அனைத்து மக்களுக்கும் சொந்தமான சொத்து; கூட்டுறவுச் சொத்து. முதலாளிகளால் சுரண்டப்படும் தொழிலாளர்களது உழைப்பால் உருவாக்கப்பட்ட பெருவீதத் தனியார் சொத்துகள் (அதாவது பெரிய தொழில் நிலையங்கள், விவசாயப் பண்ணைகள், வங்கிகள், சுரங்கங்கள் முதலானவை) சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பின் **பறிமுதல்** செய்யப் பட்டதும், அல்லது **நாட்டுடைமையாக்கப்பட்டதும்** உண்டானதுதான் அரசின் சோஷலிச சொத்து. சொந்த உழைப்பால் உருவாக்கப்பட்ட அல்லது



அடையப்பட்ட சொத்தாகிய விவசாயிகள், கைவினைஞர்களது சிறுவீதத் தனியார் சொத்து, சொந்த விருப்பத்தின் பேரில் நிறுவப்பட்ட கூட்டுறவுகள் மூலம் சமூகமயமாக்கப்பட்டது. கூட்டுறவுச் சொத்தும் கூட்டுப் பண்ணைச் சொத்தும் இவ்வாறே தோற்றுவிக்கப்பட்டன.

இந்த இரு வகைச் சொத்துகளும் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு இடம் அளிக்காதவை. **தேசப் பொருளாதாரம்** அனைத்துக்கும் அரசாங்கம் திட்டமிடுவதற்கு இந்த இரு வகை சொத்துக்களும் ஏற்றவை. உழைப்பாளி மக்களது இடையறாது வளரும் பொருளாயத, அறிவுத் துறைத் தேவைகள் கூடுமான முழு அளவுக்கு பூர்த்தி செய்யப்படுமாறும், செய்த வேலைக்கு ஏற்ப, அதாவது சமுதாயத்துக்கு அவரவரும் அளிக்கிற உழைப்பின் அளவுக்கும் தரத்துக்கும் ஏற்ப, பொருள்கள் வினியோகிக்கப்படுமாறும் தேசப் பொருளாதாரம் அனைத்துக்கும் அரசாங்கம் திட்டமிடுகிறது.

உற்பத்திச் சாதனங்களும், பொருள் உற்பத்தி நிர்வகிக்கப் படுதலும் திட்டமிடப்படுதலும், மற்றும் உற்பத்தியானவற்றின் வினியோகமும் அதிக அளவுக்கு சமூக மயமாக்கப்பட்டிருத்தலை அரசுச் சொத்து குறிக்கிறது. ஆகவே அரசுச் சொத்துதான் பொதுச் சொத்துக்குரிய தலையாய வடிவம். சோவியத் தேசப் பொருளாதாரத்தில் 90 சத வீதத்துக்கும் அதிகமானது அரசுச் சொத்தாய் இருக்கிறது. அரசுத்தொழில் நிலையங்களும் அவற்றின் உற்பத்திப் பொருள்களும் அனைத்து மக்களுக்கும் சொந்தமான சொத்துகளாகும். ஆனால் கூட்டுறவுகளும் கூட்டுப் பண்ணைகளும் அவற்றின் உற்பத்திப் பொருள்களும் இந்தக் கூட்டுறவு நிலையங்களது பொதுச் சொத்துகளாய் இருப்பவை.

சோஷலிச சமுதாயம் **கம்யூனிசத்தை** நோக்கி வளர்ந்து செல்லுகையில் அரசுச் சொத்து, கூட்டுறவு-கூட்டுப் பண்ணை சொத்து ஆகிய இரு வடிவங்களும் படிப்படியாக ஒன்றையொன்று நெருங்கி வந்து, முடிவில் கம்யூனிச சொத்து என்கிற ஒரே வடிவமாய் இணைந்து விடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பொருள் முதல் வாதம்:** (Materialism)—**தத்துவவியலில்** இரு பிரதான போக்குகளில் ஒன்று. **கருத்து முதல் வாதத்துக்கு மாருனது.** உலகம் பொருளால் ஆனது என்றும், **பொருள்** அல்லது இயற்கை அல்லது வாழ்நிலை மனித உணர்விலிருந்து தனித்ததாகவும் சுயேச்சையான தாகவும் இருப்பதாகும் என்றும், பொருளே முதன்மையானது, உணர்ச்சிகளுக்கு ஆதாரமானது என்றும், உணர்வும் சிந்தனையும் இரண்டாம் நிலையானது சார்பானது என்றும், உலகையும் அதன் வளர்ச்சி விதிகளையும் ஆய்ந்து அறிந்து கொண்டு, மனிதனுல் தனது செயற்பாட்டில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் பொருள் முதல் வாதம் கருதுகிறது. கருத்து முதல் வாதத்துக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் போராடி வளர்ந்திருக்கும் பொருள் முதல் வாதம் சமுதாயத்தின் மிகவும் முற்போக்கான, புரட்சிகரமான வர்க்கங்கள், அடுக்குகளின் உலகக் கண்ணேட்டமாகும். பொருள் முதல் வாதத்தின் மிக உயர்ந்த வடிவமான **இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை** மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கினர். லெனின் அதை மேலும் வளர்த்துச் சென்ருர். இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் நிர்ணயிப்புக்களை சமூக வாழ்வும் உள்ளடங்கும்படி விரிவாக்கி **மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றியல் பொருள் முதல் வாதத்தை** உருவாக்கிஞர்கள். இயக்கவியல் பொருள் முதல் வாதமும் வரலாற்றியல் பொருள் முதல்வாதமும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளது கொள்கையின் தத்துவார்த்த அடிப்படையாக அமைகின்றன. உலகைப்பற்றிய விஞ்ஞான அறிவு ஆயுதத்தைத் தந்து இவை உழைப்பாளி மக்களுக்குப் பலமளிக்கின்றன. முதலாளித்துவ அமைப்பை வீழ்த்தி சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டியமைக்கப் போராடுமாறு அவர்களுக்கு ஆர்வ மூட்டுகிறது.

**பொருளாதாரம்:** (Economy)—வரலாற்று வழியில் நெறிப்படுத்தப்பட்டு, சமூகத்தின் பொருளாதார அமைப்பைக் குண நிர்ணயம் செய்கிற **உற்பத்தி உறவுகளின்** ஒட்டு மொத்தம். உதாரணம்: **முதலாளித்துவத்தின்** பொருளாதாரம், **சோஷலிசத்தின்** பொருளாதாரம். பார்க்கவும்: **தேசப் பொருளாதாரம்.**



**பொறுக்கிப் பாட்டாளிப் பிரிவோர்** (Lumpen-Proletariat)—பகைமைப்பட்ட ஒரு சமுதாயத்தின் வர்க்கம் கெட்ட பிரிவோர் (பிச்சையெடுத்தும் ஏய்த்தும் களவாடியும் விபசாரம் செய்தும் பிழைக்கிற தெருச் சுற்றிகள், குற்றம் புரிவோர் முதலானேர்). பொறுக்கிப் பாட்டாளிப் பிரிவோர் ஒழுங்கமைந்த முறையில் அரசியல் போராட்டத்துக்கு வேண்டிய வல்லமை இல்லாதவர்கள். பொறுக்கிப் பாட்டாளிப் பிரிவோரது ஏழ்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்தார் அவர்களிட மிருந்து கருங்காலிகளையும் கையாட்களையும் பாசிஸ்டு குண்டர்களையும் உருவாக்கி உபயோகித்துக் கொள்கிருர்கள்.

## போ

**போட்டி:** (Competition)—பண்டங்களின் உற்பத்திக்கும் விற்பனைக்கும் இலாபகரமான நிலைமைகளைப் பெறுவதற்கும், அதிகபட்ச இலாபங்கள் கிடைக்கச் செய்வதற்குமான போராட்டம் **தனியார் உடைமையை** அடிப்படையாகக் கொண்ட பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்குரிய குணுதிசயமாகும் இந்த போராட்டம். ஏகாதிபத்திய சகாப்தத்தில் ''தடையற்ற'' போட்டி மறைந்து அதனிடத்தில் புதிய வடிவங்களில் போட்டா போட்டி எழுகிறது—அதாவது, ஏகபோகங்களுக்கு இடையில், ஏகபோகங்களுக்கும் வெளியாட்களுக்கும் இடையில், ஏகபோகங்களுக்கு உள்ளேயே முதலாளிகளது கோஷ்டிகளுக்கு இடையில், ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையில் கடும் போட்டி நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் லஞ்சமளித்து வசப்படுத்துவதிலிருந்து பொருளாதார உளவு வேலைகளில் இறங்குதல், எதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராளித் தொழில் நிலையங்களில் சீர்குலைவுக்கு ஏற்பாடு செய்தல் வரையிலான மிகப்பல முறைகளும் கையாளப் படுகின்றன.

**உற்பத்திச் சாதனங்கள் பொது உடைமையாய்** இருத்தலை அடிப்படையாகக் கொண்ட சோஷலிச சமுதாயத்தில் இம் மாதிரியான போட்டிக்கு இடமே இல்லை. தோழமை வாய்ந்த கூட்டுறவும் பரஸ்பர உதவியுமாகிய உறவுகள், முதலாளித்துவப் போட்டிக்கு நேர் முரணான சோஷலிச நேசப் போட்டியைத் தோற்றுவிக்கின்றன.

**போல்ஷிவிசம்**: (Bolshevism)—தொழிலாளி வர்க்க இயக்கத்தில் 1903-ல் எழுந்த முரணற்ற புரட்சிகர மார்க்சியப் போக்கு. போல்ஷிவிசம் என்கிற பெயர் 1903-ல் ருஷ்ய சமூக—ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் 2-ஆவது காங் கிரசில் கட்சியின் தலைமை உறுப்புகளுக்குத் தேர்தல் நடை பெற்றபோது உருவாயிற்று. விளதீமிர் லெனினது ஆதர வாளர்களாகிய முரணற்ற மார்க்சிய புரட்சியாளர்கள் இந்தத் தேர்தலில் பெரும்பான்மை (போல்ஷின்ஸ்த்வோ) பெற்றனர், சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மை நிலையில் (மென் ஷின்ஸ்த்வோ) இருந்தனர். இந்தப் பெரும்பான்மை, சிறு பான்மைக் கோஷ்டிகளின் உறுப்பினர்கள் முறையே போல்ஷி விக்குகள் என்றும், மென்ஷிவிக்குகள் என்றும் அழைக்கப் படலாயினர்.

## ம

**மக்கள் கண்காணிப்பு**: (People's Control)—சோவியத் யூனியனில் உழைப்பாளி வெகுஜனங்களது முனைப்பான பங்குடன் பொது மக்களும் அரசும் கண்காணிப்பு செய்யும் ஏற்பாடு. கட்சியின் கண்காணிப்பு, அரசின் கண்காணிப்பு, தொழிற்சங்கங்களும் கூட்டுறவு நிறுவனங்களும் இளைஞர் நிறுவனங்களும் இஷ்ட பூர்வமான சங்கங்களும் பிறவும் நடத்துகிற கண்காணிப்பு ஆகிய பல வடிவங்களிலும் கண்



காணிப்பு நடைபெறுகிறது. அரசில் எந்த அளவுக்குக் கட்டுப்பாடு நிலவுகிறது, சட்டங்கள் சரிவர செயல்படுத்தப் படுகின்றனவா நிர்வாகப் பொறியமைவு நன்கு இயங்கு கிறதா என்பதையெல்லாம் சரி பார்ப்பது தான் மக்கள் கண்காணிப்பின் பணியாகும்.

**"மக்கள் நல அரசு"**: ("Welfare-State")—சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கான மார்க்சிய—லெனினிய வேலைத் திட்டத்துக்கு மாற்றாக 1930 ஆம் ஆண்டுகள் முதலாய் முதலாளித்துவத் தத்துவவாதிகளும் சில சமூக-ஜனநாயகத் தத்துவவாதிகளும் முன்வைத்துப் பிரசாரம் செய்து வருகிற ஒரு கருத்தோட்டம்.

நவீன **அரசு-ஏகபோக முதலாளித்துவம்** தொழிலாளி மக்களது **வாழ்க்கைத் தரத்தை,** உயரச் செய்தும், தொழிலாளர்கள் முதலாளிகளது வருமானங்களில் உள்ள ஏற்றத் தாழ்வைக் குறைத்தும், இவர்கள் இடையே வேறு பாடுகளை அகற்றியும் வருவதாய் இக் கருத்தோட்டத்தின் ஆதரவாளர்கள் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் வரலாற்று அரங்கை விட்டு மறைந்து வருகிற ஒரு சமுதாய அமைப்புக்காக வக்காலத்து வாங்குவோரின் இந்தக் கூற்றை முதலாளித்துவ எதார்த்தம் பொய்ப்பித்துக் காட்டுகிறது. நிரந்தர வேலையின்மையும், பொருளாதார நெருக்கடிகளும் மேலும் மேலும் கடுமையாகி வருகிற **வர்க்கப்** போராட்டமும் தான் முதலாளித்துவ எதார்த் தமாய் இருக்கிறது.

**"மக்கள் முதலாளித்துவம்"**: ("People's Capitalism")—முதலாளித்துவம் ஒரு சுரண்டல் அமைப்பாய் இருக்கிற நிலை படிப்படியாக மாறி, அனைத்து மக்களுக்கும் பணியாற்றி நலம் புரியும் அமைப்பாகி வருகிறது என்றும், இன்றைய நிலைமைகளில் சொத்து "விரவிப் பரவி" **மூலதனம்** ஜனநாயக மயமாகி வருகிறது என்றும், உழைப்பாளி மக்களுக்கும் முதலாளிகளுக்கும் வருமானங்கள் "சமனமாகி" வருகின்றன என்றும் நிரூபிக்க எத்தனிக்கும் ஒரு பொருளாதாரத் தத்துவம். பல்லாயிரக்கணக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பங்குதாரர்களிடையே பெரிய முதலாளித்துவக் கம்பெனிகளின் சிறு சிறு பங்குகள் வினியோகமாவதை இந்தத் தத்துவத்துக்கு ஓர் ஆதாரமாக இதன் ஆதரவாளர்கள் குறிப்பிடுகிறுர்கள். சிறு பங்குகளை வாங்குகிற இவர்கள் எல்லாரும் கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் ''கூட்டாளிகள்'' ஆகிவிடுவதாக வாதாடு கிறுர்கள். ஆனுல் உண்மை என்னவெனில், சிறு பங்குகள் பற்பல மக்கட் பகுதியோர் இடத்தும் உள்ள சேமிப்புகளைக் கவர்ந்து இழுத்து, **நிதியாதிக்கக் கும்பலின்** கைகளில் மூலதனம் திரண்டு குவிவதைத் துரிதப்படுத்துவதற்கான ஒரு வழியாகுமே அன்றி வேறில்லை.

சுரண்டுவோருடன் ஒத்துழைப்பதற்குச் சுரண்டப் படுவோரைச் சம்மதிக்க வைக்கும் பொருட்டு ''மக்கள் முதலாளித்துவ'' தத்துவம் விளம்பரப்படுத்தப்படுகிறது.

**மக்கள் ஜனநாயகப் புரட்சிகள்**: (People's Democratic Revolutions)—இரண்டாம் உலகப் போருக்கு (1939-45) பிற்பாடு ஐரோப்பிய, ஆசிய நாடுகள் பலவற்றில் நடைபெற்ற ஏகாதிபத்திய-எதிர்ப்பு, பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சிகள். இந்நாடுகளில் சோஷலிச மாற்றங்கள் நடந்தேறுவதற்குப் பீடிகையாக இந்தப் புரட்சிகள் நடை பெற்றன.

மக்கள் ஜனநாயகப் புரட்சிகளின் போது, பாசிஸத்தின் ஆட்சி முறியடிக்கப்பட்டு யுத்தக் குற்றவாளிகள் தண்டிக்கப் பட்டனர், அவர்களது சொத்துகள் நாட்டுடைமையாக்கப் பட்டன. நிலச் சீர்திருத்தங்கள் செய்து முடிக்கப்பட்டன. **மக்கள் ஜனநாயகம்** அரசின் வடிவில் மக்களது ஆட்சியதி காரம் நிறுவப்பட்டது. **தொழிலாளி வர்க்கத்தாருக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணி** வலிமையாக்கப் பட்டதன் மூலம் இவை யாவும் சாதிக்கப்பட்டன. ஆனுல் **தேசிய முதலாளித்துவ வர்க்கம்** விடாப்பிடியாக அதன் நலன்களுக்காகப் போராடியது. ஆகவே மக்கள் ஜனநாயகப் புரட்சிகள் மேலும் வளர்ச்சியுற்று, சோஷலிசப் புரட்சி களாய் மாறின. வர்க்க சக்திகள் தமது இணைவுகளைத் திருத்தி



அமைத்துக் கொண்டன. **உற்பத்தி சக்திகள் நாட்டுடைமை** ஆக்கப்பட்டன. அந்நிய ஏகபோகங்களுக்கு இருந்த ஆதிக் கத்துக்கு முடிவு கட்டப்பட்டது. **ஜனநாயகம்** மேலும் விரிவாக்கப்பட்டது. தொழிலாளி வர்க்கத்தின் நிலைகள் பலப்படுத்தப்பட்டதாலும், மார்க்சிய-லெனினியக் கட்சிகளது செல்வாக்கு ஓங்கியதாலும், **முதலாளித்துவ வர்க்கம்** தனிமைப் படுத்தப்பட்டதாலும், மக்கள் ஜனநாயக அரசின் வடிவில் **பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை** நிறுவுவது சாத்தியமாகியது. இது சோஷலிசப் புரட்சியின் வெற்றியைக் குறித்தது.

**மக்கள் ஜனநாயகம்** (People's Democracy)—ஐரோப்பிய, ஆசிய நாடுகள் பலவற்றில் மக்கள் ஜனநாயகப் புரட்சிகள் நடைபெற்றதன் விளைவாய் உதித்தெழுந்த சமுதாயத்தின் அரசியல் ஒழுங்கமைப்பு வடிவம். மக்கள் ஜனநாயகப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக வளர்ச்சியடைந்ததும், மக்கள் ஜனநாயகமானது **பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின்** வடிவைப் பெற்றது. மக்கள் ஜனநாயகமானது, அரசாட்சி யிலும் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்புகளுக்கு உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது தேர்விலும் (அவசியப்படும் போது அவர்களைத் திருப்பியழைப்பதிலும்) தொழிலாளர்களும் உழைப்பாளி மக்கள் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ளு மாறு உறுதி செய்கிறது. சட்டம் இயற்றும் அதிகாரமும் செயல்படுத்தும் அதிகாரமும் ஒன்றுபடுவதற்கும், **ஜனநாயக மத்தியத்துவத்தின்** கோட்பாடுகளுக்கு ஏற்ப அரசாட்சி நடந்தேறுவதற்கும், கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளது தலைமைப் பாத்திரம் நிலைநாட்டப்படுவதற்கும் மக்கள் ஜனநாயகம் வகை செய்கிறது. மக்கள் ஜனநாயக நாடுகள் பலவற்றில் பல கட்சிகளாலான கூட்டு அமைப்பு உருவாகி யது. இதில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் சட்சிகள் தலைமைப் பங்காற்றின. இந்தக் கட்சிகள் இந்நாடுகளில் நிறுவப்பட்ட தேசிய முன்னணிகளின் வழிகாட்டும் சக்தியாக செயல் படுகின்றன. உழைப்பாளி மக்களது எல்லா அரசியல் கட்சி களும் வெகுஜன நிறுவனங்களும் ஐக்கியப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(அரசியல் கட்சிகளது பெயர்கள் நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றன.) ஐரோப்பாவில் உள்ள மக்கள் ஜனநாயகங்களில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் மார்க்சியம்-லெனினியத்தின் அடிப்படையில், தொழிலாளி வர்க்க ஒற்றுமை இலட்சியத்துக்காக சமூக-ஜனநாயகக் கட்சிகளுடன் ஐக்கிய மடைந்தன.

**மத்திய உளவு நிறுவனம்:** (Central Intelligence Agency-C I.A.)—உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரசியல், பொருளாதார இராணுவத் தகவல்கள் சேகரிப்புக்கு ஏற்பாடு செய்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1947-ல் துவக்கப்பட்ட நிறுவனம். சி.ஐ.எ. எனப்படும் இந்நிறுவனம் பிற நாடுகளில் பிற்போக்கு அரசியல் சதி வேலைகளுக்கும் ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கும் ஏற்பாடு செய்வதிலும், ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்கு உகந்த பிற்போக்கு ஆட்சிகளை நிறுவுவதிலும் முக்கிய பங்கு எடுத்துக் கொள்கிறது.

**மதச் சுதந்திரம்:** (Freedom of Religion)—எல்லா மதப் பிரிவினரும் தத்தமது மதத்தைப் பற்றி யொழுக சமத்துவ உரிமை பெற்றிருத்தல். சோவியத் யூனியனில் மதச் சுதந்திரம் அரசியலமைப்பு சட்டத்தால் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறது. எல்லா மதச் சபைகளும் சுயாட்சி பெற்றுள்ளன. இவை சமய நூல்களை (விவிலியம், குர் ஆன், பிரார்த்தனைப் புத்தகங்கள், சமயப் பஞ்சாங்கங்கள் முதலானவை) வெளியிடுகின்றன. மதச் சபையானது அரசிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதால், சோவியத் அரசு மதச் சபைகள், நிறுவனங்களின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை; அதேபோல மதச்சபைகளும் அரசு விவகாரங்களில் தலையிடுவதில்லை.

சோவியத் யூனியனில் இன்று 20,000-க்கும் அதிகமான பிரார்த்தனை இடங்களும்—சத்திய சமயச் சபை, ரோமன் கத்தோலிக்க, புராட்டஸ்டண்ட், பழைய நம்பிக்கையாளர் கோயில்களும், தேவாலயங்களும், இஸ்லாமிய மசூதிகளும் யூதர் சினகொகுகளும், பௌத்த மடங்களும், கோயில்களும்,



சுவிசேஷ கிறிஸ்தவ பாப்டிஸ்ட் ஆலயங்களும், இன்ன பிறவும்—சுமார் இருபது மடாலயங்களும் கான்வெண்டுகளும் இருக்கின்றன.

**மதம்:** (Religion)—ஒரு தனிவகைப்பட்ட சமுதாய உணர்வு. மரணத்துக்குப் பிற்பாடான வாழ்வு, கடவுள் அல்லது கடவுளர், ஆவிகள், தேவ கணங்கள் முதலானவற்றில் நம்பிக்கை கொண்டிருப்பதே இவ்வகை சமுதாய உணர்வுக்குரிய அடிப்படை இயல்பு. கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் போன்ற பல்வேறு மதங்களும் அதனதற்கும் உரிய **உலகக் கண்ணோட்டத்தையும்,** அதற்கேற்ற வளர்ச்சிகளையும் மதச் சடங்குகளையும் கொண்டதாகி, குறிப்பிட்ட சமூக நடத்தை முறைகளை அனுசரிக்குமாறு கோருகின்றன. மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்துக்கு மதம் சிறிதும் ஒவ்வாதது. ஏனெனில் நல்ல நோக்கத்துடன் நடத்தை விதிகளை வகுத்தளிக்கும் மதம், சுரண்டுகிற வர்க்கங்களின் நலன்களுக்கு ஊழியம் புரிந்து, அவ்வர்க்கங்களின் ஆட்சியையும் அதன் அடித்தளமாகிய தனியார் உடைமையையும் அங்கீகரிக்கும் வண்ணம் அமைந்த நிலவரங்களை மாற்றமின்றி பாதுகாக்க வேண்டுமெனக் கோருகிறது.

**மனித உரிமைகள்:** (Human Rights)-மனிதன் தனது தேவைகளையும் நலன்களையும் திருப்தி செய்து கொள்வதற்கு, அரசுச் சட்டங்களின்படி இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள்.

எல்லா மக்களும் எல்லா அரசுகளும் நிறைவேற்றப் பாடுபட வேண்டிய பணிகளை வகுத்திடும் சட்டமாய் 1948 டிசம்பர் 10-ல் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொதுச் சபை அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது. பாகுபாடு ஏதும் இல்லாத சமத்துவம், உயிருக்கும் சுதந்திரத்துக்கும் ஆளின் பாதுகாப்புக்குமான உரிமை, கண்ணியமும் நற்பெயரும் இல்லமும் மீறப்படாதவாறு இருப்பதற்கான உரிமை, பாரபட்சமில்லாத நீதிமன்றத்திடமிருந்து உரிமைகளுக்குப் பாதுகாப்பு பெறுவதற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கான உரிமை போன்ற அடிப்படை மனித உரிமைகளை இந்தப் பிரகடனம் எடுத்துரைக்கிறது. குடியுரிமை, சொத்து உடைமை, மணம் முடித்துக் கொள்வதற்கான உரிமை, சிந்தனை உரிமை, மனசாட்சி-மத உரிமை, கருத்து உரிமை, அமைதியாகக் கூடுவதற்கும் நிறுவனமாக ஒன்று சேர்வதற்குமான உரிமை, இரகசிய வாக்குப் பதிவு மூலம் எல்லார்க்குமான சமத்துவ வாக்கு உரிமை போன்ற அரசியல், குடிமை உரிமைகளையும் சுதந்திரங்களையும் எல்லா அரசுகளும் தமது அரசியலமைப்புச் சட்டங்களில் சேர்த்துக் கொள்ளுமாறு இந்தப் பிரகடனம் அறைகூவுகிறது. மற்றும் பின்வரும் சமூக, பொருளாதார உரிமைகளையும் இப்பிரகடனம் பறைசாற்றுகிறது: வேலை செய்யும் உரிமை, சமமான வேலைக்கு சமமான ஊதியம் பெறுகிற உரிமை, தொழிற் சங்கங்களை நிறுவிக் கொள்ளும் உரிமை, ஓய்வுக்கும் விடுமுறைக்கும் சமூகக் காப்புறுதிக்குமான உரிமை, கல்வி உரிமை, சமுதாயத்தின் கலாசார வாழ்வில் பங்குகொள்ளும் உரிமை.

மெய்யான மனித உரிமைகள் சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகளையும் சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புகளையும் பொறுத்திருக்கின்றன (பார்க்கவும்: **சோஷலிசத்தின் அனுகூலங்கள்**). **சோஷலிசப் புரட்சியும்**, வெற்றி பெறும் சோஷலிசமும் மனித உரிமைகளைப் பிரகடனம் செய்வதோடல்லாமல், நடை முறையில் அவை கிடைக்கும்படி உறுதியும் செய்கின்றன. சோஷலிச சமுதாயத்தில் அரசாங்கம் உழைப்பாளி மக்களது அரசாங்கமாய் இருக்கிறது; அரசானது **ஜனநாயக மத்தியத்துவக்** கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுகிறது; அரசு நிர்வாகத்திலும் சமூக நிர்வாகத்திலும் குடிமக்கள் விரிவான அளவில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்—இவை யாவும் இச்சமுதாயத்தில் மனித உரிமைகளுக்கான அரசியல் உத்தரவாதங்களாகும். நாட்டின் பொருளாதாரம் **உற்பத்திச் சாதனங்களது பொது உடைமையை** அடிப்படையாகக் கொண்டிருப்பதும், மக்களது தொடர்ந்து வளரும் பொருளாயத, கலாசாரத் தேவைகளைக்



கூடுமான முழு அளவுக்குப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டு வளர்க்கப்படுவதும் பொருளாதார உத்தரவாதங்களாகும். குடிமக்கள் அரசியலமைப்புச் சட்டத்தின்படி தமக்குள்ள உரிமைகளை அனுபவிப்பதற்கு வகை செய்யும் சட்டங்கள் சட்டத் துறை உத்தரவாதங்களாகும்.

முதலாளித்துவ சமுதாயத்தில் செல்வந்தர்களால் மட்டுமே முழு உரிமைகளையும் அனுபவிக்க முடிகிறது. முதலாளித்துவ அரசு ஏட்டுச் சட்ட அளவில் குடிமக்களது சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் பிரகடனம் செய்கிறது. ஆனால் உண்மையில், உழைப்பாளி மக்களை வருத்தும் வேலையின்மை, வர்ண இனப்பாகுபாடு, சமூகப் பாகுபாடு போன்ற கடுமையான சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறனற்றதாய் இருக்கிறது. எனவேதான் ஏகாதிபத்திய பிரசாரம் சோஷலிசத்தை மதிப்பிழக்கச் செய்வதற்காக எல்லா வழிகளிலும் முயலுகிறது. சோஷலிச நாடுகளில் மனித உரிமைகள் நசுக்கப்படுவதாய் சொல்லி அவதூறு இயக்கம் நடத்துகிறது. முதலாளித்துவ உலகில் சுதந்திரம் செழித்தோங்குவதாகக் கதைக்கிறது. முதலாளித்துவ நாடுகளில் உழைப்பாளி மக்களது கவனத்தை அவர்களின் தேவைகளிலிருந்தும் கவலைக்குரிய பிரச்சினைகளிலிருந்தும் திருப்பும் பொருட்டே **சித்தாந்தப் போராட்டத்தில்** இம்மாதிரியான தந்திரங்கள் கையாளப்படுகின்றன. (பார்க்கவும் : **வேலை உரிமை, கல்வி உரிமை, ஓய்வு உரிமை, தேசங்களது சுய நிர்ணய உரிமை**)

**மனித நேயம்:** (Humanism)—தனி மனிதனது மாண்பையும் அவனது சுதந்திரத்தையும் அவன் சர்வாம்ச வளர்ச்சி பெறுவதன் அவசியத்தையும் அங்கீகரிக்கும் கருத்துக்களது தொகுதி. மனிதன்பால் மரியாதை, அன்பு ஆகியவற்றின் அடிப்படையிலான சமூக உறவுகளது மனிதாபிமானத் தன்மை. உழைப்பாளி மக்கள் சுரண்டலிலிருந்தும் ஒடுக்கு முறையிலிருந்தும் தம்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுவிடுத்துக் கொண்டுவிட்ட நாடுகளில்தான், அதாவது அவர்கள் சோஷலிசத்தை அமைத்துக் கொண்டுவிட்ட நாடுகளில்தான் மெய்யான மனித நேயம் இருக்கக் காண்கிறோம்.

## மா

**மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி**: (Great October Socialist Revolution)—கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் ருஷ்யாவின் தொழிலாளர்கள் விவசாயிகளுடன் கூட்டணி கொண்டு வெற்றிகரமாய் நடத்திய முதலாவது சோஷலிசப் புரட்சி. 1917 அக்டோபர் 25-ல் (புதிய முறைப்படி நவம்பர் 7-ல்) நடைபெற்ற ஆயுதமேந்திய எழுச்சியின் விளைவாய் முதலாளித்துவ வர்க்கத் தாரது ஆட்சி முறியடிக்கப்பட்டு சோவியத் ஆட்சி யதிகாரத்தின் வடிவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. அக்டோபர் சோஷலிசப் புரட்சி உலகின் புரட்சிகரப் புத்தமைப்புக்குரிய சகாப்தத்தை, மனிதகுலம் **முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு**, மாறிச் செல்வதற்குரிய சகாப்தத்தைத் துவக்கி வைத்தது. முதலாளித்துவத்தின் **பொது நெருக்கடி** ஆரம்பமாகி விட்டதை இது குறித்தது.

**மார்க்சியம் - லெனினியம்**: (Marxism-Leninism)—இயற்கை, சமுதாயம் இவற்றின் அடிப்படை விதிகளையும், சுரண்டல் சமுதாயத்தைப் புரட்சிகரமாய் வீழ்த்தி **கம்யூனிசத்தைக்** கட்டியமைப்பதையும் பற்றிய போதனை. தொழிலாளி வர்க்கத்துக்கும் அதன் முன்னணிப் படையான கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுக்கும் உரிய புரட்சிகர விஞ்ஞானம். இதனை உருவாக்கியவர்கள் : கார்ல் மார்க்ஸ் (1818-1883), பிரெட்ரிக் எங்கெல்ஸ் (1820-1895), விளதீமிர் இலியச் லெனின் (1870-1924). முதலாளித் துவத்தின் வீழ்ச்சிக்கும் சோஷலிசத்தின் வெற்றிக்குமான



தற்போதைய சகாப்தத்தில் மார்க்சியத் தத்துவத்தை லெனின் வளர்த்துச் சென்று செழுமை செய்தார்.

மார்க்சியம்-லெனினியத்தின் உள்ளடக்கக் கூறுகள் வருமாறு: தத்துவவியல் **(இயக்கவியல் வரலாற்றியல் பொருள் முதல் வாதம்)** அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான சோஷலிசம். மார்க்சிய-லெனினியத் தத்துவ வியலானது சிந்தனைக்கும் வாழ்நிலைக்கும் உள்ள உறவை—இயற்கை, சமுதாயம், சிந்தனை இவற்றை ஆளுகிற பொதுவான விதிகளையும்—ஆராய்கிறது. அரசியல் பொருளாதாரம், கூலி, மதிப்பு, விலை, இலாபம், போன்றவற்றின் பிரச்சினைகளைப் பகுத் தாய்ந்து, முதலாளித்துவ **சுரண்டலின்** சாரப் பொருளைத் தெளிவுபடுத்துகிறது. முதலாளிகள் உபரி மதிப்பைச் சுவீகரித்துக் கொண்டுவிடுகிறார்கள் என்பதே **முதலாளித்து வத்தின்** சாரப் பொருள் என்று மார்க்ஸ் நிருபித்தார். முதலாளித்துவப் பொருள் உற்பத்தி முறையை ஆராய்ந்து மார்க்ஸ் **முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாட்டை** (பொருள் உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உற்பத்திப் பொருள்களை சுவீகரிப்பதற்கான தனியார் முதலாளித்துவ முறைக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை) புலப்படுத்திக் காட்டினார். அதோடு, முதலாளித்துவம் மாண்டு அதற்குப் பதில் **கம்யூனிசம்** மலர்வது தவிர்க்க முடியாதது என்று அவர் தெளிவு படுத்தினார். கம்யூனிச வழியில் உலகைத் திருத்தியமைப்பதற்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்துகிற வர்க்கப் போராட்டத்தின் விதிகளையும் வடிவங்களையும் வழி முறைகளையும் விஞ்ஞானக் கம்யூனிசம் ஆராய்ந்து அறிகிறது. மூலதனத்தின் ஆட்சியை முறியடித்து, புதிய கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைக்கும் பணிக்குத் தலைமை தாங்குவது தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதை விளக்குகிறது.

மார்க்சியம்—லெனினியம் தொடர்ந்து தற்காலத்திலும் புதிய தத்துவார்த்த நிர்ணயிப்புக்களைக் கொண்டு மேலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செழுமை செய்யப்பட்டு வருகிறது. சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளி வர்க்க, தேச விடுதலை இயக்கங்களது அனுபவத்திலிருந்தும், சோஷலிசக் கட்டுமானம், கம்யூனிசக் கட்டுமானம் ஆகியவற்றின் அனுபவத்தில் இருந்தும் கிடைக்கிற பொது முடிவுகளின் அடிப்படையில் மேற்கூறிய புதிய தத்துவார்த்த நிர்ணயிப்புக்கள் வந்தடையப் படுகின்றன.

மார்க்சியம்-லெனினியம் ஒரு சர்வதேசிய போதனையாகும். எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்டு, தொழிலாளர்கள் கட்சிகள் அந்தந்த நிலைமைகளையும் பிறவற்றையும் தக்கபடி கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த சர்வதேசிய போதனையைக் கையாளுகின்றன. சுரண்டலின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தை வீழ்த்தி சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டியமைப்பதற் கான போராட்டத்தில் மார்க்சியம்-லெனினியம் நம்பகமான தத்துவ ஆயுதமாகும்.

**மால்த்தூசியம்:** (Malthusianism)—பிற்போக்குவாத ஆங்கிலேயப் பொருளியலாளர் தாமஸ் ராபர்ட் மால்த்தஸ் (1766—1834) பெயரிலான தத்துவம். முதலாளித்துவ சமுதாயத்தை வருத்தும் பசி, இல்லாமை, வேலையின்மை போன்ற பல துன்பங்களுக்கும் காரணம் உழைப்பாளி மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டுகிற **முதலாளித்துவப்** பொருளாதார அமைப்பு அல்ல, நுகர் பண்டங்களின் உற்பத்தியை மிஞ்சி மக்கள் தொகை அதிவேகமாய் வளர்ந்து பெருகுவதே காரணம் என்று இத்தத்துவம் கூறுகிறது. ஆகவே பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காகக் கட்டாய அடிப் படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மால்த்தூசியர்கள் நினைக்கிறார்கள். லட்சக்கணக்கானோரைச் சாகடிக்கும் யுத்தங்கள், கொள்ளை நோய்கள், வெள்ளங்கள், பூகம்பங்கள் போன்ற பெருங் கேடுகள் எல்லாம் ''நற்பேறுகளே'' ஆகுமென இவர்கள் கருதுகிறார்கள்.



மனித குலத்தின் எதிர்காலங்குறித்து நம்பிக்கைக்கு இடமில்லா இருண்ட சித்திரம் தீட்டும் தற்கால மால்த்தூசியர்கள், மக்களது ஊட்டத்துக்கு வகை செய்யும் புதிய வழிகளையும் ஆதாரங்களையும் தேடிவருகிற நவீன விஞ்ஞானத்தின் அளவு கடந்த ஆற்றல்களையோ, தவிர்க்க முடியாதவாறு முதலாளித்துவத்தை அகற்றிவிட்டு உதித்தெழுகிற சோஷலிச, கம்யூனிச சமுதாயத்தின் பிரம்மாண்டமான ஆக்க சக்திகளையோ கருத்தில் கொள்ளத் தவறி விடுகிறார்கள்.

மக்கள் தொகை மட்டு மீறிவிடுவது குறித்து மால்த்தூசியர்கள் அச்சப்படுவதற்கு உண்மையில் காரண மில்லை. உலகின் மக்கள் தொகை உண்மையில் மட்டு மீறி விட வில்லை. உலகில் வாழ்கிற மக்கள் எல்லாரையும் ஒரே இடத்தில் திரளச் செய்வது சாத்தியமெனில், இம்மாதிரியான ஒரு ''கூட்டத்துக்குத்'' தேவைப்படும் பரப்பளவு சுமார் 400 சதுர கிலோமீட்டர்தான். மேற்கு பெர்லினது பரப்பளவைப் போல் இது ஏறத்தாழ இரு மடங்கே அதிகமானது. கோடிக்கணக்கானோர் பசியாலும் வேலையின்மையாலும் வீட்டு வசதி இல்லாத நிலையாலும் துன்புறுகிறார்கள் என்றால், சமூக அமைப்பே அதற்கு அடிப்படைக் காரணம். சொத்துடையோர் சொத்தில்லாதோர் என்றும், ஏழை பணக்காரன் என்றும், சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் என்றும் மக்களைப் பிளவு படுத்துகிற தனியார் சொத்து உடைமையின் கொடிய சட்டங்களால் ஆளப்படுகிற சமூக அமைப்பே காரணமாகும்.

**மாவோயிசம்:** (Maoism)—சீனத் தலைவர்களது கருத்தோட்டங்களையும் அரசியல் நடைமுறைகளையும் குறிக்கும் பதம். இவை 1950 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் உருவாகியவை. மார்க்சிய - லெனினியத்தைத் திரித்துப் புரட்டுகிறவை. சீனாவில் அதிகார பூர்வமாய் இவை ''மா சே-துங் (1893-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1976) சிந்தனை'' என்பதாக அழைக்கப்படுகின்றன. இவற்றின் அடிப்படை இயல்புகள் வருமாறு:

சீனத் தலைமையின் கீழ் உலக அளவிலான மேலாதிக்கத்தை அமைக்கும் வல்லமை வாய்ந்த மிகப் பெரிய ராணுவ வல்லரசாய் சீனாவை மாற்ற வேண்டும் என்ற பிரதான குறிக்கோளுடன் இயங்குகிற **பேரரசுவாத தேசிய வெறி**.

யுத்தத்துக்காக முழுமுரமாகத் தயார் செய்தல். பிணிகளை நீக்கி ''மனித குல ஆரோக்கியத்தை உயர்த்தும்'' வழியாகவும், உலகப் **புரட்சியின்** தோற்று வாயாகவும் யுத்தத் தயாரிப்பை மெச்சிப் புகழ்ந்து உபதேசித்தல். உழைப்பாளி மக்களை அரைப் பட்டினி வாழ்க்கை நடத்தும்படி விட்டுவிட்டு, அதிவிரைவாய் இராணுவ-தொழில் துறைத் தொகுதியைக் கட்டியமைப்பதில் மாவோயிசவாதிகள் மேற்கூறிய நோக்கத்துடன் நாட்டின் செல்வாதாரங்களை ஒன்று குவித்து ஈடுபடுத்துகிறார்கள். சீனத் தலைவர்கள் சோவியத் எதிர்ப்பின் அடிப்படையிலும், சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளி வர்க்க இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதன் அடிப்படையிலும், முதலாளித்துவ உலகின் முதன்மையான ஆக்கிரமிப்பு சக்திகளோடு கூடிக் கொண்டு செயல்படுகிறார்கள். சோஷலிசத்தை எதிர்த்துப் போராடுகிற ஏகாதிபத்தியப் பிற்போக்கு சக்திகளுக்குச் சீனத் தலைவர்கள் இவ்விதம் பக்க பலமாய் இருந்து முக்கிய சேவை புரிகின்றனர். **பதற்றத் தளர்வுக்குக் குழி** பறிக்கவும், அரசுகளிடையே பகைமைக்கு வித்திடவும், புதிய உலக யுத்தத்தைத் தூண்டி விடவும் மாவோயிச வாதிகள் முயலுகின்றனர். அவர்களது இந்த முயற்சிகள் சமாதானத்துக்கும் மனித குலத்தின் சமூக முன்னேற்றத் துக்குமான இலட்சியத்துக்குப் பேரபாயம் விளைவிக்கின்றன.

தனி நபர்களது ஒரு சிறு கோஷ்டியின் எதேச்சாதிகாரம். **இராணுவ அதிகார வர்க்க** சர்வாதிகாரத்தின் வடிவில் இந்த எதேச்சாதிகாரம் அமைந்துள்ளது. இக் கோஷ்டியினர் தனி



நபர் வழிபாட்டைப் பிரபலப்படுத்தி ஊக்குவித்து, மக்களது பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துகிறார்கள். இராணுவ வட்டாரத்தினர், வர்க்கம் கெட்டவர்களாகிய உதிரிகள், அரசியல் பக்குவமில்லாத இளம் வயதினர் ஆகியோரது ஆதரவைக் கொண்டு இந்த எதேச்சாதிகாரம் வர்க்கங்களுக்கு இடையிலும் சமூக அடுக்குகளுக்கு இடையிலும் தந்திரம் புரிந்து இவற்றைப் பிளவுபடுத்தி ஒன்றுக்கெதிராய் ஒன்றை ஏவிவிடுகிறது. உழைப்பாளி மக்களுக்கு எதிராய் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு அவர்களை அடக்குதல், ஜனநாயகக் கோட்பாடுகளையும் அரசுச் சட்ட நெறியையும் புறக்கணித்தல், பொருளாதாரத்தில் **தன்னிச்சை வாதம்** ஆகிய இவையே இந்த எதேச்சாதிகாரத்தின் சாரம்.

விஞ்ஞானக் கம்யூனிசத்தின்பால் பகைமை; மூர்க்கத் தனமான சோவியத்-எதிர்ப்பு; **உலக சோஷலிச** அமைப்பு ஒன்று இருத்தலையும் சோஷலிசக் கட்டுமானம் பற்றிய எதார்த்த விதிகளையும் சர்வதேச அனுபவத்தையும் நிராகரித்தல்; தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்குத் தலைமைப் பாத்திரம் உண்டு என்கிற கருத்தையே மறுத்தல். மாவோயிசமானது தற்போது உலகில் இருந்து வரும் சோஷலிசத்துக்கு எதிராய் ''தேசிய மார்க்சியம்'', ''சீனக் கம்யூனிசம்'' என்னும் கருத்தை வைத்திடுகிறது. ஒரு நாட்டின் வெகு ஜனங்களது ஏழ்மையும், பிற்பட்ட நிலையும், பட்டினியும், பசியும், சோஷலிச சமுதாய வாழ்க்கைக்கு உரிய இயல்புகளாகும் எனக் கருதுகிறது. மக்களது நல்வாழ்வை உயர்த்துவதற்காக கம்யூனிஸ்டுக் கட்சிகள் செய்து வரும் முயற்சிகளை மாவோயிச வாதிகள் ''திருத்தல் வாதம்'' என்றும், ''முதலாளித்துவ சீரழிவு'' என்றும் தூற்றுகிறார்கள். ''முதலாளித்துவம் மீட்டமைக்கப் படுவதாக'' சோஷலிச நாடுகள்மீது அவதூறு பொழிந்து குற்றம் சாட்டுகிறார்கள் (பார்க்கவும்: **''சமூக ஏகாதிபத்தியம்''**). சோஷலிச சக்திகளுக்கு உலக அளவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழிபறித்து அவற்றைத் தோற்கடிக்கலாம் என நினைத்து, மாவோயிச வாதிகள் சோவியத் யூனியனை எதிர்த்து முழு முனைப்புடன் போராடுமாறு அழைப்பு விடுக்கிறார்கள்.

மாவோயிசக் கருத்துக்களால் உண்டாகும் பிரதான தீங்குகளாவன: மார்க்சிய-லெனினியப் பதங்கள், கருத்தினங்களை உபயோகித்து மாறுவேடம் பூண்டு மார்க்சிய-லெனினியத்தைத் திரித்திப் புரட்டல்; மெய்யாகவே நடைபெற்று வருகிற **உலகப் புரட்சிப் போக்கினை** எதிர்த்துப் போராடுதல். சோஷலிச சமுதாயத்தில் சோஷலிச, முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைகளிடையே ஓயாத போராட்டம் நடைபெறுவதாகவும், முதலாளித்துவம் மீட்டமைக்கப்படும் அபாயம் எந்நேரமும் எழுவதாகவும், இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்காக ''புரட்சிகள் அவசியம்'' என்பதாகவும் மாவோயிச வாதிகள் கூறி வருகிறார்கள். 1960 ஆம் ஆண்டுகளின் பிற்பாதியில் சீனாவில் நடத்தப்பட்ட அபக்கியாதி பெற்ற ''கலாசாரப் புரட்சி'' இவ்விதத்தில் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது என்கிறார்கள். ஆனால் உண்மையில் நடைபெற்றது என்னவென்றால், ''வர்க்கப் போராட்டம்'' என்று பொய்க் கூச்சல் எழுப்பி உழைப்பாளி மக்களில் சில பகுதிகளை ஏனைய பகுதிகளுக்கு எதிராய் வேண்டுமென்றே உசுப்பிவிட்டு, இதன் மூலம் மாவோயிச வாதிகள் தமது மெய்யான எதிராளிகளையும் எதிராளிகளாக வளரக்கூடியவர்களையும் ஒழித்துக் கட்டினார்கள்.

தற்போது சீனத் தலைவர்களாய் இருப்போர் மாவோயிசத்தின் பிரதானக் கூறுகளை விட்டு விலகாமல், தேசப் பொருளாதாரத்தை முன்னிலும் கடுமையாய் இராணுவமயமாக்குகிறார்கள், யுத்தத்தை நோக்கியமைந்த திசைவழியில் தொடர்ந்து நடைபோடுகிறார்கள், சோவியத்-எதிர்ப்பு மனோபாவத்தால் உந்தப்பட்டு ஏகாதிபத்திய சக்திகளோடும் உலகப் பிற்போக்கு சக்திகளோடும் நேரடியாகவே கூட்டு அமைத்துக் கொள்கிறார்கள்.



மாவோயிசத்தை எதிர்த்துப் போராடுவது அத்தியாவசியமானதாகும். சீன மக்களது எதிர்காலத்துக்காகவும், உலகப் புரட்சிப் போக்கின் வெற்றிகர வளர்ச்சிக்காகவும் இப்போராட்டம் மிகமிக அவசியமாகும்.

**மானுடவதை:** (Genocide)—நிறவெறி, தேசியவெறி அல்லது பிற காரணங்களுக்காக தேச மக்களில் ஒரு பகுதியை ஒழித்திடல். ஹிட்லர் கும்பல் இரண்டாம் உலகப் போரின் போது (1939-45) பிடித்துக்கொண்ட பிரதேசங்களில் வெகுஜன அளவில் மானுடவதைக் குற்றங்களைப் புரிந்தது. மானுடவதையும் இன ஒதுக்கலும் இப்போது தென் ஆப்பிரிக்கக் குடியரசின் அரசுக் கொள்கையாத் திகழ்கிறது. உதாரணமாய் கம்பூச்சியாவில் போல் பாட், இங் சாரிக் கொலைகார கும்பலின் ஆட்சி மானுடவதையைக் கையாண்டன.

### மி

**மிதவாதம்;** (Liberalism)— முதலாளித்துவ-நாடாளுமன்ற முறை, முதலாளித்துவ சுதந்திரங்கள், முதலாளித்துவத் தொழில் முனைப்பாளர்களது சுதந்திரம் ஆகியவற்றின் ஆதரவாளர்களை ஒன்றுபடுத்தும் அரசியல், சித்தாந்தப் போக்கு. தொழில்துறை முதலாளித்துவ வர்க்கம் அரசியல், பொருளாதார மேனிலைக்காகப் போராடிய காலத்தில் இவ்வர்க்கத்தாரது நலன்களை இந்தப் போக்கு பிரதிபலித்தது.

### மு

**முடியாட்சி:** (Monarchy)—பரம்பரை வழியில் வந்த மன்னனை(ஜார், ஷா, பேரரசன்) **அரசு** அதிபராகக் கொண்ட அரசாங்க வடிவம். வரம்பில்லா முடியாட்சிகளும் உண்டு, அரசியலமைப்புச் சட்ட முடியாட்சிகளும் உண்டு. பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறியவற்றில், ஆளும் அரச வம்சத்தின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால் வரம்பிடப்பட்டிருக்கின்றன.

**முதலாளித்துவ: இணைப்பு** (Capitalist Integration)—முதலாளித்துவ அரசுகள் பலவற்றின் பொருளாதாரங்களும் பொருளாதாரக் கொள்கைகளும் ஒன்றையொன்று நெருங்கி வருமாறு செய்யப்படுதலும், இவ்வரசுகளிடையே பொருளாதாரப் பிணைப்புகளும் உழைப்புப் பிரிவினையும் வளர்க்கப் படுதலும்.

ஏகாதிபத்திய இணைப்பு, **அரசு ஏகபோக முதலாளித்துவம்** சர்வதேச அளவில் உருவானதன் விளைவாகும். உலக முதலாளித்துவ சந்தையின் மறு பங்கீட்டுக்கான ஒரு வடிவமாய் அரசுகளிடையே கூட்டு நிறுவனங்கள் அமைக்கப் படுவதில் ஏகாதிபத்திய இணைப்பு நடந்தேறுகிறது. (உதாரணம்: **ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு**), **இணைப்பில்** பங்கு கொள்ளும் நாடுகளது **உற்பத்தி சக்திகளின்** வளர்ச்சிக்கு ஆதரவாய் இருப்பினும், இந்த இணைப்பின் விளைவாய் உழைப்பாளி மக்களை வருத்துகிற சுரண்டல் மேலும் கடுமையாகி விடுகிறது. முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் யாவும் தீவிரமடைகின்றன:

இந்த இணைப்பு வளரும் நாடுகளில் ஒன்றுக்கொன்று முரணான இரு போக்குகளை எழச் செய்கிறது. ஒன்று ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போக்கு, பங்கு கொள்ளும் நாடுகள் பொருளாதார சுயேச்சை நிலை அடைவதற்கு உதவுகிற போக்கு இது; இரண்டாவது ஜனநாயக-எதிர்ப்புப் போக்கு, அந்நிய ஏகபோகங்களது நிலைகளைப் பலப்படுத்துவதே இப்போக்கின் நோக்கம்.

**முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கால கட்டம்:** (Transition Period from Capitalism to Socialism)—முதலாளித்து சமுதாயம் சோஷலிச சமுதாயமாகப் புரட்சிகரமாய் மாற்றப்படும் காலகட்டம். உழைக்கும் **விவசாயிகளுடன்** கூட்டணி



கொண்டு **தொழிலாளி வர்க்கம்** அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதும் ஆரம்பமாகும் இந்தக் கால கட்டம், கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டமாகிய, **சோஷலிசக்** கட்டுமானம் நிறைவு பெறுவதுடன் முடிவடைகிறது.

தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்துக்கு வந்ததும், அது இந்த மாற்றக் காலகட்டத்துக்கான பிரதான பணிகளைச் செய்து முடிக்கிறது: முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை அகற்றி சோஷலிச **உற்பத்தி உறவுகளை** நிறுவுகிறது; சிறுவீதப் பண்ட உற்பத்தியைப் படிப்படியாகப் பெருவீதக் கூட்டுத்துவ சோஷலிசப் பொருள் உற்பத்தியாக மாறச் செய்கிறது; **தொழில்மயமாக்கத்தின்** மூலமும் தேசப் பொருளாதாரம் பூராவையும் தொழில் நுட்பப் புனரமைப்பு செய்வதன் மூலமும் சோஷலிசத்தின் பொருளாயத, தொழில் நுட்ப அடித்தளத்தை நிறுவுகிறது; பல வகைகளையும் சேர்ந்த **உற்பத்தி முறைகள்** இருப்பதை நீக்குகிறது (பார்க்கவும்: **கலப்புப் பொருளாதாரம்**); சுரண்டும் வர்க்கங்களை அகற்றி **சுரண்டலுக்கான** அடிப்படையை இல்லாதொழியச் செய்கிறது; **கலாசாரப் புரட்சியை** நடத்துகிறது.

சோஷலிசக் கட்டுமானப் பாதையில் இறங்கும் எல்லா மக்களும் உலகின் முதலாவது சோஷலிச அரசாகிய சோவியத் யூனியனது அனுபவத்தைத் தமது பிரத்தியேக வரலாற்று, தேசிய சூழ்நிலைமைகளுக்கு உகந்த முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

**முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடு:** (Main Contradiction of Capitalism)—பொருள் உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உழைப்பின் உற்பத்திப் பொருள்களது சுவீகரிப்பின் தனியார் முதலாளித்துவ வடிவங்களுக்கும் இடையிலான முரண்பாடு. முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடு உற்பத்தியின் அராஜகத்தையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலையின்மையையும், பொருளாதார நெருக்கடிகளையும், முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதான வர்க்கங்களாகிய **பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும்** இடையிலான இணக்கம் காண முடியாத போராட்டத்தையும் உண்டாக்குகின்றன. முதலாளித்துவ அமைப்புக்கு வரலாற்றில் எதிர்காலம் இல்லாமற் போவதற்குக் காரணமே முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடுதான்.

**முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி:** (General Cri is of Capitalism)—உலக முதலாளித்துவத்தின் சர்வ வியாபகமான நெருக்கடி; பொருளாதார அமைப்பிலும் அரசியலிலும் சித்தாந்தத்திலும் வாழ்க்கையின் ஏனைய எல்லாத் துறைகளிலுமான நெருக்கடி.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின் முதற் கட்டம் முதல் உலக யுத்தத்தின் போது (1914-18), குறிப்பாக 1917—ல் ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் விளைவாய் ஆரம்பமாகியது. இரண்டாவது கட்டம் இரண்டாம் உலக யுத்தத்தின் போது (1939-45) ஆரம்பித்தது. சோஷலிசம் தனியொரு நாட்டின் எல்லைக்கு அப்பாலும் உதித்தெழுந்து உலக அமைப்பாய் மாறியதுதான் இந்தக் கட்டத்தின் முதன்மையான இயல்பு. 1950 ஆம் ஆண்டுகளின் நடுவில் உலக முதலாளித்துவம் அதன் பொது நெருக்கடியின் மூன்றாவது கட்டத்துள் பிரவேசித்தது. சோஷலிசத்துடனான பொருளாதாரப் போட்டியில் முதலாளித்துவத்தின் பலவீன நிலை, காலனியாதிக்க அமைப்பின் தகர்வு, முதலாளித்துவப் பொருளாதாரம் மேலும் மேலும் நிலை குலைந்து போதல், உழைப்பாளி மக்கள் அவர்களது பொருளாதார அரசியல் கோரிக்கைகளுக்காக மேலும் மேலும் தீவிரமாகப் போராடுதல், ஏகாதிபத்தியக் கொள்கையும் சித்தாந்தமும் ஆழ்ந்த நெருக்கடிக்கு உள்ளாதல் ஆகிய யாவும் இக்கட்டத்தின் பிரதான இயல்புகளாகும்.



**முதலாளித்துவப் புரட்சி:** (Bourgeois Revolution)—நிலப்பிரபுத்துவஅமைப்பு அல்லது அதன் மிச்ச சொச்சங்களை ஒழித்துக் கட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக நடைபெற்ற சமுதாயப் புரட்சி.

**முதலாளித்துவம்:** (Capitalism)—உற்பத்திச் சாதனங்களில் தனியார் முதலாளித்துவ உடைமையையும், கூலி உழைப்பு முதலாளிகளால் சுரண்டப்படுதலையும் அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு. நிலப்பிரபுத்துவ அமைப்பினுள் இருந்து வளர்ந்ததுதான் முதலாளித்துவம். நிலப்பிரபுத்துவத்துடன் ஒப்பிடுகையில் முதலாளித்துவம் முற்போக்கான சமூக அமைப்பாய் விளங்கிற்று. பெரும் பெரும் திரள்களில் தொழிலாளர்களை ஆலைகளில் ஒன்றுகுவியச் செய்திடும் முதலாளித்துவம் பொருள் உற்பத்தியானது சமூக மயமாவதற்கும் வகை செய்தது. ஆனால் தொழிலாளர்களது உழைப்பின் பலன்கள் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களாகிய முதலாளிகளால் மேலும் மேலும் கூடுதலான இலாபங்களின் வடிவில் சுவீகரிக்கப்பட்டு விடுகின்றன. உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் சுவீகரிப்பின் தனியார் முதலாளித்துவ வடிவத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுதான் முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடு. முதலாளிகளை எதிர்த்து மேலும் மேலும் கடுமையாகத் தொழிலாளர்கள் நடத்துகிற வர்க்கப் போராட்டத்தின் வாயிலாய் இந்த முரண்பாடு தன்னை வெளிக்காட்டிக் கொள்கிறது. நாசம் விளைவிக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்த நெருக்கடி வழி வகுக்கிறது. சமுதாய வளர்ச்சியின் எதார்த்த விதிகள் முதலாளித்துவம் ஒழிந்து இதைக் காட்டிலும் முற்போக்கான சமூக அமைப்பாகிய சோஷலிசம் வெற்றியடையும்படியான ஒரு கட்டத்துக்கு இந்த வளர்ச்சி தவிர்க்க முடியாதவாறு இட்டுச் செல்லுமென விஞ்ஞான வழியில் மார்க்சியம்-லெனினியம் நிரூபித்துக் காட்டிற்று. உற்பத்தி உறவுகள் சமுதாயத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உற்பத்தி சக்திகளது வளர்ச்சி நிலைக்கு உகந்திருக்க வேண்டும் என்கிற எதார்த்த விதி இதைத்தான் கோருகிறது.

**முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதை:** (Non-Capitalist Road of Development)—முன்னாள் காலனிகளும் அரைக் காலனிகளும் முதலாளித்துவ கட்டத்துள் செல்லாமலே அதைக் கடந்து சோஷலிசத்தை அடையும் படியான வரலாற்று வளர்ச்சி. பொருளாதாரத்தின் அரசு (பொதுத்) துறை இந்த வளர்ச்சிக்கான சமூக, பொருளாதார அடிப்படை; தொழிலாளர்களும் பணியாளர்களும் உழைக்கும் விவசாயிகளும் அறிவுத் துறையினருமான புரட்சிகர-ஜனநாயக சக்திகள் ஆட்சியதி காரத்தை மேற்கொள்வதுதான் இதற்கான அரசியல் அடிப்படை. முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையை மேற்கொண்ட நாடுகள் அந்நியக் கம்பெனிகளை வெளியேறச் செய்தல், அரசுத்துறையைப் பலப்படுத்துதல், தொழில்மயமாக்கத்தை நிறைவேற்றுதல், ஜனநாயக சமூகச் சட்டங்களை இயற்றிச் செயல்படுத்தல், உழைப்பாளி மக்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்தல், பொதுக் கல்வி முறையை விரிவாக வளர்த்திடல் போன்ற அடிப்படையான சமூகச் சீர்த்திருத்தங்களை நிறைவேற்றுகின்றன. உலக சோஷலிச அமைப்பு அளித்திடும் உதவி முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையின் வெற்றிக்குப் பெரிதும் வகை செய்கிறது.

**முதலாளித்துவ வர்க்கம்:** (Bourgeoisie)—முதலாளித்துவ சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்துகிற வர்க்கம். **உற்பத்திச் சாதனங்களுக்கு** (ஆலைகள், சுரங்கங்கள், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நிலங்கள், கனிவளங்கள் முதலான வற்றுக்கு) இவ்வர்க்கத்தினரே சொந்தக்காரர்கள். கூலி உழைப்பைச் **சுரண்டுவதன்** மூலம் வரப்பெறும் இலாபங் களைக் கொண்டு இவர்கள் ஜீவிப்பவர்கள். **வளரும் நாடுகளில்** அரசியல் சுதந்திரம் வென்று கொண்டபின் தேசிய முதலா ளித்துவ வர்க்கத்தின் பிற்போக்குவாத மேல் மட்டத்து வட்டாரங்கள் முற்போக்கான சமூக மாறுதல்களையும் ஏகாதி



பத்திய-எதிர்ப்புக் கொள்கைகளையும் எதிர்க்க ஆரம்பிக் கின்றன.

**முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி:** (Bourgeois-Demo cratic Revolution)—மக்கள் பெருந்திரளினர் பங்கெடுத்துக் கொண்டு சிறப்புக்குரியதாக்கும் **முதலாளித்துவப் புரட்சி.** பங்கெடுத்துக்கொள்ளும் வெகுஜனங்கள் அவர்களது கோரிக் கைகளின் முத்திரையைப் புரட்சிப் போராட்டத்தில் பதியச் செய்கிறார்கள். பாட்டாளி வர்க்கம் தலைமைப் பங்கு ஆற்றுகிற (**மேலாதிக்கம்** செலுத்துகிற) முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சி நாளாவட்டத்தில் **சோஷலிசப் புரட்சியாய்** வளர்ச்சியடைகிறது.

## மூ

**மூலதன ஏற்றுமதி:** (Export of Capital)—**ஏகாதிபத்தியத் துக்கு** உரிய தனி இயல்பு, ஏகபோகவாதிகள் ''உபரி'' மூலதனத்தை (அதாவது சொந்த நாட்டுக்குள் அதிக இலா பம் தரவல்ல முறையில் பயன்படுத்த முடியாமற் போகிற மூலதனத்தை) வளரும் நாடுகள் அல்லது வளர்ச்சிபெற்ற நாடுகளில் முதலீடு செய்தல். கூலி உழைப்பானது ஏக போகங்களால் சுரண்டப்படுகிற அரங்குகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் நடத்தப்படும் மூலதன ஏற்றுமதி, வளரும் நாடுகளை பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் அடிமைப்படுத்துவதற்குரிய வழிகளில் ஒன்றாகும். சோஷலிச நாடுகள் வழங்கும் கடன்களுடன் (பார்க்கவும்: **வெளிநாட் டுக் கடன்கள்**) இதைக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

**மூலதனம்:** (Capital)—கூலி உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் **உற்பத்திச் சாதனங்களது** உடைமையாளருக்கு உபரி மதிப்பு கிடைக்கச் செய்யும்படியான மதிப்பு, அதாவது தன்னை அதிகரிக்கச் செய்து கொள்ளக்கூடிய மதிப்பு. கூலி உழைப்பைச் சுரண்டுவதற்காக உபயோகிக்கப்படும்போது பண்டமானது மூலதனமாகிறது. உற்பத்திச் சாதனங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளிகளுடைய தனியார் சொத்தாய் இருந்து, உழைப்பாளி மக்கள் தமது ஜீவாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக முதலாளிகளிடம் கூலிக்கு வேலை செய்யும் படியான, அதாவது தமது உழைப்பு சக்தியைப் பரிவர்த்தனைப் பண்டமாக அவர்களிடம் விற்கும்படியான கட்டாயம் ஏற்படுகிறபோது மூலதனம் எழுகிறது. கூலித் தொழிலாளர்களைச் **சுரண்டுவதன்** மூலம் முதலாளிக்கு அடக்கச் செலவைக் காட்டிலும் கூடுதலான வரவின் வடிவில் இலாபம் கிடைக்கிறது. வேறுவிதமாகச் சொல்வதானால், முதலாளித்துவ இலாபம் தொழிலாளர்களது உழைப்பால் படைப்பிக்கப்பட்டு, இழப்பீடு ஏதும் அளிக்காமலே முதலாளிகளால் சுவீகரிக்கப்படுகிறது. தனியார் சொத்து ''உரிமையை''க் கொண்டு முதலாளிகள் இப்படிச் சுவீகரித்துக் கொள்கிறார்கள். ''மூலதனம்'' என்னும் நூலில் மார்க்ஸ் முதலாளித்துவச் சுரண்டலின் சாராம்சத்தை வெளிச்சப்படுத்திக் காட்டினார். **முதலாளித்துவத்தில்** வர்க்க நலன்களுக்கு இடையே ''இசைவு'' இருப்பதாக முதலாளித்துவப் பொருளியலாளர்கள் கூறும் பொய்களை அம்பலப்படுத்தினார். **சோஷலிசப் புரட்சி** தவிர்க்க முடியாததும் நியாயமானதும் ஆகுமென நிரூபித்தார்.

**''மூவுலகத் தத்துவம்''**: (''Three worlds Theory'')— சீனத் தலைவர்கள் 1974-ல் வெளியிட்ட தத்துவம். இதன்படி அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் யூனியனும் ''முதல்'' உலகமாகும்; ஜப்பானும் ஐரோப்பாவும் கானடாவும் ''இரண்டாவது'' உலகமாகும். ஆசியா (ஜப்பானைத் தவிர்த்து) ''மூன்றாவது'' உலகமாகும். செயற்கையான முறையில் அமைந்த இந்தப் பிரிவினை உலகின் வர்க்கச் சக்திகளது உண்மை அமைவுக்கு சிறிதும் ஏற்றதாய் இருக்கவில்லை. உண்மையில் **உலகின் புரட்சிப் போக்குக்கு** இயக்கு சக்திகளாய் இருப்பவை உலக சோஷலிச அமைப்பும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும், தேச விடுதலை இயக்கமும் ஆகும். உலக **முதலாளித்துவத்துக்கு** எதிராய் உலக **சோஷலிசம்** நடத்தும்



போராட்டத்தின் உண்மைப் பிரச்சினையையும், சர்வதேச **பாட்டாளி வர்க்கம்** உலகின் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய் நடத்தும் போராட்டத்தின் உண்மைப் பிரச்சினையையும், ''மூவுலகத் தத்துவம்'' அங்கீகரிக்க மறுக்கிறது. உலகின் புரட்சிப் போக்கினது வளர்ச்சிப் பிரச்சினையையும் அது ஒதுக்கி விடுகிறது. **ஏகாதிபத்தியம்** இருக்கிறவரை தமது சொந்த நாட்டைப் பாதுகாப்பது அவசியம் என்பதையும், இம்மாதிரியான பாதுகாப்பு அடிப்படையானது, தீர்மானகரமானது, ஒரே பணியாய் அமைந்தது என்கிற பிரபல முடிவை அது பிரகடனம் செய்கிறது. உலகின் புரட்சிப் போக்கினது வளர்ச்சி பற்றிய உண்மைகள் இவ்வாறு திரித்துப் புரட்டப்படுகின்றன. இந்தத் தத்துவத்தின் ஆதரவாளர்கள் ''இரண்டாவது'' ''மூன்றாவது'' உலகங்களின் தொழிலாளர்களும் உழைப்பாளி மக்கள் அனைவரும் ''முதல்'' உலகின் ''வல்லரசுகளிடமிருந்து'' தம்மைக் காப்பாற்றிக் கொள்வதன் அவசியத்தை வற்புறுத்துகிறார்கள். இவர்களுடைய கூற்றுப்படி வரலாற்றின் நோக்கில் அமெரிக்க ஐக்கிய நாடு பலவீனமடைந்து வரும் அரசாகும்; ஐரோப்பாவின் முதலாளித்துவ நாடுகள் உலக வளர்ச்சிகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கம் உண்டாக்காத இரண்டாந்தர அரசுகளாகும். எதிர்காலம் ஏதும் இல்லாத முதலாளித்துவம் அல்ல பிரதான பகைவன்; எந்த நாட்டை மையமாகக் கொண்டு உலகின் மெய்யான முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகள் யாவும் ஒன்று படுகின்றனவோ அந்த சோவியத் யூனியன்தான் பிரதான பகைவன் என்பதே இவர்களது தத்துவத்திலிருந்து பெறப்படும் முடிவு.

சீனத் தலைவர்களது அயல்துறைக் கொள்கைக்கும், சோவியத் யூனியன்மீதும் சோஷலிசக் கூட்டமைப்பின் ஏனைய நாடுகள் மீதும் சீனத் தலைவர்கள் பகிரங்கமாக பகைமை கொண்டிருப்பதற்கும் ''நியாய விளக்கம்''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தருவதற்குத்தான் ''மூவுலகத் தத்துவம்'' பயன்படுகிறது. (பார்க்கவும்: **மாவோயிசம்**).

**மூளை கவர்தல்:** (Brain Drain)—முதலாளித்துவ உலகுக்கே உரித்தான ஒரு நிகழ்வு; விஞ்ஞானிகளும் வித்தகர்களும் உயர்ந்த தகுதி வாய்ந்த ஊழியர்களும் மேம்பட்ட வேலை நிலைமைகளையும் வாழ்க்கை நிலைமைகளையும் பெற்ற நாடுகளுக்குப் பெயர்ந்து செல்லுதல். **வளரும் நாடுகளிடமிருந்து** நிகழ்கிற ''மூளை கவர்தல்'' ஏகாதிபத்திய அரசுகளிடமிருந்து மெய்யான பொருளாதார சுயேச்சை நிலை எய்துவதற்கு இந்நாடுகள் நடத்தும் போராட்டத்துக்குத் தீங்கிழைக்கிறது.

## மே

**''மேசையடித் தொழிலாளர்கள்'':** (''White-Collar Workers'')—1) பொருள் உற்பத்தித் துறையில் உடல் உழைப்புத் தொழிலாளர்களிடமிருந்து வேறுபடுவோராய், மூளை உழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்களைக் குறிப்பதற்காக முதலாளித்துவ நாடுகளில் உபயோகிக்கப்படுகிற தொடர். இரு வகைத் தொழிலாளர்ளும் தமது உழைப்பின் மூலம், **உற்பத்திச் சாதனங்களது** உடைமையாளர்களாகிய முதலாளிகளால் சுவீகரிக்கப்படும் இலாபங்களைப் படைப்பிப்பவர்கள். 2) வளரும் நாடுகளின் சேனைகளில் உள்ள அந்நிய வித்தகர்கள், வெளிநாடுகளிடமிருந்து வாங்கப்பட்ட நவீன ஆயுதங்களுக்கு வேண்டிய சேவைகளை இவர்கள் செய்கின்றனர்.

**மேலாதிக்கம்:** (Hegemony)—தலைமை நிலை, அதிகாரத்திலும் செல்வாக்கிலும் முதன்மைநிலை. **பாட்டாளி வர்க்கத்தின்** மேலாதிக்கம் என்பது ஏகபோக முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை முறியடிப்பதற்கும், **சோஷலிசப் புரட்சியின்** வெற்றிக்குப் பிறகு **சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும்** கட்டியமைப்பதற்குமான



புரட்சிகரப் போராட்டத்தில் ஏனைய சமூக வர்க்கங்களுக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்குவதைக் குறிக்கிறது.

**மேலாதிக்க வாதம்:** (Hegemonism)—ஒரு நாடு பிற நாடுகள் மீது தனது தலைமையையும் சித்தத்தையும் பலவந்தமாகத் திணிக்கும் கொள்கை. 1960 ஆம் ஆண்டுகளில் மேலாதிக்க வாதம் சர்வதேச அரங்கில் மாவோயிச வாதிகளின் (பார்க்கவும்: **மாவோயிசம்**) கொள்கை நெறியாக இருந்தது; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களது விடுதலை இயக்கத்தைத் தமது சித்தாந்த, அரசியல் பிடிக்குள் கொண்டு வரும் பொருட்டு அவர்கள் இந்தக் கொள்கை நெறியை வகுத்துக் கொண்டனர். 'மூன்றும் உலகில்'' (பார்க்கவும்: **மூவுலகத் தத்துவம்**) தலைமை நிலைக்கு அவர்கள் உரிமை கொண்டாடிய போது, இதற்கு நியாயம் கற்பிப்பதற்காக, சோஷலிச நாடுகள் ''சீரழிந்து விட்டதாகவும்,'' வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் ''முதலாளித்துவத் தன்மையதாகி'' ''தனது புரட்சிகர மனோபாவத்தை இழந்து விட்டதாகவும்'' அதனால் புரட்சி இயக்கத்தின் மையம் தேச விடுதலை இயக்க மண்டலத்துக்கு இடம் பெயர்ந்து விட்டதாகவும் மாவோயிச வாதிகள் வாதாடினார்கள். அண்மை ஆண்டுகளில் மாவோயிசத் தலைவர்களது மேலாதிக்க வாதம், சோவியத் யூனியனையும் சோஷலிசக் கூட்டமைப்பின் ஏனைய நாடுகளையும் எதிர்த்துப் போராடுவதற்காக, சீனாவின் ஆதரவுடன் பிற்போக்கு, எதிர்ப்புரட்சி, ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் ''ஐக்கிய முன்னணி'' ஒன்றை அமைத்திடுவதை நோக்கமாய்க் கொண்டுள்ளது. சோவியத்-எதிர்ப்பு, சோஷலிச-எதிர்ப்பு அடிப்படையில் ஏகாதிபத்தியத்துடனும், கடைக்கோடியான பிற்போக்குடனும் பெய்ஜிங் இணக்கத்துக்கு வந்ததானது, இதுகாறும் மாவோயிச வாதிகளது ஆதரவாளர்கள் மத்தியிலும் கூட பெரிய ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மேற்குடியினர் :** (Aristocracy)—பிரபுக் குலத்தோர், அடிமையுடைமை அரசிலும் பிரபுத்துவ அரசிலும் மிகுந்த சலுகைகளுக்கு உரியோராய் இருந்த பிரிவினர். முதலாளித்துவ அரசிலுங்கூட மேற்குடியினர் சில தனிச் சலுகைகளுக்கு உரியவர்களாகவே இருக்கிறார்கள். **மேற்குடியினர் ஆட்சி**—பரம்பரை வாரிசு வழியிலான பிரபுக் குலத்தோருக்கு ஆட்சி அதிகாரம் உரியதாய் இருக்கும் அரசாங்க வடிவம்.

**மேனிலை மனப்பாங்கு:** (Paternalism)—முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களை **வர்க்கப் போராட்டத்திலிருந்து** திசை திருப்புவதற்காக தொழிலதிபர்கள் உழைப்பாளி மக்கள்பால் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதுபோல் காட்டிக் கொள்ளுதல் (கிறிஸ்துமஸ் நன்கொடை அளித்தல் போன்ற செயல்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்).

2) வளரும் நாடுகளுக்கு ''உதவி அளிக்கும்'' (சிறு திற மானியங்களின் வடிவில்) கொள்கை. ஏகாதிபத்திய அரசுகள் இந்நாடுகளில் நமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் இக்கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன.

## யு

**யுத்தம்:** [War]—அரசுகளிடையிலான ஆயுதமேந்திய போராட்டம். சமூக வர்க்கங்களுக்கு இடையே நடைபெறும் ஆயுதமேந்திய போராட்டத்துக்கு உள்நாட்டுப் போர் அல்லது யுத்தம் என்று பெயர்.

நியாயமான யுத்தங்களும் உண்டு, அநியாய யுத்தங்களும் உண்டு. **ஆக்கிரமிப்பை** எதிர்த்தடிப்பதற்காகவும், சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்காகவும் நடைபெறும் யுத்தங்கள் நியாயமானவை. இரண்டாம் உலக யுத்தத்தின் போது (1939-45) பாசிஸ்டு ஆக்கிரமிப்பை எதிர்த்து பல நாடுகளின் மக்கள் நடத்திய போராட்டமும், அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து வியத்நாம் மக்கள் நடத்திய



போராட்டமும் நியாயமான யுத்தங்களுக்கான எடுத்துக் காட்டுகள். அநியாய யுத்தங்கள் சுரண்டும் வர்க்கங்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி, பிற நாடுகளையும் மக்களையும் அடிமை செய்து, தமது செல்வச் செழிப்பை உயர்த்திக் கொள்வதற்காக நடத்தும் யுத்தங்கள் ஆகும்.

## ரு

**ருஷ்யப் புரட்சி:** (Russian Revolution)—பார்க்கவும்: **மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி.**

## லெ

**லெனினியம்:** (Leninism)—விளதீமிர் இலியச் லெனினது (1870-1924) போதனைகள். மேதை லெனின் புரட்சி இலட்சியத்தை ஓங்கச் செய்தவர்; கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் ஆகியோரது போதனைகளை புதிய வரலாற்று நிலைமைகளில் மேலும் வளர்த்துச் செழுமைப் படுத்தியவர். மார்க்சியத்தின் உள்ளடக்கக் கூறுகளாகிய தத்துவ வியலையும், அரசியல் பொருளாதாரத்தையும், விஞ்ஞானக் **கம்யூனிசத்தையும்**, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய சகாப்தத்தில் ஆக்க வழியில் வளர்த்துச் சென்றார் லெனின் (பார்க்கவும்: **மார்க்சியம்-லெனினியம்**).

## வ

**வங்கிகள்:** (Banks)—கணக்குத் தீர்விலும் கடன் வழங்குவதிலும் இடைத் தரகர்களாகச் செயல்படும் நிதி நிறுவனங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவ நாடுகளில் வங்கி மூலதனமும் தொழில் துறை மூலதனமும் ஒன்று கலந்து, நிதி மூலதனம் உதித்தெழ வழி வகுத்திட்டன. அரசுப் பொறியமைவின் செயற் பாட்டின் மீது நிதி மூலதனம் செல்வாக்குச் செலுத்துகிறது, ஆளும் வட்டாரங்களது நலன்களுக்கு உகந்தவாறு அது அரசுப் பொறியமைவைச் செயல்பட வைக்கிறது.

சோஷலிச நாடுகளில் வங்கிகள் தொழில் நிலையங்களுக்குக் கடன் வசதியும் நிதியும் அளிக்கின்றன; பணப் புரள்வை ஒழுங்கு செய்கின்றன. திட்டமிட்ட முறையில் சோஷலிசப் பொருளாதாரம் நிர்வகிக்கப்படுவதற்கு வங்கிகள் தக்க கருவிகளாகச் செயல்படுகின்றன.

**வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் (நாட்டோ):** (North Atlantic Treaty Organisation (NATO))—முதலாளித்துவ அரசுகளது இராணுவ, அரசியல் கூட்டு, சோஷலிச நாடுகளுக்கும் தேசவிடுதலை இயக்கத்துக்கும் எதிராய் அமைந்தது. அமெரிக்க முன் முயற்சியின் பேரில் 1949 ஏப்ரலில் வாஷிங்டனில் கையொப்பமிடப்பட்ட வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் அடிப்படையில் **நாட்டோ** அமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட நாடுகளாவன: அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், ஹாலண்டு, லுக்சம்பர்க், கானடா, இத்தாலி, போர்த்துகல், நார்வே, டென்மார்க், ஐஸ்லந்து. 1952-ல் கிரீசும் துருக்கியும், 1955-ல் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசும் **நாட்டோவில்** சேர்ந்து கொண்டன.

அமெரிக்க ஐக்கிய நாடு இந்நிறுவனத்தில் ஆதிக்க நிலையில் இருந்து செயல்படுகிறது. இந்த நிறுவனத்துக்கு உட்பட்டு ஒரு கூட்டு இராணுவத் தலைமை நிறுவப்பட்டிருக் கிறது. பிரான்சு 1966-லும் கிரீஸ் 1974-லும் **நாட்டோ** இராணுவ ஒழுங்கமைப்பிலிருந்து வெளியேறின. ஆனல் இரு நாடுகளும் வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் தொடர்ந்து அங்கம் வகிக்கின்றன. **நாட்டோவின்** தலைமை உறுப்புகள் வட அட்லாண்டிக் சபையும் **நாட்டோ** பாதுகாப்புத் திட்டக் கமிட்டியும் ஆகும். **நாட்டோ** தலைமையகம் புருஸெல்சில் இருக்கிறது.



**வர்க்கங்கள்:** (Classes)—பார்க்கவும்: **சமூக வர்க்கங்கள்.**

**வர்க்கப் போராட்டம்:** (Class Struggle)—இணக்கம் காண முடியாமல் முரண்படும் நலன்களை உடைய வர்க்கங் களின் இடையே நடைபெறுகிற போராட்டம். பகை வர்க்கங்களைக் கொண்ட எல்லா சமுதாயங்களிலும் வர்க்கப் போராட்டமே வரலாற்றின் பிரதான உள்ளடக்கமாகவும் இயக்கு சக்தியாகவும் இருக்கிறது. முதலாளித்துவத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் உழைப்பாளி மக்கள் முதலாளித்துவ வர்க்கத்தினது ஆதிக்கத்தை எதிர்த்து நடத்துகிற போராட்டத்தின் வடிவத்தை ஏற்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் இரு பிரதான வர்க்கங் களாகிய **பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும்** இடையே அடிப்படையிலேயே முரண் பாடான அவற்றின் பொருளாதார, அரசியல் நிலைகளால் நிலைநாட்டப்படுகிற **உற்பத்தி உறவுகளால்** இந்தப் போராட்டம் தீர்மானிக்கப்படுகிறது.

**பாட்டாளி வர்க்கம்** அதன் வர்க்கப் போராட்டத்தை மூன்று பிரதான வடிவங்களில்—பொருளாதார, அரசியல், சித்தாந்த வடிவங்களில்—ந ட த் தி ச் செல்கிறது. இன்றைய நிலைமைகளில் பொருளாதாரப் போராட்டம் மேலும் மேலும் அதிகமாய் அரசியல் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்து விடுகிறது. முதலாளித்துவ நாடுகள் பலவற்றில் உழைப்பாளி மக்கள் அவர்களது வர்க்கப் போராட்டத்தின் விளைவாய், ஓரளவு கூலி உயர்வும், வேலை நேரக் குறைவும், சம்பளத்துடன் கூடிய விடுமுறைகளும் ஊராட்சி மன்றங்களிலும் நாடாளு மன்றத்திலும் பிரதிநிதித்துவமும் பெற முடிந்திருக்கிறது. எதார்த்தப் புறநோக்கில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டம் முடிவில் **சோஷலிசப் புரட்சிக்கு** இட்டுச் செல்கிற போராட்டமாகும்.

**முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்கிற கால கட்டத்தில்** உழைப்பாளி மக்களது ஏனைய பிரிவோருடன் கூட்டணி கொண்டு ஆட்சியதிகாரம் செலுத்தும் தொழிலாளி வர்க்கம், வீழ்த்தப்பட்ட சுரண்டும் வர்க்கங்களது எதிர்ப்பை முறியடித்து சமுதாயத்தை புரட்சிகரமாய் மாற்றியமைத்து **சோஷலிசத்தை** வெற்றி பெறச் செய்வதற்கான போராட்டத்தின் வடிவத்தை . வர்க்கப் போராட்டம் ஏற்கிறது.

**வரலாற்றுப் பொருள் முதல்வாதம்:** (Historical Materialism)—சமுதாய வளர்ச்சியின் மிகவும் பொதுவான விதிகளை ஆராயும் விஞ்ஞானம். வரலாற்றுப் பொருள் **முதல்வாதம் கார்ல் மார்க்சாலும்** பிரெடரிக் எங்கெல்சாலும் உருவாக்கப்பட்டு, **விளதிமிர் லெனினால்** மேலும் வளர்த்துச் செழுமை செய்யப்பட்டதாகும். வரலாற்றின் வளர்ச்சி திட்டவட்டமான விதிகளால் ஆளப்படுகிறது என்றும், உழைப்பாளி மக்களே வரலாற்றைப் படைப்பவர்கள் ஆவர் என்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் மூலவர்கள் **விஞ்ஞான வழியில் நிரூபித்து** நிலைநாட்டினர். பகை வர்க்கங்களாகப் பிளவுண்ட சமுதாயத்தின் வளர்ச்சிக்கான இயக்கு சக்தியாகிய வர்க்கப் போராட்டத்தின் மூலம்தான் **உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும்** இடையிலான முரண்பாடுகள் **தீர்க்கப்படுகின்றன** என்றும், பழைய **உற்பத்தி உறவுகள் சிதைக்கப்பட்டு**, வளர்ந்து பெருகிவிட்ட உற்பத்தி சக்திகளுக்குப் பொருத்தமாய் முற்போக்கான புதிய உற்பத்தி உறவுகளை நிறுவுவதன் மூலம் இக்காரியம் செய்யப்படுகிறது என்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் தெளிவு படுத்துகிறது. கம்யூனிச சமுதாயம் கட்டியமைக்கப்படுதல் சமுதாய வளர்ச்சியின் காரண காரிய வழியில் தவிர்க்க



வொண்ணாத இயற்கையான விளைவாகும் என்று வரலாற்றுப் பொருள்முதல் வாதம் நிரூபித்திருக்கிறது.

**வல்லரசுகள் :** (Super-Powers)—சோவியத் யூனியனும் அமெரிக்க ஐக்கிய நாடும் மக்களது விருப்பங்கள் குறித்துக் கவலைப்படாமலே, தமது சொந்த நலன்களுக்கு ஏற்ப உலகின் கதியைத் தீர்மானிப்பதாகவும், செல்வாக்கு மண்டலங்களாக உலகைக் கூறுபோட்டுக் கொள்வதாகவும் வாதாடி, உலகை வருத்தும் இன்னல்களுக்கு இந்த இரு அரசுகளும் சம அளவுக்குக் காரணமாய் இருப்பதாகக் காட்ட முயல்கிற **திருத்தல்வாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் பதற்றத்தளர்வின் எதிர்ப்பாளர்களும்** வல்லரசுகள், பெரு வல்லரசுகள் என்ற பதங்களை மிகுதியாக உபயோகிக்கிறார்கள். சோவியத் யூனியனும் அமெரிக்க ஐக்கிய நாடும் கடைப்பிடிக்கிற கொள்கைகள் ஒன்றுக்கொன்று நேர் விரோதமாய் இருப்பதை இவர்கள் மூடி மறைக்கிறார்கள்; இரு கொள்கைகளுக்கும் இடையே வித்தியாசம் ஏதும் இல்லையென இப்பதங்களைக் கையாண்டு வாதாடுகிறார்கள். இவர்களது இந்த முயற்சிகளின் நோக்கம் என்ன? சோவியத் யூனியனிடம் உலகின் உழைப்பாளி மக்களுக்கு இருக்கும் அனுதாபத்தையும் ஆதரவு உணர்ச்சியையும் குலைத்திட வேண்டும்; உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கும் பதற்றத் தளர்வுக்கான போராட்டத்துக்கும் குழிபறிக்க வேண்டும்; **ஏகாதிபத்தியத்தை** எதிர்ப்போரிடையே அவநம்பிக்கையைப் பரப்பிச் சோர்வை உண்டாக்கி, அவர்களைச் செயலற்றவர்களாய் அடங்கச் செய்ய வேண்டும் என்பதுதான் இம்முயற்சிகளின் நோக்கம்.

**வலதுசாரி தொழிற்சங்க வாதம் :** (Right-wing Trade Unionism)—தொழிலாளி வர்க்க இயக்கத்தில் செயல்பட்டு வருகிற ஒரு சந்தர்ப்பவாத போக்கு. முதலாளித்துவத்தின் கட்டுக் கோப்புக்கு உட்பட்டு வேலை நிலைமைகளையும் வாழ்க்கை நிலைமைகளையும் மேம்படுத்துவதற்காகப் போராடுவதுடன் நின்று விடுமாறு தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பணிகளுக்கு இந்தப் போக்கு வரம்பிடுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

19 ஆம் நூற்ருண்டின் நடுவில் பிரிட்டனில் **தொழிலாளி வர்க்கத்துள் தொழிலாளி பிரபுக்குலத்தோர்** பகுதி உருவானதும் அந்நாட்டில் **வலதுசாரி தொழிற்சங்க வாதம்** உதித்தெழுந்தது. அந்த நூற்ருண்டின் இறுதியில் இது மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பரவத் தொடங்கியது. படிப்படியாக இது தனித்த ஒரு போக்காய் இருந்த நிலை முடிவுற்று, ஏனைய சந்தர்ப்ப வாத சீர்திருத்த வாதப் போக்குகளோடு ஒன்று கலந்து விட்டது.

**வளர்ச்சியடைந்த சோஷலிசம்:** (Developed Socialism)—சமுதாயமானது **சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்தை** நோக்கி வளர்ந்து செல்லும் காலத்தில், கம்யூனிசத்தின் உயர் கட்டத்தைக் கட்டியமைப்பதற்கான பணிகள் உண்மையில் மேற்கொள்ளப்படும் காலத்தில் ஒரு வரலாற்றுக் கட்டம். இந்த முதிர்ச்சியடைந்த சோஷலிசத்தைக் கட்டியமைக்கும் பணி, சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் இறுதியான முழு நிறை வெற்றிக்குப் பிறகு ஆரம்பமாகியது.

வளர்ச்சியடைந்த சோஷலிசத்துக்குரிய காலம் முழு அளவில் கம்யூனிசக் கட்டுமானம் நடந்தேறும் காலமாகும். அப்போது கம்யூனிசத்தின் பொருளாயத, தொழில் நுட்ப அடித்தளங்கள் நிறுவப்படுகின்றன; சோஷலிச **உற்பத்தி உறவுகள்** கம்யூனிச உற்பத்தி உறவுகளாய் வளர்ச்சியடைகின்றன; வர்க்க வேறுபாடுகள் மறைகின்றன; இசைவுடன் வளர்ந்திருக்கும் ஆளுமை உடைய ஆட்கள் வளர்த்து ஆளாக்கப்பட்டு, பொருள் உற்பத்தி, விஞ்ஞானம், கலாசாரம் மற்றும் சமுதாயம் அனைத்தின் முன்னேற்றத்தோடு சேர்ந்து இவர்களது ஆன்மிகச் செழுமையும் மேலோங்குகிறது. வளர்ச்சியடைந்த சோஷலிசம் சோவியத் நாட்டில் கட்டப்பெற்று விட்டது, ஏனைய சோஷலிச நாடுகளில் கட்டப்பெற்று வருகிறது.



**வளரும் நாடுகள்:** (Developing Countries)—பெரும்பாலும் முன்பு ஏகாதிபத்திய அரசுகளது காலனிகளாகவும் அரைக் காலனிகளாவும் இருந்த ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க, பிசிபிக் மண்டல நாடுகள். தேச விடுதலைப் போராட்டத்தின் மூலம், இந்த வளரும் நாடுகள் அரசியல் ஆட்சியுரிமையை சாதித்துக் கொண்டு விட்டன. ஆனல் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் செயல் வட்டத்துக்கு உள்ளேயே இருக்க வேண்டியுள்ள இந்நாடுகள், அதிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகளுடன் சமத்துவத்துக்கு இடமில்லாத ''கூட்டாளிகளாச்'' செயல்பட நேர்கிறது.

வளரும் நாடுகள், அல்லது வளர்முக நாடுகள் எனப்படுகிறவற்றில், 150 ஆண்டுகளுக்கு மேலாய் சதந்திரம் பெற்றனவாய் இருக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளும், இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பு தகர்ந்ததால் அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகளும் உள்ளடங்குகின்றன. வளரும் நாடுகளில் சில முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையைத் தெரிந்தெடுத்துக் கொண்டவை, ஏனையவை **சோஷலிசத் திசையமைவை** ஏற்றுக் கொண்டவை.

சோஷலிச நாடுகளது ஆதரவுடன், இந்த வளரும் நாடுகள் முழு நிறைவான தேச அரசுரிமை பெறுவதற்காகப் போராடுகின்றன. வளர்முக நாடுகள் சர்வதேச அரங்கில் மேன்மேலும் முக்கியமான பங்கு ஆற்றுகின்றன. பதற்றத் தளர்வுக்காகவும், அரசுகளிடையிலான அரசியல், பொருளாதார உறவுகளில் சமத்துவத்தின் கோட்பாடுகள் நிலைநாட்டப் படுவதற்காகவும் நடைபெறும் போராட்டத்துக்கு மேலும் மேலும் கணிச அளவில் நாடுகள் பங்களிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**வாக்காளர் தகுதிகள்:** (Voting Qualifications)—தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்ள பிரஜைக்கு இருக்க வேண்டிய தகுதிகள். முதலாளித்துவ நாடுகள் பலவற்றில் சட்ட மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களில் வாக்காளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த, அல்லது தற்போதும் விதிக்கப்பட்டிருக்கிற தகுதி வரம்புகள் வருமாறு: சொத்துத் தகுதி (குறிப்பிட்ட பெறுமானமுள்ள சொத்து உடையவராய் இருத்தல்), கல்வித் தகுதி (எழுத்தறிவு அல்லது குறிப்பிட்ட நிலையிலான கல்வி பெற்றிருத்தல்), குடிவாசத் தகுதி (குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்துக்கு வாசம் புரிந்திருத்தல்), மற்றும் தேசிய இன, வர்ண இனத் தகுதிகள், வயதுத் தகுதி முதலானவை. தேர்தல் முறையை ஜனநாயக மயமாக்குவதற்காக முற்போக்கு சக்திகள் நடத்தும் போராட்டத்தின் விளைவாய் பல நாடுகளில் வாக்காளர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் பலவும் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

**வார்சா ஒப்பந்தம்:** (Warsaw Treaty)—மத்திய ஐரோப்பாவையும் தென்கிழக்கு ஐரோப்பாவையும் சேர்ந்த பல நாடுகள் 1955-ல் வார்சாவில் கையொப்பமிட்ட நட்புறவு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஒப்பந்தம். கையொப்பமிட்ட நாடுகளாவன: அல்பேனியா (1968-ல் இது இந்நிறுவனத்திலிருந்து விலகிக் கொண்டு விட்டதாக அறிவித்தது), பல்கேரியா, செக்கோஸ்லோவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன். கையொப்பமிட்ட நாடுகள் கூட்டு ஆயுதப் படைத் தலைமையைப் பெற்றுள்ளன. அரசியல் கலந்தாய்வுக் கமிட்டியே (Political Consultative Committee) இந்நிறுவனத்தின் மிக உயர்ந்த ஆட்சி உறுப்பு. ஆக்கிரமிப்புக் கூட்டாக 1949-ல் **நாட்டோ** கூட்டு நிறுவப்பட்டபின் வார்சா ஒப்பந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் தனது உறுப்பு நாடுகளது பாதுகாப்பை உறுதி செய்கிறது; ஐரோப்பாவிலும்



உலகிலும் சமாதானத்தைப் பாதுகாக்கிறது. ஆயுத உற்பத்திப் போட்டிக்கு முடிவு கட்டுவதற்காகவும், அணு ஆயுதங்களைக் குறைப்பதற்காகவும் ஒழிப்பதற்காகவும், பொதுவான பூரண படைக்கலக் குறைப்புக்காகவும், இரசாயன ஆயுதங்களுக்குத் தடை விதிப்பதற்காகவும், அவற்றை ஒழிப்பதற்காகவும், வெகுஜன நாசம் விளைவிக்கும் புது வகை ஆயுதங்களுக்கும் ஆயுத அமைவுகளுக்கும் தடை விதிப்பதற்காகவும் வார்சா ஒப்பந்த அரசுகள் பாடுபடுகின்றன. **நாட்டோ** கலைக்கப்படும் அதே நேரத்தில் தமது நிறுவனத்தையும் கலைக்க இந்த அரசுகள் தயாராய் இருக்கின்றன. ஆனால் **நாட்டோ** இருந்து வரும் வரை, அதன் இராணுவ ஆற்றலை உயர்த்திக் கொண்டிருக்கும் வரை, வார்சா ஒப்பந்த அரசுகள் தமது மக்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும். வார்சா ஒப்பந்த நாடுகளில் ஏதேனும் ஒன்று தாக்கப்படுமாயின், உறுப்பினர்களான ஏனைய நாடுகள் அதற்கு இராணுவ உதவி அளிக்கும். **நாட்டோ** நாடுகள் ஒத்த முறையில் வாக்குறுதி அளிக்குமாயின், வார்சா ஒப்பந்த நாடுகள் தமது நிறுவனத்தை விரிவாக்குவதில்லை என வாக்களிக்கத் தயாராய் இருக்கின்றன.

**வாழ்க்கைத் தரம்:** (Standard of Living)—வரலாற்றில் குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு நாட்டின் மக்களது பொருளாயத, கலாசார, சமுதாயத் தேவைகள் எந்த அளவுக்குப் பூர்த்தி செய்யப் படுகின்றன என்று காட்டுவது. வாழ்க்கைத் தரத்தை அளவு மதிப்புகளாகக் காட்டும் புள்ளிகளின் சலனம் குறிப்பிட்ட சமூக அமைப்பின் சாதனைகள் அல்லது குறைபாடுகளைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது. எடுத்துக் காட்டாய் சோவியத் நாட்டில் உழைப்பாளி மக்களது சம்பளங்களின் இடையறாத அதிகரிப்பும் அத்தியாவசியப் பண்டங்களின் சில்லறை விலைகள் நிலையாய் இருத்தலும், 1928—லிருந்து வீட்டு வாடகைகள் மாற்றமின்றி இருந்து வருதலும், சேவைக் கட்டணங்களும் அதிகரிக்காமல் நிலையாய் இருத்தலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த 15 ஆண்டுகளில் தேச மக்களது உண்மை வருமானங்களை இருமடங்கு கூடுதலாக்கியுள்ளன. இலவச மருத்துவ உதவி, எல்லா வகையான கல்வியும் கட்டண மின்றி இலவசமாய் அளிக்கப்படுதல், குறைவான வரிகள் (குடும்ப வருவாயில் இவை சராசரி 15 சதவீதத்துக்கு மேல் ஆவதில்லை), உத்தரவாதமான வேலை வாய்ப்பு, முதிய வயது ஒய்வு ஊதியங்கள் (முந்திய வருமானத்தில் 100 சதவீதம் வரை ஒய்வு ஊதியங்களாகத் தரப்படுகின்றன), தற்காலிக ஏலாமைக்கான உதவித் தொகைகள் (முந்திய சராசரி வருவாய்க்கு ஏறத்தாழ சமமானவை) ஆடவர்-பெண்டிர், எல்லாத் தேசிய இனங்கள், தேசங்களின் சமத்துவம் ஆகியவை எல்லாம் சோவியத் மக்களது வாழ்க்கைத் தரத்தின் சிறப்பியல்பு களாகும்.

**"வாழ்க்கைப் பண்பு":** ("Quality of Life")— முதலாளித்துவ பிரசாரத்திலும் தத்துவவியலிலும் அரசியல் பொருளாதாரத்திலும் விரிவாக உபயோகிக்கப்படும் பதம். முதலாளித்துவ நாடுகளில் உழைப்பாளி மக்கள் தமது சமுதாய நிலையை உயர்த்திக் கொள்ளவும், பண்பு நிலையில் புதியதான **வாழ்க்கைத் தரத்தைப்** பெறவும் வேண்டுமெனக் கோருகிறார்கள். உழைப்பாளர்களது இந்த ஆவலை முதலாளித்துவச் சித்தாந்த வாதிகள் தமக்குச் சாதகமாகத் தக்க வழியில் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறார்கள். புதிய "வாழ்க்கைப் பண்புக்கான" போராட்டத்தை அவர்கள் முதலாளித்துவ அமைப்பின் வரம்புகளுக்கு அப்பால் போய் விடாத சீர்திருத்தங்கள் சிலவற்றுக்கான முயற்சியாகக் குறுக்கி விட எத்தனிக்கிறார்கள். இவர்கள் முன்னிலும் நன்கு அமைந்த பொதுக் கல்வியும் மருத்துவ வசதிகளும் வேண்டும் என்றும், சுற்றுச் சார்பும் இயற்கைச் செல்வாதாரங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், மனித ஆளுமையின் மதிப்பும் மாண்பும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் கூறி வருகிறார்கள். ஆனால் பெரு முதலாளித்துவ ஏகபோகங்களது தன்னலம் இந்த



மனிதாபிமான நோக்கங்கள் ஈடேற முடியாதவாறு வழி மறித்து நிற்கிறது. இந்த ஏகபோகங்கள் தமது இலாபங்களை அதிகமாக்குவதில்தான் நாட்டங் கொண்டிருக்கின்றனவே தவிர உழைப்பாளி மக்களது நல்வாழ்வை மேம்படுத்துவதில் அல்ல.

மார்க்சிய நூல்கள் "வாழ்க்கை முறை" என்கிற கருத்தை முன் வைக்கின்றன. அளவு இயல்புகளையும் பண்பு இயல்புகளையும் பெற்றுள்ள கருத்து இது. முன்னவை மக்களது பொருளாயத நல்வாழ்வு பற்றிய குறியீடுகளால் கணக்கிடப்படுகிறவை. பின்னவை உழைப்பாளி மக்கள் எந்த அளவுக்குச் சமூக சுதந்திரம் உடையவர்களாய் இருக்கிறார்கள், ஆளுமையின் வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகள் எந்த அளவுக்கு உள்ளன என்பதால் நிர்ணயிக்கப்படுகிறவை. பொருளாதார சுரண்டலிலிருந்து சுதந்திரம், அரசியல், தேசிய இன, வர்ண இன ஒடுக்கு முறைகளிலிருந்து சுதந்திரம் ஆகியவற்றை **சோஷலிசம்** ஒன்றால் மட்டுமே தரமுடிகிறது. தனியாள் ஒவ்வொருவரது வளர்ச்சிக்கும் என்றையும் விட அதிக அளவில் **கம்யூனிசம்** வாய்ப்பு அளிக்கிறது.

**வாழ்க்கை முறை:** (Way of Life)—மக்களது அன்றாட வாழ்க்கையின் பாங்கும் குணதிசயங்களும். இவை குறிப்பிட்ட சமுதாயத்தின் பொருளாதார அமைப்பாலும், சமூக நியதிகளாலும் ஆன்மிக மதிப்புகளாலும் அரசியல், குடும்ப உறவுகளாலும் தீர்மானிக்கப் படுகிறவை. நிலைநாட்டப் பெற்ற சமூக உறவுகளது அமைப்பில் மக்கள் வாழ்ந்தும் பணியாற்றியும் வருகிற முறை (பார்க்கவும்: **"சோஷலிச வாழ்க்கை முறை"**).

## வி

**விஞ்ஞானக் கம்யூனிசம்:** (Scientific Communism)— மார்க்சியம்-லெனினியத்தின் பிரதான உள்ளடக்கக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறுகளில் ஒன்று. மார்க்சியம்-லெனினியம் **தொழிலாளி வர்க்கத்தின்** வரலாற்றுப் பணிக்குரிய சமூக, அரசியல் ஆதாரங்களைத் தெளிவுபடுத்துகிறது. கம்யூனிச வழியில் சமுதாயத்தைத் திருத்தியமைப்பதற்கான வழிமுறைகள் பற்றிய விஞ்ஞானம் அது. முதலாளித்துவ சமுதாயம் புரட்சிகரமாக சோஷலிச சமுதாயமாக மாற்றப்படுவது வரலாற்றில் தவிர்க்கவொண்ணாதது ஆவதற்குரிய காரணங்களையும், புரட்சிப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கும் அது தலைமை தாங்கி அழைத்துச் செல்லும் பாட்டாளி வர்க்கமில்லாத பகுதியோருக்கும் உள்ள இடத்தையும் பங்கையும், தேச விடுதலை, ஜனநாயக இயக்கங்களின் உள்ளடக்கத்தையும் **உலகின் புரட்சிப் போக்கில்,** இவற்றுக்குள்ள பங்கையும், **பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின்** கோட்பாடுகளையும் அதற்குள்ள பங்கையும், சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டியமைப்பது சம்பந்தமான விதிகளையும் வழிமுறையையும், கம்யூனிசத்துக்கான போராட்டத்தின் எல்லாக் கட்டங்களிலும் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளின் ஆதாரநெறி, போர்த்தந்திரம் ஆகியவற்றின் கோட்பாடுகளையும் ஆய்ந்து அறிந்து விளக்குவதுதான் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் பிரதான பணி.

சமுதாயத்தைக் கம்யூனிச வழியில் மாற்றியமைக்கும் பணியில் ஈடுபடுகையில், அந்தந்த நாட்டின் பிரத்தியேக தேசிய இயல்புகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுமாறு விஞ்ஞானக் கம்யூனிசம் கோருகிறது. புரட்சிகரப் போராட்டத்தில் உலக அளவில் கிடைக்கும் அனுபவத்திலிருந்து வரப்பெறும் பொது முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானக் கம்யூனிசம் மேலும் தொடர்ந்து வளர்த்துச் செல்லப்படுகிறது.

**விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி:** (Scientific and Technological Revolution)—சமூகப் பொருள் உற்பத்தியில் விஞ்ஞானம் தலைமையான ஒரு காரணியாவதன் அடிப்படையில் **உற்பத்தி சக்திகள்** தீவிரமாகப் பண்பு வழியில் மாற்றியமைக்கப்படுதல். இதன் பிரதான இயல்புகளாவன: ஆற்றலின் புது வகைகளையும் புது ஆதாரங்களையும் (உதாரணம்: அணு, வெப்ப அணுக்கரு ஆற்றல்) கண்டுபிடித்தல்; உற்பத்தியைத் தானியங்கி மயமாக்குதல்; மின்னணுக் கணிப்பியந்திரங்களை விரிவாகப் பயன்படுத்தல்; பௌதிக-இரசாயன முறைகளைப் பொருள் உற்பத்தியில் கையாளுதல்; விஞ்ஞானமானது சிற்றண்ட உலகினுள்ளும் (சடப்பொருளின் மூலத்துகள்களது கட்டமைப்பினுள்ளும்) பேரண்ட உலகினுள்ளும் (பிரபஞ்சத்தினுள்ளும்) ஊடுருவுதல்; நேரடி உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் மாற்றப்படுதல்.

விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியால் ஏற்படுகிற விளைவுகள் **சோஷலிசத்திலும் முதலாளித்துவத்திலும்** ஒரே மாதிரியாக இருப்பதில்லை. முதலாளித்துவத்தில் இப்புரட்சி இராணுவ காரியங்களுக்கு பயன்படுமாறு செய்யப்படுகிறது; ஏகபோக இலாபங்களுக்கு கூடுதலான ஓர் ஆதாரமாக்கப்படுகிறது. வேலையின்மையை அதிகமாக்குகிறது. விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளும், சோஷலிசத்தின் அனுகூலங்களும் (உற்பத்திச் சாதனங்கள் பொது உடைமையாய் இருத்தல், பொருளாதாரத் திட்டமிடுதல் முதலானவை) மக்களது **வாழ்க்கைத் தரத்தை** இடையறாமலும் விரைவாகவும் உயர்த்துவதற்கு உதவுகின்றன.

**வித்தகராட்சி:** (Technocracy)—வித்தகர்களால் ஆன அரசாங்கம். பொருளாதார, அரசியல் ஆட்சியதிகாரம் உடைமையாளர்களிடம் இருந்து சம்பளச் சிப்பந்திகளாகிய மானேஜர்களும் நிபுணர்களுமானோருக்கு, வித்தகர்களுக்கு (பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், விஞ்ஞானிகள்) மாறிச் செல்வதாகக் கூறும் தத்துவம்.

**விவசாயிகள்:** (Peasants)—தனியார் உடைமையான, அல்லது கூட்டுறவுக்குச் சொந்தமான (பொது உடைமையான) **உற்பத்திச் சாதனங்களை** உபயோகித்து,





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது சொந்த உழைப்பைக் கொண்டு விவசாய விளைபொருள்களை உற்பத்தி செய்வோராலான ஒரு சமூக **வர்க்கம். புராதன சமுதாய அமைப்பு** சிதைந்தபோது விவசாயிகள் ஒரு சமூக வர்க்கமாய் உருவானுர்கள். சமூகப் பொருள் உற்பத்தி மிக உயர்ந்த நிலையிலான ஒழுங்கமைப்பு பெறுவதால் தொழில்துறை உழைப்புக்கும் விவசாய உழைப்புக்கும் இடையிலான வேறுபாடுகள் மறைந்துவிடும் சமுதாயமாகிய கம்யூனிசம் கட்டியமைக்கப்படும் காலம் வரையில் விவசாயிகள் ஒரு சமூக வர்க்கமாய் தொடர்ந்து நீடிப்பார்கள்.

**முதலாளித்துவத்தில்** மூன்று பிரிவுகளிலான விவசாயிகள் இருக்கக் காணலாம்: பாட்டாளிகளும், அரைப் பாட்டாளிகளுமாகிய விவசாயிகள் (முதலாளிகளாலும் பெரிய நிலவுடைமையாளர்களாலும் சுரண்டப் படும் விவசாயத் தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும்); நடுத்தர விவசாயிகள்; கிராமப்புற **முதலாளித்துவ வர்க்கம். ஏகபோகங்களின்** ஆதிக்கத்தை எதிர்த்து **சோஷலிசத்துக்காக** நடைபெறும் போராட்டத்தில் **தொழிலாளி வர்க்கத்தின்** மிக நெருங்கிய கூட்டாளிகளாவர், உழைப்பாளர்களாகிய விவசாயிகள். காலனிகளிலும் **வளரும் நாடுகளிலும்** எண்ணிக்கையில் விவசாயிகள்தான் தேச விடுதலை இயக்கத்தின் மிகவும் வலுவான இயக்கு விசையாய் இருப்பவர்கள்.

**சோஷலிசத்தில்** தனிப்பட்ட பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளராய் இருக்கும் நிலையிலிருந்து விவசாயி மாறி விடுகிருர்; கூட்டாக நடத்தப்படும் பொது உடைமையான விவசாயப் பண்ணையின் உறுப்பினராகி விடுகிருர். இயந்திரங்களும் மின் விசையும் இரசாயனப் பொருள்களும் இந்தப் பண்ணையில் விரிவாக உபயோகிக்கப் படுகின்றன. இப்போது வேலை நிலைகளிலும் வாழ்க்கை நிலைமைகளிலும் விவசாயிகள் தொழிலாளி வர்க்கத்தாரை மேலும் மேலும் நெருங்கி வருகிருர்கள். முடிவில் ஒன்று கலந்து,



தொழிலாளர்களோடும் அறிவுத் துறையோரோடும் சேர்ந்து கம்யூனிசத்தின் உழைப்பாளி மக்கள் சமூகமாகி விடுவார்கள்.

**விற்பனைக் களம்:** (Exchange)—பிணையங்களில் வாணிபம் நடைபெறுகிற சந்தை (பங்கு மாற்றுச் சந்தை). பண்டங்கள் பெரிய அளவில் விற்பனை செய்யப்படும் சந்தை (பண்டச் சந்தை) (பார்க்கவும்: **வேலை வாய்ப்பகம்**).

**விஸ்தரிப்பு :** (Expansion)—நாட்டு எல்லைகள், செல்வாக்கு உரிமைகள் முதலானவற்றை விரிவுபடுத்திச் செல்லுதல். ஓர் அரசு தனது செல்வாக்கை அரசுத்துறை வழிகளிலும் பொருளாதார அல்லது இராணுவ வழிகளிலும் பிற நாடுகளுக்கு விரிவடையச் செய்யும் பொருட்டு கடைப்பிடிக்கிற கொள்கையைக் குறிப்பிடவும் இந்தப் பதம் உபயோகிக்கப்படுகிறது. உதாரணங்கள்: ஆப்பிரிக்காவில் அமெரிக்க ஐக்கிய நாடு கடைப்பிடிக்கும் கொள்கை; அண்டையிலுள்ள அரபு நாடுகளிடம் இஸ்ரேல் அனுசரிக்கும் கொள்கை; சுயேச்சையான ஆப்பிரிக்க அரசுகளின்பால் நிறவெறி ஆட்சிகள் கடைப்பிடிக்கும் கொள்கை. சீனத் தலைவர்களும் விஸ்தரிப்புக் கொள்கையைத்தான் பின்பற்றுகிருர்கள். இவர்கள் அருகாமையில் உள்ள நாடுகளின் பிரதேசங்களுக்கும் உரிமை கொண்டாடுகிருர்கள், ஆயுதமேந்திய எல்லை மோதல்களுக்கு ஏற்பாடு செய்கிருர்கள். இராணுவச் செயல்களில் இறங்கி முடிவில் அண்டை நாடுகளின் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்கிருர்கள். சீனுவின் எல்லைகளில் அல்லது எல்லைகளுக்கு அருகில் உள்ள நாடுகளின் (இந்தியா, பர்மா, வியத்நாம், லாவோஸ், தாய்லண்டு, கம்பூச்சியா, மலேஷியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் முதலானவற்றின்) உள்விகாரங்களில் தலையிடுகிருர்கள். விஸ்தரிப்புக் கொள்கை உலக சமாதானத்துக்கு அபாயம் உண்டாக்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வெ

**வெளிநாட்டுக் கடன்கள்:** (Foreign Loans)—அந்நியப் பணச் சந்தைகளில் வாங்கப்படும் கடன்கள் அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களோ சர்வதேச நிறுவனங்களோ அளிக்கும் கடன்கள்.

ஏகாதிபத்திய அரசுகள் ஏற்றுமதிச் சந்தைகளையும் கடன் வாங்குகிற நாடுகளின் மூலப்பொருள் செல்வாதாரங்களையும் தம் பிடிக்குள் கொண்டு வருவதற்கான சாதனமாய் வெளிநாட்டுக் கடன்களை உபயோகித்துக் கொள்கின்றன. கடன்வாங்குகிற நாடுகள் கடன் தருகிற ஏகாதிபத்திய அரசுகளைப் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் சார்ந்து வாழ வேண்டியதாகிறது.

ஆனல் சோஷலிச நாடுகளிலிருந்து பெறப்படும் கடன்களும், கடன் செலாவணியும், காலனியாதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த நாடுகளின் மக்கள் சுயேச்சையான தேசப் பொருளாதாரத்தைக் கட்டியமைத்துக் கொள்ள உதவுகிறவை. இலகுவான வரையறைகளின் பேரில் சோஷலிச நாடுகள் கடன்கள் தருகின்றன. இந்தக் கடன்கள் அரசியல் அல்லது இராணுவ நிபந்தனைகள் ஏதும் இல்லாதவை.

## வே

**வேலை உரிமை:** (Right to Work)—சோஷலிச அரசு அதன் குடி மக்களுக்கு உத்தரவாதம் செய்யும் உரிமைகளில் ஒன்று. வேலை பெறுவதற்கும், செய்கிற வேலையின் அளவுக்கும் தரத்துக்கும் ஏற்ப (அரசாங்கத்தால் நிலை நாட்டப் பெற்ற குறைந்தபட்ச அளவுக்குக் கீழே செல்லாத) ஊதியம் பெறுவதற்குமான உரிமை. அவரவரும் தமது தொழில் அல்லது பணிப் பிரிவையும், சமூகத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு தத்தமது விருப்பத்துக்கும் ஆற்றல்களுக்கும் பயிற்சிக்கும் கல்விக்கும் தக்க வேலையையும் தேர்வு செய்து கொள்வதற்கான உரிமையும் இதில் அடங்கும். சோவியத் நாட்டில் **தேசப் பொருளாதாரம்** சோஷலிச வழியில் ஒழுங்கமைக்கப்பட்டு, **உற்பத்தி சக்திகள்** இடையருது வளர்ந்து பெருகியதன் விளைவாகவும், பொருளாதார நெருக்கடிகளுக்கு முடிவு கட்டப்பட்டதாலும் *1930* ஆம் ஆண்டுகளின் இறுதியிலேயே வேலையின்மை இல்லாதொழிக்கப்பட்டது.



**வேலையின்மை:** (Unemployment)—முதலாளித்துவ உலகின் குணுதிசயமாய் இருப்பது. உழைப்பாளர்கள் முதலாளித்துவ நாடுகளில் வேலை கிடைக்காமல் தவிக்க வேண்டியதாகிறது. வேலையில்லாத இவர்கள் உழைப்பாளர் ரிசர்வ் பட்டாளமாய், வேலையில் இருப்போருக்கு எதிராய் முதலாளிகளால் உபயோகித்துக் கொள்ளப்படுகிருர்கள்.

சோவியத் நாட்டில் **உற்பத்தி சக்திகளின் பொது உடைமையும்,** திட்டமிட்ட முறையில் தேசப் பொருளாதாரம் காணும் இடையருத வளர்ச்சியும் *1930* ஆம் ஆண்டுகளின் முடிவிலேயே வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே மறைந்தொழியச் செய்தன.

**வேலை வாய்ப்பகம்:** (Labour Exchange)—வேலையில்லாமல் திண்டாடுவோரைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு, இவர்களுக்கும் கூலிக்கு ஆட்கள் தேடுகிற தொழில் அதிபர்களுக்கும் இடையில் தொடர்புக்கான நிலையமாகச் செயல்படும் நிறுவனம்.

## ஜ

**"ஜனநாயக சோஷலிசம்":** ("Democratic Socialism")—ஜனநாயகச் சீர்திருத்தங்களின் மூலம் **முதலாளித்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**துவத்தை சோஷலிசமாக** மாற்றியமைத்து விடலாம் என்று கூறும் அரசியல் கொள்கை நெறி. **வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்** ஆகியவை பற்றிய மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படை நிர்ணயிப்புகளை ''ஜனநாயக சோஷலிசத்தின்'' ஆதரவாளர்கள் மறுக்கிறார்கள். **''மக்கள் முதலாளித்துவம்''** என்பதாகவும், முதலாளித்துவ அரசை ''மக்கள் நல அரசாக'' மாற்றி விடலாம் என்பதாகவும் பேசி இவர்கள் பிரசாரம் செய்து வருகிறார்கள். இவர்கள் தமது அரசியல் வேலைத் திட்டங்களில் முதலாளித்துவ அமைப்பின் சமூக, அரசியல் அடித்தளங்களில் மாற்றமின்றி அப்படியே அவற்றை விட்டு வைக்கிறார்கள்; சொத்து உடைமை அமைப்பிலும் அரசாங்க அமைப்பிலும் தீவிர மாற்றமின்றி சோஷலிசத்தைக் கட்டியமைக்க முடியாது என்பது குறித்தும், இம்மாதிரியான தீவிர மாற்றங்களை வர்க்கப் போராட்டத்தின் மூலமாகவே சாதிக்க முடியும் என்பது குறித்தும் இவர்கள் ஒன்றும் சொல்லாமல் மௌனம் சாதிக்கின்றனர்.

**ஜனநாயகம்:** (Democracy)—(அப்படியே பதத்துக்குப் பதம் அர்த்தம் சொல்வதெனில், ஜனங்களது அரசாங்கம் என்று பொருள்.) சமுதாயத்துக்கும் அரசுக்குமாகிய அரசியல் ஒழுங்கமைப்பு வடிவமே ஜனநாயகம். இதன்படி ஆட்சியதிகாரம் சட்டப்படி மக்களுக்கே உரியதாகும். குடிமக்கள் எல்லோரும் சட்டத்தின் கண்ணில் சமத்துவமானவர்கள், அரசாங்க விவகாரங்கள் குறித்துத் தீர்மானிப்பதில் பங்கு கொள்ளும் உரிமையும் உட்பட பல அரசியல் உரிமைகளும் சுதந்திரங்களும் உடையவர்கள். ஆனால் பகை வர்க்கங்களாகப் பிளவுண்ட ஒரு சமுதாயத்தில் ஜனநாயகத்தின் அனுகூலங்களை சுரண்டுவோராகிய ஆதிக்க வர்க்கத்தாரால்தான் பிரதானமாக அனுபவிக்க முடிகிறது. முதலாளித்துவ ஜனநாயகமானது (bourgeois democracy) மனிதனை மனிதன் **சுரண்டுவதை** உள்ளியல்பாகக் கொண்ட **தனியார் உடைமையின்** அடிப்



படையில் அமைந்திருப்பதால், அது பெயரளவிலானதாய், தலை துண்டிக்கப்பட்டு முண்டமாக்கப்பட்டதாய் இருக்கிறது.

**உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமையையும்** சுரண்டலிலிருந்து விடுபட்ட உழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட சோஷலிச ஜனநாயகம்தான் மெய்யான ஜனநாயகமாகும். பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஆளும் இல்லமும் மீறவொண்ணாதவையாய் இருப்பதற்கான உரிமைகள் ஆகிய எல்லாத் தனிநபர் அரசியல் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் சோஷலிச நாடுகளது அரசியலமைப்புச் சட்டங்கள் உத்தரவாதம் அளிக்கின்றன. குடிமக்களது வேலை உரிமை, ஓய்வு உரிமை, கல்வி உரிமை, முதிய வயதிலும் ஏலாத காலத்திலும் சமூகக் காப்புறுதிக்கான உரிமை முதலானவற்றை சோஷலிச ஜனநாயகம் பிரகடனம் செய்வதோடன்னியில், நடைமுறையில் எல்லார்க்கும் கிடைக்கும்படி உத்தரவாதமும் செய்கிறது. அதே போது சோஷலிச அரசு, உழைப்பாளி மக்களுக்குத் தீங்கு இழைக்கும் விதத்தில் அரசியல் சுதந்திரங்களை உபயோகிப்பதற்கான முயற்சிகளை வைராக்கியமாகத் தடுத்து நிறுத்துகிறது; யுத்தப் பிரசாரத்துக்கும் வர்ண இனவெறியையும் தேசியவாதத் தப்பெண்ணங்களையும் தூண்டிவிடும் பிரசாரத்துக்கும் தடை விதித்துச் சட்டங்கள் இயற்றுகிறது.

**ஜனநாயக மத்தியத்துவம்:** (Democratic Centralism)—மார்க்சிய-லெனினியக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுக்கும் சோஷலிச நாடுகளின் அரசாங்க உறுப்புகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் ஏனைய பொது நிறுவனங்களுக்கும், வழிகாட்டும் ஒழுங்கமைப்புக் கோட்பாடு. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியில் ஜனநாயக மத்தியத்துவம் அல்லது மையத்துவம், அடியிலிருந்து உச்சி வரை கட்சியின் எல்லாத் தலைமை உறுப்புகளும் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளாய் இருப்பதிலும், கட்சி உறுப்புகள் தமது கட்சி நிறுவனங்களுக்கும் மேல் உறுப்புகளுக்கும் அவ்வப்போது தமது வேலைகள் குறித்து அறிக்கைகள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதிலும் வெளியாகிறது. ஜனநாயக மத்தியத்துவம் கம்யூனிஸ்டுகளது ஆக்க முன் முயற்சியும், கண்டிப்பானக் கட்சிக் கட்டுப்பாடும், சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கீழ்ப்படிதலும் அவசியமென வலியுறுத்துகிறது. மேல்நிலை உறுப்புகளின் முடிவுகளுக்குக் கீழ்நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுப்புகள் கட்டுப்பட வேண்டும் எனவும், **உள்கட்சி ஜனநாயகமும்** விமர்சனமும் சுய விமர்சனமும் அவசிய மெனவும் ஜனநாயக மத்தியத்துவம் வலியுறுத்துகிறது.

## ஜி

**ஜியோனிசம்**: (Zionism)—(ஜெருசலத்தில் உள்ள மலையாகிய ஜியோன் என்பதிலிருந்து இந்தப்பெயர் வரலாயிற்று). 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல நாடுகளில் யூத முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே எழுந்து வளர்ந்த பிற்போக்கான தேசியவாத இயக்கம். யூதர்கள் எல்லோரும் அவர்களது வர்க்கநிலை எப்படி இருப்பினும், அதைக் கருதாமலே ஒரே சங்கமாய் ஒன்றுபட வேண்டுமென்ற முழக்கத்துடன் இந்த இயக்கம் எழுந்தது. ஜியோனிசம் ஏகாதிபத்திய ஏகபோகங்களுடன் நெருங்கிய பிணைப்பு கொண்டு செயல் படுகிறது. தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும் **கம்யூனிசத்துக்கும்** அது பரம வைரியாய் இருக்கிறது. ஜியோனிசம்தான் இஸ்ரேல் அரசின் அதிகார பூர்வமான சித்தாந்தம்.

## ஜு

**ஜுந்தா** (Junta)—1) ஸ்பானிய மொழி பேசப்படுகிற நாடுகளில் பற்பல பொது அமைப்புகளையும் அரசு உறுப்புகளையும், ஒன்றியங்கள், ஆணைக் குழுக்கள் முதலானவற்றையும் குறிக்கும் சொல்.

2) பாசிஸ்டு சர்வாதிகார ஆட்சிகளை நிறுவுகிற பிற்போக்குவாத, பயங்கரவாதக் கோஷ்டிகளைக் குறிப்பதற்கு விரிவாய் உபயோகிக்கப்படும் பதம்.

இரத்த வெறிகொண்ட **பயங்கரம்**, திரள் திரளாய் மக்களைக் கைது செய்து சிறைக் கூடங்களிலும் காவல் முகாம்களிலும் அடைத்துக் கொடுமை புரிதல், கம்யூனிஸ்டுகளையும் ஏனைய முற்போக்காளர்களையும் கொலை புரிதல் முதலானவை இந்த பாசிஸ்டு சர்வாதிகார ஆட்சிகளுக்குரிய குணதிசயமாகும். 1973 செப்டம்பரில் சிலி நாட்டில் நிறுவப்பட்ட பாசிஸ்டு ஆட்சி இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

—●—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்